ஸ்ரீ

சிந்தாமணி ஜோதிட

மலர்

குரு, சனி மாறுதல்

சிறப்பு இதழ்

விலை ரூ. 1-00

ஆசிரியர் :

" சிந்தாமணி "

வெளியிடுவோர் :

ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலர்,

18, வெங்கடேசபுரம் காலனி.

சென்னை-23.

EDITOR'S INTRODUCTION

1. "CHINTHAMANI" alias K. R. Govindarajan is the editor of this book and he is now Superintendent Board of Revenue, Madras, residing at Venkatesapuram Colony, Madras-23.

2 This book is neither an official publication nor is it officially sponsored.

3. Any valuable suggestions and criticisms or enquiries are quite welcome and correspondence in such matters may be addressed to

"THE EDITOR"

SREE CHINTHAMANI JYOTHIDA MALAR

18 V. P. Colony, Madras-23

SRI VASISHTAR NADI ASTROLOGICAL BUREAU

Astonishingly accurate and Astoundingly correct predictions can be had from Sri Vasishtar's NADI A personal visit to the Bureau will leave a thrilling experience and a pleasent sensation in your heart.

Prof. S. P. KALYANASUNDARAM

19, Sivaraman Street, Madras-5.

PHONE : 81288.

ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலர்

குரு, சனி மாறுதல்

சிறப்பு இதழ்

ஆசிரியர் :

‘‘ சிந்தாமணி ’’

வெளியிடுவோர் :

ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலர்

18, வெங்கடேசபுரம் காலனி

சென்னை–23,

தொலைபேசி எண். 63495.

பதிப்புரை

உலகம் பஞ்சபூதச் சேர்க்கை. உயிரைத் தாங்கும் உடலும் அஃதே. அதனுல் தான் ஔவையார் "அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு" என்ருர். உலகையும் உயிரையும் படைத்த இறைவன் அவை நெறியான முறையில் இயங்கச் சூரியனைப் பிரதானமாகக் கொண்ட பலகோட்களை இயக்குகின்ருன்.

மண்ணுயிர்க்கெல்லாம் சிறந்தது மானிடம். இறைத்தன்மை யடைய திரிகாலஞானம் தேவை. அதனுல் தான் பொய்யாமொழியாரும்

"ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்" என்ருர்.

சென்ற கால நினைவும், நிகழ்கால கருத்தும் எதிர்கால அறிவும் வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும். எதிர்கால அறிவைப்புகட்டுவது கோட்களின் இயக்கம். அதுதான் சோதிட ஞானம். சோதிடமாகிய சுருதியும் அனுபவமாகிய சென்ற கால நிகழ்கால அறிவும், யுக்தியாகிய கோளவரின் இயக்கப்பலனும் தெரிவது அவசியமல்லவா? எதிர் காலத்தை தெரிந்து கொள்ள மறுப்பவர் எவர்?

கோளவரில் மிக முக்கியமானவர் குருதேவரும் சனிபகவானும் ஆவர். இவர்கள் ராசிவிட்டு ராசி மாறுவதால் ஏற்படும் பலாபலன்களை தனிப்புத்தகமாக வெளியிட வேண்டும் என்று பல வாசகர்கள் விரும்பிய வண்ணம் யாமும் நமது ஆசிரியர் ஸ்ரீ. சிந்தாமணியை வேண்டிக் கொண்டோம். ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலர் கைமாறு கருதாத காம தேனுவாய் எவ்வித லாபத்தையும் எதிர்பாராது சோதிட ஞான வளர்ச்சி யொன்றே குறியாகக்கொண்டு பலவித இன்னலுக் கிடையில் தளராது மக்களுக்காகப் பணியாற்றும் ஒரே சஞ்சிகை. தனது இனிய எளிய நடையில் சுருதி, யுக்தி, அனுபவ ரீதியாக எதிர் காலத்தைக் கணித்து மக்களின் மனதைக்கவர்ந்த ஆசிரியர் திரு சிந்தாமணியார் ஸ்ரீ வசிஷ்டப்பெருமானின் அருள் பெற்ற மாணவர். மக்களின் ஆசையைப்பூர்த்தி செய்ய எமது வேண்டுகோளுக்கிணங்க சொல்லொணு அலுவலக நிர்ப்பந்தத்தையும் தாங்கி மிகக் குறுகிய கால அளவில் தங்களுக்கே உரித்தாகிய தனி நடையில் எழுதி உதவியதற்கு யாம் எமது உளங்கனிந்த நன்றியை வாசகர்களின் சார்பாக தெரிவித்துக்கொள் கின்ருேம்

வாசகர்களின் நன்மையை முன்னிட்டு பல இன்னலுக் கிடையே இந்நூலை மலிவு விலையில் அச்சிடுவதில் மகிழ்ச்சி அடைகின்ருேம்.

குறுகிய கால அளவில் இந்நூலைக் கண்ணும் கருத்துமாய் அச்சிட்டுக்கொடுத்த காளிதாஸ் அச்சகத்தாருக்கு எமது நன்றி.

ஸ்ரீ சிந்தாமணி சோதிட மலர் ஆரம்பித்து ஆறு ஆண்டுகளாயினும் எமது ஸ்ரீ சிந்தாமணிப் பதிப்பக முதல் வெளியீடாக எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் அன்னை பராசக்தியின் பொற்பாத கமலங்களில் வைக்கின்ருேம். யாவரும் படித்து பயன் பெறுவார்களாக.

ஸ்ரீ சிந்தாமணி பதிப்பகத்தார்,

மதிப்புரை

ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலரைக் கடந்த ஐந்தாண்டுகளாகப்படித்துப் பயன்பெறும் வாசகர்களில் யானும் ஒருவன். ஆசிரியர் சிந்தாமணியின் தெளிந்த அனுபவ பூர்வமான சோதிட ஞானத்தை வாசகர்கள் நன்கு அறிவார்கள். அவர்களின் இலக்கின ஆராய்ச்சிக் கட்டுரைகளைப்படித்தவர்கள் தமக்காகவே ஆசிரியர் எழுதியிருக்கின்றார் என்று எண்ணிப்பூரிக்கும் படி அவ்வளவு பொருத்தமாக இருந்துவருவது கண்கூடு. எனது உழுவலன்பர் உயர்திரு வித்துவான் முத்துசாமி பிள்ளை I A.S. Retd அவர்கள் ஆசிரியரின் தெளிந்த ஜோதிட ஞானத்தை அடிக்கடி புகழ்வதுண்டு.

தனக்கே உரிய எளிய இனிய நடையில் வாசகர்களின் மனங் கவர்ந்த ஆசிரியர் சிந்தாமணி குரு சனி மாறுதல் பலாபலன்களை எழுதித்தனிவெளியீடாகப் பதிப்பிக்கப்போகின்றார்கள் என்றறிந்தவுடன் அது எப்பொழுது வரும் என்று காத்திருக்கையில் என்னை அதற்கொரு மதிப்புரை எழுதித்தரப் பதிப்பகத்தார் கேட்டுக்கொண்டது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது.

கோட்சாரத்தால் ஏற்படும் கொடிய வியாதிகளைத் தடுக்க ஆகார அனுஷ்டானம், ராசிநேயருக்கு ஆகாத மாதங்களில் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் முதலியவற்றை ஆசிரியர் தமது சுருதி, யுக்தி, அனுபவ ரீதியாகத்தெளிவுபட எழுதியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

விதியை மதியால் வெல்லலாம் என்பது பழமொழி. கோள்களின் கொடியப்பலன்களை முழுமையும் மாற்ற முடியாவிடினும் ஆசிரியர் காட்டும் மதிநுட்ப வழியைக்கவனமாக பின்பற்றினால் கொடிய பலன்களும் சாமான்ய பலன்களாகும் என்பது எனதுகருத்து.

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுடனே ஆசறு நல்ல நல்ல அவை
நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" என்பது ஆளுடைய பிள்ளையாரின் அருள்பாக்கள்.

ஒவ்வொருவரும் படித்து பயன் பெறத்தக்க உன்னத வெளியீடு இது. விலையுயர்ந்து ஓங்கும் இக்காலத்தில் எல்லா மக்களும் வாங்கிப்பயன்பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தால் பதிப்பகத்தார் மிகமிக மலிவுப்பதிப்பாக இந்நூலை வெளியிடுவது பாராட்டத் தக்கதாகும்.

இப்புத்தகம் ஜோதிடர்களுக்குத் துணைவனாகவும் பொதுமக்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இம்மாதிரி முயற்சிகள் மல்கி வெற்றி பெற இறைவன் அருள்க.

எவ்விதப்பயனையும் கருதாமல் கலை வளர்ச்சிக்காகப் பாடுபடும் ஆசிரியர் சிந்தாமணி அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளையும் சகல சௌபாக்கியத்தையும் அருள்வாராக.

ஸ்ரீ கபாலீச்சுர ஆலயம்
மயிலாப்பூர்.

கு. அய்யா சுப்பிரமணிய
முதலியார் J. P.
அறங்காவலர் குழுத்தலைவர்

ஓம் ஸ்ரீ சிந்தாமணி கணபதயே நமோ நம:

சமர்ப்பணம்

இந்த அற்புதக்கலையை உலகம் அறியச்செய்திட வேண்மென்ற விருப்பங்கொண்டு கருத்தோடு எழுதும் தருணத்தில் உதிதிடும் கற்பனைகள் யாவும் கற்பக விநாயகருக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

எவ்வித பயிற்சியும் இல்லாத எனக்கு ஜோதிட சாத்திரத்தில் விதரணைக் கொடுத்து கருத்தும் கற்பனையும் கரையிலாது வளரப் பெற்று புத்தக வடிவத்தில் இச்சிறிய நூலை வெளியிட அருள் கொடுத்த சகல கலா வல்லியும் தாமரை மலரில் ஒளிரும் கலைவாணியும் அயனவன் நாவில் நின்று ஒளிரும் சரஸ்வதி தேவி என்று உலகம் போற்றி வழிபடும் உங்கள் திருவருட் பொற்பாத மலர்கட்கு எனது கற்பனையையும் கற்றறிந்த சாஸ்திரத்தையும் அர்ப்பணம் செய்கின்றேன்.

மாபெரும் இவ்வுலகில் கற்றறிந்த உயரிய பேரறிஞர் முன் சிறியோர் மதலைப்பக்குவத்தில் உள்ளேன். எனது விவேகம் வெகு சிறிது. முக்காலத்தையும் அறிந்து சொல்லும் பேரறிஞர் இதிலுள்ள குறைகளைப்போக்கி நிறை மனத்தோடு ஆதரவு கொடுத்திட உந்திக் கமல மலரிலிருந்து எழுத அருள் கொடுக்கும் கலைவாணியின் பொன்னடிக் கமல மலர்களை போற்றி வணங்கி இதை அர்ப்பணம் செய்கின்றேன்.

அன்போடு அழைத்து தக்கனை ஏதும் இன்றி மனம், வாக்கு, காயங்களில் நின்று கல்வி ஞானம் சிறிதோ பெரிதோ என்ற பரிசோதனையின்றி உள்ளத்தின் கதவைத்திறந்து இந்த அற்புத ஜோதிட ஞானத்தை கருத்திலும் கற்பனையிலும் நாவிலும் எழுதும் பேனா முனையிலும் அருள் வடிவமாய் நின்று என்றும் தளரா உறுதியையும் ஊக்கத்தையும் கருணையோடு கொடுத்து சேவைதான் சிறந்த தியாகம் என்பதைத் தெளிவாக்கிய என் குருதேவர் ஸ்ரீ வசிஷ்ட பெருமுனி சிரேஷ்டருக்கு இதை அன்பு காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

முக்காலத்து முத்தமிழ் சங்க பீடத்தில் ஜோதிடக்கலை ஞானத்திற்கு ஆதாரமானவர் ஸ்ரீ வசிஷ்ட மா முனிவரே என்று உறுதியோடு தெளிவாக்கிய ஞானவேல் முத்துக்குமரனின் திவ்விய சரணாரவிந்தங்களுக்கு எனது அன்பு வணக்கம். உலக நாயகியாம் சிவனின் ஆதார சக்தியாம் அன்னை பராசக்தியின் அருள் பெற்று திருச்சிக்கல் சிங்கார வேலனாகி சக்திவேல் குமரனாகி மாயையின் இருளை அகற்றிட அறிவுச் சுடரொளி போல் ஜோதிடக்கலை ஞானத்தை அருள் கொடுத்த சரவண பவபெருமான் திவ்விய பாதமலர்களுக்கு இதை சமர்ப்பிக்கின்றேன்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் ஏழு வாயிற்படிகளைக் கடந்தபின்னர் தான் அருள் ஜோதியைக்காண முடியும் என்ற தத்துவத்தை சொல்லாமல் விளக்கிடவே ஏழு குன்றுகளை கடந்த பின்னர் காட்சியளித்து அவரவர் வாழ்க்கையில் ஏற்பட்ட குறைகளை எல்லாம் தீர்த்து, வேண்டிய பொருளை பெறுவதற்குரிய தகுதியை சோதித்து அளித்திடும் தமிழ் நாட்டிற்கு வட எல்லையை வகுத்த திருவேங்கட பிரபுவின் திவ்விய பாதமலர்களுக்கு ஸ்ரீ சிந்தாமணி ஜோதிட மலரின் முதல் வெளியீடாக இச்சிறிய மலரை சமர்ப்பிக்கின்றேன்.

"சிந்தாமணி"

விநாயகர் காப்பு

வேதகி மைந்தன் விநாயகன் ஐங்கரன்
ஆதிப் பிரணவ ரூபியாம்—சோதிடம்
கூறப் பலன்கள் குருசனி மாறுதல்
சேரா திடரெமைக் கா.

கலைவாணி துதி

வெள்ளைக் கமலத் தமர்ந்திடும் வித்தகியென்
உள்ளக் கமலத் தொளிர்தருவாள்—தெள்ளுதமிழ்
பாரிடை மாறும் குருசனி சேர்பலன்
கூறிட நல்லருள் கூட்டு.

முருகன் துதி

ஆருதாரமே ஆறுமுகமாய் ஆறுபடைவீ டமர்த்திய குகனே
கூறும் ஏழ்புவி அகத்திலே காட்டி குழையும் ஏழிசைச் குரலிலே சேர்த்து
சேரும் ஐம்பூதக் கூட்டிலே உயிரை சேர்த்துக் கோட்களின் திசையினில் நடத்தும்
ஏறுமயில எளியேன் குருசனி மாறுதல் பலாபலன் வரைந்திட அருள்வாய்.

தெய்வ வணக்கம்

சிந்தையினில் சலனமின்றி தெளிவுண்டாக்கும்
சிந்தாமணி கணபதியின் பாதம் போற்றி
விந்தை செயும் கோளவரின் விளக்கங்கூறும்
வித்தகனும் வேல்முருகன் பாதம் போற்றி
திங்களணி சங்கரனார் பாதம் போற்றி
செயல் வளர்க்கும் அன்னைபரா சக்தி போற்றி
பங்கமின்றி குருசனி மாறும் பலன்
பரிந்துரைக்க மாலவன்பொற் பாதம் போற்றி.

குரு வணக்கம்

சொன்னயமாம் செந்தமிழில் சோதிடத்தை
சுயமாக சுவடிதனில் எழுதிவைத்த
எந்தையாம் அகத்தியனும் வசிஷ்டமுனி
ஏதமில் போகர்சப்த ரிஷியுடனே
அன்னைபரா சக்தியவள் அருளினாலே
அடியேனை ஒருபொருளாய் வலிந்தாட் கொண்டு
இன்றெனக்கு அருட்குருவாய் அரூபமாக
எனையாண்ட வசிஷ்டமுனி பாதம் போற்றி.

நூலாசிரியர் முன்னுரை.

வாழ்க்கையில் ஏற்படும் இன்ப, துன்பங்களுக்கு குரு, சனியா னவர்கள் தான் நவகிரகங்களுள் முக்கியத்துவத்தைப்பெற்று விளங்கு கின்றனர் என்பது வெள்ளிடை மலே. இதனுல் தான் சிலமாதங்களுக்கு முன்பே பலநேயர்கள் குரு சனி பெயர்ச்சியைப்பற்றி மலரில் விரிவாக எழுதுமாறு வலியுறுத்தினர்கள். மலரில் இதனைவிரிவுபடுத்த வேண்டு மென்ற அவா எங்கட்கும் அதற்கு முன்பே எழுந்தது. "நன்றே செய் அன்றே செய்" என்று போதிக்கும் எங்கள் குருதேவர் எழுதும் பேனு வடிவமாய், நின்று தளரா மனப்பான்மையுடன் அன்றே சாதிக்க நல்லருள் புரிந்தனர். எங்கள் கருத்தும் மலர்ந்தது. ஆனல் "நிதானந்தான் பிரதா னம் அவசரம் வேண்டாம். பொறுமைக் கடலினும் பெரிது" என்று போதிக்கும் சனிபகவான் காகித வடிவத்தில் சிக்கனத்தையும், அச்சுவடி வத்தில் நிதானத்தையும் கடைபிடிக்கச் செய்வதுபோல் தோற்றம் உண்டாயிற்று.

"ஞானேபதேசம் செய்யவும், திட்டங்களை தீட்டவும் குருதேவ ருக்கு மூளை அதிகமிருக்கலாம். பணவசதியும் அளவு கடந்திருக்கலாம். ஆனல் பேனமுனையில் எதையும் சாதிக்க முடியுமா? என்பதை நான் ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று சனிபகவான் உற்று நோக்கி "கட மையை மறந்தவர் கடவுளை மறந்தவர்", "உழைத்தால் தான் உயர்வு. இல்லையேல் சோர்வு" என்பதை சொல்லாமல் விளக்கினர் போலும்! என்ன விந்தை! பேனு எழுதி கடமையை முடித்தது. காகிதமும் இடம ளித்தது. ஆனல் அச்சு அவசரப்படாதே என்றது. அச்சு இடமளித்த போது யந்திரம் ஆத்திரப்படாதே என்றது. யந்திரம் ஓய்ந்தபோது உழைத்தவனுக்கு ஓய்வு தேவை என்று மின்சாரம் கூறியது. மின்சாரம் சரியென்றபோது உண்டகளைப்பு தொண்டருக்கும் உண்டு என்று பணி யாளர்கள் மொழிந்தனர். ஆங்காங்கு தங்கி தேங்கி—"பேனு தோல்விய டைந்தது. உழைக்கும் கரங்கள் தான் உயர்ந்தன" என்ற தீர்மானத்தை குருதேவர் வழிமொழிய, இதிலென்ன சந்தேகம்? என்று சனிபகவான் பின்மொழிய இருவரும் ஒருவரானர்கள். தேதியும் கடந்தது. வாசக நேயர்களின் ஆர்வமும் உயர்ந்து தணிந்தது. சிறப்பு மலரும் பொறுப் புடன் மலர்ந்தது.

ஒவ்வொரு வகையிலும் எனக்கு தளரா ஊக்கத்தையும் எழுதும் ஞானத்தையும் அளித்த ஸ்ரீ வசிஷ்டமாமுனிவரின் அருள் மொழியாள ரும் ஸ்ரீ சிந்தாமணி ஜோதிடமலர் பதிப்பாசிரியருமாகிய ஸ்ரீ *S. P.* கல்யா ணசுந்தரம் அவர்களுக்கு என் நன்றி முதற்கடமையாகும்.

சோதிடம் பயில்வதற்காகவே தமிழ்க்கல்வி தெளிவு பெற்ற எனக்கு தமிழ் ஞானமூட்டிய கவிஞர் திரு. கொங்குவேள் அவர்கட்டு என் நன்றி உரித்தாகுக.

இந்த குரு, சனி மாறுதல் காலநேரங்களை கணித்து கோள வரின் வகையறிந்து பலாபலன்களை உணர்ந்து கொடியதை அகற்றி நல்லதை பெருகிக்கொள்ள பரிகார, மந்திர, ஸ்தோத்திர வழிபாடு நியமங்களை பலநூல்களிலிருந்து திரட்டி உதவி புரிந்த ஸ்ரீ *P. S.* சங்கர சுப்பிரமண்ணியம் அவர்கட்கும் எனது நன்றி உரித்து.

சளைக்காமல் உழைத்து இந்நூலை உருவாக்கிய அச்சகத்தார் திரு *L. N.* சீத்தாராமன் அவர்கட்கும் எனது நன்றி உரித்து.

இந்நூல் விரிந்து வளர்ந்த பெருமைக்கு வாசகநேயர்களின் பேருதவியும் ஆதரவுமே பெருங்காரணமாதலின் அவர்கட்கு என்நன்றி யை என்றும் மறவேன்.

சிந்தாமணி.

முகவுரை

குரு, சனி மாறுதல் காலமும், நேரமும்.

குருதேவர் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 9-ம் தேதி 22-3-66 அன்று இரவு 12-51 மணிக்கு ரிஷப ராசியைக்கடந்து மிதுன ராசியையும் சனிபகவான் பங்குனி மாதம் 25ம் தேதி 7-4-66 அன்று இரவு 2-24 மணிக்கு கும்ப ராசியை விட்டு மீன ராசியையும் அடைகின்றனர். இது திருக்கணித ரீதியாகும். குருமாறுதல் தேதியில் அவ்வளவாக வித்தியாசம் இல்லாவிடினும் சனிமாறுதல் தேதியில் வாக்கியத்திற்கும் திருக்கணிதத்திற்கும் ஏறக்குறைய பதினேரு மாதங்கள் வித்தியாச மேற்படுகிறது. வாக்கிய ரீதியாக பராபவ, வருஷம் மாசி மாதம் 26ம் தேதி 10-3-1967 அன்றுதான் சனி மீன ராசியை அடைவதாக கூறப்படுகிறது. வாக்கியத்தையே ஆதாரமாகக் கொண்ட திருத்தலங்களில் ஒன்ருகிய திருநள்ளாறில் பராபவ வருஷம் மாசிமாதம் 26ம் தேதியன்றுதான் சனிப்பெயர்ச்சியை வழக்கம் போல் கொண்டாடுவர். இந்த வித்தியாசத்தைக்கண்டு பலர் குழப்ப மடைந்துள்ளார்கள். எதை ஆதரிப்பது என்ற சந்தேகம் பலஜோதிடர்களிடையே இருந்து வருகிறது. சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஆசாரிய சுவாமி அவர்கள் இதைப்பற்றி கூறுகையில் பழைய வழக்க சம்பிரதாயங்களுக்கும் கர்மானுஷ்டானங்களுக்கும் வாக்கியத்தை அனுசரிக்கும் படியும் ஜாதக கணிதத்திற்கு திருக்கணித முறையை அனுசரிக்கும் படியும் விளக்கியுள்ளார்கள். சௌரமான கிரக சஞ்சார, அதிசார வக்கிரகதி கணிதங்களேயும் அயனம்ச திருத்தங்களேயும் அவ்வப்போது சரிகட்டாமல் வாக்கியத்தில் பதிவு செய்வதால் இந்த வித்தியாசம் தொடர்ந்து வந்துக்கெண்டே யிருக்கிறது.

வான மண்டலத்தில் எந்தெந்த கிரகங்களே எந்தெந்த ராசியில் எந்தெந்த நட்சத்திர கூட்டங்களில் நாம் காண்கின்ருேமோ அதுவே உண்மையானது. அனுபவத்திற்கும் பொருந்தும். அன்ருட சந்திரனேக்கொண்டு மற்ற கிரகங்களிருக்கும் நட்சத்திர மண்டலத்தை அறியலாம். உதாரணமாக மிருகசீரிட நட்சத்திரத்தன்று குருவுடன் சந்திரன் சேர்ந்து விளங்குவதைக்காணலாம். இதுபோலவே பூரட்டாதி நாலாம் பாதத்தில் சந்திரனிருக்கும் சமயத்தில் சனிபகவானே சந்திரனுக்கு அருகாமையில் காணலாம். இதைப்பார்த்தப்பிறகு எதை நம்பவேண்டுமோ அதை நம்புமாறு வேண்டுகிருேம்.

கிரகமாறுதல் பாலாபலனே அறியும் விதம் :

1 ஜாதகமில்லாதவர், நட்சத்திரம், ராசி, லக்கினம் தெரியாதவர்கள் ராசியின் பெயருக்கு நேராக கொடுக்கப்பட்டுள்ள நட்சத்திர எழுத்துக்களுள் எந்த எழுத்து அவருடைய வழக்கமான பெயருடைய முதல் எழுத்தாக வருகிறதோ அந்த ராசியைக்கொண்டு பலனே அறியலாம்.

2 ஒவ்வொரு ராசியும் ஒன்பது பாதங்களடங்கிய இரண்டே கால் நட்சத்திரங்களேக்கொண்டதாகும். குரு சனி மாறுதல் பலன்கள் உடனடியாக அந்தந்த ராசியின் முதற்பாதத்தில் தோன்றியவர்களுக்கு

ஏற்படும். கடைசி பாதத்தில் தோன்றியவர்களுக்கு நாள் கடந்து ஏற்படக்கூடும். உதாரணமாக சனி பூரட்டாதி நாலாம்பாதத்திற்கு 7-4-66 அன்று மாறுதலடைவதால் அன்று முதல் மேஷராசியில் முதல் நவாம்சமாகிய அஸ்வனி நட்சத்திரத்தின் முதற்பாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏழரையோன்காலம் ஆரம்பமாகும். பரணியில் தோன்றியர்களுக்கோ, கிருத்திகை முதற்பாதத்தில் பிறந்தவர்களுக்கோ மீனராசியில் அந்தந்த நவாம்சத்தில் சனி வரும்போது இப்பலன் ஏற்படும்.

3 சந்திரா ராசியை ஆதாரமாகக்கொண்டு பலன்கள் எழுதிருப்பினும் ஒருசிலருக்கு லக்கினம் வலுவுடையதாகவும் ஒருசிலருக்கு சூரியன் நின்ற ராசி வலுவுடையதாகவும் அமைவதுண்டு. சந்திரன் நின்ற ராசியை மதியென்றும் ஜனன காலத்தில் சூரியன் நின்ற ராசியை கதி என்றும் லக்கினத்தை விதி என்றும் அழைப்பதுண்டு. மூன்றும் ஒருசிலருக்கு ஒன்ருக அமைவதுண்டு. உசாரணமாக ஆடிமாதம் அமாவாசையன்று சூரியோதய நேரத்தில் பிறந்திருப்பின் விதி (லக்னம்) மதி (சந்திரன்) கதி (சூரியன்) இம்மூன்றும் ஒரே ராசியில் அடங்கிவிட்டது, அதாவது கடகம். இவரை பிறர் வெவ்லுவது கடினம். இவரை பிறர் வழிக்கு மாற்றுவதும் வெகு கடினம். ஏனெனின் இவருடைய விதியும் கதியும் மதியும் ஒரேவழியில் ஊர்ந்து செல்லும். விதிவேறு, மதிவேறு கதிவேறு ராசி உடையவர்களும் உண்டு. விதியானது தன்னுடைய சரீர நிலையையும், சரீரத்தின் விருப்பு வெறுப்புகளையும் குறிப்பிடும். மதியானது மானசீகமானது. மனேநிலையைக் குறிப்பிடுகின்றது சரீரத்திற்கு குறையில்லாம லிருக்கலாம். ஆனல் இவருக்கு மதி கலங்கி நிற்கும். சரீரத்திற்கு பல குறைகளிருந்தபோதிலும் ஒருசிலர் நிறை மனத்தோடு விளங்குவர். வாழ்க்கையில் எல்லா வசதியிருந்தும் சரீரம் நன்கு அமைந்தும் மனக்குறை யில்லாமலிருந்தும் வசதியை அனுபவிக்க முடியாதவராக விளங்குவர் ஒருசிலர். இவர்தான் கதியற்றவர். கல்வியில் உயர்ந்து தேர்ந்தவர். அறிவில் சிறந்தவர். நல்ல தொழிலுண்டு. நல்ல செலவுகள் புரிய மனமும் உண்டு. குடும்பமும் உண்டு. ஆனல் சில குற்றங்குறைகளை புரிந்தும் செய்ய வேண்டியதை செய்யத்தவறியும் கூடாததை செய்தும் தொழிலையிழந்து நடுத்தெருவில் நிற்பவர்களும் உண்டு. இவர்களும் கதியற்றவர்களே. ஆகையால் விதியையும் மதியையும் கதியையும் ஆராய்ந்து அறிய ஜனன லக்கினம், சந்திரா லக்கினம் பிறந்த மாதத்தைக்கொண்டு சூரியன் நின்ற ராசி இவைகளை அறிந்து அந்தந்த ராசிக்குறிய பலன்களை அறிவது சிறந்தது.

4 பெண்களுக்கென தனியாக பலன் எழுதியிருப்பினும் ஒருசில அம்சங்கள் இருபாலாருக்கும் பொருந்தும்.

5 ஸ்தோத்திர பரிகார நியமங்கள் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது.

6. ராகு கேது மாறுதல், மற்றவர் சார மாறுதல் தேதிகளை தொடர்ந்து வரும் ஸ்ரீ சிந்தாமணி ஜோதிடமலரில் காண்க.

சிந்தாமணி

காளிதாஸ் பிரஸ், மதருஸ்-24.

ஓம் ஸ்ரீ சிந்தாமணி கணபதயே நமோ நம :

குரு சனி மாறுதல் பலா பலன்கள்

மேஷம்

(அசுவனி—சு, சே, சொ, ல. பரணி—லி, லூ, லே, லோ. கிருத்திகை முதல் பாதம் —அ.)

குரு, சனி மாறுதல் ராசி நிலை

இந்த ராசி நேயர்களுக்கு சனிபகவான் ஜீவனாதிபதியும், லாபாதிபதியும் ஆவர். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் லாபஸ்தானமாகிய பதினோருமிடத்தில் ஆட்சி புரிந்து இந்த ராசிநேயருக்கு நல்ல பொருட்செல்வத்தையும் தொழில் வளர்ச்சியையும் வருமானப்பெருக்கத்தையும் மக்கட் சிறப்பையும், அவர்களால் பெருமையும் குடும்ப முன்னேற்றத்தையும், மனைவி மக்களால் நல்ல செல்வத்தையும் சமூக வட்டாரத்தில் செல்வாக்கையும் புதிய அந்தஸ்தையும் இன்னும் மற்ற துறைகளில் இவர் அடைவதற்கரிய யோக போகங்களை வழங்கிய கதிர் மகனாகிய சனிபகவான் லாபமனையை கடந்து விரய மனையாகிய மீன ராசியில் நடையிடுகின்றார்.

ஏழரையோன் காலம் என்றால் என்ன?

பன்னிரண்டாம் இடத்தில் பங்குதன் ஆகிய சனி நடையிடும் நாள் முதல் ஏழரையோன் காலம் ஆரம்பம் என்று சோதிட கோட்சார முறைப்படி சொல்லுவது வழக்கதில் இருந்து வருகிறது. அதாவது ஒரு ராசியைக் கடந்துச் செல்ல சனி கிரகத்திற்கு $2\frac{1}{2}$ ஆண்டுகள் தேவைப்படுகிறது. அவ்வாறு "சிரசு" என்று சொல்லக்கூடிய பன்னிரண்டாம் இடத்தையும் அதற்கடுத்தபடி "ஜன்மம்" என்று சொல்லக்கூடிய சந்திரன் நின்ற ஜன்ம ராசியையும், அதற்கடுத்தாற் போல் "பாதம்" என்று சொல்லக்கூடிய இரண்டாம் இடத்தையும் ஆக சிரசு, ஜன்மம், பாதம் ஆகிய மூன்று ராசிகளை கடந்திட சனி கிரகத்திற்கு $7\frac{1}{2}$ ஆண்டுகள் தேவைப்படுகிறது. இந்தக்கால வரம்பைத்தான் ஏழரை நாட்டுச்சனி என்றும் நயமாகக்கூறுங்கால் ஏழரையோன் காலம் என்றும் இந்தியில் "சாடேசதி" என்றும் கூறுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

மேலே கூறிய இத்தகைய ஏழரையோன் காலம் இந்த ராசி நேயருக்கு சனி மீன ராசியை அடையும் நாள் முதல் ஆரம்பமா கிறது. இந்தக்காலத்தின் முதற்பகுதியாகிய சிரசு என்று சொல்லக் கூடிய பன்னிரண்டாம் இடத்தில் சனிபகவான் சுமார் 2½ ஆண்டுகள் நடைபுரிய வேண்டி இருக்கிறது. கோட்சார விதிப்படி இந்த ராசிநேய ருக்கு சனி என்னென்ன பலாபலன்களையும் நன்மை தீமைகளையும் சுக துக்கங்களையும் வாழ்வு தாழ்வுகளையும் அளிக்கக்கூடும் என்பதை சற்று ஆராய்வோம்.

ஆரோக்கியம்

ஓர் ராசியில் 2¼ நட்சத்திரங்கள் அடங்கியுள்ளன. ஆக மொத்தம் ஒரு ராசியில் ஒன்பது நட்சத்திர பாதசாரங்கள் அடங்கியுள் ளன. ஒரு பாத சாரத்தை சனி கிரகம் கடந்துச்செல்ல சுமார் 3 மாதம் 10 நாட்கள் ஆகிறது. அதாவது நூறு நாட்கள். 7-4-66 முதல் சனி பூரட்டாதி நட்சதிரத்தின் 4-வது பாதசாரத்தில் நடைபுரிகின்றார். பூரட்டாதி நட்சத்திரம் குருதேவரின் பாதசாரமாகும். குருதேவர் இந்த ராசிநேயருக்கு ஒன்பதாம் இடத்திற்கும் பன்னிரண்டாம் இடத்திற்கும் அதிபர். இவர் 22-3-66 முதல் மூன்றும் இடத்தில் நடைபுரிகின்றார். இந்த குருதேவர் சஞ்சரிக்கும் பாதசாரம் திருவாதிரை மூன்று. இதற்கு ஆதாரக்கோளாகிய இராகுவும் சூரியனின் நட்சத்திரமாகிய கிருத்திகை 2-ம் பாதசாரத்தில் சஞ்சரிக்கின்றார். இந்த நட்சத்திரத் திற்கு அதிபன் சூரியன் பங்குனி மாதத்தில் விரயஸ்தானமாகிய பன் னிரண்டாம் இடத்தில் நடை புரிகின்றார். இந்த ராசிநேயருக்கு முதல் மூன்று மாதங்கள் குரு, சனி, ராகு, சூரியன் ஆகிய கிரகங்கள் மிகவும் பாதகத்தை விளைவிக்க கூடிய பாதசாரங்களில் சஞ்சாரம் செய்வது ஆகாது. இந்த ராசிநேயருக்கு கொடிய சோதனை சோர்வுகள் காட்டி டும். எத்துறையிலும் மிகமிக எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியமா கும். முதன்மையாக ஆரோக்கிய வாழ்வே ஆனந்த வாழ்வு என்ப தற்கேற்ப சரீரத்தை மிக பக்குவமாய் காத்தல் சிறந்ததாகும். இவர் எச்சரிக்கை தவறுவராயின் கொடிய பிணிகள் வந்தணுகும். இரத்த ஓட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றிடும். நரம்பு சக்தி குன்றிடும். இதனால் பாரிச வாயு, பித்த மயக்கம் கைகால் முடக்கம் போன்றவை சற்று இவரை பதம் பார்த்திடும் இந்த நோய்கள் சரீரத்தில் இடம் பெறு முன்னரே தவிர்ப்பதற்கு வேண்டிய பத்திய முறைகளை இவர் கையாள்வது சிறந்ததாகும். கீரை வகைகளையும் காய்கறி பதார்த்த வகைகளையும் அதிகம் சேர்த்துக்கொள்ளவும். கூடுமான வரையில் கிழங்கு வகைகளையும் அசைவபண்டங்களையும் நீக்கவும். நாற்பது வயது

கடந்தவர்கள் உணவின் அளவை குறைத்துக்கொள்வது நலம். இரவி லும் மிதமான ஆகாரத்தையே சேர்த்துக்கொள்வது நலம். இந்த பத்திய முறையை தவறுபவர்கள் மருந்தும் கையுமாக காட்சி அளிப்பர். வந்த பின் நோய்களை போக்கிட பலவித சங்கடங்களுக்குள்ளாவர். மருத்துவ விடுதிகளில் தங்கி உயர்தர சிகிச்சைகள் பெற நேரிடும். கையில் இருந்த பணம் வீணுக்கு செலவாகுமேயன்றி குணமேற்படுவது கடினமாகும். இத்தகையோர் நவக்கிரக தோஷ பரிகார சாந்தி முறைகளை செய்ய வேண்டியது அவசியமாகும்.

பொருளாதாரம்

ஆரோக்கியத்திற்கு அடுத்தபடி பணமே வாழ்க்கைக்கு பிரதானமாகும். இந்த கிரக நிலையில் இந்த ராசிநேயருக்கு பொருளாதார நிலை மிகவும் இக்கட்டான கட்டத்தை அடைந்திடும். சம்பாதித்த பணத்தை பொருளாக மாற்றியவர் செலவு என்ற பிடியிலிருந்து தப்பித்துக்கொள்வர். பணத்தை கரத்தில் வைத்திருப்பவர் பலவழிகளில் சிதறிடச் செய்து பின்னர் வருந்துவர். இந்த ராசிநேயருக்கு நல்ல தசாபுக்தி நடைமுறையில் இருந்து பரிசுத்தமான ஆரோக்கியத்துடன் இவர் விளங்குவாரரயின் பணமுடை என்ற பிணிக்குள்ளாவர். பணமிருந்தும் வேண்டிய தருணத்தில் இவர் கைக்கு வந்து சேராது கொடுக்க வேண்டியவர் பணத்திற்கு பதில் தவணையைச் செலுத்திடுவர் செய்துவரும் தொழிலில் சற்று மந்தமான நிலை ஏற்படும்.

தொழில்

இந்த ராசிநேயர் முன்பின் பாராமல் புதிய தொழில் ஒப்பந்தங்களிலோ வர்த்தக ஒப்பந்தங்களிலோ மற்றவர்களுடன் கூட்டாகவோ சுயமாகவோ ஈடுபடுவது கூடாது. பணம் கையில் இருப்பின் நிரந்தரப்பொருள்களை விருத்தி செய்வதிலும் நீண்ட தவணை பிக்ஸெட் டிபாசிட் செய்வதிலும் , பயன்படுத்தி பணத்தை பாதுகாக்கலாம். கையிலிருந்தால் நொடிப் பொழுதில் சிதறிப்போம். போன்வழியை இவரால் அறியவே முடியாது. அதிலும் மேஷம், சிம்மம், தனுசு, கும்ப மீன லக்கினத்தில் பிறந்தவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒருவரையும் நம்பலாகாது. எக்காரியத்தையும் சுய கண்காணிப்பிலேயே செய்வது நலம். புதிய வியாபார ஒப்பந்தம் செய்வதாக இருந்தால் தம்முடைய மூல நிதியாக இருந்தாலும் மனைவி அல்லது மக்களின் பெயரில் ஆரம்பிப்பது நலம். மற்ற எல்லாக்காரியங்களையும் தாமே செய்ய சகல உரிமையும் உண்டு. உழைப்பு தம்முடையதாகவும் விலாசம் மற்

றவர்கள் பெயரிலும் இருத்தல் சிறந்தது. உழைப்பிற்கேற்ற குறிப்பிட்ட மதிப்பீடு தொகையை மாதந்தோறும் வைத்து வழி செய்துக் கொள்ளலாம்.

யந்திரத்தொழிற்சாலை, அச்சகம், பிரசுராலயம், கமிஷன் ஏஜண்டுகள், எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், உணவு பண்டங்கள், மருந்து வகைகள், இரும்பு சாமான்கள், மின்சார சலகரணைகள், வாகன சாதனைகள், ஆயுதங்கள் போன்ற வியாபாரம் அல்லது தொழிற்சாலை உடையவர்கள் நல்ல பலனை அடைந்திடுவர். ஆனால் அரசாங்க ஆதரவினால் பெறக்கூடிய லைசென்ஸ் கோட்டா முதலியன சற்று தாமதமடையும்.

உத்தியோகத் துறையில் உள்ளோர்கட்கும் அரசாங்க சேவையில் உள்ளோர்கட்கும் உழைப்பும் பிரயாணமும் அதிகமாகும். ஓய்வு நேரம் குறையும். எந்தெந்த நேரத்தில் எதைச்செய்ய வேண்டுமோ அதைச்செய்யத் தவறுவதாலும் எதை செய்யக்கூடாதோ. அதைச்செய்ய நேரிடுவதாலும் இந்த ராசி ராசிநேயர் மேலதிகாரிகளின் சீற்றத்திற்கும் உள்ளாக நேரிடும். அன்றுடக்கடமைகளை அப்போதைக்கப்போது செய்து முடிப்பவர் 7½யோன் காலச்சோதனைக்குள் சிக்காமல் தப்பித்துக் கொள்ளலாம். எதையும் செய்யாமல் மௌனமாய் இருப்பவர்களும், வந்தது வரட்டும் என்று அசட்டையாய் இருப்பவர்களும் தீராத கவலைக்குள்ளாவர். எக்காரணத்தைக்கொண்டும் அலுவலக கட்டுகளை வீட்டுக்கு கொண்டுவரலாகாது. முடிந்த வரை அலுவலகத்திலேயே செய்து முடித்து வெறுங்கையுடன் வீடு திரும்புவது நலம். இந்தக் குறிப்பை மறந்தவர்கள் கட்டுகளை வழியில் கைசோர்ந்திட ச்செய்து வாட்டமுறுவர்.

உத்தியோகத்திலுள்ளவர்கள் வெளியூர் மாற்றப்படுவர். இதனால் இவர் ஓரிடத்திலும் குடும்பம் ஓரிடத்திலும் மக்கள் மற்றோரிடத்திலுமாக இருக்க நேரிடும். இதனால் இரட்டிப்பான செலவினங்கள் ஏற்படும், இதை நல்லதென்றே இந்த ராசிநேயர் கருதவேண்டும். இந்த இயற்கையின் வழியை மாற்ற முயன்றவர்கள் வீண்சோதனைச் சோர்வுகளுக்குள்ளாவர் இரட்டிப்பான செலவுகளை குறைக்கக்கருதியவர் வேறு வழித்துறைகளில் வீண் கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாவர்.

ஓய்வு பெற்றவர்கள்

ஏற்கனவே தொழிற்றுறையில் இருந்து விடுபட்டு ஓய்வு பெற்றவர்கள் இருப்பதைக்கொண்டு காலத்தை பகுவமாய் போக்குவதுச்

சிறந்தது. வேறு தொழில் சுயமாகவோ கூட்டாகவோ செய்ய முயன்றவர் தம் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு தேடிய செல்வத்தை ஒருசில மாதங்களில் கையை விட்டு சிதறிடச்செய்தவராவர். இதில் மிகமிக எச்சரிக்கை அவசியம். மற்றும் இவருக்கு வரவேண்டிய பணத்தையோ பொருளையோ அல்லது நியாயமாக இவருக்கு சேரவேண்டிய நிதியையோ நயமாகவே பெறுதல் சிறந்ததாகும். பொறுமையை இழந்து அவசர மனப்பான்மையுடன் நீதிமன்றத்தின் உதவியை நாடுபவர்கள் அதோகதி அடைந்திடுவர். தொடங்கிய போராட்டம் 7½ ஆண்டுகள் முடிந்தாலும் முடிவு காண்பது துர்லபமாகும். சேரவேண்டிய பணத்திற்கு மேல் செலவாகிடும். இதை முன்கூட்டியே அறிந்து தமக்கு சேரவேண்டியதில் ஒரு சிறு பகுதியை தாமாகவே விட்டுக்கொடுத்து மிஞ்சியதை கைவசமாக்கிக்கொள்வது சிறந்த நல்வழியாகும்.

அரசியல் துறையில் உள்ளோர்

அரசியல் துறையிலிருந்து இந்த ராசிநேயர் ஓய்வு பெற்றுக் கொள்வது நலம். இல்லையேல் எதிர்ப்பும் இடையூறுகளும் இவர் பாதையில் நிறைந்து காணப்படும். பதவி, அந்தஸ்து கௌரவம் இவைகளை தேட முயன்றால் இவருடைய சுயத்தொழிலும் பாதிக்கப் பட்டு பணம் விரயமாவதுடன் கௌரவத்திற்கு பங்கமும் ஏற்படக் கூடும். இவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களும் இவரை நம்ப வைத்தவர்களும் தக்க சமயத்தில் ஒதுங்கிடுவர். இவர் தீவிரமாக அரசியலில் ஈடுபடாமலேயே பொதுநல சேவையை என்றும் தம்முடைய கடமைகளில் ஒன்றெனக்கருதி சுயநலம் கருதாது செய்து வருவதில் எவ்வித இடையூறுகளும் ஏற்படாது என்பது உறுதி.

விவசாயம்

விவசாயத்துறையிலும் எதிர் பார்த்த அளவிற்கு பலிதம் கிட்டுவது கஷ்டம், சுய கண்காணிப்பும் அதிக உழைப்பும் பணவிரயமும் இருக்கும் பட்சத்தில் ஓரளவிற்கு பலிதம் கிட்டும். இந்தத்துறையில் அதிக மூலதனத்தை செலவிடுவதிலோ, பிறர் வசம் ஒப்படைத்து குத்தகை ஒப்பந்தம் செய்வதிலோ ஈடுபடலாகாது. இவருடைய நிலத்தால் பிறருக்கு பலன் ஏற்படும். செலவு செய்து சீர்படுத்தியபிறகு தாமே சுயமாக கண்காணிப்பது நல்லது.

மக்கள்

சனி பகவான் பூர்வபுண்ணிய ஸ்தானமாகிய ஐந்தாமிடத்திற்கு எட்டாமிடத்திலும் பித்ரு பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்கு

நாலாமிடத்திலும் சஞ்சாரம் செய்வதால் பூர்வீக சொத்து விவகாரங்களில் பணவிரயமும் மனக்கஷ்டமுமேற்படும். சிலவற்றை இவர் விக்கிரயம் செய்யவும் நேரிடும். மக்கள் இவர் விருப்பத்திற்கு மாருக நடந்துக் கொள்வர். மக்களுடைய ஆரோக்கியம் பாதிக்கப்படும். கருதிடாவகையில் புத்திரதோஷமும் ஏற்படும்.

ஒருசிலருக்கு புதியக்கடனும், சொத்தின் மீது வில்லங்கமும், தீரா வழக்குகளும் வந்து சேரும். பக்குவமாய் நியாயமான முறையில் செய்ய வேண்டிய கடமைகளை அவ்வப்போது செய்து சொத்துக்களை தம்முடைய பந்தத்திலிருந்து விடுவித்துக்கொள்வது சாலச்சிறந்ததாகும். தகப்பனுருக்கும் இவருக்கும் மனஸ்தாபம் உண்டாகும். பித்ரு வகையில் கெண்டங்களும் மாரகப்பிணிகளும் இவருக்கு கவலையை உண்டாக்கிடும். கடவுள் பக்தியும் தர்மகுணமும் பற்றற்ற நிலையும் இவருடைய நிலைமையை மாற்றுமேயன்றி, நியாயமும் நீதியும் நேர்மையும் இவருக்கு நேரான வழியை மறைத்திடும். இது தான் காலத்தின் கூற்று!

பிதுரு பாக்கியம்

குரு, சனி மாறுதல்கள் தகப்பனுருக்கு சற்று ஆகாது. குருதேவர் கடகத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் பெற்றோர் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீண் சோதனைகளும் மனச் சோர்வும் உண்டாகும் சனி பகவான் பிதுரு ஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்திற்கு அர்த்தாஷ்டமம் என்று சொல்ல கூடிய நாலாம் இடத்திலும், பிதுருஸ்தானுதிபதியாகிய குருதேவர் பித்ருஸ்தானத்திற்கு எட்டாம் இடமாகிய கடக ராசியில் சஞ்சரிக்கும்போதும் பெற்றோர்களுக்கு ஆகாது. ஒருசிலர் குடும்பத்தைவிட்டுப் பிரிந்திடவும் நேரிடும். இத்தருணத்தில் கூட்டாளிகளிடத்திலும், மனைவியிடத்திலும் மனவேற்றுமைகளும் வளர இடமேற்படும். மிகவும் பக்குவமாயிருத்தல் சாலச் சிறந்தது.

இடைக்காலம்

சனிபகவான் பூரட்டாதி 4-ம் பாதத்தைக்கடந்து தன்னுடைய சுய சாரமாகிய உத்திரட்டாதியில் சஞ்சரிக்கும் சுமார் ஓராண்டு காலமும் தீவிரமான கொடுமைகளை செய்யாதெனினும் நல்ல பலனை வழங்குமென்பதற்கு இடமில்லை. இந்தக்காலத்தில் குருதேவரும் மிதுன ராசியைக்கடந்து கடகராசியில் உச்சம் பெற்று விளங்குவதாலும் மீனத்தில் தன்னுடைய அகத்தில் சஞ்சரிக்கும் கதிர்மகனுகிய சனியை உற்று நோக்குவதாலும் தெய்வக்கடாக்ஷம் இந்த ராசிநேயரின் விதியில்

நிறைந்து தீமைகளை குறைத்து மேலே கூறிய கொடிய சோதனைகளால் வேதனைகள் வந்தணுகா வண்ணம் தக்க பாதுகாப்பளித்திடுவர்.

ஆனால் விரயாதிபதியாகிய குருதேவர் கடகத்தில் உச்சம் பெறுவதால் செலவினங்கள் பெருகிடும். லாபஸ்தானத்திற்கு ஆறுமிடத்திலும் பாக்கியஸ்தானத்திற்கு எட்டாம் இடத்திலும் ஏழாம் இடத்திறகு பத்தாம் இடத்திலும் புத்திரஸ்தானத்திற்கு விரயஸ்தானத்திலும் குருதேவர் சஞ்சாரம் செய்வதால் வருவாய்க்கு மேல் செலவும், அல்லது லாபம் குறைந்தும் காணப்படும். தகப்பனாருக்கும் மூதாதையர் சொத்திற்கும் ஆகாது. களத்திரத்திற்கும் ஆகாது. மக்களால் மனச்சோர்வும் ஏற்படும். செய்துவரும் வியாபாரத்தில் பணமுடையும், மற்றவர்களின் உதவிய நாடவேண்டிய சூழ்நிலையும் எதிர்பாராவசமாக ஏற்படும் இத்தருணத்தில் இந்த ராசிநேயர் அகலமான சேற்றுப்பகுதியில் சிக்காமல் பக்குவமாய் இருத்தல் நலம். வீடுகட்டுவதிலும், நிலம் வாங்குவதிலும் இருப்பதைக்கொண்டு நிறைவேற்றுவது நல்லது. வியாபாரத்திலும் இம்முறையை கையாள்வது சிறந்தது. கடன் வாங்கி காரியத்தை சாதிக்க முயன்றவர்கள் அதிகமான பொறுப்பை ஏற்க நேரிடும். தன் கையே தனக்குதவி என்ற பழமொழியை மறக்கலாகாது. பிறரை நம்பியவர் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாவர். கைப்பொருள் சேதமும் சோரமும், நாணயப்பழுதும் ஏற்படும். எச்சரிக்கை மிக மிக அவசியம். பந்து ஜனங்களால் நன்மையை விட பெரும் ஏமாற்றமேற்படும்

இராகுவும் கேதுவும்—இல்லற வாழ்க்கையும்

இந்த ராசிநேயர்களுக்கு இத்தருணத்தில் ராகு ஜன்மராசியிலும் கேது ஏழாமிடத்திலும் சஞ்சரிப்பது கவனிக்கத்தக்கது. தாம் ஒன்று நினைக்க வேறொன்று நிகழ்வதை கண்கூடாக பார்க்கலாம். தமக்கு கூட்டாளிகளே தீங்கு விளைவிக்கக் கருதிடுவர். அல்லது தம்மால் தம்முடைய கூட்டாளிகளுக்கு நல்ல லாபம் ஏற்படும். கூட்டு விவகாரங்களில் எக்காரணத்தை முன்னிட்டும் ஈடுபடாமல் இருப்பது நலம். இல்லறத்தில் ஈடுபட்டவர்களும் துறவிகள் போல் காட்சியளித்திடுவர். தாம்பத்திய வாழ்க்கையில் சலிப்பும் விரக்தி மனோபாவமும் ஏற்படும். குடும்பத்திலிருந்து பிரிந்து சிலகாலம் தனித்திருக்கவும் நேரிடும். இது ஒருவகையில் நல்லதென்றே கொள்ள வேண்டும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பெரும் சிகிச்சை அளிக்கவும் சிகிச்சையால் குணம் தெரியாமலும் சங்கடங்கள் ஏற்படக்கூடும். "மௌனம் கலக

நாஸ்தி'' என்ற பழமொழி பொய்யாகும். மௌனமாய் இருப்பதாலும் வீண் கலகம் ஏற்படக்கூடும். பக்குவமாய் விலகிடுவது நல்லது. நெருப்பைத்தொட்டாலும் சுடும். நெருப்பை அணைத்து தணிவிக்க முயன்றாலும் ஆவியடிக்கும். ஒதுங்கியிருந்து நெருப்பு தானாகவே தணியும் வரை அணுகாமல் இருப்பது சிறந்ததாகும். நெருங்கி விரோதத்தை சம்பாதிப்பதை விட ஒதுங்கியிருந்து கட்மையைச் செய்வது தான் சிறந்தது என்பதை வாழ்க்கையில் பல துறைகளில் கண்டறியலாம்.

நடைமுறை திசாபுக்தியும் குரு சனி மாறுதலும்.

புதன் திசை நடைமுறையில் இருப்பினும் ராகுதிசை நடைமுறையில் இருப்பினும் குரு, சனி, கேது புக்திகள் நடைமுறையிலிருப்பினும் சர்வ ஜாக்கிரதையுடன் இந்த ராசிநேயர் இருத்தல் அவசியம். அதிலும் சனிபகவான் மூன்று, ஆறுக்குடைய புதனின் சாரமும் கடைசி நட்சத்திரமுமாகிய ரேவதியில் சஞ்சரிக்கும் நாள்வரை வெகு பக்குவமாய் காலத்தை போக்குவது சிறந்தது. இது சமயம் குருதேவர் கடக ராசியைக் கடந்து பூர்வ புண்ணியஸ்தானமாகிய சிம்ம ராசியில் விளங்குவதால் தொழிற்றுறையில் அதிலும் உத்தியோகத்துறையில் உள்வர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பணம் சேருவது பெரிதல்ல. உத்தியோகத்தை பாதுகாப்பதுதான் சிறந்தது. குருதேவர் ஜீவனஸ்தானத்திற்கு எட்டாம் இடத்தில் சஞ்சரிப்பதால் தொழிற்றுறையில் வீண் கலகங்களும் பொறாமையும் வஞ்சகமும் போட்டியும் ஏற்படும்.

கல்வி

விரய ராசியில் தோன்றிய சனி வாக்கு ஸ்தானத்தையும் ஆறும் இடத்தையும், ஒன்பதாம் இடத்தையும் பார்வையிடுகின்றார். அதனால் கல்வி மந்தமடையும். கல்வி பயிற்சியில் அக்கரை குறையும். விளையாட்டு, வேடிக்கை, விநோத கேளிக்கைகளில் பொழுதைப் போக்கிட நேரிடும். சகவாசமும் கெடும். பெற்றோரிடத்தில் மரியாதையும், பயமும் குறையும்.

மேலும் குருதேவர் மூன்றுமிடத்தில் கல்விஸ்தானமாகிய நாலாம் இடத்திற்கு பன்னிரண்டில் சஞ்சாரம் செய்வதால் ஆதியில் கல்வி பயிற்சியில் ஊக்கமும், உறுதியும் தளருவதால் பயின்ற வித்தையையே மீண்டும் மீண்டும் பயிற்சி பெற்றிடுவதற்கான வாய்ப்பு ஏற்படும். சற்று எச்சரிக்கையுடன் கவனிப்பாராயின் முதல் தடவையே மேல் வகுப்பை அடைந்திடலாம். போட்டி பந்தயங்களில் வெற்றி

யுண்டு. ஆனால் பன்னிரண்டாம் இடத்தில் "முடவன்" என்ற சனி சஞ்சாரம் செய்வதால் காலில் அடிபட்டு காயமடைந்து - சில நாட்கள் இடத்தைவிட்டு நகர்ந்திடா வகையிலும் காயங்கள், சரிவு முறிவு கள், பிடிப்புகள் தளர்வு போன்ற அசதிகள் உண்டாகும். எச்சரிக்கை மிகமிக அவசியம். புதிய நண்பர்களிடத்திலும், பந்து ஜனங்களிடத் திலும் பழகுவதில் வெகு ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். இல்லையேல் வீண் பழி குற்றங்களுக்கு ஆளாக நேரிடும். பெற்றோர் களுடைய மனம் நொந்திடா வகையில் தம்முடைய கடமையை நிறைவேற்றிடுதல் வேண்டும். கல்வியில் முக்கால் பகுதி நேரத்தை யும், மற்ற ஈடுபாட்டில் கால் பகுதி நேரத்தையும் ஒதுக்கிட வேண் டும். உழைப்பும், தளரா உறுதியும், நல்ல வெற்றியையும், முன்னேற் றத்தையும் அளித்திடும்.

கலை

சங்கீத, நடன, நாடக, சினிமா போன்ற துறைகளில் ஈடு பட்ட கலைஞர்கள் தம்முடைய சுயநிலையை மறந்து கலையின் கட்டளைக்கே தம்மை அற்பணம் செய்துக் கொள்வதால் கிரகங்களின் பந்தம் இவரை ஓரளவிற்கு பாதிக்காது என்றே கூறலாம். மெஞ்ஞான தத்துவத்தில் ஞான ஒளியைப்பெற ஏழு அறைகளை எவ்வாறு வகுத் திருக்கின்றார்களோ அவ்வாறே கலை ஞானத்திலும் ஏழு சுவரங்களால் ஞான ஒலியைப்பெற முன்னோர்கள் வழி வகுத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இதில் லயமானவர்கட்கு ஏழரையோன் காலம் என்ன செய்யும்? இருப்பினும் இவர் காலத்தை அதிக லௌகீகப்பற்றிலும் முப்பொருள் மோகத்திலும் செலுத்தாமலிருப்பின் கொடியவை இவரை அணுகுவதற்கில்லை.

ஞானம்

யந்திரஸ்தாபன நிருபர்களும், விஞ்ஞான ஆராய்ச்சி களில் ஈடுபட்டோர்களும் தம்தம் துறைகளில் முன்னேற்றமடைந் திடுவர். தம்முடைய தொழில் நுட்பப் பயிச்சியால் நவீன சலகரணை களை உலகுக்கு எளிய முறையில் பயன்படக் கூடிய அளவிற்கு விஸ்தாரமாக்கிட வாய்ப்பும், வசதியும் ஏற்படும். வெளிநாட்டு ஆதர வும் நன்கு அமையும்.

சனிபகவான் சந்திரன் நின்ற ராகிக்கு பன்னிரண்டாம் இடத்தில் நடைபுரிவதும் குருபகவானின் அகத்தில் தோற்றமளிப்பது வும் உலகப் பற்றைக் கடந்தவர்கட்கு சிறந்த பலனை வழங்கிடும்.

மௌன நிலையை அடைவதற்கு நல்லாதரவு ஏற்படும். குரு உபதேசம் பெறவும், பெற்றபின் நிலையான வழியை, அருள் நெறியை உறுதியாய் கடைப்பிடிப்பதற்கும் இது ஏற்ற தருணமாகும். காடு, மலை, முதலிய நிர்ஜனப் பிரதேச வாசிகட்கும் இல்லற இன்ப சுகங்களை மறந்தவர்கட்கும் ஆத்மீக துறையில் அதிசயிக்கக்கூடிய உண்மை தத்துவ விளக்கங்கள் புலனாகும். இவர்களை ஏழரையின் காலம் நெருங்கி ஏழு அரைகளின் விளக்கததை அளித்து மற்றவர்களுக்கு எளிதில் கிட்டாத பரம ஜோதியின் இடத்தை மெய்யுணர்வோடு கண்டறியக்கூடிய பாக்கியத்தை வழங்கிடும் என்பதில் ஐயமில்லை.

மாதர்கள்

கல்வி பயிற்சியில் ஊக்கமும் உறுதியும் தளரும். உடலாரோக்கியம் குறையும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டோர்களுக்கு மனச்சோர்வும் பிணிவாட்டங்களும் பந்து ஜனங்கள் தம்மிடத்தில் வேற்றுமை பாராட்டுவதால் மன அமைதியின்மையும், உயர்ந்த கல்வி சிறப்பை அடைய ஆர்வமுடையவர்கள் பயிற்சி முடிவதற்குள் திருமண வாழ்க்கையில் ஈடுபடவேண்டிய கங்கண பிராப்தமுண்டாகும். இதனால் கல்வி இடையில் நின்று விடும். தொழிற்றுறையில் இருப்பினும் தம்முடைய விருப்பத்திற்கு மாறுதலான மாற்றங்களை அடைந்திடுவர், தொழில் வேறு குடும்பம் வேறு என்ற நிலைமை உண்டாகும். குடும்ப பாரத்தை ஏற்பதா தொழில் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்வதா என்ற குழப்பம் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கையிலும் சில நாட்கள் கழிந்த பின்னர் எதிர்பாராவிதமாக கணவரிடம் இருந்து சில நாட்கள் பிரிந்திருத்தலும் சாதாரணமாக நிகழக்கூடும். எச்சரிக்கை மிகவும் அவசியம். இதனால் வீண்வாட்டங்கள் அடையவேண்டியதில்லை. பிரிந்த சதிபதிகள் மீண்டும் ஒன்று கூடுவர். மக்கள் குறைதோடமும் கர்ப்பந்தரிக்கும் காலங்களில் வீண் உடல் சோர்வுகள் கலக்கத்தை உண்டாக்கிடும், உடல்நிலைத் தளர்ந்திடும். ஒருசிலருக்கு கருதோஷமும் ஏற்படும். மக்கள் ஏக்கமும் ஒருசிலரை வீண் சிந்தனைக்குள்ளாக்கிடும். தம்முடைய பெயரில் நடந்துவரும் சுயத்தொழிலில் சிறிய மிரட்சிகள் நீதிமன்ற விவகாரங்கள் நாணயப்பழுதுகள், எதிர்பாராவகையில் பொருள் கைசோர்வுகள் போன்ற நஷ்டங்கள் வந்து சேரும்.

குருதேவர் கடக ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் குருதேவரின் பார்வை சனிபகவான் மீது விழுவதால் அத்தருணத்தில் சமமானப்பலன்கள் நடைபெறும். குருதேவர் கடகராசியைக்கடந்து சிம்மராசியில் தோன்றி ஜன்ம ராசியை நோக்கும் தருணத்தில் நற்பலன்

ஓங்கிடும். தடையுற்றிருந்த திருமணம் துரிதமாய் நடைபெறும். குடும்ப வாழ்க்கையில் சுகமும் ஒற்றுமையும் நல்ல வசதியும் ஏற்படும் ஏற்பட்ட குறை தோஷங்கள் நீங்கி சந்தான விருத்தியும் ஏற்படும். பந்து ஜனங்களிடத்தில் நல்ல தோற்றம் ஏற்படும்.

ஆகாத திசாபுக்திகளாய் இருப்பின் கொடிய வாட்டங்கள் வந்தணுகுவதற்கு முன்னதாகவே பக்குவமாய் இந்த மலரில் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளபடி சனிபகவானுக்கு பீரிதியும், பரிகாரமும் செய்து ஸ்தோத்திர மந்திரங்களை அன்றுடம் ஜெபித்து வழிபட்டு வரின் பாதகங்களால் வேதனைகள் வராது. சாதகங்களே ஏற்படும். மனம் அமைதி அடையும். உடல் பரிசுத்தமடையும். நோய் மறையும். கவலைகள் குறையும். நன்மைகள் ஓங்கிடும்.

ரிஷபம்

(கிருத்திகை கடைசி மூன்று பாதங்கள்—இ, உ, எ.
ரோகணி—ஒ, வ, வி, வு.
மிருகசீரிடம் முதல் இரண்டு பாதங்கள்—வே, வோ.)

குரு சனி—மாறுதலும் நன்மை தீமைகளும்

குரு

இந்த ராசி நேயருக்கு குருதேவர் விதி என்ற எட்டாமிடத்திற்கும், லாபம் என்ற பதினோராமிடத்திற்கும் அதிபதி. அட்டமாதிபதி என்ற காரணத்தால் இந்த ராசி நேயர்களுக்கு குருதேவர் கொடியவர் என்று சிலர் கூறுவதுண்டு. இதுபோலவே மாரகஸ்தானமாகிய பதினேருமிடத்திற்கு இவர் அதிபதியானதாலும், ராசிநாதனுகிய சுக்கிரனுக்கு இயற்கைப் பகைவர் என்ற காரணத்தாலும் இவரை கொடியவர் என்றும் சிலர் கூறுவதுண்டு. இவர் கொடியவராகவே கருதப்படினும், இவருடைய மாறுதல் இந்த ராசிநேயரைப் பொறுத்தளவில் நல்லதென்றே கூறவேண்டும். மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் 6, 8, 10 ஆமிடங்களை பார்வையிடுகின்றூர். இவர் விதியில் புதிய மாறுதல்கள் ஏற்பபட்டு தொழிற்றுறையில் நல்ல முன்னேற்றமேற்படும். நிதி நிலைமை வசதிகள் பெருகிடும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வசதிகள் தாமாகவே வந்தமையும். கடன்கள் மறையும். சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவமும், செல்வாக்கும் ஏற்படும்.

பராபவ வருஷம் ஆடி மாதக் கடைசியில் குருதேவர் கடக ராசியில் உச்சம் பெற்று விளங்குகின்றார். ரிஷப ராசிக்கு மூன்றாமிடமாகையால் உடலசதியும், தொழிற்றுறையில் வீண் சஞ்சலமும், விரக்தி மனோபாவமும், நண்பர்களிடத்திலிருந்து பிரிந்திருத்தல், வியாபாரத் துறையிலும், விவசாயத் துறையிலும் பலிதக் குறைவும் இவை போன்றவை சுமார் ஓராண்டு கால அளவிற்கு தோன்றிடும் பலன்களாகும்.

அதற்குமேல் குருதேவர் சுகஸ்தானமாகிய நலாமிடத்தில் நடைபுரிகின்றார். அளவுக்கு மீறிய செலவினங்கள் தோன்றிடும். ஆனால் இந்த ராசி நேயர் சுயமாக மண், மனை மாளிகை அமைத்துக் கொள்வதில் கருத்தைச் செலுத்திடுவர். அதன்படியே செயலிலும் ஈடுபட்டு இத்துறைகளில் பகீரதப் பிரயத்தனத்துடன் கால தாமதமேற்படினும் காரியத்தை சாதித்து முடித்திடுவர். நெருங்கிய உறவினர்கள் இவரை விட்டு பிரிதலும், இதனால் துயரமும் ஏற்படும். பந்து ஜனங்களிடத்தில் மன வேற்றுமையும் உண்டாகும். மிகவும் பக்குவமாயிருத்தல் சாலச் சிறந்தது.

சனி

இந்த ராசி நேயருக்கு சனிபகவான் தர்ம ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்கும் கர்ம ஸ்தானமாகிய பத்தாமிடத்திற்கும் அதிபர். இவரை தர்மகர்மாதிபதியென்றும் அழைப்பதுண்டு. ரிஷப ராசியில் தோன்றியவர்கட்டு இவர் யோககாரகனும் ஆவர். இத்தகைய பெரும் சிறப்புடன் விளங்கும் சனி பகவான் லாபஸ்தானமாகிய பதினோராமிடத்தில் நடையிடுவது இந்த ராசி நேயரின் பெரும் அதிர்ஷ்டமென்றே கூறவேண்டும்.

தர்மம் ஓங்கிடும். செய்து வரும் தொழில் ஓங்கி வளர்ந்திடும். வருமானம் உயர்ந்து விளங்கிடும். இவருக்கு நிரந்தரமானப் பொருள் சேர்க்கை ஏற்படும். மனைவி, மக்களால் பொருள் சேர்க்கையும் உண்டாகும். ஏற்பட்ட கடன்கள் மறையும். தொழிலில் புதிய மாறுதல்கள் ஏற்படும். எதிர்பாரா வகையில் நண்பர்கள் ஒத்தாசை புரிந்திடுவர். அந்தஸ்தும், சமூக வட்டாரத்தில் செல்வாக்கும் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கும். பெண்மணிகளால் இந்த ராசி நேயருக்கு பொருள் சேர்க்கையும் ஏற்படும். பணமுடையும், பற்றாக் குறையும் நீங்கி சுபிட்சமேற்படும். சுகமும் வாழ்க்கை வசதியும் மேலோங்கிடும்.

இராகு கேதுக்கள்

தற்போது இராகு ஜன்ம ராசியிலும், கேது ஏழாமிடத்திலும் சஞ்சரிக்கின்றனர். குரு சனி மாறுதலுக்குப்பின் சமீபத்தில் ராகு பன்னிரண்டாமிடத்திலும், கேது ஆறுமிடத்திலும் சஞ்சரிக்கத் தொடங்குகின்றார். இந்த ராசி நேயருக்கு நீதிமன்ற விவகாரங்களில் வெற்றியும் சாதகமானப் பலன்களும் கிட்டிடும். ஆனால் வீண் விர யங்களை தடுக்க வழியில்லை.

ஏற்பட்ட எதிர்ப்புகளும், இடையூறுகளும் தளர்ந்து வாழ்க் கையில் சுமுகமான தோற்றமேற்படும். எத்ரிகள் பணிந்திடுவர். கடன் தொல்லை குறையும். தமக்கு எதிர்ப்புகள் நிறைந்தபோதிலும் அவைகளையெல்லாம் தாங்கக் கூடிய ஆற்றலும், உறுதியும், மனோ திடமும் ஏற்படும்.

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு கேது ஐந்திலும் ராகு பதினோருமிடத்திலும் நடைபுரியத் தொடங்குவர். அத்தருணத் தில் வயிற்றுக் கோளாறுகளும், மக்கள் ஆரோக்கியக் குறைவும் ஏற்படக் கூடும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு சூல் பிணி வாட்டங்களும், கர்ப்பதோஷமும் ஏற்படக்கூடும். ஆனால் பண வசதி சிறந்து விளங்கும்.

மற்ற பொதுப் பலன்களை ஆராய்வோம்:-

ஆரோக்கியம்

சனி பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும், ஜன்ம ராசியையும், எட்டாமிடத்தையும் பார்வையிடுகின்றார். திரேகாரோக்கியம் நல்லபடி விளங்கும் இந்த ராசி நேயருக்கு சில மாதங்களாக ஏற்பட்ட கைகால் அசதி, வாயு, பிடிப்பு போன்றவை அகன்று திரேக ஆரோக் கியம் மிளிரும். குருதேவர் தன்னுடைய சுய சாரமாகிய புனர்ப் பூசத்திலும், சுக்கிரனின் பாத சாரமாகிய பூரத்திலும் சஞ்சரிக்கும் காலங்களில் இந்த ராசி நேயருக்கு எதிர்பாரா வகையில் சிறிய அயர்வுகள் தோன்றி வாட்டிடும். ஜீரண சக்தி குறைவதால் பெரும்பாலும் வயிற்றுக் கோளாறுகள் தோன்றி வாட்டிடும். நேரம் தவறாமல் உணவு உட்கொள்ள வேண்டும். இரவு நேரங்களில் ஆகா ரத்தை குறைக்க நல்லது. உணவு வகையில் மிகவும் பத்திய முறையை அனுசரிப்பது சாலச் சிறந்ததாகும்.

நிதிநிலைமை

சுமார் இரண்டு வருடங்களாக இந்த ராசி நேயருக்கு ஏற் பட்டிருந்த நிதிமுடை நீங்கி பணவசதி பெருகிடும். செய்துவரும்

தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டு. திருமணமாகாதவர்கட்கு விவாகம் நடைபெறுவதுடன் நல்ல பொருள் சேர்க்கையும் பணவசதியும் உண்டாகும். இது நாள் வரை தவணை செலுத்திய பாக்கிதாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கியை தாமாகவே வந்து செலுத்திடுவர். நிதி மிகுந்தோர் ஆதரவும் நல்ல முறையில் ஏற்படும். புராதன சொத்துக்களால் நல்ல லாபமுண்டு. கிரய விக்கிரய ஒப்பந்தங்களில் ஆதாயம் கிட்டிடும். தம்முடைய குத்தகைதாரர்களும் இவருடன் ஒத்துழைப்பர். பணியாட்களும் உண்மையுடன் உழைத்து லாபத்தை தேடி கொடுத்திடுவர். குரு தேவர் மிதுன ராசியைக் கடந்து கடக ராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் இந்த ராசி நேயருக்கு எதிர்பாரா வகையில் வீண் விரயங்கள் வந்து சேரும். இந்த ராசி நேயர் இந்த காலங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இல்லையேல் தம்முடைய பணமும் பொருளும் பிறர் கைவசமாகும். மற்றவர்களை நம்பி தம்முடைய மூல நிதியையோ மூலப் பொருளையோ எழுத்தொப்பந்தமில்லாமல் கொடுக்கலாகாது. நட்பு வேறு தொழில் வேறு பண விவகாரம் அதிலும் வேருனது என்பதை உணரவும்.

தொழில்

இது நாள் வரை விவசாய அபிவிருத்தி திட்டங்களில் கண்ணோட்டம் இல்லாதவர்களும் புதிய நிலங்களை சுயமாக அமைத்துக் கொள்வதுடன் நவீன சாதனங்களையும் ஏற்படுத்திக் கொண்டு இவர் கருதியபடியே நல்ல பலிதத்தையும் அடைந்திடுவர். நன்செய் நிலங்கள் நல்ல பலிதத்தை அளித்திடும்.

சனி லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் இந்த ராசி நேயருக்கு கீழ்ப்படிந்த தொழிலாளிகள் மூலமும், சேவகர் மூலமும் இவருடைய வியாபாரம் பெருகிடும். சுயத் தொழிலும் அபிவிருத்தி அடையும் சனி பகவான் உழைப்பையும், கடமை உணர்ச்சியையும் ஆட்சி புரியும் அதிகாரம் பெற்றவராகையால் இந்த ராசி நேயர் எவ்வளவுக் கெவ்வளவு சுயக் கண் காணிப்பிலும் கடமை தவருது செயலாற்றுகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு பலிதத்தையும் கைமேற் பலனையும் பெற்றிடலாம். இல்லையேல் கீழ்ப்படிந்த சிப்பந்திகள் நல்ல லாபத்தை அடைந்திடுவர். குருதேவர் சப்தம விரயாதிபதியாகிய செவ்வாயின் சாரமாகிய மிருகசீரிட நட்சத்திரத்திலும், சனி பகவான் குரு சாரமாகிய பூரட்டாதி நட்சத்திரத்திலும் சஞ்சரிக்கும் வரை கூட்டாளிகளால் நஷ்டமும், பொருட்சேதமும் ஏற்படக்கூடும். இத்தருணத்தில் மிகவும் பக்குவமாய் இருத்தல் சாலச் சிறந்தது. புதிதாக வியாபாரம் ஆரம்

பிப்பவர்கள் கூட்டு சேராமல் சுயமாக ஆரம்பிப்பது நல்லது. கூட்டாக இருந்தால் சீக்கிரம் விடுவித்துக் கொள்வதும் நல்லதே ஆகும்.

உத்தியோகத் துறையில் உள்ளோர்களும் அரசாங்க பதவி சேவையில் உள்ள மக்களும் பதவி உயர்வு பெறுவதுடன் நல்ல வருமானத்தையும் அடைந்திடுவர். குரு சனி மாறுதல் அடைந்தவுடன் இடமாற்றத்திற்கும் உள்ளாவர். குருதேவர் மிதுன ராசியை கடந்து கடக ராசியில் சஞ்சாரம் செய்யும்பொழுது பராபவ வருஷம் ஆவணி முதல் இந்த ராசிநேயர் மிகவும் பக்குவத்துடன் மற்றவர்களிடத்தில் பழக வேண்டும். குரு திசையோ, சந்திர திசையோ, ராகு திசையோ நடைபெறும் பட்சத்தில் மிகமிக எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். இவர் மீது வீண் பழி குற்றங்கள் சாட்டப்படும். இதனால் மிரட்சியும், அபகீர்த்தியும் ஏற்படும். சிறு மனப்பான்மையுடையவர்களின் சில்லரை விஷமங்களுக்குள்ளாக நேரிடும். இத்தருணத்தில் அலுவலக வேலைகளை அவ்வப்போது செய்து காரியங்களை காலதாமதம் இன்றி செய்து முடிப்பது நல்லது. வீண் புகாருக்கு இடந்தரலாகாது. உத்தியோக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இந்த ராசி நேயர் பிறருடன் கூட்டாக சேராமல் சுயமாகவே புதிய தொழிலில் ஈடுபடலாம். மூலநிதி சிறிதெனினும் தம்முடைய உழைப்பினால் அதைப் பெருக்கி சுயத் தொழிலை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து கொள்ள வழியேற்படும். ஆனால் இவர் பிறர் பணத்தையோ உழைப்பையோ ஆதாரமாகக் கருதி சுயத் தொழிலில் ஈடுபடுவாராயின் வீண் கஷ்ட நஷ்டங்கள் வந்து சேரும். இவருடைய கைப்பணமும் சிதறிடும். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

ஓட்டல் முதலாளிகள், பால், தயிர், வெண்ணெய், நெய் வியாபாரிகள், ஜவுளி வியாபாரிகள், சிறு கைத்தொழில் ஸ்தாபகர்கள், பொறியியல் வல்லுனர்கள், கணக்காயர்கள், கட்டிட வேலையில் காண்ட்ராக்ட்தார்கள் போன்றோர் உயர்ந்த வருமானத்தை அடைந்திட தக்க தருணமாகும். வெளியூர்களிலிருந்து பண்டங்களையோ மூலப்பொருள்களையோ குறைந்த விலையிலும் குறுகிய கால அளவிலும் வரச்செய்து தம்முடைய உழைப்பைக்கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் பெரிய மனிதர்களின் ஆதரவைக்கொண்டும் பெரும் முயற்சிகளில் அமோகமான பலிதத்தைக் காணலாம். பழையபடியே இருப்பதைக்கொண்டே நிறைவேற்றக் கருதுபவர்கள் கடைசியில் கணக்கு பார்க்கும் போது மிஞ்சியது ஒன்றுமே இல்லை என்ற முடிவைக்காண்பர். காலம் நல்ல வழி வகுக்கக் காத்திருப்பதை அவரவர் சூழ்நிலைக்கு தக்கபடி பெருக்கிக்கொள்வது சிறந்ததாகும்.

மூலதனம் சிறிதெனினும் மற்றவர் மூலப்பொருள்களை தாமாகவே முன் வந்து கொடுத்து லாபத்தின் ஒரு பகுதியையும் கொடுத்திடுவர். பெரும் யந்திரத் தொழிற் ஸ்தாபனங்களின் நிருபர்களாகவும் கிளை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாகவும் நியமனம் செய்யப்படுவதை தடையின்றி ஏற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே வேறு உத்தியோகத்துறையில் உள்ளோர்களும் சுயமாக தம்முடைய மனைவி மக்கள் பெயரிலும் சிறிய கிரய விக்கிரய ஒப்பந்தங்களிலும் ஈடுபட வழியேற்படும். அதல்லாமல் புதிய வியாபாரங்களை ஆரம்பிக்கவும் வாய்ப்பு கிட்டிடும். அயல்நாட்டு ஒப்பந்தங்களில் இந்த ராசிநேயருக்கு லாபம் கிடைத்திடும்.

அரசியல் துறை

சனி பதினொருமிடத்தில் சஞ்சரிப்பதுவும், குருதேவர் இரண்டாமிடத்தில் சஞ்சரிப்பதுவும் இந்த ராசி நேயருடைய அந்தஸ்தையும், செல்வாக்கையும் சமூக வட்டாரத்திலும் அரசியல் துறையிலும் உயர்த்திடுதல் வேண்டும். பொதுஜனங்களுடைய அன்பும், ஆதரவும், அபிமானமும் இவர்பால் நிலைத்து இவர் வெற்றியுடன் திகழ்வர்.

ஆனால் குருதேவர் மிதுன ராசியைக் கடந்து கடக ராசியிலும், சிம்ம ராசியிலும் சஞ்சரிக்கும் காலங்களில் போட்டியும் பொறாமையும் சூழ்ந்திடும். இத்தருணத்தில் பக்குவமாய் விலகி ஒய்வு பெறுவது நலம். சுயநலத்திற்கான வழிகளில் உழைத்து நல்ல ஆதாயத்தை அடைந்திடலாம்.

குடும்பம்

குடும்பத்தில் பற்றில்லாமலிருந்தவர்கள் குடும்பத்தில் மிகவும் அக்கறை கொண்டவர்களாவார்கள். திருமணமேற்பட்டு சில காலமாக பிரிந்திருந்தவர்கள் ஒன்றுகூடி இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவர். திருமணமாகாதவர்கட்கு திருமணம் நடைபெறும். இதனால் நல்ல பொருள் சேர்க்கையும் ஏற்படும். நீண்டகாலமாக புத்திர சந்ததியே இல்லாமலிருந்தவர்கள் சந்தானபாக்கியத்தையும் எளிதில் அடைந்திடுவர். மனோபிலாஷை நிறைவேறிடும்.

குருதேவர் சப்தம விரயாதிபதியாகிய செவ்வாயின் சாரமாகிய மிருகசீரிடத்தில் சஞ்சரிக்கும்போது மனைவியின் ஆரோக்கியம் சற்று பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்ற பிறகு குணமாகும். உடன்பிறந்தோர்களின் ஒற்றுமை குறையும். கடக, சிம்ம ராசிகளில்

குருதேவர் நடைபுரியும்போது பந்துஜன விரோதமும், சங்கடமும் ஏற்படும்.

பெற்றோர்கள் நிலை

சனி பகவான் ஒன்பதாமிடத்திற்கு மூன்றுமிடத்திலும், நாலாமிடத்திற்கு எட்டிலும் சஞ்சரிக்கின்றார். தாயாருக்கு உடலசதியும், மாரகப்பிணி வாட்டங்களும், கெண்டங்களும் தோன்றி மிரட்சியளித்திடும். சனிபகவான் பூரட்டாதி நட்சத்திர சாரத்தில் சஞ்சரிக்கும் நாள் வரை சற்று எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

ஆனால் தகப்பனாருக்கு இந்த மாறுதல் நல்ல லாபத்தையும் தொழில் முன்னேற்றத்தையும் வருமான உயர்வையும் அளித்திடும். தொழிற்றுறையில் அவருக்கு ஏற்பட்டிருந்த மந்தமான நிலைமையகன்று பரிபூரண வெற்றியும், கைமேற் பலனும் கிட்டிடும்.

கல்வி

கல்வி வளர்ச்சியடையும். உயர்தர கல்விச் சிறப்பும் நன்கு அமையும். தொழிற் பயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்து தம்முடைய எதிர்காலத்தை செப்பனிடுவதற்கான சாதனையும் ஏற்படும். பராபவ ஆவணி முதல் குருதேவர் கடக ராசியில் கல்வி ஸ்தானமாகிய நாலாமிடத்திற்கு பன்னிரண்டாமிடத்தில் சஞ்சரிப்பதாலும், சனிபகவான் நாலாமிடத்திற்கு எட்டாமிடத்தில் நடை புரிவதாலும் கல்வி பயிற்சி இடையில் தடைபடவும் நேரிடும். அதிக ஊக்கமும், உறுதியும் தேவை.

கலை

கலைத் துறையில் தெளிவான சாதனையும், நுட்பமான பயிற்சியும், இந்த ராசி நேயருக்கு ஏற்படும். இவருடைய திறமையும், விவேகமும் மேலோருடைய கவனத்தைக் கவர்ந்திடும். இது மட்டுமல்ல, இவரை பலர் தேடி வந்தணுகுவர். சன்மானமும், வருமானமும் பெருகிடும். புகழ் ஓங்கிடும்.

ஞானம்

விஞ்ஞானிகள் தம்தம் துறைகளில் நுட்ப ஆய்வுத் திறமையால் அரசாங்க சன்மானத்தையும், உலகப் புகழையும் அடைந்திடுவர். காந்த சக்தியினால் இயங்கும் தொழில்கள் வளர்ச்சியடைய புதிய சாதனைகளை ஏற்படுத்திடுவர். இதுபோலவே உணவுப் பொருள் பெருக்கத்திற்கான நவீன முறைகளும் வகுக்கப்படும். அபரிமிதமான பலிதமும் கிட்டிடும்.

ஆத்மீகத் துறையில் ஈடுபாடுடையவர்களும் மெஞ்ஞானிகளும் தமக்கு வேண்டிய யோக சாதனையில் சித்தி பெற்றிடுவர். இவருடைய நெறி உறுதியான வழியில் நின்றிடும்.

ஆகாத தசைபுக்திகளும் கிரக மாறுதல் நிலையும்

இந்த ராசிநேயர்களுக்கு சந்திரன், செவ்வாய், சுக்கிரன், குரு இந்த நால்வருடைய திசைகள் ஆகாதவை. இவைகளில் ஏதாவதொன்று நடைமுறையில் இருந்து ஆகாதவர்களின் புக்தியும் நடந்திடில் கோட்சார விதிப்படி நடக்கவேண்டிய நற்பலன்கள் நிதானமடையும். நல்லோர் நன்கு அமைந்திருந்து அவர்களின் திசை நடைமுறையில் இருப்பின் குறிப்பிட்ட நல்ல பலன்கள் துரிதமாய் நடைபெறும். கொடிய திசை புக்தியும், கொடிய கோட்சாரமும் அதாவது குருதேவர் கடக சிம்ம ராசிகளில் தோன்றினல் பந்துஜன விரோதமும், நெருங்கிய நண்பர்களிடத்தில் மன வேற்றுமையும், பெற்ரேரிடத்தில் மனஸ்தாபமும், தொழிற்றுறையில் விரோதமும் அதிருப்தியும், வீண் விரயமும் ஏற்படும். இந்த மலரில் கடைசிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பரிகார நியமங்களையும் ஸ்தோத்திர வழிபாட்டையும் தவருது செய்துவரின் ஏற்படக்கூடிய இன்னல்கள் அகன்று நன்மைகள் பெருகிடும்.

மாதர்கள்

குரு சனி மாறுதல் இந்த ராசி மாதர்களை பொறுத்தளவில் சிறந்த நற்பலன்களையே வழங்கிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பருவமடைந்தோருக்கு திருமணம் துரிதமாய் நடைபெறும். ஏற்கனவே இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு சில அசந்தர்ப்பங்களால் பிரிந்திருந்தவர்கள் ஒன்று கூடுவர். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை ஏற்படும். திரேக ஆரோக்கியம் நன்கு விளங்கும். சந்தான விருத்தியும் ஏற்படும். தொழிற்றுறையில் ஈடுபட்டோர் நல்ல வருமானத்தை அடைந்திடுவர். சமூக வட்டாரத்தில் இவருடைய சேவையும் ஊக்கமும் சிறப்படைந்து நல்ல புகழும் ஓங்கிடும். உயர்தர கல்வி பயிற்சிக்கு இடமுண்டு.

குருதேவர் கடக ராசியில் சஞ்சரிக்கும் போது சற்று உடலசதி ஏற்படக்கூடும். எச்சரிக்கை மிக அவசியம். அத்தருணத்தில் பந்து ஜனங்களின் விரோதமும் தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமைக் குறைவும் ஏற்படும். நெருங்கிய உறவினர்கள் பிரிந்திடுவர்.

குருதேவர் சிம்ம ராசியில் உலவிடும் காலத்தில் பெற்ருருடைய ஆரோக்கியமும் மக்கள் திரேக ஆரோக்கியமும் சற்று பாதிக்கப்படும். முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் நலம்.

இந்த ராசிமாதர்களின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் நல்ல வளர்ச்சியடையும். வருமானம் பன்மடங்கு பெருகிடும். பல கிளை ஸ்தாபனங்களும் உருவாகிடும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழிக்கேற்ப இந்த நல்ல தருணத்தை பயன் படுத்திட நல்ல ஆதாயம் ஏற்படும்.

மிதுனம்

மிருகசீரிடம் கடைசி இரண்டு பாதங்கள்—கா, கி.
திருவாதிரை—கு, க, ங, ச.
புனர்பூசம் முதல் மூன்று பாதங்கள்—கே, கோ, ஹ.

குரு, சனி மாறுதல் நிலையும் பொதுப் பலனும்

இந்த ராசிநேயருக்கு குருதேவர் சப்தம ஜீவனாதிபதி. விருப்பத்தையும் செய்யும் தொழிலையும் இவர் ஆட்சி புரிகின்றார். இதுநாள் வரை விரயஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் நடைபுரிந்து ஜன்ம ராசியில் தோற்றமளிக்கின்றார். தொழிற்றுறையில் அலைச்சலும் இடமாற்றமும் அளவுக்கு மீறிய செலவினங்களும் பொருட்சேதமும் விருப்பத்திற்கு மாறுதலான தோற்றங்களும் எதிர்பார்த்த விவகாரங்களில் ஏமாற்றமும் பொருளாதார நிலையில் இக்கட்டான சூழ்நிலையும் இந்த ராசிநேயருக்கு சாதாரணமாக ஏற்படக்கூடியவை. குடும்பம் ஓரிடம், இருப்பிடம் வேறிடம், தொழில் மற்றோரிடமுமாக ஏற்படக்கூடும். இதனால் வனவாசத்திற்கொப்பான வாழ்க்கை இவர் விதியில் தோன்றிடக்கூடும். ஆரோக்கியம் தளர்ந்து பிணி வாட்டங்களுக்குள்ளாவர். இத்தகைய நிலை குருதேவர் ஷஷ்டம லாபாதிபதியாகிய செவ்வாயின் சாரமாகிய மிருகசீரிட நட்சத்திரத்தில் நடைபுரியும் நாளளவு மட்டும் தோன்றிடும்.

குருதேவர் பராபவ வருஷம் ஆடி மாதக்கடைசியில் கடகராசியில் சஞ்சரிக்கத்தொடங்குகின்றார். இது குடும்பம், நேத்திரம், தனம் வாக்கு இவைகளை குறிப்பிடும் ஸ்தானமாகிய இரண்டாம் இடமானதால் இவருடைய குடும்பம் ஒருநிலைப்பட்டு அமைதி ஏற்படவும் இவருடைய செல்வாக்கு உயர்ந்திடவும் பணவசதி பெருகிடவும் தொழிலும் குடும்பமும் ஒரே இடத்தில் நிலைக்கவும் இவருடைய இஷ்டாபிலாஷை பூர்த்தியாகவும் வழி ஏற்படும். திருமணமாகாதவர்கட்கு திருமணம் நடைபெறும். வாழ்க்கையில் சுகமும் சௌகரியங்களும் பெருகிடும். உத்தியோகத்துறையில் உள்ளோர் பதவி உயர்வு பெறுவர்.

வருமானம் உயர்ந்திடும். மனைவி மக்கள் மூலம் பொருள் சேர்க்கையும் இவருக்கு ஏற்படும். ஆனால் சனி பகவானின் சாரமாகிய பூசநட்சத்திரத்தில் குருதேவர் நடை புரியும் காலத்தில் சற்று நிதானமான பலன்கள் ஏற்படும். இது சமயத்தில் திரேக அசதியும் உண்டாகும்.

கடக ராசியைக்கடந்து குருதேவர் மூன்றுமிடத்தை அடைந்ததும் சிறிய மனச்சோர்வுகளும், குடும்பத்தில் சச்சரவுகளும் வியாபாரத்தில் முன்னேற்றத்தடையும் நண்பர்களிடத்தில் மனவேற்றுமையும் செய்துவரும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபட வேண்டிய சூழ்நிலையும் சரீர வாட்டங்களும் பணமுடையும் உத்தியோகத் துறையில் சோதனைச்சோர்வுகளும் சாதாரணமாக நிகழக்கூடியவை. பூரம், உத்திரம் இந்த நட்சத்திர சாரங்களில் குரு சஞ்சாரம் மிகவும் கொடிதெனத்தோன்றிடும். ஆகாத திசை புக்திகளாகிய சூரியன், செவ்வாய், குரு திசையின் முதற்பகுதி, சனி திசையின் முதற்பகுதி, இவை நடைமுறையில் இருப்பின் வாட்டங்கள் நிறைந்தும் மற்ற திசா புக்திகளாய் இருந்தால் சமமானப் பலன்களும் ஏற்படும். கால திசைக்கேற்றவாறு பரிகார நியமங்களை செய்து சாந்தி அடைவது மிகச்சிறந்ததாகும்.

சனிபகவான் இந்த ராசிநேயருக்கு அட்டம பாக்கியாதிபதியாவர். இவர் பாக்கியஸ்தானத்தை விட்டு ஜீவனஸ்தானமாகிய பத்தாம் இடத்தை வந்தடைகின்றார். பத்தாம் இடமானது செய்யும் தொழிலையும் கடமையுணர்ச்சியையும் அரசாங்க தொடர்பையும் ஜீவனாதாரத்தையும் குறிப்பிடும் ஸ்தானமாகும். உயர்ந்த நோக்கங்களை உருவாக்கிடுவது செயல் ஒன்றுதான். இந்த செயல் ஓங்கிட கடமையுணர்ச்சியும், சுயநலமற்ற தியாகமும் இன்றியமையாதவை. இந்த ராசிநேயருக்கு இவை பரிபூரணமாக இவருடைய செயலில் பிரதிபலிக்கும். எதிர் காலத்தை சிறந்த முறையில் அமைத்துக்கொள்வதற்கான பிரதிபலன் கருதா உழைப்பும், தன்னலமற்ற சேவையும் பொதுநலத்தொண்டும் இவருடைய குறிக்கோளாக் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் இவருடைய வேலை நேரம் அதிகமாகும். ஓய்வு நேரம் குறையும். தொழிலில் அலைச்சல் மிகும். வெளியூர் பிரயாணங்களை அடிக்கடி ஏற்க நேரிடும். சரீர சுகம் கெடும்.

சனிபகவான் விரயஸ்தானத்தையும் சுகஸ்தானத்தையும் ஏழாமிடத்தையும் பார்வையிடுகின்றார். இதனால் அவசியமற்ற வழிதுறைகளில் இவர் அதிருப்திகரமான காரியங்களுக்கு வீண்செலவுகளை ஏற்க நேரிடும். அதுவும் இவருடைய சிறந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே ஏற்படுகிறதென்ற பாவனையில் ஆறுதல் அடையவேண்

டுமேயன்றி மனக்கலக்கத்திற்கு இடந்தரலாகாது. ஒரு சிலருக்கு புதிய கடன்களும் ஏற்படக்கூடும். தராதரம் அறியாமலும் பாத்திரமறியா மலும் இவர் கருத்தை செலுத்தி செலவிடுவதில் இவருடைய சேமிப்பு நிதி கரையும். மேலும் இவருடைய சுக சௌகரியங்கள் குறையவும் செய்யும். எவ்வளவுக்கெவ்வளவு இவர் சுக சௌகரி யங்களை பெருக்கிக்கொள்ள செலவு புரிகின்றார்களோ அவ்வளவுக் கவ்வளவு சுக சௌகரியங்கள் இவரை விட்டு ஒதுங்கிக்கொண் டேச்செல்லும். இதை ஆனந்தத்துடன் ஏற்கவேண்டியதுதான் இவ ருடைய விதி என்பதில் சந்தேகமில்லை. இவருடைய விருப்பத்தையும் மனோபிலாஷையையும் குறிப்பிடுவது ஏழாம் இடம். லௌகீகத்தில் இதை இச்சை என்றும் காமம் என்றும் மோஹம் என்றும் காதல் என்றும் இவைகளின் உட்கருவிகளாக மனைவியும் தம்முடைய கூட்டாளிகளுமாக அமைவது இயற்கையின் பரிசு. வாய்த்த மனைவி யும் ஏற்பட்ட கூட்டாளிகளும் இவருடைய விருப்பத்திற்கு முட்டுக் கட்டைகளாக சூழ்நிலைக்கேற்றவாறு அமைவர். நல்லவர்களும் இவரு டைய மனோபாவனைக்கு வேற்றுமையாக காட்சி அளித்திடுவர். இதில் விந்தையோ சந்தேகமோ அதிசயமோ ஏற்படுவதற்கு காரணம் இல்லை. மனைவியின் ஆரோக்கியம் தளரும். இதுவே இவருக்கு கவலையை உண்டாக்கிடும். நோய் ஏற்படாமல் இருப்பின் இவருக் கும் மனைவிக்கும் கருத்து வேற்றுமை ஏற்படக்கூடும். குடும்பத்தில் ஏற்படக்கூடிய விபரீதச்செலவுகளே இதற்கு காரணமாகும். அல்லது இவருடைய தொழில் ஓர் புரமும் குடும்பம் மற்றோர் புரமும் அமைவ தும் இதனால் தற்காலிக பிரிவினையும் அமைதியின்மைக்கு காரண பாத்திரமாகும். இவருக்கு அகால போஜனம் ஏற்படவும் அல்லது இவருடைய விருப்பத்திற்கு மாறாக சுவை குறைந்த உணவும் அன்றாட பகிஷ்கார திரஸ்காரங்களுக்கு காரணமாகும். இத்தகைய நிலை நடை பெறும் திசை புக்திகளுக்கு அனுசரணையாக ஏற்படும் என்பது தெளிவு. இவருடைய வாழ்க்கையில் சம்பவிக்கும் பலாபலன்களை வரி சைக்கிரமமாக ஆராய்வோம்.

ஆரோக்கியம்

வாழ்க்கையில் சுகம் குறைவதே இவருடைய அசதிக்குக்கார ணமே யன்றி சாதாரணமாக உடல் கூற்றில் இவருக்கு மருத்துவ புல னுக்குத்தோன்றக்கூடிய பிணிவாட்டங்கள் அணுகாது என்பது உறுதி. நடப்பது சனி திசையாகவோ, செவ்வாய் திசையாகவோ மூன்றாமிடத் திற்கதிபதியாகிய சூரிய திசையாகவோ இருக்கும் பட்சத்தில் சோத னைச்சோர்வுகள் அதிகம் காட்டிடும் குரு திசையின் முதற்கூறாக இருப்பினும் அவ்வாறே நிகழக்கூடும். கவலையே பெரும் வியாதி. இதல்லாமல் தீராக்கடன்களும் தீரா வழக்குகளும் எதிரிகளின் தொல்லை

யும் இவருக்கு மனேவியாதியை உண்டாக்கிடுமல்லவா? கூடுமான வரையில் இந்த ராசிநேயர் பிறர் விரோதம் பாராட்டிய போதிலும் இவர் நட்புக்குறையா வண்ணம் திகழுவராயின் ஓரளவிற்கு மனே நிலேயை அமைதியான முறைக்குக் கட்டுப்படுத்தலாம். நீதிமன்ற விவகாரங்களுக்கு இடந்தராமல் விட்டுக்கொடுத்து பெருந்தன்மையை பாராட்டினுலும் வழக்குகளில் பணத்தையும் நேரத்தையும் செலவிடாமல் தம்மை ஓரளவிற்கு பாதுகாக்கலாம்.

பொருளாதாரம்

குருதேவர் ஜன்ம ராசியில் சஞ்சரிக்கும் காலம் வரை இந்த ராசிநேயருக்கு பொதுவாக பணமுடையும் பற்ருக்குறையும் இருந்தே தீரும். அதாவது பராபவ வருஷம் ஆடிமாதம் முடியும் வரை இவருக்கு செலவினங்கள் வரவுக்கு மேல் தோன்றிடும். கொடுத்தவர் நிர்ப்பந்தப்படுத்துவர். தமக்கு செலுத்தவேண்டியவர் தவணே செலுத்திடுவர். இடமாறுதலால் சிலருக்கு இரட்டிப்பான செலவுகள் ஏற்படும். ஒருசிலருக்கு நஷ்டமும் கையிலிருந்த பணம் கைசோர்ந்து விடக்கூடிய சூழ்நிலேயும் உண்டாகலாம். மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். ஆனுல் செலவுக்கேற்றவாறு பணம் எவ்வகையிலாவது வேண்டிய தருணத்தில் வந்து சேரும்.

பராபவ ஆடிமாதம் கடைசியில் குருதேவர் ஜன்ம ராசியை விட்டு தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் உச்சம் பெற்று விளங்குவதால் எதிர்பாராவிதமாக நிதிநிலேமை வசதி பெருகிடும். இதுநாள் வரை தவணே செலுத்தியவர்கள் தாமாகவே இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு வந்து செலுத்திடுவர். பெரிய மனிதர்களின் ஆதரவு நிலேத்திடும். நிதி மிகுந்தோர் உதவியால் தம்முடைய சுயத்தொழிலும் வியாபாரமும் அபிவிருத்தியடையும். இவருடைய அந்தஸ்தும் கௌரவமும் செல்வாக்கும் உயர்ந்து விளங்கும். கடன் மறையும். சேமிப்பு நிதியில் பணம் குவியும். குடும்பத்தில் சுபீட்சம் தாண்டவம் புரியும். இத்தருணத்தை இந்த ராசிநேயர் நன்கு பயன் படுத்திக்கொள்வது நல்லது.

குருதேவர் கடக ராசியைக்கடந்து சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் போது மீண்டும் சற்று நிதிநிலேமை தளரும். நெருங்கிய நண்பர்களிடத்திலிருந்து பிரிதலும் தொழிற்றுறையில் மந்தமான நிலேயும் குடும்பத்தினரின் தேவை அதிகமாகவும் தம்முடைய வருவாய் குறைந்தும் காணப்படுவதால் பணமுடையும் பற்ருக்குறையும் நீடிக்கும், நடைமுறை திசையானது வெள்ளியின் திசையாகவோ சந்திரன் திசையாகவோ, புதன் திசையாகவோ இருந்து திசைநாதர் சுபஸ்தானங்களில் வலு பெற்றிருப்பின் பணவசதி தளராது எந்த நேரத்திலும் இந்த

ராசிநேயருக்கு உறுதுணையாக நின்றிடும். ஆகாத திசை புக்திகள் நடைமுறையில் இருந்தால் கடன்தொல்லையும் தம்முடைய சக்திக்கு மீறிய காரியங்களில் நம்பி இறங்கியதால் மிகவும் இக்கட்டான சூழ் நிலையும் ஏற்படும். இந்த ராசிநேயர் காலமறிந்து தருணமறிந்து மிக வும் பக்குவமாய் இருத்தல் சிறந்தது இல்லையேல் தலையிட்ட விவகா ரங்கள் துண்டு துண்டாகவே நின்றிடும். கைக்கு வந்த பணமும் இட்ட திட்டங்களை நிறைவேற்ற வொட்டாமல் வீணுக்கு பாய்ந்துச் செல்லும். உழைத்து தேடிய பணம் வட்டிக்கு செலுத்தவே சரியாகி விடும். உஷார்!

தொழில்

சனி பத்தாம் இடத்தில் உலவுவதும் குருதேவர் ஜன்மராசி யில் சஞ்சரிப்பதுவும் உணர்த்துவது யாதெனில் பாடுபட்டால் உண்டு வாழ்வு, இல்லையேல் தாழ்வு, என்பதைத்தான். ஆகையால் பாடுபட்டு தேடிட விவசாயத்துறை மிகவும் பொருத்தமானது. சுரங்ககுத்தகை தாரர்களும், செங்கல் சூளைபோடுபவர்களும் பணத்தை நிலத்தில் கொட்டி பன்மடங்கு மதிப்பைப் பெறுதல் பெரும் உழைப்பாலன்றி வேறொன்றிலில்லை என்பது தெளிவு. ஆகையால் பூமியை நம்பியவர் தம் தம் துறைகளில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திடுவர். பராபவ ஆடி மாதம் வரையில் சற்று பலிதக்குறைவாகவும் தொடர்ந்துவரும் வருடங் களில் நல்ல பலிதமும் கிட்டிடும். ஒரு சிலர் நிலத்தில் ஒருபகுதியை விக் கிரயம் செய்ய வேண்டிய நிமித்தமும் ஏற்படும்.

வியாபாரத்தில் ஈடுபட்டோர் ஆவணி மாதமுதல் புதிய ஒப்பந் தங்களில் ஈடுபட்டு அமோகமான லாபத்தை அடைந்திடுவர். இந்த ராசிநேயர் பெரும் நிதியை மூலநிதியாக வைத்து பணத்தை சம்பா திக்கவேண்டிய கட்டத்தில் சனி பகவான் இடமளிக்கமாட்டார். பணம் சிறிதெனினும் உழைப்பும் அலைச்சலும் அதிகமேற் படும். தம்முடைய அனுபவப்பயிற்சியும், சமயோசித புத்தி யூக மும், புத்திசாதுரயத்தினால், ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொண்டு அதன்படி நிறைவேற்றிட பெரும் லாபமுண்டு தம்முடைய கௌரவ மும், அந்தஸ்தும், செல்வாக்கும் உயர்ந்து விளங்கும். புத்தி சாதுர் யத்தை பணத்திற்கும் பெரும் பொருளிற்கும் அடகுவைத்து பணத்தைக் கொண்டு பணத்தை சம்பாதிக்க நினைப்பவர்கள் இரண்டையும் கோட்டை விடுவர். புத்தியும் மாறிடும். பணமும் கைமாறிவிடும். எச் சரிக்கை அவசியம்.

தரகு வியாபாரிகள், (கமிஷன் ஏஜெண்டுகள்) புத்தக வியா பாரிகள், காகிதம், தட்டு மொட்டுப் பொருள்கள், மருந்து வியாபா ரிகள், பருப்பு வியாபாரிகள், செங்கல், சுண்ணும்பு போன்ற கட்டிடப் பொருள் வியாபாரிகள், அயல் நாட்டு இறக்குமதி அனுமதி பெற்றவர்

கள் நல்ல லாபத்தை தேடி அடைந்திடுவர். ஆடம்பர வஸ்துக்களை வினியோகம் செய்யும் நிருபர்கள் நல்ல ஆதாயத்தை அடையலாம். ஆசிரியர்கள், கல்வித்துறையில் உள்ளவர்கள், புத்தகாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள் தம்தம் துறைகளில் நல்ல வருவாயைப் பெற்றிடுவர். மற்றவர்கள் சாதாரணப் பலனை அடைந்திடுவர்.

அரசாங்க சேவையில் உள்ளோர் வெளியூர் மாற்றப்படுவர். முதல் மூன்றுமாதங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்திருக்கவும் நேரிடும். பிறகு உத்தியோக உயர்வும், வருமான பெருக்கமும் ஏற்படும். மேலதிகாரிகளின் அபிமானம் நன்கு விளங்கும். குருதேவர் மூன்றுமிடமாகிய சிம்மராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் வெகு ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். சிறிய மனப்பான்மையுடையவர்களின் சூட்சியால் அறுவருக்கத்தக்க சூழ்நிலைக்குள்ளாக நேரிடும். வீண் புகார்கள், பழிகள், குற்றங்கள் இவர் மீது ஆதாரமின்றி சாட்டப்படும். எத்தகைய சந்தேகங்களுக்கும் இவர் இடந்தராமல் தம்மை பாதுகாத்துக்கொள்வது சிறந்ததாகும். கோளின் வலிமையை உதாசீனப் படுத்துபவர்கள் நிகழ்ந்தபின் வருந்த நேரிடும்.

சுயத்தொழிலதிபர்களும், தனிப்பட்ட ஸ்தாபனங்களில் பணியாற்றுபவர்களும் நல்ல முறையில் தம்தம் தொழிலில் முன்னேற்றங் காண்பர். சுயமாகவே செய்பவர்கள் நல்ல பலனை அடைந்திடுவர். கூட்டுமுயற்சியில் ஈடுபட்டவர் சற்று தயக்கமானப்பலன்களைக் காண்பர். பிறருடைய பெயரில் வழங்கிவரும் ஸ்தாபனத்தில் தொண்டாற்றுபவர்கள் சிறந்தபலனைக்காண்பர்.

உத்தியோகத்துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் மீண்டும் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புண்டு. தம்முடைய அனுபவ ஞானமும் விதரணையும் நல்ல ஒப்பந்தங்களை வெற்றியுடன் நிறைவேற்றித்தருவதில் அரும்பயனளித்திடும். நிதானமடைந்த விவகாரங்களை துரிதப்படுத்துவதற்காகவும் இவருடைய உதவியை மேலோர் நாடிடுவர். இதனால் இவருடைய பெருமையும் ஓங்கிடும்.

அரசியல் துறையில் கீழ்தரபட்ட வகுப்பினர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் ஆதரவளிக்கும் கட்சியைச்சார்ந்தவர்களும் ஏழை தொழிலாளிகளின் முன்னேற்ற கவனத்தில் பாடுபடும் கட்சித் தலைவர்களும் பொதுமக்களின் ஆதரவைப்பெற்று வெற்றியுடனும் புகழுடனும் திகழ்வர். ஆனால் இந்த ராசிநேயர் சமயோசிதமறிந்து நிதிமிகுந்தோர் உதவியால் முன்னேற வேண்டுமென்று தம்முடைய கொள்கையைக் விட்டுக்கொடுப் பாராயின் பொதுமக்களும் இவரை விட்டுக் கொடுத்திடுவர். கட்சி பலத்தாலும் மக்கள் ஆதரவினாலும் இந்த ராசி

நேயர் கம்பீரமானத்தோற்றத்துடன் விளங்குவரே அன்றி பணபலத்தாலோ அல்லது கனநிதிவான்களின் ஆதரவினுலோ அல்ல என்பது தெளிவான உண்மை. இந்த சூட்சும கிரக நிலைமைக்கு எதிராக காரியத்தில் இறங்கியவர் மீண்டும் கரையேறுவது கடினமான காரியம்.

குடும்பம்

குடும்பஸ்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு இரண்டரை ஆண்டு காலம் சனிபகவான் எட்டாம் இடத்தில் சஞ்சரித்து தற்போது பாக்கியஸ்தானத்தை அடைந்துள்ளார். குடும்பத்தில் நீடித்த மனக் குறைகள், சங்கடங்கள், அசதிகள், பிணிவாட்டங்கள், நிதிமுடை, கடன் தொல்லை, இரட்டிப்பான செலவினங்கள் இவையாவும் இனி மறைந்து சுபிட்சமும், மன அமைதியும், தெளிவும், பணவசதியும், ஆரோக்கிய வாழ்க்கையும் மேலோங்கிடும். முதல் மூன்று மாதங்கள் வரை சற்று பொறுமையுடன் இருத்தல் அவசியம். அதன் பின் பிரிந்த குடும்பம் ஒன்று கூடும். மறைந்த பொருள்கள் வந்து சேரும். சுபமங்கள பணிகள் சுமுகமாகவும், சுலபமாகவும் நடந்தேறிடும்.

பெற்றோர் நிலை

சனி பகவான் சுகஸ்தானமாகிய நாலாம் இடத்திற்கு ஏழிலும் குருதேவர் பத்திலும் சஞ்சரிக்கின்றனர். தாயாருக்கு உடல்நிலை தளரும். ஒன்பதாம் இடமாகிய பித்ருஸ்தானத்திற்கு சனி இரண்டிலும் குருதேவர் ஐந்திலும் தோற்றமளிப்பதால் தகப்பனருக்கு உடலசதியும் பண விரயமும் கஷ்ட நஷ்டங்களும் தொழிற்றுறையில் சோதனைகளும் தோன்றி வாட்டிடும். குருதேவர் குடும்பஸ்தானமாகிய இரண்டாம் இடத்திற்கு மாறியதும் அதாவது பராபவ ஆவணி முதல் எல்லா நன்மைகளும் பெருகிடும். ஏற்பட்ட பிணிகள் மறையும். கடன் குறையும். பணவசதி மேலோங்கிடும்.

கல்வி

கல்வித்துறையில் வளர்ச்சியுண்டு. தொழில்நுட்ப பயிற்சியும் ஏற்படும். இடையில் கல்வி பயிற்சி நின்றிருப்பின் மீளவும் தொடரும். தேர்வு உண்டு. இனி சற்றும் தயக்கம் இல்லாமல் உயர்ந்த கல்வி சிறப்பு ஏற்படும்.

கலை

கலைஞர்கள் சிந்தனை சக்தியிலும் கற்பனை சக்தியிலும் சிறந்தவராவார்கள். தம்முடைய ஸ்தாபனம் வளர்ச்சி அடையும். பலமக்கள் தொழில் புரிய ஆளடியவர் குழ விஸ்தாரமாய் அபிவிருத்தியடை

வதுடன் கிளைஸ்தாபனங்களும் உருவாகிடும். சூரிய திசையோ குரு திசையோ சனி திசையோ நடைமுறையில் இருப்பின் சற்று தயக்க மேற்படும். ஒன்று இருப்பின் மற்றொன்று அமைவது கடினமாகும். எல்லாம் ஒன்று கூடி விளங்கும் போது பணமுடையும் பாதிக்கும். சந்திரன், புதன், வெள்ளி திசைகளாக நடைமுறையில் இருப்பின் சிறந்த பலன்கள் ஏற்படும். இவருடைய கற்பனைச் சுரங்கத்திற்கு ஈடு இணையற்ற பொருள் வந்து சேரும். கலைமதியாகிய சந்திரனை பௌர்ணமி தோறும் பூர்ண விரதமிருந்து வழிபட்டு வரின் சகல கலையும் சித்தி அடைந்து பதினாறும் பெற்று பெரும் வாழ்வு வாழ்வர்.

ஞானம்

ஞான மார்க்கத்தில் ஈடுபட்டவர்கள் தம்முடைய சாதனையில் சித்தியடைந்திடுவர். இவருக்கு பூர்வ புண்ணியஸ்தானம் சுக்கிரனின் மனையாகிய துலா ராசியாகும். மோக்ஷ மார்க்கத்தை அறிவிக்கும் பன்னிரண்டாம் இடமும் சுக்கிரனின் ஆட்சி வீடாகிய ரிஷபமாகும். துலா ராசி சனி பகவானுக்கு உச்ச மனை. இதற்கு ஆறுமிடத்திலும் ரிஷப ராசிக்கு லாபஸ்தானத்திலும் சனி சஞ்சரிப்பது சிறந்ததே ஆகும். மெஞ்ஞான வழியை கடைபிடித்தோர்க்கு குரு உபதேசமும் வெற்றிக்கு நல்வழி புகட்டுபவர்களின் சேர்க்கையும் ஏற்படும். பற்றற்வர்கட்கு தம்முடைய அரிய சாதனையால் மற்றவர்கள் அதிசயிக்கும் அளவிற்கு புதிய ஞானோதயம் ஏற்படும். மற்றவர்கள் எளிதில் சாதிக்கமுடியாத காரியங்களையும் இவர் சாதித்துக் காண்பிப்பர். விஞ்ஞான ஆராய்ச்சியிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் மருத்துவ ஆராய்ச்சியிலும் ஈடுபட்ட பேரறிஞர்கள் உலகப்புகழை அடையக்கூடிய அளவிற்கு தம்முடைய நுட்ப அறிவு ஆராய்ச்சி வெற்றி அளித்திடும் என்பது உறுதி.

நடைமுறை திசாபுக்தியும் குரு சனி மாறுதலும்.

இந்த ராசி நேயருக்கு கெட்ட பலனை வழங்கக் கூடியவை சூரிய திசையும் குரு, சனி திசைகளின் முதற்பகுதியுமாகும். செவ்வாய் திசையும் சுக்கிர திசையின் பிற்பகுதியும் சற்று ஆகாதவை. இந்த திசைகளும் மேலே கூறிய புக்திகளும் நடைமுறையில் இருப்பின் சனிபகவான் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் முதல் மூன்று மாதங்களும் உத்திரட்டாதியின் முதல் இரண்டு பாதங்களில் சஞ்சரிக்கும் அடுத்த ஏழு மாதங்களும் சற்று சோதனைகாலமாகவே விளங்கும். இவருடைய பிரயத்தினங்கள் எளிதில் பலிதத்தை அளிக்காது. அளித்தாலும் பிறருக்கு பயன்படக்கூடியதாக விளங்குமே யன்றி இந்த ராசிநேயருக்கு ஆதாயம் ஏற்படாது. பணமுடை பெரிதும் பாதிக்கும். எத்துறையிலும் அலைச்சல் அதிகமாகும். மற்

றவர்கள் இவரை வெறுக்கவும் நேரிடும். அல்லது இவர் மற்றவர் களை வெறுக்கவும் நேரிடும். ஆனல் முதல் பத்து மாதங்கள் கழிந்த பின்னர் நன்மைகள் பெருகிடும். அது தருணத்தில் குருதேவரும் தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் சஞ்சரிப்பதால் பணவசதி பெருகிடும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தொழில் மேன்மை அடையும். கனநிதிவந்தர்களின் ஆதரவு நல்லபடி ஏற் பட்டு அரிய பெரிய காரியங்களை இவர் சாதித்து வெற்றி காண்பர். வாழ்க்கையில் எல்லா வசதிகளும் பெருகிடும் என்பதில் ஐயமில்லை.

மேலும், மேலே கூறப்படாத கிரக திசைகள் நடைபெற்று திசைநாதர்கள் சுப க்ஷேத்திரங்களில் வலுவுற்று ஜனன ஜாதகத்தில் அமைந்திருப்பின் சகலச்செல்வ சுகயோக போகங்களும், ஆளடியவர், வாகனுதி பிராப்தியும் இஷ்டானுகூலமும் அரசாங்க ஆதரவும் நிலைக் கப்பெற்று பல தொழில்கள் புரிந்து கனநிதியை தேடி அடைந்திடு வர். வெளிநாட்டு வியாபார ஒப்பந்தங்களும் அயல் நாட்டு போக்கு வரவும் விரும்பிய படியே ஏற்படும்.

இத்தகைய நல்ல திசைகள் நடைமுறையில் இருக்கும்போது குருதேவர் மூன்ருமிடமாகிய சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் போது எதிர் பாராவிதமான சிக்கல்கள் பலவழித்துறைகளில் தோன்றி இந்த ராசி நேயர் இக்கட்டான சூழ்நிலைக்குள்ளாவர். பணம் சிதறிடும். ஆரோக்கியம் தளரும். கெண்டாதி கெண்டங்கள் காட்டிடும். பெற் ரேருக்கு ஆகாது. உதவி புரிந்த நண்பர்களும் வேற்றுமை பாராட்டு வர். தொழிற்றுறையில் போட்டியும் பொருமையும் தோன்றிடும். ஆகாத திசையும் இத்தருணத்தில் கூடிடில் இவர் சிறகொடிந்த பறவை போல் காட்சி அளித்திடுவர். இதை முன்கூட்டியே அறிந்து தக்க பக்குவங்களை கையாண்டு எச்சரிக்கையுடன் இருப்பின் ஓரள விற்கு கொடிய சோதனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

இராகு கேதுக்கள்

விரயஸ்தானத்தில் $1\frac{1}{2}$ வருஷம் சஞ்சாரம் செய்த ராகு லாப ஸ்தானத்திற்கும், ஆருமிடத்தில் உலவிய கேது பூர்வபுண்ணிய ஸ்தான மாகிய ஐந்தாமிடத்திற்கும் மாறுதல் அடைகின்ருர். தொழில் உயர்வு அடையவும், பல துறைகளில் வருமானத்தை தேடியடையவும் உகந்த காலம். நண்பர்கள் உதவிபுரிந்திடுவர். அயல் நாட்டிலுள்ள நண்பர் கள் நல்ல ஒப்பந்தங்களை இவருக்கு வியாபாரத்துறையில் ஏற்படுத் திடுவர். ஆனல் தாயாருக்கு ஆகாது.

கேது புத்திரஸ்தானத்தில் உலவுவது மக்களுக்கு அடிக்கடி உடலசதி தோன்றிடும். ஒரு சிலருக்கு ஆகாத திசாபுக்தி நடைமுறை

யில் இருப்பின் புத்திர தோஷமும் உண்டு. மந்திரோபதேசம் பெற உகந்த காலம். ஒன்றரை ஆண்டுகளுக்கு பின்னர் இராகு பத்தாமிடத்திற்கும் கேது நாலாமிடத்திற்கும் மாறுதலடைவதால் அத்தருணத்தில் தொழிலில் அலேச்சலும், பொருமையும் நிறைந்துக்காணப்படும். இவர் மீது பிறர் வீண்புகார்களே ஏற்படுத்தி தொல்லேயை விளேவிப்பர். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

பந்து ஜனங்களிடத்தில் விரோதம் வளரும். உடன் பிறந்தோர்களிடத்தில் மன வேற்றுமை உண்டாகும். பிரிந்து வாழவும் நேரிடும். வீடுவாகனங்களே பழுது பார்க்க நேரிடும். இதனுல் செலவுகளும் கடனும் ஏற்படும். வயோதிக உறவினர்களுக்கு ஆகாது. கல்வி பயிற்சி இடையில் நின்றுவிடும்.

மாதர்கள்

இவருடைய திரேகாரோக்கியம் சற்று பாதிப்பதுடன் குடும்பத்தில் தீராக்கவலேயும் மன அமைதியின்மையும் தோன்றிடும். பற்ருக்குறையும் பெருகிய செலவினங்களும் இவரை குழப்பத்தில் ஆழ்த்திடும். இவருடைய விருப்பத்திற்கு மாறுதலான நிகழ்ச்சிகள் அன்ருட வாழ்க்கையில் பிரதிபலிக்கும். சிரிப்பதா அழுவதா என்பது ஒரு சில தருணங்களில் இவருடைய கேள்வியாகும். இவர் ஓரிடமும், கணவர் மக்கள் மற்ருேரிடமும் பிரிந்து காலத்தை போக்கிடவும் நேரிடும். ஒரு சிலர் தாமாகவே சக்திக்கு மீறிய பொறுப்பான காரியங்களில் தலேயிட்டு திணறுவர். தொழிற்றுறையில் இருப்பின் இடமாற்றத்திற்குள்ளாவர். நல்ல திசாபுக்தி நடைமுறையில் இருப்பின் சமமானபலன்களும், ஆகாத திசைநடைமுறையில் இருப்பின் தீவிரமான சோதனேகளும் காட்டிடும்.

பராபவ வருஷம் ஆவணி மாதமுதல் சுப நிகழ்ச்சிகள் நடைபெற நல்வழி ஏற்படும். பணமுடைநீங்கும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை உண்டாகும். பிரிந்த குடும்பம் ஒன்று கூடும். விவாகமாகாதவர்கட்கு எதிர்பாரா விதமாய் திருமணம் கைகூடும். இவருடைய பெருமையும், அந்தஸ்தும், கௌரவமும், செல்வாக்கும் உயர்ந்து விளங்கும். குடும்பத்தில் சுபிட்சமும் லக்ஷ்மி கடாக்ஷமும் நிலேத்திடும். மக்களின் திருமண விவகாரங்கள் சுமுகமான முடிவைப்பெற்றிடும். மக்கள் பெருமையே இவருடைய பெருமையாம். மக்கள் மூலம் பொருள் சேர்க்கையும் உண்டு தொழில் உயர்வடையும். கையில் பணம் தாராளமாக நடமாடும்.

பிலவங்க வருஷம் புரட்டாசி முதல் சற்று அசதிகள் தோன்றி வாட்டிடும். திரேகாரோக்கியம் பாதிப்பதுடன், நெருங்கிய உறவினர்

கள் பிரிதலும், கவலையும், கஷ்டநஷ்டங்களும் உண்டாகும். தொழிற்றுறையில் அதிருப்திகரமான மாறுதல்கள் ஏற்படும். அனுவசியமான பீதி மனதில் குடிகொண்டிடும். மக்களுடைய ஆரோக்கியமும், கணவரின் உடல் நிலையும் பாதிக்கப்படும். பந்து ஜனங்களிடத்தில் மனஸ்தாபமும் உண்டாகும். குடும்பத்தில் அளவுக்கு மீறிய செலவினங்கள் ஏற்படும். நவகிரக பரிகார நியமங்கள் உகந்ததாகும்.

கடகம்

புனர்ப்பூசம் கடைசி பாதம்—ஹீ.
பூசம்—ஹூ, ஹே, ஹோ, ட.
ஆயில்யம்—டி, டு, டெ, டோ.

குரு சனி—மாறுதலும் நன்மை தீமைகளும்

லாபஸ்தானத்தில் இருந்த குருதேவர் விரயஸ்தானத்தில் பிரவேசிக்கின்றார். குடும்பஸ்தானமாகிய இரண்டாமிடத்திற்கு லாப மனையில் குருதேவர் சஞ்சரிக்கத் தொடங்குவதால் குடும்பத்திற்கு லாபகரமான செலவினங்கள் ஏற்படும். சுய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள இந்த ராசிநேயர் புதியத்தொழில் ஆரம்பிக்கவும், முதலீடு வைக்கவும் சேமிப்பு நிதியிலிருந்து பணத்தை எடுத்து பொருள் வாங்குவதில் உபயோகப்படுத்தவும் நேரிடும். வீடு, வாகனம், வியாபாரம் முதலியவைகளை சுயமாக அமைத்துக்கொள்வதிலும் அபிவிருத்தி செய்துக்கொள்வதிலும் புதிய கட்டிட வேலையிலும் செலவுகளை ஏற்க நேரிடும். உத்தியோகத்துறையில் உள்ளோர் வெளியூர் மாற்றத்திற்குள்ளாவர். தொழில் உயர்வும் உண்டு. சிலர் குருதேவர் பன்னிரண்டாமிடத்தில் வந்துற்ற போது குருபலன் இல்லையென்று கூறுவதுண்டு. அதற்கு மாறாக குடும்பத்தில் திருமணம் எதிர்பாரா விதமாக கைகூடும். சுப மங்களச்செலவுகளை ஏற்க இதுதான் நல்ல தருணம். சொத்து விஷயத்தில் கிரய விக்கிரய ஒப்பந்தங்களும் உண்டு. மனைவி மக்களின் ஆரோக்கியம் சற்று தளரும். இது விஷயத்தில் கவனம் அதிகம் தேவை. வாயு சம்மந்தமான பிணிவாட்டங்கள் இந்த ராசிநேயரை வாட்டிடும். அடிக்கடி வெளியூர் பிரயாணங்களை இவர் ஏற்க நேரிடும்.

குருதேவர் பராபவ வருஷம் ஆவணி முதல் ஜன்ம ராசியில் சஞ்சரிப்பதால் இந்த ராசி நேயருக்கு எதிர்பாரா வகையில் பலவழித் துறைகளில் செலவினங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தணுகும். ஒரு சிலர் செய்துவரும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாமென்ற அவசர முடிவுகளுக்கு வர சந்தர்ப்பமும் சூழ்நிலையும் நிர்ப்பந்தப்படுத்

தும். ஆனால் பொறுமையை இவர் கையாள்வது மிகச்சிறந்தது. இல்லையேல் கோட்டையை விட்டு கொட்டாவி விட நேரிடும். செய்து வரும் தொழிலே உகந்ததென்பதை மறக்கலாகாது. உத்தியோகத் துறையில் சொந்த ஊரைவிட்டு தொலைதூரத்திற்கு மாற்றப்படுவர். வன வாசத்திற்கொப்பான வாழ்க்கை ஏற்படும். குடும்பத்தில் இரட்டிப்பான செலவுகள் தோன்றி ஒரு சிலருக்கு புதியக்கடன்களும் ஏற்படக்கூடும். வியாபாரம் சற்று மந்தமடையும்.

குருதேவர் ஜன்ம ராசியைக்கடந்து இரண்டாமிடமாகிய சிம்ம ராசியில் சஞ்சரிக்கத்தொடங்கியதும் அதிருப்திகரமான சூழ்நிலை மாறு தலடையும். பணவசதி பெருகிடும். தம்முடைய விருப்பங்கள் நிறை வேறிடும். தொழில் மேன்மை அடையும். விவசாயத்துறையில் நல்ல பலிதம் கிட்டிடும். வியாபாரம் அபிவிருத்தியடையும். கனநிதிவான் களின் ஆதரவு பரிபூரணமாய் நிலைத்திடும். குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சனைகள் முடிவுற்று அமைதி ஏற்படும். நெடுநாட்க ளாக தடையுற்றிருந்த திருமணம் கைகூடும். வாகனப்பிராப்தியும் வாகனங்களால் நல்ல லாபமும் இவருக்கு ஏற்படும். சமூக வட்டாரத் தில் இந்த ராசிநேயர் நல்ல செல்வாக்குடன் திகழ்வர். சேமிப்புநிதி யில் பணம் சேரும். ஒரு சிலருக்கு புதிய பொருள் சேர்க்கையும் உண்டு.

சனி

கடந்த ஐந்து வருஷங்களாக சனி இந்த ராசிநேய ருக்கு மிகவும் கொடிய பலன்களை வழங்கும் ஸ்தானங்களாகிய ஏழு எட் டாம் இடங்களில் சஞ்சாரம் செய்து பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்தை அடைகின்றார். சனி இந்த ராசிநேயருக்கு ஏழு எட்டாம் இடங்களுக்கு ஆட்சி நாதர் என்ற போதிலும் ஏழு, எட்டாம் இடங் களில் ஆட்சி புரியும் தருணத்தில் இவருக்கு சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களையும், இடையூறுகளையும், எத்துறையிலும் மந்தமான நிலை மையையும் ஏற்படுத்தியிருக்கவேண்டும். இதற்கு மாறாக நல்ல தொழி லையும், உயர்ந்த வருவாயையும், வீடு, வாகனம், நிலம் போன்ற பொருட் செல்வங்களையும், நடைமுறை திசாபுக்திக்கேற்ப இந்த ராசிநேயர் அடைந்திருப்பின் சொத்தின் மீது வில்லங்கத்தையும், உடலசதியை யும், அங்கஹீனப்பழுதையும் கூட்டாளிகளிடத்தில் விரோதத்தையும் தீரா வழக்கையும் மனைவிக்கு அரிட்டமாரகப்பிணியையும் எதிர்பாராத பிரிவினையையும் சனிபகவான் பரிசாக அளித்திருக்க வேண்டும். பொதுவாக இந்த ராசிநேயர் ஆயுள் உள்ளவரை மறக்க முடியாத சம்பவங்களை வாழ்க்கையில் அஷ்டமச்சனி ஏற்படுத்தியிருக்க வேண் டியது அவருடைய கடமைகளில் முதற்கடமையாகும். இத்தகைய கடமையை முடித்து சனிபகவான் பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம்

இடத்தை அடைகின்றார். கோட்சார விதிப்படி சனிகிரகம் ஒன்பதாம் இடத்தில் சஞ்சாரம் செய்வதும் நல்லதன்று. ஆனால் எட்டாம் இடத்தில் இருந்தளவிற்கு கொடியதல்ல.

ஒன்பதாம் இடமானது பிதுரு பாக்கியஸ்தானமாகையால் தகப்பனாருக்கு ஆகாது. மூதாதையர் சொத்திற்கும் பழுதுகள் ஏற்படும். இவ்வகையில் இவருக்கு துயரமும் தீராக்கவலையும் உண்டாகும். குடும்பஸ்தானத்திற்கு சனிபகவான் எட்டாம் இடத்தில் சஞ்சாரம் செய்வது குடும்பத்தினருக்கு சோதனை ச்சோர்வுகள் காட்டிடும். வயோதிகமான பெரியோர்கள் இவரை விட்டுப்பிரிந்திடுவர். உடன் பிறந்தோர்கட்கு வாழ்க்கையில் எதிர்ப்புகள் நிறைந்து காணப்படும். குடும்பத்தில் பாகப்பிரிவினையும் ஏற்படும். வருமானம் குறையும். ஆனால் கடன் தொல்லை இருக்காது. நல்ல காரியங்களை சாதிப்பதற்கு இவர் பல முயற்சிகளை எடுக்க நேரிடும். இந்த ராசிநேயருக்கு ஏற்பட்ட பிணிவாட்டங்கள் மருந்தின்றி குணமடையும். மனைவியின் ஆரோக்கியமும் மிளிரும்.

புனர்ப்பூசம் 4-ம் பாதத்தில் தோன்றியவர்கட்கு முதல் மூன்று மாதங்கள் ஆகாதென்றே கூறவேண்டும். செலவினங்கள் அளவுக்கு மீறிடும். இருப்பிடம் மாறிடும். பந்துஜனங்களிடம் மனஸ்தாபம் உண்டாகும். எதிர்பாரா வகையில் பொருட்சேதமும் தகப்பனாருக்கு கெண்டாதி வாட்டங்களும் ஏற்படும். உத்திரட்டாதியில் சனி சஞ்சரிக்கும் போது நிரந்தரமான நற்பலன்கள் ஏற்படும். புதிய மண், மனை, வாகனாதிகள் வந்து சேரும். தொழிற்கூடங்கள் விஸ்தாரமடையும். தொழிலாளிகள் ஒத்துழைத்து தம்முடைய வருவாயைப்பெருக்கிடுவர். யந்திரத்தொழிற்சாலை அதிபர்கள், இரும்பு வியாபாரிகள், உலோகப்பொருள் விற்பனையாளர்கள், அச்சகஸ்தாபகர்கள் அவரவர் துறையில் சிறந்த ஆதாயத்தை அடைந்திடுவர். கடைப்பகுதியாகிய ரேவதியின்சாரத்தில் சனி சஞ்சாரம் செய்யும் போது போட்டியும் எதிர்ப்பும் வம்பு வழக்குகளும் வந்தணுகும். முன்னெச்சரிக்கையுடன் வருமுன் காத்தல் சிறந்ததாகும். நடுவில் உள்ள தரகர்கள் இவரை சூழ்ச்சிகளுள் சிக்கிடச்செய்திடக் கருதிடுவர். பக்குவமாய் எந்தகாரியத்தையும் தரகரின்றி தாமே நேரிடையாக சாதித்துக்கொள்வது சாலச்சிறந்தது. அதிலும் அயல் நாட்டு ஒப்பந்தங்களில் எச்சரிக்கை மிக அவசியம்.

பூச நட்சத்திரத்தில் தோன்றிய இந்த ராசிநேயர்கட்கு முதல் மூன்று மாதங்கள் சற்று சமமானப்பலனும் சனி உத்திரட்டாதியில் நடைபுரியும் நாள் முதல் சிறந்த நற்பலன்களும் ஏற்படும். தொழில் முன்னேற்றமடையும். புதிய தொழில் ஒப்பந்தங்கள் ஏற்படும். பழ

மையான கணக்கு தீர்க்கப்படும். ராகு, குரு, சனி, புதன், கேது திசைகள் நடைமுறையில் இருப்பின் பலன்கள் நிதானமடைவதுடன் அதிருப்திகரமான சூழ்நிலையும் உண்டாகும். நல்ல திசைபுக்தி நடைமுறையில் இருந்தால் துரிதமான நற்பலன்களை அடையலாம். இவருடைய திறமையும் விவேகமும் மேலோர்களின் கவனத்தைக் கவர்ந்திடும். பொருப்பான ஸ்தானங்களை இவர் வகிக்க நேரிடும்.

ஆயில்ய நட்சத்திரத்தில் ஜனனமானவர்கள் சனி ரேவதியின் பாதசாரத்தில் சஞ்சரிக்கும் நாள் முதல் சிறந்த பலனை அடைவார்கள் என்பது உறுதி. பூரட்டாதியில் சனி சஞ்சாரம் செய்யுங்காலத்தில் மக்களுடைய போக்கு தமக்கு அதிருப்தி யளித்திடும். பணலேவா தேவி விவகாரங்களில் மிகவும் இக்கட்டான சூழ்நிலை ஏற்படக்கூடும். உத்திரட்டாதியில் சனி நடைபுரியும்போது ஆயில்ய நட்சத்திரத்தில் தோன்றிய நேயர்கள் கூட்டாளிகளிடத்தில் மிகவும் பக்குவமாயிருந்த போதிலும் அபிப்பிராய பேதங்கள் தோன்றிடும். மனைவியிடத்திலும் மனஸ்தாபம் உண்டாகும் மனைவியின் ஆரோக்கியமும் பாதிக்கப்படும். சமூகவட்டாரத்திலும் எதிர்ப்புகள் நிறைந்து காணப்படும். கூட்டு வியாபாரிகள் பிரிந்து தனிவியாபாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை உண்டாகும். யந்திரத் தொழிற்சாலை அபிவிருத்தியாகும். புதிய சாதனங்களை அமைத்துக்கொள்வதில் கருத்தைச் செலுத்திடுவர். இதனால் ஒரு சிலருக்கு புதியக்கடனும் ஏற்படக்கூடும்.

இராகுவும் கேதுவும்

இது நாள் வரை லாபஸ்தானத்தில் விளங்கிய இராகு ஜீவன ஸ்தானமாகிய பத்தாம் இடத்திற்கும், பூர்வபுண்ணியஸ்தானத்தில் தோன்றிய கேது சுகஸ்தானத்திற்கும் மாறுதல் அடைகின்றனர். தொழில் சிறப்படையும். அதேதருணத்தில் தொழிற்றுறையில் போட்டியும், எதிர்ப்பும், வஞ்சகசூட்சியும் நிறைந்து காணப்படும். மிக மிக எச்சரிக்கையுடன் தம்முடைய தொழில் முன்னேற்றத்திலேயே கவனத்தை செலுத்தி அனாவசியமான காரியங்களில் தலையிடாமல் இருப்பது நலம். மற்றவர் புறங்கூறுவதை திரஸ்காரம் செய்ய வேண்டுமேயன்றி பொருட்படுத்தி அதற்காக தம்முடைய பணத்தையும் நேரத்தையும் செலவிடலாகாது. அரசாங்க சேவையில் உள்ளோர் அதிலும் சர்வ ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். இல்லையேல் வீண் பழிக்குற்றங்களுக்குள்ளாக நேரிடும்.

கல்வி பயிற்சியில் பிற்போக்கு தோன்றிடும். இடையில் பயிற்சி முடியாமலேயே படிப்பை நிறுத்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமுண்டாகும். வயோதிகரான உறவினர்கள் தம்மைவிட்டு பிரிந்திட நேரிடும். பெற்றோருக்கு சோதனைச்சோர்வுகள் காட்டிடும். வா னங்

கள் பழுதடையும். பந்து ஜனங்களிடத்தில் வீண் மனஸ்தாபம் ஏற்படும்.

பிலவங்க வருடம் புரட்டாசி முதல் ராகு ஒன்பதிலும் கேது மூன்றிலும் சஞ்சரிக்கத் தொடங்குகின்றனர். ராகு சனியுடன் கூடி ஒன்பதாம் இடத்தில் நடைபுரிவதால் தகப்பனுருக்கும் பிதுரு வர்க்கத்தினருக்கும் ஆகாது. புராதன சொத்துக்களை விக்கிரயம் செய்யநேரிடலாம். அயல் நாட்டு வியாபார முறையில தயக்கமும் அதனுல் நஷ்டமும் ஏற்படக்கூடும். கேது தைரியஸ்தானமாகிய மூன்ரும் இடத்தில் நடைபுரிவதால் எதையும் தாங்கக்கூடிய மனுேதிடமும், உறுதியும் சாதிக்கக்கூடிய திறமையும் இந்த ராசிநேயருக்கு இயற்கையாகவே ஏற்படும். ஆனுல் உடன்பிறந்தோர்கட்கு ஆகாது.

மற்றபடி நிகழக்கூடிய பலாபலன்களை ஆராய்வோம்.

ஆரோக்கியம்

வரட்சி அடைந்த திரேகம் புதிய வளர்ச்சிக்குரிய அமிழ்த சக்தியைப்பெற்று விளங்கும். வயோதிகமானவர்களும் வாலிப சக்தியை மீண்டும் அடைத்திடுவர். இரண்டரை ஆண்டுகளாக வேரூன்றி நின்ற சில கொடிய பிணிவாட்டங்கள் தம்மை விட்டகலும். ரத்தம் பரிசுத்தம் அடையும். ரத்த சக்தியும் பெருகிடும். வாயு பிடிப்புகள், நரம்பு தளர்ச்சி, இனிப்பு வியாதி போன்ற வாட்டங்கள் அறவே மறைந்திடும். சோம்பல் நீங்கி சுறுசுறுப்பு ஏற்படும். ஆனுல் குருதேவர் ஜன்ம ராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் அதாவது பராபவ வருஷம் ஆவணி முதல் பிலவங்க புரட்டாசி வரை திரேகத்தை மிகவும் பக்குவமாய் பாதுகாத்தல் அவசியம். வாயுவும், கைகால் பிடிப்பும், அதிக ரத்த அழுத்தமும், இனிப்பு நீர் மிதந்தும் இதனுல் மயக்கம், அசதி போன்ற அயர்வுகள் காட்டிடும். பத்திய முறைகளை முன் கூட்டியே கையாள்வது சிறந்ததாகும்.

பண வசதி.

இவருக்கு கடந்த 5 ஆண்டுகளாக தோன்றிய முடை நீங்கி இனி நல்ல தோற்றமேற்படும். பயனற்ற பொருள்களை பயனுடையதாக மாற்றுவதே இவருடைய குறிக்கோளாகும். இதற்கென முயன்ற பிரயத்தினங்கள் சித்தியடைவதற்கான தருணம் இனி மலர்ந்திடும். உதவி புரிய மறுத்தவர்கள், தயங்கியவர்கள், ஒதுங்கியவர்கள் தாமாகவே தேடி வந்து உதவி புரிந்திடுவர். அதைரியம் தம்மை விட்டு அகன்று உறுதியும், ஊக்கமும் நிலைத்திடும். குருதேவர் ஜன்மராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சற்று அவநம்பிக்கையும், விரக்தியும் தோன்றிடும்.

ஆனால் கடக ராசியில் குருதேவர் உச்சம் பெற்று விளங்குவதால் கடவுள் பக்தியும், ஆச்சார ஒழுக்கமும், தர்ம குணமும் ஓங்கிடும். பெரிய மனிதர்களின் தொடர்பு ஏற்படும். அதே தருணத்தில் ஒரு சிலருக்கு கடன்களும் பெருகிடலாம். ஏற்பட்ட கடன்கள் யாவும் குருதேவர் சிம்ம ராசியை அடைந்ததும் தீர்க்கப்படும்.

தொழில்.

விவசாயம், வியாபாரம் இவைகளை நிராகரித்தவர் மீண்டும் புனருத்தாரணம் செய்து தம்முடைய நிலையை உயர்த்திக் கொள்ள அரும் முயற்சிகளில் ஈடுபடுவர். இவருடைய இலட்சியமும் நிறைவேறிவிடும். இதற்காக முதலில் மூலதனமும் வேண்டிய அளவிற்கு கிடைத்திடும். இனி தங்குதடையின்றி பயிர்த் தொழில் பலனளித்திடும்.

பெண்கள் விரும்பக்கூடிய ஆடம்பரப் பொருள்கள், ஜவுளி, வாகன சாமான்கள், உணவு பண்டங்கள், பிரசுராலயம், அச்சகம், கமிஷன் வியாபாரம், பால், வெண்ணெய், முதலியப் பொருள்கள் இத்தகைய உற்பத்தித் தொழிலில் அல்லது வியாபாரத்தில் ஈடுபட்டோர்கள் நல்ல ஆதாயத்தை அடைந்திடுவர். இன்னும் இதர வியாபாரிகளும் புதிய கிரய விக்கிரய ஒப்பந்தங்களில் நல்ல லாபத்தைப் பெற்றிடுவர். ஏற்கனவே இருந்து வந்த துறையல்லாது புதிய வியாபாரமும் கைகூடும்.

உத்தியோகத் துறையில் உள்ளோர் பதவி உயர்வு பெற்றிடுவர். வருமானமும் உயர்ந்திடும். ஆனால் ஒரு சிலர் தூர பிரதேசங்களில் செயலாற்றிட நேரிடும். குருதேவர் சிம்ம ராசியை அடைந்ததும் மீளவும் சொந்த ஊருக்கு அருகாமையில் மாற்றலாகுவர். வெளியூர் மாற்றத்திற்கு இசையாதவர்கள் மற்ற வகையில் கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உள்ளாவர். சுகம் குறையும். இரட்டிப்பான செலவுகள் வந்தணுகும். நுட்பமான பயிற்சி அனுபவம் பெற்றிட அயல்நாடுகளுக்கு ஏகிடவும் வாய்ப்பு கிட்டிடும்.

அரசாங்க சேவையில் உள்ளோர் நிரந்தரமாக்கப்படுவர். ஏற்பட்ட சோதனைகள் சோர்வுகள் மறையும். இவர் மீது ஏற்பட்ட வீண்பழி குற்றங்கள், புகார்கள் தள்ளுபடி செய்யப்படும். இவருக்கு இதனால் ஏற்பட்டிருந்த விதி விலக்குகள் தளர்க்கப்படும். தம்முடைய திறமைக்கும் தகுதிக்கும் ஏற்ற அரும் பணிகளில் பிரதான ஸ்தானத்தை வகிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பணத்தை தாராளமாக செலவு புரியக்கூடிய பொறுப்பும் ஏழை மக்கட்கு சலுகைகள் இவருடைய கரத்தின்மூலம் வழங்குவதற்கான சேவை இவருக்கு வந்தமையும். காடு வனாந்திரங்களாகவும், நிர்ஜன பிரதேசமா

கவும் இருக்கக்கூடும். இவர் அடி வைத்தது முதல் பாலைவனமும் நல்ல சோலைவனமாக மாறிடும்.

இவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அரசாங்கத் தடையும் கண்காணிப்பும் தளர்க்கப்படும். இவர் அரசியலில் ஈடுபடாமலிருப்பது நல்லது. இல்லையேல் வீண் செலவுகள் வந்தணுகும். கட்சியின் பலத்தையோ ஆதரவையோ இவர் பெறுவது கடினமாகும். ஏழை மக்களின் ஆதரவு பரிபூரணமாய் விளங்கும். பதவி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வது நல்லது.

குடும்பம்.

சனி பகவான் ஜன்ம ராசிக்கு எட்டிலிருந்து நகர்ந்து குடும்பத்திற்கு எட்டில் விளங்குவது குடும்பத்தினரை பொறுத்தளவில் ஆகாதென்றே கூற வேண்டும். பெற்றோருக்கு ஆகாது. உடன்பிறந்தோர்களுக்கும் சோதனைகள் பிரிவினைகள், கஷ்டநஷ்டங்கள் ஏற்படும். இந்த ரசிநேயரின் பொறுப்பு அதிகமாகும். கடகராசியைக் கடந்து குருதேவர் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் போது சுப நிகழ்ச்சிகள் இடம் பெறும் எவ்வித சிரமமின்றி மகத்தான காரியங்களை இவர் சாதித்து முடித்திடுவர். குடும்பத்தில் லஷ்மி கடாக்ஷம் தாண்டவம் புரியும். சுபிட்சம் ஏற்படும். எல்லா வசதிகளும் பெருகிடும்.

கல்வி

கல்வி பயிற்சியில் மந்தமான நிலை ஏற்படும். ஒரு சிலர் இடையில் நிறுத்திக் கொள்ளவும் நேரிடும். ஆனல் தொழிலில் ஈடுபடுவதற்கான நுட்ப பயிற்சியும் சாதனமும் ஏற்படும். இதற்கு காரணம் பெரும்பாலும் தொழிற்றுறையில் தகப்பனுருக்கு வெளியூர் மாற்றத்தினுல் குடும்பம் நிலைப்பெருததேயாகும். மீண்டும் குருதேவர் சிம்மராசியை அடைந்ததும் நின்ற பயிற்சி மீளவும் தொடர ஒரு சிலருக்கு வழியேற்படும். எழுத்தாளர்களும், கல்வித்துறையில் உள்ளவர்களும் அமோகமான ஆதாயத்தைப் பெற்றிடுவர்.

கலை.

சங்கீதம், நடனம், நாடகம், சினிமா போன்ற துறைகளில் ஈடுபட்டோர் தம் தம் துறைகளில் முன்னேற்றத்தைக் காண்பர். கடந்த இரண்டாண்டுகளாக ஏற்பட்ட இடையூறுகள் அகன்று பண வசதி பெருகிடும். பெயரும் புகழும் ஓங்கிடும். தனகன நிதிவான்களின் ஆதரவு நன்கு அமையும். வெளியூர்களில் தமக்கு நல்ல அபிமானமும் ஏற்படும் பழையபாக்கிகள் வசூலாகும். பொருள் சேர்க்கையும் இவருக்கு உண்டு.

ஞானம்

ஆத்மீகத்துறையில் உள்ளோர் தம்முடைய சாதனைகளில் பக்குவ நிலையை அடைவர். உலகத்தில் ஏழை எளியவர்கள் பயனடைவதற்கான தர்மஸ்தாபனங்களையும் ஏற்படுத்திடுவர். தேசயாத்திரையும் கை கூடும். தத்துவ ஆராய்ச்சியிலும் இவருக்கு வெற்றியுண்டு.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டோர் வின்வெளியில் அற்புத விநோதங்களைக் காண சனி கிரகத்தின் மாறுதல் தெளிவான பலன்களை அளித்திடும். சுற்றி வளைத்து கண்டறியக்கூடிய தகவல்களையும் புள்ளி விவரங்களையும் துரிதமாய் கண்டு பிடித்து தரக்கூடிய சாதனங்களை உலகுக்கு அளித்திடுவர். மனிதனுடைய நுட்பமான அறிவை கண்டறியக் கூடிய மின்சார வசதியால் ஆயுத சிகிச்சைக்குறிய சாதனங்களையும் யந்திரங்களையும் மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள் விளக்கக்கூடிய வாய்ப்பையும் பெற்றிடுவர்.

மாதர்கள்

மருத்துவ ஆராய்ச்சிக்கு புலனாகாத நோய்கள் மருந்தின்றி குணமடைந்து குன்றிய ஆரோக்கியம் மிளிரும். தாம்பத்திய வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைச் சோர்வுகள் நிஷ்டூரங்கள் நீங்கி ஒற்றுமையான வாழ்க்கை ஏற்படும். தடையுற்றிருந்த திருமணம் கை கூடும். பிரிந்த தம்பதிகள் ஒன்று கூடுவர். சந்தான விருத்தியும் ஏற்படும். கை விட்ட கன்ற பொருள்களும், ஆபரணங்களும் மீளவும் வந்து சேரும். தீராக் கவலையும், தீரா வழக்கு விவகாரங்களும் தீர்ந்து மன அமைதி ஏற்படும். கல்வி பயிற்சியில் முன்னேற்றம் இல்லாவிடினும் கலைத்துறையில் வளர்ச்சியுண்டு. பணவசதி பெருகிடும். தொழிற்றுறையில் ஈடுபட்டோர் நல்ல முன்னேற்றத்தைக் காண்பர். சமூக வட்டாரத்தில் இவருக்கு நல்ல ஆதரவு கிடைத்திடும். தூற்றிய உறவினர்கள் பாராட்டுவர்.

கணவருக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட இன்னல்கள் அகன்று நல்ல உத்தியோக உயர்வும், பொருள் சேர்க்கையும் உண்டாகும். மக்களின் ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். ஆனால் பெற்றோரின் நிலைமை சற்று இவருக்கு கவலையை அளித்திடும். உடன் பிறந்தோர்கட்கு ஆகாது. தம்முடைய பெயரால் துவக்கியதொழில் ஸ்தாபனங்கள் எதிர்பாராவிதமாக அபிவிருத்தியாகும். வாழ்க்கையில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு இவருடைய மனோபிலாஷை நிறைவேறிடும். இவருடைய கருத்துக்களும், ஆலோசனைகளும் ஏற்கப்படுவதுடன் செயல் வடிவத்தில் அமுலாக்கப்படும். ஏழ்மையான குடும்பத்தினரும் இனி செல்வச் சிறப்புடனும் சகல சௌபாக்கிய பெருமையுடனும் கம்பீரமாய் விளங்குவர்.

சிம்மம்

மகம்—ம. மி. மு. மே.
பூரம்—மோ. ட. டி. டு.
உத்திரம் முதல் பாதம்—டே.

கிரக மாறுதல் நிலையும் பொதுப் பலனும்

இந்த ராசியில் தோன்றிய நேயர்கள் அஷ்டம ராசியில் சனி சஞ்சாரம் செய்யத் தொடங்குவதைக் கண்டு பெரும் மிரட்சியடைந்திருக்கக் கூடுமல்லவா? இந்த மிரட்சிக்கு இடமளிக்கலாகாது என்பதைத் தான் இங்கு இவர்களுக்கு எடுத்து காட்டுவது ஜோதிட சாஸ்திரத்தின் முதற் கடமையாகும்.

எட்டாமிடத்தில் கதிர்மகன் நின்றுளிர்வது கெட்ட பலனையே தட்டாமல் கொடுத்திடுவார் என்பது கோட்சார விதி. வெள்ளம் வருவதை முன் கூட்டியே அறிந்தால் பெரும் சேதம் ஏற்படாமலிருக்க வழி கோலலாமல்லவா? அது போலவே சனி பகவான் அஷ்டமராசியில் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் என்னென்ன சோதனைச் சோர்வுகளை ஏற்படுத்துவார் என்பதை அறிந்தால் வேதனைகள் வராமலிருக்க வழி வகை செய்யலாமென்பதை ஜோதிட சாஸ்திரம் கண்ணாடி போல் எடுத்துக் காட்டுகிறதென்பது தெளிவு.

எட்டாமிடத்தில் மந்தனாகிய சனி சஞ்சரிக்கும் போது எத்துறையிலும் மந்தமான பலனையே வழங்குவர். துரிதமாக நடக்க வேண்டிய காரியங்கள் பல காரணங்களால் நிதானமடையும். இந்த ராசி நேயருக்கு சோம்பல் அதிகமாகும். அதை அகற்றிட வேண்டும். எந்தெந்த காரியங்களை எந்தெந்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டுமோ அவ்வப்போதே செய்ய வேண்டியது முதற் கடமையாகும். இதனால் செய்ய வேண்டியதை செய்யத் தவறுவதால் ஏற்படும் நஷ்டங்களையும் கஷ்டங்களையும் தவிர்க்கலாம். செய்யக் கூடாததை செய்ய நேரிடுவதால் ஏற்படும் விளைவுகளையும் முன் கூட்டியே அறிந்து செய்யாமலும் பாதகத்தை நீக்கலாம்.

எட்டாமிடத்தில் உலவிடும் சனி காரியஸ்தானமாகிய பத்தாமிடத்தையும், நேத்திரம், தனம், வாக்கு, குடும்பம் இவைகளை குறிப்பிடும் இரண்டாமிடத்தையும், புத்தியையும், புத்திரரையும், பூர்வ புண்ணியத்தையும் எடுத்து காட்டும் ஐந்தாமிடத்தையும் பார்வையிடுவதால் தொழில் எத்தகையதாக இருப்பினும் மந்தமடையும். குடும்பத்

தில் சிக்கலான பிரச்சனைகள் தோன்றிடும். வீண் விரயமும் பணமுடையும் ஏற்படும். முக்கியமான விஷயங்களில் இவருடைய பார்வையையும், கவனத்தையும் ஊக்கத்தையும் தளர்ந்திடச் செய்யும். புத்தி மயங்குவதால் அவசியமற்ற வழிதுறைகளில் இவர் கருத்தையும், நேரத்தையும், பணத்தையும் வீணாக்கிடுவர். மக்களுடைய போக்கில் அதிருப்திகரமேற்படும். இதனால் பணலேவாதேவி விவகாரங்களில் பெரும் ஏமாற்றமும், வஞ்சகமும், களவும், பொருட்சேதமும், நாணய பங்கமும் ஏற்படும். அரசாங்கத்திற்கு விரோதமான காரியங்களை செய்வதால் வீண் வம்பு வழக்குகளும், நீதிமன்ற விவகாரங்களில் ஆழந்தெரியாமல் இறங்குவதால் பாதகமான விளைவுகளும் நேரிடக் கூடும். முன்னெச்சரிக்கையுடன் இருப்பின் ஓரளவிற்கு தக்க பாதுகாப்புடன் இருக்கலாம். புதியத் தொழிலில் முன் பின் அறிமுகமில்லாமல் ஈடுபடுவது ஆகாது. ஈடுபடாமலிருந்தால் நஷ்டத்தை தடுத்துக் கொள்ளலாம். தம் கையிலிருந்த பணம் நாலா வழியில் சிதறிடும். கையில் பணத்தை வைத்துக் கொள்ளாமல் அப்போதைக்கப்போதே தம்முடைய கடமைகளை முன்னதாக செய்து முடிப்பது நலம். நிரந்தரமான சொத்துக் விருத்தி செய்வதில் பணத்தை செலவு புரியலாமேயன்றி புதிய ஒப்பந்தங்களில் அதிலும் எழுத்தொப்பந்தமின்றி முயல்வது ஆகாது. மேலதிகாரிகளின் விருப்பத்திற்கு மாறுதலான செய்கைகளில் ஈடுபடலாகாது. நெருங்கிப் பழகுபவரிடத்திலும், கூட்டாளிகளிடத்திலும் விபரீத வார்த்தைகளுக்கோ, வாக்குறுதியளிப்பதிலோ தம்முடைய பொறுப்பை அதிகப்படுத்திக் கொள்வது நல்லதன்று. முன் பின் அறிமுகமில்லாதவர்கள் தம்மை வந்து நெருங்கிடுவர். இவரிடத்தில் பழகும் போது சர்வ ஜாக்கிரதையுடன் இருத்தல் சாலச் சிறந்தது. ஆபத்திலிருப்பவர்களுக்கு இவர் உதவி புரிய நேரிடுவதால் இவருக்கு ஆபத்து நேரிடும். இது போலவே கஷ்ட நிலையில் உள்ளவர்களைப் பார்த்து மனமிறங்கி இவர் தம்மால் இயன்றளவிற்கு பண உதவியும் பொருளுதவியும் செய்திடுவர். இதனால் இந்த ராசி நேயருக்கு சொல்ல முடியாத அளவிற்கு கஷ்டமும், நஷ்டமும், நல்லோர் நிந்தனையும் மனைவியின் மனந்தாளாமையும் நிஷ்டூரமும் உண்டாகும். தர்மம் செய்வதிலும் இவர் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். தமக்கு சேரவேண்டிய பாக்கிக்காக நீதிமன்றம் ஏகுவது சாதகத்தை விட அதிக பாதகத்தையே விளைவிக்கும். தாம் செய்ய வேண்டிய விவகாரங்களை பிறரை நம்பி ஒப்படைக்கலாகாது. சுய கண்காணிப்பு எதிலும் மிக அவசியம். வீடு, நிலம், வாகனம் முதலியப் பொருள்களை வாங்குவதிலும், விற்பனை செய்வதிலும் நேரிடையான ஒப்பந்தங்களை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் சாதித்து முடித்துக் கொள்வது சிறந்தது. இதைத் தவறுபவர்கள் நிகழ்ந்த பின்னர் சங்கடத்திற்குள்ளாக நேரிடும். உத்தியோகத் துறையிலும் இவர் உதாசீனமாய்--காலதாமதம் செய்வதால் மேல் அதிகாரிகளின் சீற்றத்

திற்கும் பாத்திரராக நேரிடும். வெளியூர் மாற்றமும், குடும்பத்திலி ருந்து பிரிந்திருத்தலும் சாதாரணமாக நிகழக் கூடியவை.

இவருடைய நெருங்கிய "பந்துக்களும், நண்பர்களும் எதிரிக ளாக மாறிடுவர். சொத்து சேர்ப்பதில் கண்ணும் கருத்துமுடையவர் கள் தீராக்கடனை ஏற்க நேரிடும்.

சுயத்தொழிலதிபர்கள் ஊழியர்களை நம்பி புதிய ஒப்பந்தங்களில் ஏமாற்றத்திற்குள்ளாவர். அலைச்சல் அதிகமாகும். உழைப்பு நேரம் அதிகமாகும். ஓய்வு நேரம் குறையும். இதனால் திரேகாரோக்கியம் பாதிக்கப்படும். கையில் சேமித்த பணம் தங்குதடையின்றி வீண் வழிக ளில் பாய்ந்து செல்லும். மன உறுதியுடன் இருப்பதைக் கொண்டே மன அமைதியுடன் காலத்தை போக்குவது சிறந்தது. இவர் மீது தகாத பழி குற்றங்கள் சாட்டபபடும். முதல் ஆலோசனைக்கு இடந்தரலா காது ஆழ்ந்து யோசித்த பிறகு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

ஆகாத திசையும் சனி மாறுதல் பலாபலன்களும்

மகம், பூரம், உத்திரம் முதற்காலில் ஜனித்தவர்கட்கு சூரியன் ராசி நாதனாகவும், சுக்கிரன் மூன்று பத்துக்குடையோனாகவும், கதிர்மகனா கிய சனி ஆறு ஏழாமிடங்களுக்கு அதிபனாகவும் ஏற்படுவது கவனிக்கத் தக்கது. மக நட்சத்திரத்தில் தோன்றியவர்கட்கு ஆதியில் கேது திசை யானதால் ராகு மகாதிசை நடைமுறையில் இருப்பின் மிகவும் பக்குவ மாய் காலத்தைப் போக்குவது நல்லது. இல்லையேல் கைப்பொருள் சேதம் மாகும். கோடி பணமும் கடலில் கரைத்த பெருங்காயமாக மறையும் சிறிய மனப்பான்மை உடையவர்கள் இவருடைய பலஹீனத்தை நன் குணர்ந்து சில்லரை விஷமங்களை செய்யக் காத்திருப்பர். மேலும் ராகு கொடிய ஸ்தானங்களாகிய ஆறு, ஏழு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் ஜனன காலத்தில் நின்றிருப்பின் மிகவும் கொடிய சோதனைகள் வந்து சேரும். தீரா வழக்குகளில் பணம் செலவாகும். வீண் பொறாமையும் வஞ்சகமும், ஏமாற்றமும் ராகு வழங்கும் பரிசுகளுக்கு சனி பகவான் உடைந்தையாவார். மனைவி மக்களின் உடலாரோக்கியமும் பாதிக்கப் படும்.

சுக்கிரதிசையும் இந்த ராசி நேயருக்கு ஆகாது. திருமணமேற் பட்ட பிறகு பலவிதச் சோர்வுகளுக்குள்ளாவர். அல்லது மனைவி வர்க் கத்தினரால் சங்கடங்கள் வந்து சேரும். ஸ்திரீகளால் கலகம் வந்து சேரும். இவருடைய பொருளும் பிறர் கைவசமாகும். பெரிய தொழி லுக்கு மூல நிதி வைத்தவர் வெறுங்கையுடன் முழம் போட நேரிடும். எச்சரிக்கை அவசியம்.

குரு,சனி திசையும் இவருக்கு சமூக வட்டாரத்தில் எதிர்ப்பு களையும் இடையூறுகளையும் உண்டாக்குவதுடன் தீராத பிணிவாட்டங்களையும் ஓயாத கவலைகளையும் கடலலை போல் ஓயாமல் அளித்திடும். நல்ல திசை புத்தி நடைமுறையில் இருப்பின் கொடியப் பலன்கள் அதிகவாட்டாமல் அதிக நன்மைகளும் ஏற்படாமல் சமானப்பலன் களையே இந்த ராசி நேயர் அடைந்திடுவர்.

பரிகார நியமம்

சிம்ம லக்கினத்தில் தோன்றியவர்களும், ஆவணி மாதத்தில் பிறந்தவர்களும் மிகவும் எச்சரிக்கையுடன் காலத்தை போக்கிடுதல் வேண்டும். காலையில் கதிரவனை வணங்கிய பின் காலை பானங்களையும் சிற்றுண்டியும் உட்கொள்ளுவது சிறந்த பரிகாரமாகும். சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு அர்ச்சனை, பரிகாரங்கள் செய்வதும் நல்லது. ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆஞ்சநேயக் கடவுளை வணங்கி ஆராதனை செய்வது நல்லது.

மேஷம், தனுசுராசிகளை லக்கினமாகக் கொண்டவர்களும் மேலே கூறிய பரிகார நியமங்களை அனுசரிப்பது நல்லது.

குரு மாறுதலும் பலாபலன்களும்

முதல் மூன்று மாதங்களில் குருதேவர் லாபஸ்தானமாகிய பதினோருமிடத்தில் சஞ்சாரம் செய்வதால் அஷ்டமச்சனியின் கொடுமைகள் இவரை அதிக வாட்டங்களுக்கு உட்படுத்துவதிற்கில்லை. சனிபகவான் எட்டாம் இடத்தில் சஞ்சரித்த போதிலும் தொழிற்ஸ்தானமாகிய பத்தாம் இடத்திற்கு லாபஸ்தானத்தில் விளங்குவதால் தொழில் முன்னேற்றமுண்டு. வியாபாரம் வளர்ச்சியடையும். பணவசதி பெருகிடும். நிதி மிகுந்தோர் ஆதரவு நன்கு அமையும். அரசாங்க ஆதரவும் நிலைத்திடும். உத்தியோகத்துறையில் உள்ளோர் பதவி உயர்வு பெறுவர். சந்தான விருத்தியும் உண்டு. ஆனால் புத்திரஸ்தானத்தையும் தொழிற்ஸ்தானத்தையும் தனஸ்தானத்தையும் சனி திருஷ்டியிடுவதால் இம்மூன்று வகையிலும் இந்த ராசி நேயருக்கு அதிருப்திகரமான சூழ்நிலை மறைந்தபாடில்லை என்பதை எத்தருணத்திலும் இவர் மறக்கலாகாது.

பராபவ வருஷம் ஆவணி முதல் குருதேவர் லாபஸ்தானத்தை விட்டு விரயஸ்தானமாகிய பன்னிரண்டாம் இடத்தில் சஞ்சாரம் செய்வதோடு அங்கு உச்சம் பெற்று விளங்குவதால் செலவினங்கள் இரட்டிப்பாகும். ஒருசிலருக்கு குடும்பத்தில் சுபமங்களச்செலவுகளும் எதிர்பாராவிதமாய் வந்து சேரும். இதனால் ஒருசிலருக்கு புதியக்கடன் களும் ஏற்படும். வீடு, மனை, நிலபுலன்களை சுயமாக அமைத்துக் கொள்வதிலும் இவருடைய கருத்து ஊன்றிச் சென்று செயல் வடிவ

மாகவும் பிரதிபலிக்கும். இதுநாள் வரை கடன் என்ற தொல்லையை ஏற்காதவர் தாமாகவே இரு கரங்களிலும் வரவேற்று பொறுப்பை அதிகமாக்கிக்கொள்வர். நிரந்தரச்சொத்துக்களை சம்பாதிப்பதால் ஏற்படும் கடனை ஒருவிதத்தில் ஏற்பது நல்லதே. ஏனெனில் அஷ்டமச்சனியானவர் எவ்விதத்திலாவது இவருக்கு வில்லங்கத்தை உண்டாக்கிட காத்திருப்பர். சொத்தின் மீது வில்லங்கம் ஏற்படாவிடில் திரேகத்திற்கு வில்லங்கம் ஏற்படக்கூடும். மான நஷ்டமும் பொருட்சேதமும் நாணயப்பங்கமும் ஏற்படக்கூடும். உஷார்! குடும்பத்திலிருந்து பிரிந்திருக்கவும் நேரிடும். அல்லது மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். பெற்றோருடைய நலனும் கொடிய சோதனைச்சோர்வுகளால் பாதிக்கப்படும் என்பது தெளிவு. வெளியூர் மாற்றத்திற்கு ஒருசிலர் உள்ளாவர். அல்லது தொழிற்றுறையில் சதாகாலமும் சுற்றுப் பிரயாணத்திலேயே ஈடுபடவேண்டிய சூழ்நிலையும் உண்டாகும். கூட்டு வியாபாரிகள் பிரிந்திடுவர்.

பிறகு குருதேவர் ஜன்ம ராசியில் உலவிடும் தருணத்திலும் மேலே கூறிய அம்சங்கள் தொடர்ந்து நீடித்திடும்.

இராகுவும் கேதுவும்

இராகு பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்திற்கும் கேது மூன்ருமிடத்திற்கும் மாறுதல் அடைவதாலும் சனிபகவான் பித்ருஸ்தானமாகிய ஒன்பதாம் இடத்திற்கு விரயஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதாலும் தகப்பனருடைய விதியில் அரிட்ட மாரகப்பிணியும், காலதேவனின் சேஷ்டையும் விளையாடிடும். பூர்விக சொத்துக்கள் இருப்பின் சில மாறுதல்களும் ஏற்படும். கேது மூன்ரும் மிடத்தில் தோன்றுவது உடன்பிறந்தோர்கட்கு சற்று ஆகாது. இந்த ராசிநேயர் எதுவரினும் தாங்கக்கூடிய மனேதிடத்தையும், தளரா உறுதியையும் பெற்று விளங்குவர்.

சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு பின்னர் ராகு எட்டிலும் கேது இரண்டிலும் சஞ்சரிக்கத் தொடங்குவது கொடிய வாட்டங்களுக்கு கொண்டாட்ட காலமாகும். இதுவரைத் தோன்ருத புதியநோய்கள் இந்த ராசிநேயரை பதம் பார்த்திடும். ரத்த சக்தி குன்றிடும். விஷ ஜுரங்கள், விஷ ஜந்துக்களால் மிரட்சிகள் முதலியவை தோன்றிடும். மருத்துவ ஆராய்ச்சிக்கு புலனுகாத பிணிகளாகையால் மருந்து சாப்பிடுவதில் மிகவும் எச்சரிக்கை அவசியம். பத்தியம் தவறலாகாது. ஊசியின் மூலம் மருந்தை ஏற்கலாகாது. இல்லையேல் ரத்த பரிசுத்தம் கெடுவதால் விபரீதக்கோளாறுகள் ஏற்பட்டு அதை மாற்றுவதற்கு பிரத்தியேக சிகிச்சை செய்ய நேரிடும். இந்தக் குறிப்பை மறக்கலாகாது.

ராகுவும் சனியும் சேர்ந்து எட்டாம் இடத்தில் சஞ்சாரம் செய்யும் காலத்தில் இந்த ராசிநேயர் எவ்விதத் தவறுகளுக்கும் இடந் தரலாகாது. இவர் மீது தகாக்குற்றங்கள், பழிகள், சாட்டப்பட்டு வஞ்சக சூட்சிகளுக்கு இரையாவதுடன் ஆகாத திசை புக்திகளாக இருப்பின் காவல் தண்டனைகளுக்கும் உள்ளாக நேரிடும். செய்து வரும் தொழிலையும் ஒருசிலர் தாமாகவே இழந்தவராவர். அபமிருத்யு போன்ற சம்பவங்களும் ஒருசிலருக்கு ஏற்படக்கூடும். வாகன இடை யூறுகளும், வாகனங்களுக்கு இடையூறுகளும் நேரிடக்கூடும்.

இவருடைய பந்து ஜனங்களே இவருக்கு விரோதிகளாவர். சமூ ‍ துவேஷத்தையும் இவர் சம்பாதிக்க நேரிடும். திருஷ்டி தோஷங் களும் இவரைத்தாக்கிடும். எச்சரிக்கை மிகமிக அவசியம்.

ஆகாத மாதங்கள்

இந்த ராசிநேயருக்கு கார்த்திகை, மார்கழி, மாசி, பங்குனி, ஆடி மாதங்கள் ஆகாத மாதங்கள். சூதகங்கள், பாதகங்கள் நிறைந்த மாதங்கள் ஆகும். முன்னெச்சரிக்கை அவசியம்.

கல்வி

கல்வி பயிற்சியில் முதல் வருடம் தேர்வு உண்டு. பிறகு முன் னேற்றத்தடை ஏற்படும். உடலசதியும் குடும்பத்தில் இக்கட்டான நிலை மையும் இதற்கு காரணமாகலாம். தொழிற்பயிற்சிக் கல்வி ஏற்படும் ஒருசில்ருக்கு ஆரம்பித்தவை இடையில் நின்றுவிடுமோ என்ற மிரட்சி யும் ஏற்படும். தகாத சகவாச தோஷத்தால் கிட்டிய வாய்ப்பையும் இவர் தாமாகவே இழக்க நேரிடக்கூடும். பெற்றோருக்கு இவருடைய போக்கில் கவலைகள் ஏற்படும். பக்குவமாய் நடந்துக்கொண்டால் தடை யின்றி கரையேறலாம்.

கலை

சங்கீதம், நடனம், நாடகம், ஓவியம் போன்ற கலைத்துறை யில் உள்ளோர் தம் தம் துறைகளில் முன்னேற்ற மடைந்திடுவர். ஆதாயமும் உயர்வடையும். பெயரும் புகழும் ஓங்கிடும். ஒருசில ருக்கு புதிய பொருள் சேர்க்கையும் உண்டு ஆனால் வெளிதேச வட்டா ரங்களில் இவருக்கு செல்வாக்கு அதிகமாகும். அயல்தேய பிரயாணங் களில் ஈடுபடலாகாது. எழுத்தொப்பந்தம் இல்லாத நிகழ்ச்சிகளில் இவர் இறங்கலாகாது. இவருக்கு சேரவேண்டிய பணம் நிதானமடை யும். ஒரு சில தருணங்களில் ஏமாற்றமும் ஏற்படும். நடுவில் ஏற்பட்ட அபிமானிகளால் இவருக்கு வெளியிட முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்படக்கூடும். முன்னெச்சரிக்கை அவசியம்.

ஞானம்

தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள் தம்முடைய வழித் துறைகளில் சித்தியடைந்திடுவர். சனிபகவான் விதியென்ற சுழிமுனை யில் குருதேவரின் அகத்தில் ஒளிர, விதிக்கிறையோனுகிய குருதேவர் கடக மனையில் உச்சம் பெற்று சனிபகவானை உற்று நோக்கும் போது இத்தகைய பாக்கியம் இவருக்கு கிட்டிடும். யோகியாகிய இராகுவும் சனியுடன் கூடிடில் இல்லற இன்ப போகங்களை துறந்தவர்கள் தத்ருப மான யோகத்தையே அடைந்திடுவர். நிழல் பரிசோதனை ஆராய்ச்சி யில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் மருத்துவ ஞானம் விரிவடைய நுட்பமான சோதனைகளை சாதித்து மனித குலத்திற்கே பெரும் தொண்டாற்றிய பெருமைக்குள்ளாவர்.

தொழில்

இந்த ராசிநேயர் கூடுமான வரையில் அயல் நாட்டு வியா பாரங்களை குறைத்துக்கொள்வதும் நிறுத்திக்கொள்வதும் சிறந்தது. இல்லையேல் அக்கரைக்கும் இக்கரைக்கும் உள்ள வித்தியாசத்தை கணக்குப்பார்க்க இவரால் இயலாத காரியமாகும்.

விவசாயிகள் முதல் மூன்று மாதங்களில் நல்ல பலிதத்தைக் காண்பர். ஆனுல் பிற்பகுதியிலோ செலவுக்கும் வருவாய்க்கும் சரி கட்டி விடும். ஆனுல் நவீன சாதன வசதிகள் பெருகிடும்.

உத்தியோகத்துறையில் உள்ளோர் வீடு திரும்புகையில் வெறுங்கையுடன் வருவது நல்லது. அலுவலகவேலைகளை வீட்டுக்குச் சுமப்பவர்கள் ஓய்வுபெறும் நாள் வரை மறக்க முடியாத நிர்ப்பந்தத் திற்குள்ளாவர். எதையும் நேரில் பார்க்காமல் கையெழுத்திடலாகாது. அன்று செய்யவேண்டியதை அன்றே செய்ய வேண்டும்.

மரம், காட்டு குத்தகை, காண்ட்ராக்ட், உணவு பொருள்கள், தேன், கற்பூரம், புத்தகம், பிரசுராலயம், போன்ற வியாபார துறைக ளில் நல்ல லாபமுண்டு. புதிதாக வியாபாரம் ஆரம்பிக்கலாகாது. ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மனைவி அல்லது மக்கள் பேரில் ஆரம்பிப்பது நலம். உழைப்பு தமதெனினும் மற்றவர் பெய ரில் இருப்பது தான் சிறந்தது. அஷ்டமச்சனியின் காலம் முடிந்த தும் தேவைப்பட்டால் பெயரை மாற்றலாம்.

அரசியல்

அரசியலில் ஈடுபட்டோர் தயங்காமல் ஓய்வு பெறுவது நலம். இல்லையேல் கடும் போட்டியும் தோல்வியும் இவருக்கு ஏற்படுவதோடு

விபரீதப் பண விரயமும் சமூக துவேஷமும் ஏற்படும் விழிப்பு மிகமிக அவசியம்.

ஆரோக்கியம்

நரம்பு தளர்ச்சி, வாயு பிடிப்பு, பாரிச வாயு போன்ற அசதிகளும் அசட்டையால் அங்க ஊனங்கள் ஏற்படுவது போன்ற அசதியும் தோன்றிடும். சரீரம் பலயீனமடையும். ரக்த சக்தி குன்றிடும். ஒருசிலருக்கு ஜீரண கோசத்தில் கோளாறுகள் தோன்றி சத்தான உணவு பொருள்களை விரும்பியபடி சாப்பிட முடியாத நிலை ஏற்படும். நேரந் தவறுமல் உணவுகள் உட்கொள்ள வேண்டியது இந்த சரீரத்திற்கு எவ்வளவு அவசியம் என்பதை பக்குவம் தவறிய பிறகு இந்த ராசி நேயர் உணர்வார்கள். முன் எச்சரிக்கை மிகவும் அவசியம்.

பணவசதி

சனி எட்டாம் இடத்தில் நின்று தனஸ்தானத்தை பார்வையிடுவதால் பொறுப்பான காரியங்களை இவர் ஏற்பதால் அடிக்கடி பற்றுக்குறை ஏற்படுவது இயற்கையாகும். நிதி மிகுந்தோர்களும் வேண்டிய தருணத்தில் கையில் பணமின்றித்தயங்குவர். கையில் இருந்தால் சுய உணர்வை இழந்து இவர் அனுவசியமான செலவுகளை ஏற்க நேரிடும். நேர்ந்தபின் வருந்துவர். கண்ணுக்குத்தெரிந்த விவகாரங்களில் இருந்தும் இவர் ஒதுங்கிடக்கருதிடுவர். ஆனால் ஒதுங்கவும் முடியாது. நெருங்கினாலும் பின் வாங்குவது கடினமாகும். தீவிர ஆலோசனைக்குப்பின் புதிய விவகாரங்களில் இவர் தலையிடுவது சிறந்தது. இல்லையேல் ஆழந்தெரியாமல் இறங்கிய பிறகு விடுவித்துக்கொள்ள முடியாமல் திணறுவர். பணத்தை பிறருக்கு கடன் கொடுத்தால் எளிதில் வசூலாகாது. வியாபாரிகளும் கொள் முதல் விக்கிரயங்களில் கூடுமான வரையில் வாடிக்கைதாரர்களுக்கு கடன் கொடுப்பதை நிறுத்துவது நல்லது. வட்டி, வாடகை, குத்தகைப்பணம் முதலியவற்றை வசூல் செய்வது கடினமாகும். இவருடைய சொத்தில் பிறர் சட்டத்தைமீறி பிரவேசித்திடுவர். சட்டத்தை நிலைநாட்டுவது மிகவும் சிக்கலான பிரச்சனையாகும். இதற்கு இடந்தரலாகாது. தொழிற்றுறையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் தம்முடைய சேமிப்பு தொகையைக் கொண்டு வீடு, நிலம் போன்ற நிரந்தரப்பொருள்களை விவரமறிந்து வாங்கலாம். அனுபவம் இருப்பினும் மற்றவர்களோடு கூட்டாக சேர்ந்தோ தனிப்பட்ட முறையிலோ வியாபாரத்தையோ, யந்திரத்தொழிற் ஸ்தாபனங்களையோ ஆரம்பிக்கலாகாது.

மாதர்கள்

அகாரணமாக உடலாரோக்கியம் தளரும். குடும்பத்தில் சுக சௌகரியங்கள் குறையும். கல்வி பயிற்சியில் அக்கரை குறையும்.

கலை வளர்ச்சியிலும் ஊக்கம் தளரும். சமூக வட்டாரத்தில் எதிர்ப்புகள் நிறைந்து காணப்படும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். விரக்தி மனோபாவம் ஏற்படும். பந்து ஜனங்களிடத்தில் நிஷ்டூரமுண்டாகும். கணவரின் உடலாரோக்கியமும் பாதிக்கப்படும். குடும்பத்தில் அளவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். மக்களுடைய கவலையே இவருக்கு பெரும் கவலையாகும். பெற்றோர்கட்கும் சகோதர சகோதரிகட்கும் ஆகாது. திருமணம் தடைபடும். விவாகமானவர்கள் சிலகாலம் பிரிந்திருக்கவும் நேரிடும். கர்ப்பம் தரிக்கும் காலங்களில் உடலசதி தோன்றும். கருச்சிதைவு போன்ற தோஷங்கள் தாக்கிடும். ஒருசிலர் அறிவு நழுவிய கோலத்திலும் காட்சி அளித்திடுவர். துர்தேவதைகளின் சேஷ்டையும் வாட்டிடும். தகுந்த பரிகார நியமங்களை செய்து ஆரம்பத்திலேயே போக்கிடுவது நல்லது. தொழிற்றுறையில் முன்னேற்றமுண்டு. இவருடைய ஆபரணங்களை பிறருக்கு இரவல் கொடுத்தல் ஆகாது. ஆபரணங்கள் கைக்கு திரும்பப்பெறுவது கடினமாகும். உஷார்! பண விவகாரங்களிலும் மிகவும் எச்சரிக்கை அவசியம்.

கன்னி

உத்திரம் கடைசி மூன்று பாதங்கள்—டோ, ப, பி.
ஹஸ்தம்—பூ, ஷ, ண, ட.
சித்திரை முதல் இரண்டு பாதங்கள்—பே, பொ.

குரு சனி மாறுதல் நிலையும் நடைமுறை திசாபுக்தியும்

சுகம், வீடு, வாகனம், தாயார், கல்வி, நிக்ஷேபம் இவைகளை குறிப்பிடும் நாலாம் இடத்திற்கும் விருப்பம், காதல் மனைவி, திருமணம் முதலியவைகளை குறிப்பிடும் ஏழாமிடத்திற்கும் அதிபராகிய குருதேவர் ஜீவனஸ்தானமாகிய பத்தாமிடத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகின்றார். "பத்தில் குரு வந்திடில் பதவியைக்குலைப்பர்" என்ற பழமொழி வழக்கத்தில் இருந்து வருகிறது. அரசனாகிய குரு அரசகேந்திரமாகிய பத்தாமிடத்தில் சஞ்சாரம் செய்யும் போது அரச பதவியில் உள்ளவர்களுக்கும் ஆகாது என்பது விதி. பட்டத்தையும் பதவியையும் மாற்றிடுவர். அரசாட்சியைத்துறந்து துறவரம் ஏற்க இதுதான் தருணம் என்றும் கூறிடலாம். பதவி மோஹத்தை விரும்பாதவர்களையும் பற்றற்ற நிலையில் உள்ளவர்களையும் ஏற்கனவே துறவி கோலத்தில் உள்ளவர்களையும் குரு என்ன செய்ய முடியும் என்ற கேள்வியும் எழுகின்றதல்லவா ?

செய்துவரும் தொழிலில் பிற்போக்கான சூழ்நிலை ஏற்படும். பணம் பல வழிகளில் சிதறிடும். எதையும் சாதிக்க முடியாத நிலையில் தாழ்ந்த மனோபாவம் ஏற்படும். நாணயப்பழுதும் கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் அதிருப்திகரமும் உண்டாகும். தமக்கு வரவேண்டியவை நிதானமடையும். கொடுக்க வேண்டியதும் தவணை தவறிடும். உத்தியோகத்துறையில் உள்ளோர் வேறிடம் மாற்றலாகுவர். அலைச்சல் அதிகமாகும். மாற்றத்திற்கு முடியாத நிலையில் உள்ளோர்களும் நிரந்தரமான ஸ்தானங்களை வகிப்பவர்களும் மேலதிகாரிகளிடத்தில் சிறிய விஷயங்களில் வீண் விரோதத்தை சம்பாதித்துக்கொள்வர். ஒரு சிலர் ஓய்வு பெற்றுக்கொள்வர். வருமானம் குறையும். செலவுகள் பெருகிடும். வியாபாரத்தில் போட்டியும் இதனால் தயக்கமும் ஏற்படும். விவசாயத்துறையில் பலிதம் குறையும். மனைவியின் ஆரோக்கியம் சற்று பாதிக்கப்படும். மக்களிடத்திலும் மனவேற்றுமை வளரும். திருமணமானவர்களால் வீண் தொல்லையும் ஏற்படக்கூடும். எச்சரிக்கை அவசியம். உடன் பிறந்தோர்கட்கு வீண் சோதனைச் சோர்வுகள் ஏற்படும்.

இத்தகைய அறுவருக்கத்தக்க சூழ்நிலை பராபவ வருஷம் ஆவணி முதல் மாறுதலடையும். அத்தருணத்தில் குருதேவர் லாப ஸ்தானமாகிய பதினொரும் இடத்தில் உச்சம் பெற்று விளங்குவதால் எத்துறையில் இருப்பவர்களுக்கும் வருமானம் உயர்ந்து விளங்கும். உத்தியோகத்துறையில் பதவி உயர்வு உண்டு. சுயத்தொழிலதிபர்கள் நல்ல உதவியை பெற்றிடுவர். வியாபாரத்தில் மூல நிதியும் பெருகிடும். அதே தருணத்தில் மூலப்பொருள் சேர்க்கையும் புதிய ஒப்பந்தங்களில் அனுகூலமும் உண்டாகும். விவசாயிகள் புதிய அபிவிருத்தி திட்டங்களில் தம்முடைய கருத்திற்கேற்றவாறு சாதனைகளைப் பெருக்கிக்கொண்டு பலிதத்தை பன்மடங்கு பெருக்கிடுவர். பணவசதி பெருகிடும். கனநிதிவான்களின் ஆதரவு நல்ல முறையில் அமையும். மக்கள் முன்னேற்றமடைவர். மக்களால் பொருள் சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளின் அபிமானம் நன்கு விளங்கும். இந்த ராசிநேயர் தொழிலை நன்கு அபிவிருத்தி செய்து உயர்ந்த வருமானத்தை அடைவதோடு அரசாங்கத்திற்கு உபரியான வருமான வரியையும் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவர். குடும்பத்தில் சுபமங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். குடும்ப விருத்தியும் சந்தான விருத்தியும் உண்டு. சமூகவட்டாரத்தில் நல்ல கௌரவமும் செல்வாக்கும் ஏற்படும். ஒருசிலருக்கு புதிய மண், மனை, வீடு முதலிய பொருள் சேர்க்கையும் உண்டு. வாகனபிராப்தி சிலருக்கு இருப்பினும் எதிர்பாரா வகையில் வாகனங்களுக்கு பழுது ஏற்பட்டு விபரீதச்செலவுகளை ஏற்க நேரிடும். எச்சரிக்கை மிகவும் அவசியம்

தாயாருடைய உடல்நிலை பாதிக்கும். சூரியன் அல்லது செவ்வாயின் திசை நடைமுறையில் இருப்பின் இந்த ராசிநேயருக்கு எதிர்பார்த்த அளவிற்கு நற்பலன்கள் ஏற்படுவது கடினம். இத்தகைய திசை நடைமுறையில் இருப்பின் சர்வ ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். அதிகமான பொறுப்பை இவர் ஏற்கலாகாது. பண முதலீடு விவகாரங்களிலும் ஆழந்தெரியாமல் இறங்கலாகாது.

குருதேவர் கடக ராசியைக் கடந்து சிம்ம ராசியில் சஞ்சரிக்கும் நாள் முதல் செலவினங்கள் பெருகிடும். வியாபாரத்துறையில் முடையும் தடையும் ஏற்பட்டு இக்கட்டான சூழ்நிலை உண்டாகும். மேலோர் ஆதரவு குறையும். பொருள் சேதமும் பழைய சொத்துக்களை இவர் விக்கிரயம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும். மக்கள் இவருடைய விருப்பத்திற்கு மாருக நடந்துக்கொள்வர். பாகப் பிரிவினையும் செய்துக்கொள்ள நேரிடும். வீடு கட்டுவதிலும், பழைய சொத்துக்களை பரிவர்த்தனை செய்துக்கொள்வதிலும், சீர்திருத்தி அமைத்துக் கொள்வதிலும் செலவினங்கள் ஏற்படும். தொழிற்றுறையில் மாறுதல்கள் எதிர்பாராவிதமாக ஏற்படும். உத்தியோகத்துறையில் உள்ளோர் வெளியூர் மாற்றத்திற்குள்ளாவர். குடும்பம் ஓரிடமும் இவர் தொழில் வேறிடமும் ஏற்படுவதால் இரட்டிப்பான செலவுகள் இவரை வந்தணுகும். புதியக்கடன்களும் ஏற்படும். குடும்பத்தில் மக்களின் விவாகத்திற்காக இவர் சேமிப்பு நிதி கரையும். பற்ருக்குறையும் நீடிக்கும். அடிக்கடி சுற்றுப்பிரயாணத்தில் இவர் ஈடுபடுவர். அலைச்சல் மிகும். எக்காரணத்தை முன்னிட்டும் இவர் ஏற்கனவே செய்து வரும் தொழிலை புறக்கணிக்கலாகாது. மனைவியின் ஆரோக்கியமும் சற்று தளர்ந்து சிகிச்சையளிக்க நேரிடும். இவருக்கு சுக்கிர திசை நடைமுறையில் இருப்பின் தாரத்திற்கு மாரகப்பிணிகளும் வாட்டிடும். எச்சரிக்கை அவசியம்.

சனி பகவான் இதுநாள் வரை ஆருமிடத்தில் சஞ்சாரம் செய்து ஏழாமிடத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகின்ருர். ஒன்பதாமிடத்தையும், ஜன்ம ராசியையும் சுகஸ்தானமாகிய நாலாமிடத்தையும் பார்வையிடுகின்ருர். அன்னியதேச வாசம் நல்லது. இடமாறுதல் அவசியம் ஏற்படும். நெருங்கிய உறவினர்களை விட்டு பிரிந்தும் சில மாதங்கள் இவர் தனித்திருக்கவும் நேரிடும். பித்ரு வர்க்கத்தினருக்கு ஆகாது. ஏழாமிடமானது இவருடைய விருப்பத்தையும் மனோபிலாஷையையும் மனைவி, இச்சை, காதல் போன்ற அம்சங்களையும் குறிப்பிடுகின்றது. மந்தனுகிய சனி இங்கு ஒளிர்வதால் இவர் விரும்பும் விவகாரங்களில் அதிருப்தியும் நிதானமும் ஏற்படும். இவர் விரும்பாதவை நெருங்கி அறுவருக்கத்தக்க சூழ்நிலையை உண்டாக்கும். எவ்வளவு பணம் இவர்

கையில் வந்து சேர்ந்தாலும் நாலாவழிகளில் சிதறிடும். இவர் அதியாவசியமான தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத நிலையில் வாட்டமுறுவர். பிரார்த்தனைகள் நிறைவேறுவது நிதானமடையும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். சரிவு, பிரிவுகள், மனஸ்தாபங்கள் இவருடைய மன அமைதியைக் குலைத்திடும். சுக சௌகரியங்கள் குறையும். சதாகாலமும் வெளியூர் பிரயாணத்திலேயே காலத்தை போக்கிட நேரிடும். சொந்த ஊருக்கு அருகாமையில் இருந்தவர் தொலை தூரத்திற்கு ஏகிடுவர். இவர் தீட்டிய திட்டங்கள் பகற்கனவுகளாகவே விளங்கும் என்பதில் வியப்பொன்றும் இல்லை. திரேகம் பலயீனமடையும். நிறம் மாறிடும். உடற்கட்டு தளரும். சரியான நேரத்திற்கு சுவையான உணவுகள் கிடைப்பது துர்லபமாகும். இவருடைய உதவியால் பலர் பயனடைந்திடுவர். இவருக்கு ஆதரவளிக்க நல்லவர்களும் முன்வரத்தயங்குவர். இவருடைய சுயகரங்களே இவருக்கு உதவியளிக்குமேயன்றி பிறர் உதவியை நாடுவதால் நிஷ்பலிதமே தோன்றிடும்.

சனிபகவான் பூரட்டாதி நட்சத்திர சாரத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் அதாவது பராபவ வருஷம் ஆனி மாதம் வரை சற்று தயக்கமான பலன்களையே வழங்கிடும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். தாயாருக்கு ஆகாது. கல்வி பயிற்சியில் பிற்போக்கு தோன்றும். பிரயாணங்களால் பொருட்சேதமும் உடலாயசமும் ஏற்படும். மக்கட்கு குறை தோஷங்கள் பிணி வாட்டங்கள் ஏற்படும். இல்லற வாழ்க்கையில் பற்று குறையும். தன் சுய சாரமாகிய உத்திரட்டாதி நட்சத்திரத்தில் நடை புரியும்போது மன அமைதி யின்மையும் வருவாய்க்கு மேல் செலவினங்களும் கடன் தொல்லையும் மக்களால் கவலையும் நீதிமன்ற விவகாரங்களால் மிரட்சி மனோபாவமும் ஏற்படும். எதிரிகளால் தொல்லையும் கூட்டாளிகளிடத்தில் ஒற்றுமைக் குறைவும், அபிப்பிராய பேதமும் வளரும். அந்தரங்கமான பிணிகள் தோன்றி வாட்டிடும். நரம்பு தளர்ச்சி போன்ற பிணி வாட்டங்கள் காட்டிடும். காலையில் கதிரவனை வணங்கிய பின் பிறகாரியங்களில் ஈடுபடுவது சிறநத பரிகாரமாகும். ஆனால் ஜனன காலத்தில் சனி நன்கு அமைந்து அதற்கு இரண்டு, ஐந்து, ஒன்பது, பதினொருமிடங்களில் ஏதாவது ஒன்றில் தற்போது மீன ராசியில் சஞ்சரிப்பாராயின் கொடியப் பலன்களின்றி மிதமான நற்பலன்களே நடைபெறும். மேலும் நல்ல திசை புக்தியும் நடந்துவரின் மேலே கூறிய அசம்பாவிதங்கள் இவரை பாதிக்கக்கூடிய அளவிற்கு ஏற்படாதென்பது உறுதி. தொழிலாளிகளால் நல்ல ஆதாயம் ஏற்படும். இரும்பு வியாபாரம் யந்திரத்தொழிற்சாலை விவசாயம், எள், எண்ணெய் வியாபாரம் அடிமைத்தொழில் இவைகளில் ஈடுபட்டோர் மேன்மை யடைந்திடுவர்.

சனி ரேவதியின் சாரத்தில் நடையிடும் போது தொழில் உயர்வு உண்டு. புதிய எழுத்தொப்பந்தங்கள் ஏற்படும். கிரய விக்கிரய சாசன பதிவுகள் செய்ய நேரிடும். அயல்நாட்டு போக்குவரவும், தொழிலொப்பந்தங்களும், லிகிதானுகூலமும் ஏற்படும். கமிஷன் வியாபாரிகளுக்கு நல்ல வருவாய் உண்டு. கல்வி முடிந்தோர் உயரிய தொழிலில் அமர்வர். புத்திரர்களுக்கும் இந்த ராசி நேயருக்கும் மனஸ்தாபம் உண்டாகும். எச்சரிக்கை மிகவும் அவசியம். திருப்பதி சன்னிதானத்திற்கு சென்று தம்முடைய பிரார்த்தனையைச் செலுத்தி வருவது நல்லது.

இராகுவும் கேதுவும்

தற்போது ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் இராகு எட்டாமிடத்திற்கும் கேது இரண்டாமிடத்திற்கும் மாறுதலடைகின்றனர். இந்த மாறுதல் நல்லதன்று. சுயார்ஜிதமில்லாமல் பிதுரார்ஜிதமான சொத்துக்கள் இவர் கை விட்டு மாறிடும். இவர் விக்கிரயம் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாவர். தகப்பனருக்கு ஆகாது. பிதுருவர்க்கத்தினருக்கும் கொடிய சோதனைகள், மாரகப்பிணி அயர்வுகள் காட்டிடும். தீராக்கடன் தொல்லையிலிருந்து இவர் விடுவித்துக் கொள்ளக் கருதிடுவர். ஆனல் முயற்சி தோல்வியடையும். கடனை தீர்க்க ஒதுக்கிய பணம் கரைந்து விடும். இதனல் கடன் அதிகமாகும்.

மருத்துவ ஆராய்ச்சிக்கு எட்டாத புதுமையான நோய் இவரை வாட்டிடும். சிகிச்சைக்கு மசியாது. கூடுமான வரையில் இவர் ஊசியின் மூலம் மருந்தை திரேகத்திற்கு ஏற்றலாகாது. மனைவியின் உடலாரோக்கியம் தளர்ந்து இந்த ராசி நேயருக்கு கவலையளித்திடும்.

கேது மூன்றுமிடத்தை விட்டு குடும்பஸ்தானத்தில் நடை புரிவதால் குடும்பத்தில் சிக்கலான பிரச்சனைகள் தோன்றிடும். கலகங்கள் ஏற்படும். அஸ்வனி, மகம், மூலம் இந்த நட்சத்திரங்களில் தோன்றிய மக்களாலும், மருமக்களாலும் உடன் பிறந்தோர்களாலும் இவருக்கு தொல்லைகள் ஏற்படக்கூடும். இவர் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் அதிகப் பற்றுதல் இல்லாமல் சொத்துக்களை தனித்தனியே பிரித்துக் கொள்வது நல்லது. இல்லையேல் வீண் அவஸ்தைகளுக்கு இவர் உள்ளாக நேரிடும். திருஷ்டிதோஷ பரிகாரங்களையும் செய்துக் கொள்வது நலம்.

ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் இராகு ஏழாமிடத்திலும், கேது ஜன்ம ராசியிலும் விளங்குவதால் சமூகவட்டாரத்தில் எதிர்ப்பு நிறைந்து காணப்படும். குடும்பத்தை விட்டு இவர் பிரிந்திருக்கவும்

நேரிடும். இவர் விருப்பத்திற்கு மாறுதலான மறைமுகமான எதிர்ப்புகள் தோன்றி மன அமைதி குறையும். எதையோ இவர் இழந்தவர் போல் பாவனை சதா உள்ளத்தில் குடி கொண்டிடும். விரக்தி மனோபாவமும் ஏற்படும். விபரீதச் செலவுகள் ஏற்படும். சித்தபிரமைக்கும் ஒரு சிலர் ஆளாக நேரிடும். தெளிவான மனோநிலையை அடைய கடவுள் பக்தியும், கடமை உணர்ச்சியும், செய்துவரும் தொழிலில் கிடைக்கும் வருவாய் போதுமென்ற மனதிருப்தியும் மிக அவசியம். இராகு அல்லது கேது திசை நடைமுறையில் இருப்பின் புதிய தொழிலில் இவர் ஈடுபடாமலிருப்பது சாலச் சிறந்ததாகும்.

ஆரோக்கியம

குருதேவர் மிருகசீரிட நட்சத்திரசாரத்தில் சஞ்சரிக்கும் போது ரத்தகொதிப்பு, ரத்த ஓட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள், இனிப்பு வியாதி போன்றவை வாட்டிடும். காரத்தையும், புளிப்பையும் குறைத்துக் கொள்ள வேண்டும் அதிகமாக இனிப்பு பண்டங்களை சேர்க்கலாகாது. காப்பி, டீ, முதலிய பானங்களை குறைத்துக் கொள்ளவும். பால், மோர், நெய் முதலியவைகளை ஆகாரத்துடன் சேர்த்துக் கொள்ளலாம். இல்லையேல் ஒரு சிலருக்கு மூல வியாதி, பௌத்திரம் போன்றவை வாட்டிடும் பச்சை மிளகாயை கடுகளவும் இவர் சேர்க்கலாகாது. மற்றவகையில் ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். சனி ஏழாமிடத்தில் நின்று ஜன்ம ராசியை நோக்குவதால் ஒரு சிலருக்கு நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு இதனால் உடல் பலஹீனமும் அடையும். தக்க பாதுகாப்பு முறைகளை முன் கூட்டியே அனுசரிப்பது நலம். சித்திரை நட்சத்திரத்தில் தோன்றியவர் சித்திரை, புரட்டாசி மாதங்களில் வெகு ஜாக்கிரதையுடன் இருத்தல் நலம். வந்தபின் நோயை குணப்படுத்துவதை விட வராமலேயே தடுத்துக் கொள்வது தான் ஜாதகத்தினால் அவரவர் அடையக் கூடிய சாதகமாகும்.

நிதி நிலைமை

சுமார் ஐந்து வருடங்களாக தோன்றிய நிதிமுடை ஓரளவிற்கு நீங்கி டணவசதி பெருகிடும். செய்து வரும் தொழிலில் நல்ல முன்னேற்றமுண்டு. பராபவ ஆவணி முதல் நல்ல வசதி ஏற்படும். எதிர்பாராத வட்டாரங்களிலிருந்து நல்ல ஆதரவு ஏற்படும். சூரியன், செவ்வாய் திசை நீங்கலாக மற்ற திசைகள் நடைமுறையில் இருப்பின் பணம் கையில் தாராளமாக நடமாடும். பிறருடைய மூலப் பொருள்களை கிரய விக்கிரய ஒப்பந்தங்கள் செய்வது மூலம் நல்ல ஆதாயமேற்படும்.

தொழில்

சுயத்தொழிலை விட கமிஷன் வியாபாரம், உத்தியோகத் துறை, காகிதவியாபாரம், புத்தக வியாபாரம், ஏஜென்ஸி, காண்ட்ராக்ட், பிரசுராலயம், எழுத்து வேலை, கணக்கு வேலை பார்த்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டோர்கட்கும் கல்வித்துறையில் உள்ளோர்கட்கும் சிறந்த பலன் உண்டு.

வியாபாரிகள் கூட்டு வியாபாரத்தில் ஈடுபடாமலிருப்பது நல்லது. ஏனெனில் தம்முடைய உழைப்பினுல் கூட்டாளிகளுக்கு நல்ல லாபமேற்படுமேயன்றி தமக்கு கைமேற் பலன் கிட்டுவது துர்லபம். உழைப்புதான் அதிகமாகும். ஓய்வு குறையும். அலைச்சல் மிகும். சாதாரணமாக இவருக்கு இருவிதமான தொழில்கள் ஏற்பட நல்ல வாய்ப்புண்டு. அதாவது உத்தியோகத்துறையில் இருப்பின், வேறு வழி துறைகளில் கமிஷன் வியாபாரம், ஏஜென்ஸி போன்றவையும் இதனுல் தனி வருமானமும் கிடைத்திடும். குருதேவர் கடகராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் நல்ல ஆதாயம் கிட்டிடும். உத்தியோக உயர்வு உண்டு. தொழில் உச்சவரம்பை அடைந்திடும்.

அரசாங்க சேவையில் இருப்பின் இந்த குரு,சனி மாறுதல் அடைந்ததும் இட மாறுதலுக்குள்ளாவர். பதவி உயர்வும், நல்ல வருவாயும் ஏற்படும். மீண்டும் குருதேவர் சிம்மராசியில் பிரவேசிக்கும் தருணத்தில் தொழிற்றுறையில் மாற்றமும் ஏற்படும். இதனுல் சற்று பீதியும் ஏற்படக்கூடும். இரட்டிப்பான செலவு குடும்பத்தில் ஏற்படுவதால் ஒரு சிலருக்கு பணமுடையும் அத்தருணத்தில் தோன்றிடும். ஆனுல் தக்க தருணத்தில் வேண்டிய பணவசதி உண்டாகும்.

ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் தொழிலில் ஈடுபடுவர். தம்முடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறும் அளவிற்கு உத்தியோகம் அமையும் இவர் முதலீடு வைத்து புதியத் தொழில் ஆரம்பிக்கலாகாது. பிறருடன் கூட்டாகவோ, தனித்தோ செய்யக்கூடிய வியாபார முயற்சிகளில் ஈடுபடலாகாது.

அரசியல்துறை

செவ்வாய் அல்லது சூரியதிசை நடைமுறையில் இருப்பின் இவர் அரசியல் விவகாரங்களில் பிரவேசிக்காமல் இருப்பது நலம். மற்ற திசைகள் நடைமுறையில் இருப்பினும் கடுமையான போட்டியும், எதிர்ப்பும் நிறைந்து காணப்படும். அரசாங்கத்தினரால் வழங்கப்படும் கௌரவப் பதவிகளை இவர் ஏற்று செயலாற்றுவது சிறந்தது. போட்டியிடக்கூடிய ஸ்தானங்களையோ, அரசியல் துறைகளையோ இவர் விரும்பி அபேட்சகர்களாக நிற்கலாகாது.

குடும்பம்

இந்த ராசி நேயருக்கு குடும்ப நிலை சில காலமாகவே மிகவும் அதிருப்திகரமான தோற்றமளித்திடும். குருதிசை நடைமுறையில் இருப்பினும், சனிமகாதிசை நடந்து வரினும் மனைவி மக்களின் ஆரோக்கியம் இவருக்கு சதாகாலமும் ஓயாத கவலையை உண்டாக்கிடும். ஜனன லக்கினம் எதுவாக இருந்தபோதிலும் மூன்று, ஆறு, எட்டு பன்னிரண்டாமிடங்களுக்கு ஆட்சிநாதர்களின் திசை நடைமுறையில் இருந்தால் குடும்பம் ஓரிடத்திலும் இவர் மற்றோரிடத்திலும் காலத்தைக் கழிக்க நேரிடும் அல்லது குடும்பத்தை இவர் கவனிக்க முடியாத நிலையில் வேறு திசையில் கருத்தைச் செலுத்திடுவர். குடும்பத்தின் மீது சிறிதும் பற்றும் அக்கரையும் ஏற்படாது. ஒரு சிலருக்கு மனைவியின் ஆரோக்கியக்குறைவு, வீண் கவலையையும், அளவுக்கு மீறிய சிகிச்சா செலவுகளையும், இதனால் கடன் உபாதையையும் ஏற்படுத்திடும். குருதேவர் செவ்வாயின் சாரமாகிய மிருகசீரிட நட்சத்திரத்தைக் கடந்ததும் சற்று நிம்மதியேற்படும். அது போலவே சனியும் பூரட்டாதியைக் கடந்து உத்திரட்டாதியில் சஞ்சாரம் செய்யும் நாள் முதல் சங்கடங்கள் நீங்கும். மனஸ்தாபமும், தாம்பத்திய வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கசப்பும் அகன்று ஒற்றுமை ஓங்கிடும். குடும்பத்தில் அக்கரை காட்டாத இந்த ராசி நேயர் கருத்துடன் நடந்துக் கொள்வர்.

குருதேவர் மிதுனராசியை விட்டு கடகராசியை அடையும் நாள் முதல் அதாவது பராபவ ஆவணி முதல் குடும்பத்தில் நன் நிகழ்ச்சிகள் நடைபெறவும், குடும்ப விருத்தியேற்படவும், மக்கள் விருத்தியும், மக்கட்சிறப்பும் நன்கு அமையவும் நல்ல காலம் ஆரம்பமாகும். மனதிற்கு உல்லாசகரமான நிகழ்ச்சிகள் வாழ்க்கையிலும், குடும்பத்திலும் ஏற்படும். சுகம் ஓங்கிடும். சௌகரியங்கள் பெருகிடும்.

பெற்றோர்

தகப்பனாருக்கு நல்ல பதவியும், அந்தஸ்தும், கம்பீரமான தோற்றமும் ஏற்படும். தொழில் உயர்வடையும். வருமானம் பன்மடங்கு பெருகிடும். தொழிற்றுறையில் அவருக்கேற்பட்டிருந்த மந்தமான நிலைமையகன்று சகலதுறைகளிலும் வெற்றியும், நல்ல ஆதாயமும் கிட்டிடும்.

சனிபகவான் நாலாமிடத்திற்கு அர்த்தாஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தாயாரின் உடலாரோக்கியம் சற்று பாதிக்கப்படும். மேலும் குருதேவர் கடகராசியில் நடைபுரியும்போது நாலாமிடத்திற்கு அஷ்டம ராசியில் விளங்குவதால் அது தருணத்தில் மிகவும் சோதனைச் சோர்வுகளை பெற்றோருக்கு காட்டிடும். அதிலும் தாயாருக்கு மாரகப்பிணி

கள் தோன்றி மிரட்சிகரமான தோற்றத்தை உண்டாக்கி தெய்வானு கிரகத்தால் நல்ல சிகிச்சையால் குணமடைந்திடுவர். தக்கபாதுகாப்பு முறைகளை முன்னெச்சரிக்கையுடன் எடுத்துக் கொள்வது நலம்.

கல்வி

கல்விஸ்தானமாகிய நாலாமிடத்தை சனி பார்வையிடுவதாலும் அதே தருணத்தில் குருதேவரும் பார்வையிடுவதாலும் இவ்வருஷம் கல்வி சாதாரணமாக முடியும். வெற்றியுண்டு. ஆனால் மேற்கொண்டு உயர்தரகல்விச் சிறப்பை அடைய இடமேற்படுவது கடினமாகும். ஆனால் தொழில் நுட்ப கல்விப்பயிற்சிக்கு நல்ல வாய்ப்புண்டு.

சனிபகவான் ரேவதியின் சாரத்தில் நடைபுரியும் தருணத்தில் கல்விப்பயிற்சிக்கேற்ற தொழிலும் இந்த ராசி நேயருக்கு கிடைத்திடும். கல்வித்துறையில் ஈடுபட்டவர்கட்கும், ஆசிரியர்கட்கும், புத்தகாசிரியர்கட்கும் நல்ல ஆதாயமும், நல்ல் புகழும் கிடைத்திடும்.

கலை

கலைத்துறையில் நல்ல சாதனையும், வெற்றியும் ஏற்படும். பெயரும் புகழும் ஓங்கிடும். ஆரம்பகாலத்தில் அலைச்சலும், உழைப்பும், நிஷ்பலிதமும் தோன்றியபோதிலும் பராபவ ஆவணி முதல் சிறந்த பலன்கள் உண்டு. வருமானம் பெருகிடும். ஆளடியவர் சூழ பலரை இவர் ஆதரிக்கும் அளவிற்கு இவருடைய கலைக்கூடம் வளர்ச்சியடையும். பொருள் சேர்க்கையும் இத்துறையில் உள்ளோருக்கு ஏற்படும்.

ஞானம்

ஏழாமிடத்தில் நின்ற சனி ஒன்பதாமிடத்தையும் ஜன்மராசியையும் உற்று நோக்குவதால் இந்த ராசி நேயருக்கு ஞானமார்க்கத்தில் கருத்தூன்றிச் செல்லும். ஆத்மீக விஷயங்களை புரிந்து கொள்வதற்கான தத்துவ விளக்கங்களை பெரியமகான்களிடத்திலிருந்து பெறுவர். குடும்பத்தில் பற்றும் அக்கரையும் குறைவதற்கு இதுவும் ஓர் காரணமாகும்.

விஞ்ஞான சாதனையில் ஈடுபட்டோர்கட்கும் சிறந்த ஆராய்ச்சியில் வெற்றி கிட்டிடும். உலோகப் பொருள்களின் பயனை எளிய முறையில் உலகுக்கு அளிக்க வேண்டுமென்ற இவருடைய முயற்சி வெற்றியடையும். குருதேவர் கடகராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் இவருடைய உழைப்பும் ஆராய்ச்சியும் புகழையும், பணத்தையும் தேடி கொடுத்திடும்.

ஆகாத மாதங்கள்

கன்னியா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கும், புரட்டாசி மாதத்தில் ஜனித்தவர்கட்கும், கன்னி ராசியில் சந்திரனிருக்கப் பிறந்தவர்கட்கும் பங்குனி, சித்திரை, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி மாதங்கள் ஆகாதவை. உடலசதியையும், வீண் அலைச்சலையும், தொழிலில் மிரட்சியையும், இடமாற்றத்தையும், கஷ்டநஷ்டங்களையும், பண விவகாரங்களில் மனஸ்தாபத்தையும், ஏமாற்றத்தையும், உறவினர்களிடத்தி விரோதத்தையும், பெற்றேரிடத்திலும், மனைவிமக்களிடத்திலும் மன வேற்றுமையையும், குடும்பத்தில் பிணி அயர்வுகளும் வீண் சோர்வுகளுக்குள்ளாக்கிடும். முன்னெச்சரிக்கை அவசியம். தை, வைகாசிமாதங்கள் சம்மானப்பலன்களையும் கார்த்திகை, மாசி, ஆனி, ஆடி மாதங்கள் விசேஷ நற்பலன்களையும் வழங்கக்கூடிய மாதங்களாகும். இம்மாதங்களில் தொழில் மேன்மையடையும். வருமானம் பெருகிடும் புதிய தொழிலொப்பந்தங்கள் ஆதாயத்தை அளித்திடும். பதவி உயர்வடையும் ஆரோக்கியம் நன்கு விளங்கும். நீதிமன்ற விவகாரங்களில் வெற்றியுண்டு. பொருள் சேர்க்கையும் ஏற்படும். கடன் தீரும். நடைமுறையில் இருக்கும் திசைபுத்திகளுக்கனுசரணையாகபலன் ஏற்படும்.

மாதர்கள்

கல்வி பயிற்சி முடிந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவர். இல்லற வாழ்க்கையில் எதிர்பாராவிதமாக சில சங்கடங்கள், சோர்வுகள், எதிர்ப்புகள், சோதனைகள் தோன்றி இவருடைய மன அமைதி தளரும். புக்ககத்திற்குச் சென்றவர்களும் மீளவும் பிறந்தகத்திற்கே வந்தடைவர். தாம்பத்தியவாழ்க்கையில் ஒற்றுமை குறையும். கணவர் தூர தேசத்திற்கு மாற்றலாகுவர். குடும்பத்தில் ஏதாவதொரு அதிருப்திகரமான சூழ்நிலை தோன்றி தோன்றி மறையும். தொழிற்றுறையில் இருப்பின் உழைப்பு அதிகமாகும். செலவினங்கள் பெருகிடும். சமூக வட்டாரத்தில் எதிர்ப்புகள் தோன்றிடும். விரும்பிய விவகாரங்கள் தாமதமடையும். இதனல் விரக்தி மனேபாவம் உண்டாகும். மக்களால் கவலை ஏற்படும். இத்தகைய நிலை பராபவ வருஷம் ஆவணிமாத முதல் மாறுதலடைந்து நல்லகாலம் ஆரம்பமாகும். பிரிந்தவர் ஒன்று கூடுவர். மக்கள் முன்னேற்றமடைந்திடுவர். கணவரின் பதவி, அந்தஸ்து, சேவை முதலியவை கம்பீரமான தோற்றத்துடன் விளங்கும். இந்த ராசி மாதர்களின் தொழிற்கடமையும் சிறந்து விளங்கும். வருமானம் உயர்வடையும். வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகள் அகன்று சௌகரியங்கள் பெருகிடும். ஒரே இடத்தில் நிலைத்திருக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். இவரை உதாசீனப்படுத்திய உறவினர்கள் நேசவிசுவாசத்துடன், பாராட்டுவர். சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவம் ஏற்படும். கல்வியா

கலை கேள்விகளில் இவர் நிகரற்றவர்களாக விளங்குவர். இவர் பெயரில் உருவாகிய தொழில் ஸ்தாபனங்கள் நல்ல வளர்ச்சியைப் பெற்று வளரும். இவருடைய நிலைமை உயர்ந்து விளங்கும்.

தாயாருக்கு கெண்டமும், இதனுல் மனச்சோர்வும் ஏற்படும். எச்சரிக்கை அவசியம்.

தகப்பனுரின் நிலை உயர்வடையும். கவலைகள் மறையும். கடன் நீங்கும். நீதிமன்ற விவகாரங்களில் வெற்றியுண்டு. உடன் பிறந்தோர்களுக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள் மறையும். சுபிட்சம் தாண்டவம் புரியும். கடவுள் பக்தியும் இதனுல் மன அமைதியும் தூய்மையும் நாளுக்கு நாள் வளரும்.

துலாம்

சித்திரை கடைசி இரண்டு பாதங்கள்-ர. ரி.
சுவாதி-ரு. ரே. ரோ. த.
விசாகம் முதல் மூன்று பாதங்கள்-தி. து. தே

கிரக மாறுதல் நிலை பொதுப்பலன்

குரு

மூன்று ஆறுக்குடைய குருதேவர் எட்டாமிடத்தை விட்டு பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தை அடைந்து ஜன்ம ராசியையும், மூன்ருமிடத்தையும், பூர்வபுண்ணியஸ்தானமாகிய ஐந்தாமிடத்தையும் பார்வையிடுகின்ருர். தெய்வகடாக்ஷம் நிறைந்தவர்களாக இந்த ராசி நேயர் விளங்குவார் என்பதில் மாற்றமில்லை. வாழ்க்கையில் ஏற்பட்ட இருண்ட சூழ்நிலை அகன்று விதியில் புதிய ஒளி ஏற்படும். எதிர்ப்புகள் மறைந்து நல்லோர் ஆதரவு நிலைத்திடும். கடன் சுமை குறையும். அதே தருணத்தில் பொன் பொருள் சேர்க்கையும் ஏற்படும். ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். அச்சம் நீங்கும். தைரியமும், உறுதியும் உற்சாகமும் எத்துறையிலும் மேலோங்கிடும். ஒதுங்கிய நல்லோர், பெரியோர், நிதி மிகுந்தோர் நெருங்குவர். நெருங்கி தொல்லை விளைவித்தவர்கள், கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்தியவர், மௌனம் சாதித்து காரியத்தை கெடுத்தவர், முன்னேற்றத்தைத் தடுத்தவர் ஒதுங்குவர். பணமுடையும் பற்ருக்குறையும் நீங்கி பணவசதியும், சுபிட்சமும் தாண்டவம் புரியும். இவருடைய தருமம் ஓங்கிடும். குடி வளரும். வேளாண்மை அபிவிருத்தியாகும். வணிகம் வளர்ச்சியடைந்து லாபம் பெருகிடும். புதிய பொன் பொருள், சேர்க்கையும் வீடு, நிலம், வாகனபிராப்தியும் உண்டு. மனைவி மக்கள் மூலம் பொருள் வந்து சேரும். உத்தியோகத்துறையில் இருப்பின் பதவி உயர்வடையும்.

பராபவ ஆவணி முதல் குருதேவர் பாக்கியஸ்தானத்தை விட்டு பத்தாமிடத்தில் சஞ்சரிக்கத் தொடங்குகின்ருர். செய்து வரும் தொழிலில் சற்று தயக்கமும், பொருட்சேதமும், குடும்பத்தினரால் சங்கடமும், பொது விவகாரங்களில் மனச்சோர்வும் இந்த ராசி நேயருக்கு ஏற்படும். பணம் பல வழிகளில் சிதறிடும். மக்களால் மனசஞ்சலம் உண்டாகும். செய்து வரும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாமென்ற ஆவல் ஏற்படும். தம்முடைய விருப்பத்திற்கு ஒப்பாத நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் அதிர்ச்சியும் ஆயாசமும், ஒரு சில தருணங்களில் அவநம்பிக்கையும் ஏற்படும். உடலாரோக்கியம் தளரும். இநத ராசி நேயர் எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்யத் தவறுவதாலும் செய்யக்கூடாததை மனமுவந்து செய்யத் துணிவதாலும் இவருக்கு அருவருக்கத்தக்க சூழ்நிலை ஏற்படும். ஆகையால் நீதிமுறைவழுவாது, சட்டதிட்டங்களை திரஸ்கரிக்காமல், தம்முடைய வரம்பை மீருமல் கடமையை கைமாறு கருதாமல் இந்த ராசி நேயர் செய்து நிறைவேற்றுவராயின் கொடியவை கோடி தூரத்தில் நின்று வணங்கி விடை பெற்றுச் சென்றிடுமாம். இவர் செய்ய வேண்டிய பொறுப்பான காரியங்களை பிறரைச் செய்யச் சொல்வதால் சில அனர்த்தங்கள் விளையும். இதற்கு இடந்தராமலிருப்பது நல்லது. மேலும் அரசாங்க பதவி சேவையில் உள்ளோர் சர்வ ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். எதையும் தாம் நேரில் பார்வையிடாமல் புலன் விசாரணை செய்யாமல் மற்றவர்களுடைய வாசகத்தை நம்பி முடிவுக்கு வரலாகாது. தீர்க்காலோசனை அவசியம். இது மட்டுமல்ல. காரியாலயத்தில் செய்ய வேண்டிய அலுவல்களை மற்ற இடங்களில் செய்யும் பழக்கத்தை மறந்து விட வேண்டும். வேறு எல்லைக்கு மாற்றலாகியும் பழைய வேலைகளை முடிவு கட்டாமல் சென்ற விடத்திலும் செய்யக் கருதலாகாது. தவறி செய்பவர்கள் வஞ்சகசூட்சிகளுக்குள் சிக்கி வெளியேற முடியாமல் வாட்டமுறுவர். உஷார்!

வணிகத்துறையில் உள்ளோர்களும், சுயத்தொழில் ஸ்தாபகர்களும் கூடுமானவரையில் புதிய தொழிலொப்பந்தங்களிலோ, அயல் நாட்டு ஒப்பந்தங்களிலோ, அரசாங்க சட்டதிட்டங்களை தளர்த்திட தனிச்சலுகைப் பெருமலோ கிரயவிக்கிரய ஒப்பந்தங்களில் ஈடுபடலாகாது.

குருதேவர் கடகராசியைக் கடந்து சிம்மராசியில் சஞ்சரிக்கும் போது இவருக்கு சகல துறைகளிலும் வெற்றியும் கைமேற் பலனும் கிட்டிடும். உத்தியோகத்துறையில் இருப்பின் தொழில் உயர்வு உண்டு. வருமான உயர்வும் ஏற்படும். குடும்பத்தில் சுகநிகழ்ச்சிகள் நடைபெறும். திருமணமாகாதவர்கட்கு திருமணம் முடியும். வாழ்க்கை

நல்லபடி அமையும். பொருள் சேர்க்கையும், நல்ல செல்வாக்கும் ஏற்படும். சந்தானவிருத்தியும், அதிலும் ஆண் சேய் விருத்தியும் இந்த ராசி நேயருக்கு ஏற்படும். இஷ்டாபிலாஷை பூர்த்தியாகும். நெடுநாள் பிரார்த்தனை நிறைவேறிடும். வியாபாரம் வளர்ச்சியடைந்து பல கிளை ஸ்தாபனங்கள் உருவாகிடும். விவசாயத்துறையிலும் நல்ல பலிதம் கிட்டிடும். நிலம், பூமி, வீடு போன்ற நிரந்தரப்பொருள் சேர்க்கையும், வாகனபிராப்தியும், பெரிய மனிதர்களின் நட்புறவும் ஏற்படும். கல்வி கலை, ஞானம் வளர்ச்சியடையும். பெயரும் புகழும் ஓங்கிடும். உடலாரோக்கியம் செழிப்படையும். பெற்ரோருக்கு சோர்வுகள் ஏற்படும். உடன் பிறந்தோர்களுக்கு நல்ல அனுகூலங்கள் ஏற்படும். மக்களின் திருமண விவகாரங்கள் துரிதமான முடிவுக்கு வரும்.

சனி

சனிபகவான் இந்த ராசி நேயருக்கு சுக பஞ்சமாதிபதியும் நல்ல யோககாரகனும் ஆவர். ஐந்தாமிடத்தை விட்டு ஆருமிடத்தில் சஞ்சரிப்பது கோட்சார விதிப்படி நல்லது. எதிரிகள் அபஜயம் அடைந்திடுவர் என்ருல் இந்த ராசி நேயருக்கு வெற்றி நிச்சயமல்லவா? நோய்கள் இருக்குமிடந்தெரியாமல் மறைந்திடும். நீதிமன்ற விவகாரங்களில் சாதகமானப் பலன்கள் ஏற்படும். உடலாரோக்கியமும், மன உறுதியும், செயலில் விடாமுயற்சியும் இவருடைய திறமையையும், விவேகத்தையும், மேலோங்கிடச் செய்யும். எதிரிகள் பணிந்திடுவர். முயன்ற காரியங்களில்பரிபூரண வெற்றியும் கைமேற் பலனும் உண்டு. தொழிற்றுறையில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை அகன்று எளிய நடையில் துரிதமான நற்பலன்களை இவர் அடைந்திடுவர். இவர் முன்னேற்றமடையாமல் தேங்கியதற்கான காரணங்கள் இனி மாறுதலடையும். இவருக்கு விதிக்கப்பட்ட தடையுத்திரவு தளர்க்கப்படும். இவருடைய வியாபார ஒப்பந்தங்களுக்கும், தொழில் ஒப்பந்தங்களுக்கும் ஏற்பட்டிருந்த கட்டுதிட்டங்கள் தளர்க்கப்படும். இவருக்கு யதேச்சாதிகாரம் வழங்கப்படுவது போலாகும். கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பின் பிரிந்து தனி வியாபாரம் செய்யவும் நேரிடும். இந்த ராசி நேயர்களின் சகோதர சகோதரிகளுக்கு இக்கட்டான சூழ்நிலையும், சோதனையும், சங்கடமும் ஏற்படும். உடலாரோக்கியம் மிகவும் பாதிக்கப்படும். பணலேவாதேவி விவகாரங்களிலும் அவருக்கு முடையும் கவலையும் ஏற்படும்.

இந்த ராசி நேயருக்கு கீழ்படிந்த அடிமையாட்களால் நல்ல ஆதாயம் ஏற்படும். ஒருவர் சகாயமும் இல்லாமல் இவருடைய சுய பலத்தைக் கொண்டே இவர் முன்னேற்றமடைந்திடுவர்.

திசாபுத்தியும், கிரகமாறுதலும்

இராகுதிசையோ, குருதிசையோ, கேதுதிசையோ, சுக்கிர திசையோ நடைமுறையில் இருப்பினும் திசாநாதர்கள் பலயீனமான ஸ்தானங்களில் ஜனன காலத்தில் அமைந்திருப்பின் இவர்களுக்கு குரு சனி மாறுதலால் ஏற்படக்கூடிய நற்பலன்கள் நிதானமடையும். இதற்குமாறுக சில அம்சங்கள் தோன்றவும் கூடும். தக்கபடி பரிகார நியமங்களை செய்தும், கிரகச்சாந்தி செய்தும், ஸ்தோத்திர வழிபாடு செய்தும், திருஷ்டிதோஷபரிகாரங்கள் செய்தும் அமைதியடைவது நல்லது.

புதன் விரயாதிபதியானதால் புதன் திசையிலும் இந்த ராசி நேயருக்கு எதிர்பாராவிதமான நஷ்டங்களும், பொருள் சேதமும் பணவிரயமும், ஏற்படக்கூடும். எழுத்து ஒப்பந்தங்கள் முன்னேற்பாடுகள், இல்லாமல் பொருள் மாற்றங்களிலும், கிரயவிக்கிரய ஒப்பந்தங்களிலும் ஈடுபடலாகாது. எச்சரிக்கை மிகவும் அவசியம்.

செவ்வாய் தனசப்தமாதிபதியானதால் மாரகப்பிணிவாட்டங்கள். ஆயுதசிகிச்சை செய்துக் கொள்ளுதல், கண்பரிசோதனை சிகிச்சை முதலியவைகளை செய்துக் கொள்ள நேரிடும். இவர் புதியத் தொழிலை ஆரம்பிக்கலாகாது. ஆரம்பித்தால் இவருடைய உழைப்பும் சம்பாத்தியமும் பிறருக்கும், எதிரிகட்கும் பயன்படும். இவருக்கு எவ்விதப்பலனும் ஏற்படாது.

ஆரோக்கியம்

சனி பூரட்டாதி நட்சத்திரசாரத்தில் சஞ்சரிக்கும் நாள்வரை நரம்புதளர்ச்சி, வயிற்றுவலி போன்ற அசதிகள் தோன்றி வாட்டிடும். ஆனல் தகுந்த சிகிச்சையினுல் கட்டுக்கடங்கியே காணப்படும். சுயசாரமாகிய உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சனி சஞ்சாரம் செய்யும் நாள் முதல் நோய் மறையும். சரீரம் திடகாத்திரமடையும். ஏற்கனவே தோன்றிய கொடிய வியாதிகள் நாளுக்கு நாள் சரிந்து ஆரோக்கியம் செழிக்கும்.

நிதிநிலைமை

பணவசதி நன்கு அமையும். நல்லோர் உதவியும், நிதிமிகுந்தோர் ஆதரவும், தொழில் முன்னேற்றத்திற்கான நல்ல வாய்ப்பும் இந்த ராசி நேயருக்கு சிறந்த முறையில் அமையும். வட்டி, வாடகை குத்தகைப்பணம், பழையபாக்கி முதலியவை சிரமமின்றி வசூலாகும். கையில் தாராளமாக பணம் நடமாடும். இந்த ராசி நேயர் வியாபார

அபிவிருத்தியடைய புதிய கிளைத் தொழில்களையும் ஆரம்பித்திடுவர். இவருடைய கீழ்படிந்த சிப்பந்திகளும் இவருக்கு அனுசரணையாக செய லாற்றி இவருடைய வருவாயை பன்மடங்கு உயர்த்திடுவர். பிறருக்கும் இவர் உதவி புரியும் அளவிற்கு இவரிடத்தில் பணம் வந்து சேரும். குரு, செவ்வாய்திசை நடைமுறையில் இருப்பின் மற்றவர்களை நம்பி மூலநிதியை வைத்து புதியத் தொழில்களை ஆரம்பிக்கலாகாது. ஆரம் பித்தால் ஏமாற்றமும் வஞ்சக சூட்சியும் ஏற்படும். தம்முடைய சுய கண்காணிப்பிலேயே கொடுக்கல் வாங்கல் லேவாதேவிவிவகாரங்களை செய்ய நல்லது. இல்லையேல் கோட்டையை விட்ட பிறகு இவர் சிந் திக்க நேரிடும். எச்சரிக்கை மிக அவசியம்.

தொழில்

அரசாங்கப் பதவியில் உள்ளோர் பதவி உயர்வு பெறு வர். வெளியூரிலிருந்தவர் உள்ளூருக்கே மாற்றப்படுவர். மன அமை தியும், தொழிற்றுறையில் நிம்மதியும் ஏற்படும். இது நாள்வரை கடு மையாக இருந்த மேலதிகாரிகள் இவர் மீது சீற்றத்தை காட்டாமல் அபிமானத்துடன் விளங்குவர். கடுமையான போட்டியும் பொருமை யும் சரியும். ஆனால் இந்த ராசி நேயர் அவசர வார்த்தைகளை வெளி யிடாமல் பாதுகாப்புடன் இருத்தல் நலம். குருதேவர் கடகராசியை அடையும் நாள் முதல் அதாவது பராபவ வருஷம் ஆவணி முதல் இந்த ராசி நேயர் உத்தியோகத்துறையில் பக்குவமாயிருத்தல் நலம். வெளி யூர் மாற்றமும் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். கூடாத சகவாச தோஷத்தால் இக்கட்டான சூழ்நிலையும் உண்டாகும். அதிக மூலநிதி தேவைப்படும். புதிய வணிகத்துறைகளில் இவர் ஈடுபடாமலிருப்பது நல்லது. தவறி இறங்கியவர் கரையேறுவது கடினமாகும். முள்வேலி யில் சிக்கிய மெல்லிய ஆடையையும் விடுவித்துக் கொள்ளலாம். ஆனால் பணம் போன திசையை கண்டறிய முடியாது. உஷார்!

குருதேவர் சிம்மராசியை அடையும் நாள் முதல் தொழில் உயர்வடையும். ஆதாயம் பெருகிடும். மேலோர் ஆதரவு நல்லபடி விளங்கும். வெல்லம், சர்க்கரை, பழவகைகள், இனிப்பு பண்டங்கள் வியாபாரிகள், உணவு விடுதி நடத்தும் முதலாளிகள், அச்சகம், பிரசுரா லயம் நடத்துவோர், கணக்காயர்கள், வழக்கறிஞர், கட்டிட வேலையில் ஈடுபடும் காண்ட்ராக்ட்தாரர்கள், சங்கீதம், நிழலோவியம் நடன, நாட கத்துறையில் உள்ளோர், அரசாங்கத்தின் தொடர்புடைய உணவுப் பொருள் வினியோகம் செய்பவர்கள், ஆஸ்பத்திரிகட்கும் சிறைச்சாலை கட்கும் தேவையானப் பொருள்களை ஒப்பந்தத்தின்மூலம் சப்ளை செய் பவர்களும் நல்ல ஆதாயத்தை அடைந்திடுவர். தத்தம் தொழில்களை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்து கொள்வர். அயல் நாட்டு.

வியாபார ஒப்பந்தத்தில் உள்ளவர்களும், அரசாங்க அனுமதி பெற்ற வர்களும் சிறந்த லாபத்தை அடைந்திடுவர். தொழில் ஸ்தாபனத்தை நவீன முறையில் அமைத்துக் கொள்வர்.

ஏற்கனவே உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களும் தொழிலில் ஈடுபட்டு புதியப் பொருளையும் சேகரித்துக் கொள்வதற்கான சம்பாத்தியத்தை அடைந்திடுவர். சேமிப்பு நிதியில் கிடைத்த பணத்தை பன்மடங்கு பெருக்கிடுவர். ஆனால் இவர் சுயமாக செய்வது தான் சிறந்தது. மற்றவர்களோடு சேர்ந்தால் இவருக்கு பலன் ஏற்படுவது துர்லபம்.

அரசியல்

அரசியல் துறையில் ஈடுபட்டோர்களுக்கு கடும் போட்டியிருக்கும். இருந்தாலும் வெற்றியுடன் திகழ்வர். "ஓடியவனுக்கு ஒன்பதாமிடத்தில் குரு" என்பது போல் அரசியலிலிருந்து விடுபட்டு ஓடுகிறவர்கட்கு நல்ல தொழில் முன்னேற்றத்தால் பெரும் லாபமும், தொழில் அலைந்து தேடியும் கிட்டாததை அடைய விரும்பி அரசியலுக்கு ஓடுகிறவர்கட்கும் நல்ல ஆதரவு கிடைத்து அந்தஸ்தும் கௌரவமும், செல்வாக்கும் உயர்ந்து விளங்கும். ஆகாத திசை புக்தி நடைமுறையில் இருப்பினும, குருதேவர் கடக ராசியில் சஞ்சரிக்கும் காலத்திலும் மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களுக்குரியவர்களின் திசை புக்தி நடை முறையில் இருப்பினும் அரசியலில் ஈடுபடாமல் ஓய்வு பெற்று ஆத்மீகத் துறையில் கருத்தைச் செலுத்துவது நல்லது.

குடும்பம்

உடன் பிறந்தோர்கட்கு திருமண ஏற்பாடுகள் இந்தராசிநேயர் தலைமையில் நடைபெறும். சிக்கலான பிரச்சனைகள் முடிவடைந்து அமைதி ஏற்படும் திருமணமாகாதவர்கட்கு திருமண ஏற்பாடுகள் முடிவு பெறும். வாழ்க்கையில் சகல வசதிகளும் பெருகிடும்' ஏற்கனவே இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டோருக்கு மக்கள் விருத்தியுண்டு. இதனால் பெருமையும் ஏற்படும்.

குருதேவர் பத்தாமிடத்தில் நடை புரியும் போது, அதாவது பராபவ வருஷம் ஆவணி முதல் உடன் பிறந்தோர்களிடத்தில் மன வேற்றுமை வளரும். சொத்துக்களை பிரிவினை செய்து கொள்ளவும் நேரிடும்.

களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திற்கு பன்னிரண்டாமிடத்தில் சனியும், மூன்ருமிடத்தில் குருதேவரும் சஞ்சாரம் செய்வது மனை

விக்கும் மனைவி வர்க்கத்தினருக்கும் ஆகாது. வீண் சோதனைச் சோர்வுகள் ஏற்படும். ஆரோக்கியம் குன்றிடும். பெரும் சிகிச்சை பெறவேண்டிய சூழ்நிலையும் உண்டாகும். முன்னெச்சரிக்கை அவசியம்.

பெற்றோர் நிலை

பித்ரு ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்கு சனி பத்திலும், குரு தேவர் ஜன்மத்திலும் ஒளிர்வதால் தகப்பனுருக்கு தொழிற்றுறையில் மந்தமான நிலைமையும், இடமாற்றமும், பலிதக் குறைவும், அலைச் சலும். அளவுக்கு மீறிய செலவினங்களும் தோன்றி கவலையளித் திடும்.

பராபவ வருடம் ஆவணி முதல் செய்து வரும் தொழிலில் நல்ல வருமானம் கிட்டிடும். முயன்ற காரியங்களில் வெற்றியும் சாதக மானப் பலன்களும் ஏற்படும். பணவசதி பெருகிடும் குடும்பம் ஒன்று சேரும் சுபமங்கள நிகழ்ச்சிகளுக்காக குடும்பத்தில் செலவுகள் ஏற்படும்.

குருதேவர் சிம்மராசியில் சஞ்சாரம் செய்யும் போது பெற் றோருடைய உடலாரோக்கியம் மிகவும் பாதிக்கப்படும். ஆகாத திசா புக்தி நடைமுறையிலிருப்பின் அரிட்ட மாரகமும், கெண்டாதி கெண்டங்களும் தோன்றிடக் கூடும்.

கல்வி

கல்வி பயிற்சியில் வெற்றியுண்டு. உயர்தர கல்லூரி படிப்பும் ஒரு சிலருக்கு கிட்டிடும். சனி பகவான் கல்வி ஸ்தானமாகிய நாலா மிடத்திற்கு மூன்றில் சஞ்சாரம் செய்வதால் இந்த ராசியில் தோன்றிய வர்கள் கல்வி ஓரளவிற்கு முடிந்ததும் நுட்பமான தொழிலாராய்ச்சித் துறையில் பயிற்சி பெறுவர். கல்வி முடிந்ததும் தொழில் சேவையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பும் தடையின்றி ஏற்படும், இவருடைய திறமையும், தகுதியும், மேலோரின் கவனத்தைக் கவர்ந்து பெரும் பொருப்பான ஸ்தானத்தையும் இவர் முயற்சியின்றி பெற்றி டுவர்.

கலை

சங்கீதம், நாடகம், நடனம், சினிமா போன்ற கலைத்துறையில் ஈடுபட்டோர் தத்தம் துறைகளில் போட்டி நிறைந்திருப்பினும் நிகரற்று விளங்குவர். மற்றவர்களுடைய ஆதரவில் செயலாற்றிய வர்கள் சுயேச்சையாகவே தம்முடைய எதிர் காலத்தை நிர்ணயித்துக் கொள்வதற்கான வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ளுவர். பண

வசதியும் இடவசதியும், கூட்டாளிகளின் ஆதரவும் நல்ல முறையில் ஏற்படும். இவருடைய புகழும் பெயரும், பிரக்யாதியடையும் நல்ல சன்மானங்கள் வந்து சேரும் வருமானமும் உயர்வடையும்.

ஞானம்

ஏழை எளியவர்கட்கு தான தருமம் செய்ய வேண்டுமென்ற ஞானமும், தர்ம குணமும் உள்ளத்தில் உதயமாகும். செயல் வடிவத்திலும் பிரதிபலிக்கும். தர்ம ஸ்தாபனங்களை உருவாக்கிடுவர். தெய்வ திருப்பணிகளிலும் இவர் பிரதான ஸ்தானத்தை வகிப்பர்.

ஆத்மீகத் துறையில் உள்ளோர் அரிய சாதனைகளை அடைவதற்கு இதுதான் நல்ல தருணம். குரு ஒன்பதாமிடத்தில் ஒளிர்வதால் தகுந்த மஹான்களின் தொடர்பும் உபதேச மார்க்கமும் உண்டாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டோர் ஒலி (சப்தம்) யின் சக்தியை எந்தெந்த முறையில் பயன்படுத்த கூடுமென்பதை நுட்பமாய் உலகுக்கு அளித்திடுவர். செவி, மூக்கு, தொண்டை, இவைகளில் நுட்பமான சிகிச்சை வழங்குவதற்கு எளிய மருத்துவச் சாதனங்களை வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வெற்றி காண்பர்.

ஆகாத மாதங்கள்

இந்த ராசி நேயருக்கு சித்திரை, வைகாசி, தை, புரட்டாசி. ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் ஆகாதவை. துலா லக்கினத்தில் பிறந்தவர்களாக இருப்பினும், ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்களாயிருப்பினும், துலா ராசியில் சந்திரனிருக்க ஜனித்தவர்களாக இருப்பினும் மேலே கூறிய மாதங்கள் உடலசதியையும், தொழிற்றுறையில் இடையூறுகளையும், குடும்பத்தில் அமைதியின்மையையும், எதிர்பாராத கஷ்டநஷ்டங்களையும் உண்டாக்கும். ஆனி, மாசி மாதங்கள் கலப்படமான பலன்களையும் மார்கழி, பங்குனி, ஆடி, ஆவணி மாதங்கள் விசேஷ நற்பலன்களையும் வழங்கிடும். நிகழக்கூடிய பலாபலன்கள் நடை முறையில் இருந்து வரும் திசை புக்திகளுக்கு அனுசரணையாக இருக்கும்.

மாதர்கள்

குன்றிய ஆரோக்கியம் மிளிரும். உயர்தர கல்வி சிறப்பும் தொழில் நுட்ப பயிற்சியும் இவருக்குண்டு. குரு, சனி மாறுதல் எல்லாத்துறையிலும் நற்பலனையே வழங்கிடும். கலைத் துறையில் நல்ல வளர்ச்சியும் உண்டு. கல்வி முடிந்தோர் உத்தியோகத்தில் அமர்வர். குடும்

பத்தில் ஏற்பட்ட பணமுடை நீங்கி பொருளாதார நிலை உயர்ந்து விளங்கும் விரோதம் பாராட்டிய பந்து ஜனங்கள் நேசத்துடன் உறவு கொள்வர். பருவமடைந்தும் தடையுற்றிருந்த திருமணம் கைகூடும். ஒரு சிலருக்கு இடையில் கல்வி பயிற்சி தடையுற்று குடும்ப வாழ்க்கை ஆரம்பமாகும். விதியில் புதிய மாறுதல் ஏற்படும். இவர் முயன்ற காரியங்கள் பரிபூரண வெற்றியுடன் முடியும்.

சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவமும் செல்வாக்கும் ஏற்படும். இவருடைய உழைப்பும் சேவையும், ஊக்கமும் உயர்ந்து விளங்கும். புகழும் ஓங்கிடும். பெரியோரின் ஆதரவு நன்கு அமையும். வாழ்க்கையில் தோன்றிய இன்னல்கள் அகன்று இனிமையான சம்பவங்கள் நடைபெறும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை ஏற்படும். மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் விளங்குவர். இவருக்கு சந்தான விருத்தியும் உண்டு. இவர் பெயரில் உருவாகிய தொழில் ஸ்தாபனங்கள் விஸ்தாரமடையும். நல்ல ஆதாயம் கிட்டிடும். தர்மம் மேலோங்கிடும். பொருள் சேர்க்கை உண்டு.

ஆனால் சித்திரை வைகாசி மாதங்களில் சோதனைச் சோர்வுகள் ஏற்படும். உடலசதியும், கஷ்டமும், நஷ்டமும் வீண் கவலையை உண்டாக்கிடும். கணவருக்கும், பெற்றோர்களுக்கும் இம்மாதங்களில் ஆயாச மேற்படும். முன்னெச்சரிக்கை மிகவும் அவசியம். இடமாற்றமும் அந்தரங்க விவகாரங்களில் ஏமாற்றமும் இம்மாதங்களில் தோன்றி மறையும். குடும்ப வாழ்க்கையில் விரக்தியும் உண்டாகும்.

பராபவ ஆவணி முதல் குருதேவர் பத்தாமிடத்தில் நடை புரிவதால் தொழிற் துறையில் அத்திருப்தியும், மக்கள் ஆரோக்கியம் குன்றுவதால் மனத் தளர்ச்சியும், பொருட் சேதமும் உறவினர்களிடத்தில் மனஸ்தாபமும்,' தாழ்ந்த நிலையும், செயல் தயக்கமும் ஏற்படும். குடும்பத்தில் குழப்பமும் உண்டாகும்.

குருதேவர் கடக ராசியைக் கடந்து சிம்ம ராசியை அடைந்ததும் நற்பலன்கள் ஓங்கிடும். இல்லற வாழ்க்கையில் சுகம் பெருகிடும். வசதிகள் நன்கு அமையும். சூல்பிணி-தோஷங்கள் நீங்கி மக்கள் விருத்தியும் ஏற்படும். வருமானம் உயர்ந்து விளங்கும். அந்தஸ்து பதவி சேவை, முதலியவை கம்பீரமான தோற்றத்துடன் விளங்கும். எல்லாத் துறையிலும் இவருடைய பெருமைக்கு அளவில்லை. பொன்னாபரணமும், வீடுவாகன பிராப்தியும் பூமி சேர்க்கையும் முண்டு.

விருச்சிகம்

விசாகம் கடைசி பாதம்-தோ.
அனுஷம்-ந. நீ. நு. நே.
கேட்டை-நோ. ய. யி. யு.

குரு, சனி மாறுதல், பொதுப்பலன்

இந்த ராசி நேயர்கட்கு குடும்பம், தனம், வாக்கு, நேத்திரம் நுண்ணிய அறிவு சுய சம்பாத்தியம், மனைவியின் ஆயுள் போன்ற அம்சங்களை குறிப்பிடும் இரண்டாமிடத்திற்கு அதிபதி குருதேவர் மேலும் பூர்வ புண்ணியம், மக்கட் பெருமை, சந்தான விருத்தி, முன் யோசனை, ஆராய்ச்சித் திறமை, குரு உபதேசம், மந்திர சக்தி போன்ற அம்சங்களை விளக்கும் ஐந்தாமிடத்திற்கும் அதிபதி குரு தேவர் இத்தகைய குருதேவர் குடும்ப ஸ்தானத்திற்கு ஏழாமிடத்திலும், புத்திர ஸ்தானத்திற்கு சுகஸ்தானத்திலும், ஜன்ம ராசிக்கு எட்டாமிடத்திலும் சஞ்சரிக்கத் தொடங்குகின்றார்.

பொக்கிஷதாரரான குருதேவர் பொக்கிஷ ஸ்தானமாகிய இரண்டாமிடத்தை நேர் பார்வை செய்கின்றார். விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தையும், சுகஸ்தானதாகிய நாலாமிடத்தையும் பார்வையிடுகின்றார். இவருடைய சுக சௌகரியங்கள் பெருக வேண்டும். குடும்பம் அபிவிருத்தியாக வேண்டும். இவருடைய இஷ்டாபிலாஷை நிறைவேற வேண்டும். வியாபாரம், வீடு, வாகனங்கள் அபிவிருத்தியாக வேண்டும். எண்ணியது எண்ணியது படியே நடைபெற வேண்டும். துயர் நீங்கி இன்பம் மலர வேண்டும். பிணிவாட்டங்கள் அகன்று ஆரோக்கியம் செழிக்க வேண்டும். எதிரி பணிந்திட வேண்டும். கஷ்டம் நிவர்த்தியடைய வேண்டும். வேண்டும் என்று இவர்கருதும் யாவற்றிற்கும் பணம் பிரதானமாக வேண்டும். இந்த பிரதானப் பொருளை விநியோகம் செய்ய கஜானு சாவி வேண்டு மல்லவா? எட்டாமிடத்தில் நின்ற குரு இந்த சாவியை இந்த ராசி. நேயருடைய புலனுக்குத் தோன்ருமல் மறைத்து பத்திரப்படுத்தி வைத்திடுவர் ஏன்? இந்த ராசி நேயர் துர்வினியோகம் செய்யாம லிருப்பதற்காகத்தான். தவறி இந்த ராசி நேயர் கஜானு சாவியை தேடி எடுத்து பணத்தில் கரத்தை வைத்தால் கருத்திற் கெட்டாத விஷயங்களில் இவர் கருத்திழந்து செலவுகள் புரிந்து நிராதரவற்ற நிலையை அடைவதுடன் கடன் என்ற வில்லங்கத்திற்கும் உள்ளாவர். ஜீவனஸ்தானத்திற்கு லாபஸ்தானத்தில் ஜன்ம ராசிக்கு எட்டா மிடத்தில் குருதேவர் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் தொழிலை

மேன்படச் செய்து, கடமையுணர்ச்சியை மேலோங்கிடச் செய்து, உழைத்து தேடிடும் பணத்தை கருத்துடன் செலவு புரியும் விவேகத்தையும் விதரணையையும் இந்த ராசி நேயர் தகுதியுடன் பெற்றிட தருமஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்கு மாறுதலடைந்ததும் குரு தேவர் ராசி நேயரின் ஜன்மராசியை கண்காணித்து தைரியத்தையும் முன் யோசனையையும் உறுதியுடன் அளித்து நிலையான செல்வத்தை வேண்டும் பொழுது வேண்டிய அளவிற்கு வழங்குவர். ஆகையால் இந்த ராசிநேயர் எட்டாமிடத்தில் குருதேவர் சஞ்சாரம் செய்யும் நாள் வரை எத்தகைய புதிய ஈடுபாட்டிலும், பொறுப்பான விவகாரங்களிலும், வம்பு வழக்குகளிலும் கருத்தைச் செலுத்தாமலிருப்பது நல்லது. தவறினால் விசாரமும் பொருட்சேதமும் வீண் விரயமும் உடல் ஆயாசமும் ஏற்படும்.

பராபவ ஆவணி முதல் குருதேவர் ஒன்பதாமிடமாகிய கடக ராசியை அடைந்து ஜன்மராசியையும் தைரியஸ்தானத்தையும் பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும் பார்வையிடும் நாள் முதல் சகல துறைகளிலும் இந்த ராசிநேயரின் முயற்சி தங்கு தடையின்றி வெற்றியடைந்து நிலையான இன்பத்தைப் பருகிடச்செய்யும். பெரிய மனிதர்களின் ஆதரவும், உயர்ந்த கல்வி ஆராய்ச்சியுடையவரின் தொடர்பும் நல்ல முறையில் ஏற்படும். வாழ்க்கையில் வசதிகள் பெருகிடும். விவசாயம், வியாபாரம், உத்தியோகம், சுயத்தொழில் எதுவாயினும் நல்ல வருமானம் கிடைத்திடும்.

குருதேவர் பத்தாமிடமாகிய சிம்மராசியை அடையும் நாள் முதல் செய்து வரும் தொழிலில் சற்று பிற்போக்கான சூழ்நிலையும் தாழ்ந்த நிலையும் உண்டாகும். பந்துஜன விரோத முண்டாகும். சமூக வட்டாரத்தில் எதிர்ப்புகள் தோன்றிடும். பணலேவாதேவி விவகாரங்களில் அதிருப்திகரமான சூழ்நிலை ஏற்படும். இருப்பிடம் மாறிடும். தொழிலிடமும் மாறிடும். அலைச்சல் அதிகமாகும். மனைவி மக்களிடத்தில் மன வேற்றுமை உண்டாகும். பொருளாதார நிலையில் சற்று இக்கட்டான சூழ்நிலை உண்டாகும். தொழிற்றுறையில் எதிர்ப்பும், போட்டியும், பொறாமையும் நிறைந்திடும். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

சனி

இந்த ராசி நேயர்களுக்கு தைரியத்தையும், மன உறுதியையும் புகழையும் சகாயத்தையும் வழங்கக்கூடியது மூன்றாமிடம். சுகம், வீடு, வாகனம், கல்வி, தாயார், தகப்பனாரின் விதி போன்ற அம்சங்

களை குறிப்பிடுவது நாலாமிடம். இந்த இரண்டு ஸ்தானங்களுக்கும் அதிபராகிய சனி இரண்டரை ஆண்டு காலமாக நாலாமிடத்தில் சஞ்சாரம் செய்து பூர்வ புண்ணியஸ்தானமாகிய ஐந்தாமிடத்திற்கு மாறுதலடைகின்ருர். கடந்த இரண்டரை வருஷ காலமாக வீடு நல்லபடி அமைந்தால் வாகனம் நன்கு அமையாமலும், பெற்ருேர் நன்கு விளங்கிஞல் கல்வி ஓங்காமலும், கல்வி, மேன்மையடைந்தால் தாயாருக்கு உடலசதியும், எல்லா சுகங்களும் நன்கு அமைந்திருந்தால் தகப்பனுருக்கு சோதனைச் சோர்வுகளும் எல்லா துறைகளிலும் வசதி ஏற்பட்டிருந்தால் திரேகாரோக்கியம் குன்றியும் இந்த ராசி நேயருக்கு ஏதாவதொரு தீராக்கவலை ஏற்பட சொத்தின்மீது வில்லங்கமும், நீதிமன்ற விவகாரங்களில் அதிருப்தியும், நிதிமுடையும், காரியதயக்கமும், கீழ்ப்படிந்த சிப்பந்திகளின் ஒற்றுமைக் குறைவும் இந்த ராசி நேயரை வாட்டி வதைத்திருக்க வேண்டும். அர்த்தாஷ்டமச் சனியானதால் இந்த ராசி நேயரின் உயிரை மட்டிலும் தீண்டாமல் மற்ற எல்லா அந்தரங்கமான விவகாரங்களையும் நுட்பமான அவயவங்களையும், அணுவுக்கு அணுவாய் சோதித்து பாதகத்தையும் துயரத்தையும் விளைவித்திருக்க வேண்டியதுதான் சனி பகவானின் முதற் கடமையாம். இத்தகைய நிலையிலிருந்து இந்த ராசி நேயர் தம்மை விடுவித்துக் கொண்டு இனி நற்பலன்களை அடைந்திட நல்ல காலம் மலரும்.

ஐந்தாமிடத்தில் சனி சஞ்சாரம் செய்வது கோட்சார விதிப்படி நல்லதன்று. ஆஞல் நாலாமிடத்தில் சஞ்சரிக்கும் போது இருந்தளவிற்கு கொடியதல்ல. சனி நடை புரிவது புத்திரஸ்தானம். பார்வையிடுவது களத்திர ஸ்தானம், லாபஸ்தானம், குடும்பஸ்தானம். மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இது விஷயத்தில் இந்த ராசி நேயருக்கு பெருங் கவலை உண்டாகும். புத்தி சஞ்சலமும் ஒரு சிலருக்கு ஏற்படக்கூடும். குடும்பத்தில் மிகவும் சிக்கலான பிரச்சனைகள் தோன்றி மறையும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். பெற்ருேர்களிடத்திலும், பெரியோர்களிடத்திலும் மனஸ்தாப மேற்படும். பெண்களால் கலகமுண்டாகும் இவர்மீது ஆதாரமற்ற பழிச்சுமைகள் வந்து சாரும். மூத்த மக்களால் இவருக்கு கவலைகள் அதிகமாகும். மக்களிடத்தில் மனஸ்தாபமும் உண்டாகும். ஆகாத திசா புக்தி நடைமுறையில் இருப்பின் மக்களே இவருக்கு சத்ருக்களாவர். இவருடைய கருத்திற்கு மாறுபட்டு நடந்துக் கொள்வர். இவருக்கு வீண் விரயத்தை உண்டாக்கிடுவர். இவருடைய சம்பாத்தியத்தில் பெரும் பகுதியை அவர்களுக்காக ஒதுக்கிடவும் நேரிடும். ஜீவனஸ்தானமாகிய பத்தாமிடத்திற்கு சனி எட்டாமிடத்தில் சஞ்சாரம் செய்வதால் ஒரு சிலர் தாம் செய்து வரும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடுவர். வேலை நாள் முடிந்து சிலர் ஓய்வும் பெற்றுக் கொள்வர்.

அரசாங்க உத்தியோகத்தில் ஈடுபட்டவர்கள் மிகவும் எச்சரிக்கை யுடன் நடந்து கொள்வது அவசியம் உயர்ந்த பதவி சேவையில் உள்ளோர் தம்முடைய சுபாவத்தை சற்று மாற்றிக் கொள்வது நல்லது. மிகவும் கண்டிப்பான பேர்வழிகள் தம்மை தளர்த்திக் கொள்வது நலம். இல்லையேல் நேர்மையாக நடந்த போதிலும் கண்டனத்திற்குள்ளாவர். விட்டுக் கொடுக்கும் தன்மை இவருக்கு மிக அவசியம். சுயத் தொழிலதிபர்களும் கீழ்ப்படிந்த சிப்பந்திக ளிடத்தில் பக்குவமாகவும் நயமாகவும் வேலை வாங்க வேண்டும். முத லாளி என்ற தோரணையில் அதிகாரத்தைச் செலுத்தினுல் தம்முடைய பத்திரம் செல்லாது. தொழிலாளிகளுக்கு இவர் எல்லா சலுகைகளை யும் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

கூட்டு வியாபாரிகளாக இருப்பின் இவருக்கு கூட்டாளிகளால் நல்ல ஆதாயமேற்படும் அதே சமயத்தில் கூட்டாளிகளுக்கும் இவருடைய உழைப்பினுல் நல்ல பலிதம் கிட்டிடும். மனைவியின் மூலம் பொருள் சேர்க்கையுண்டு. லாபஸ்தானத்தையும், தனஸ் தானத்தையும் சனி பார்வையிடுவதால் இவருக்கு எவ்வளவு பணம் கிடைத்தாலும் உடனுக்குடன் மறையும். நெடுநாள் நின்றிருந்த கடன்கள் தீர்க்கப்படும். இவருடைய மனோபிலாஷை நிறைவேறுவ தற்கு பல இடையூறுகள் தோன்றிடும். கருதிய விவகாரங்கள் உரு வாகிட நெடுநாள் பிரயத்தினம் தேவை. ஒரு சில தருணங்களில் எண்ணியவை நினைத்தபடி நடைபெறுமோ இல்லையோ என்ற அவ நம்பிக்கையும், அதைரியமும் உள்ளத்தில் குடி கொண்டிடும்.

சனிபகவான் சகோதர ஸ்தானத்திற்கு சகாயஸ்தானத்திலும், மாதுருஸ்தானத்திற்கு இரண்டாமிடத்திலும் நடைபுரிவதால் இளைய சகோதர சகோதரிகட்கு செழிப்பான காலமாக விளங்கும். வாழ்க் கையில் அவர்கட்கு வசதிகள் மேலோங்கிடும். நல்ல வருமானமும் முயன்ற காரியங்களில் வெற்றியும், தொழில் மேன்மையும், குடும் பத்தில் சுப நிகழ்ச்சிகளும் அவர்கட்கு ஏற்படும். ஆனுல் மூத்த சகோதரர்களுக்கு வாழ்க்கையில் எதிர்ப்புகளும், கடன் தொல்லையும், தொழிலில் அலைச்சலும் காட்டிடும். தாயாருக்கு வன்பிணிகள் தோன்றி வாட்டிடும். எச்சரிக்கை மிகவும் அவசியம். பூர்வீக சொத் துக்களும் மாறுதலடையும்.

சனி பூரட்டாதி நட்சத்திர சாரத்தில் நடைபுரியும் முதல் மூன்று மாதங்கள் குடும்ப விவகாரங்களில் சற்று தயக்கமான பலன்கள் தோன்றிடும். மனைவி மக்களிடத்தில் மனக் கசப்பு ஏற்படும். பணவசதி நன்கு அமையும். பொருள் சேர்க்கையும் உண்டு. ஜீரண சக்தி குறையும். இதனுல்ஆரோக்கியம் கெடும். விசாகத்தில் தோன்றிய வர்கட்கு ஆகாது.

சனி தன்னுடைய சுய சாரமாகிய உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது அனுஷ நட்சத்திரத்தில் ஜனனமானவர்கட்கு நற்பலன்கள் உண்டு. வியாபாரிகள் புதிய ஒப்பந்தங்களில் நல்ல லாபத்தை அடைந்திடுவர். யந்திரத் தொழில் ஸ்தாபனங்கள் விருத்தி யடையும். மற்ற நட்சத்திர பாதசாரங்களில் தோன்றியவர்கட்கு சமமான பலன்கள் அவரவர் திசை புக்திகளுக்கனுசரணையாக நடைபெறும்.

சனி ரேவதி நட்சத்திரபாதசாரத்தில் நடைபுரியும் போது உடலசதியும், கடன் உபாதையும், நீதிமன்ற விவகாரங்களில் மிரட்சிகரமான தோற்றமும் ஏற்படும். அஷ்டமாதிபதியின் சாரத்தில் சனி சஞ்சரிப்பதால் இந்த ராசி நேயர் பொறுப்பான காரியங்களில் ஈடுபடலாகாது. அரசாங்கத்திற்கும், தற்காலத்தில் அமுலிலிருக்கும் சட்ட திட்டங்களை எதிர்த்து எக்காரியத்திலும் ஈடுபடலாகாது. ஆகாத திசைபுக்தியும் நடைமுறையிலிருப்பின் காவல், தண்டனை, விபத்துக்கள், வாகனங்களால் இடையூறுகள், அரசாங்கத்திற்கு அபராதங்கள் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம், கொடிய பிணிவாட்டங்களால் சோர்வுகள், மற்றவர்களுக்கு வாக்குறுதி அளிப்பதாலும், தம்முடைய சக்திக்கு மீறிய விவகாரங்களில் அனுவசியமாக தலையிடுவதால் நஷ்டமும், கஷ்டமும், நாணயப்பழுதும், வீண்பழிச்சுமையும் வந்து இவரைச் சூழ்ந்திடும். பிறருக்கு உபகாரம் செய்ய இவருக்கு அபகீர்த்தியேற்படும். எச்சரிக்கை மிகவும் அவசியம். அரசாங்க உத்தியோகத்துறையில் உள்ளோர் வரம்புக்கு மீறியச் செயல்களில் தம்மை மறந்தும் கருத்தைச் செலுத்தக்கூடாது. அதிலும் கேட்டையில் தோன்றியவர்கள் இக்காலத்தில் தீட்டிய திட்டங்கள் நிறைவேறுவது கடினம். போட்டியில் முடிவதுடன் இவரையே ஆட்டி வைத்திடும். இவர் மூட்டையைக் கட்டி வீட்டை விட்டு ஓட்டம் பிடிக்கவும் நேரிடும். உஷார்!

இராகுவும் கேதுவும்

இதுநாள் வரை ஏழாமிடத்தில் உலவிய ராகு ஆறுமிடத்திற்கும், ஜன்மத்தில் தோன்றிய கேது விரயத்திற்கும் மாறுதலடைகின்றனர். எதிர்ப்புகள் சற்று தளரும். திரேகாரோக்கியம் செழிப்படையும். ஏற்பட்ட பிணிவாட்டங்கள் இருப்பிடந் தெரியாமல் மறையும். ஆர்ப்பாட்டம் செய்த எதிரிகள், மறுப்பு கூறிய கூட்டாளிகள் இவரைத் திரும்பியும் பார்க்கமாட்டார்கள். இவரை எதிர்த்த சிப்பந்திகள் இவரையே நாடி வந்து அடி பணிந்திடுவர். இவருடைய கை மேலோங்கிடும். குத்தகைதாரர்கள் இவரைத் தேடி வந்து படியைச் செலுத்திடுவர். இவருக்கு க்ஷேத்திர யாத்திரையும் பிரார்த்தனை சித்தியும் ஏற்படும்.

ஒன்றரையாண்டுக்குப் பின் இராகு ஐந்தாமிடத்திலும், கேது பதினோருமிடத்திலும் சஞ்சரிப்பதால் அத்தருணத்தில் மக்களால் சிற்றுக் கவலைகள் தோன்றிடும். அனுவசியமான வழி துறைகளில் கருத்தைச் செலுத்தாமலிருப்பது நலம். வீண் வம்பு வழக்குகளும், கஷ்ட நஷ்டங்களும் இவரை பலவழி துறைகளில் இழுத்து சோதித் திடும். எதிலும் இவர் பற்று கொள்ளாமலிருந்தால் தப்பித்துக் கொள்வர். புத்திரர்களால் வியாகூலமும், நஷ்டமும், நிஷ்டூரமும் உண்டாகும். ஒரு சிலருக்கு புத்திர தோஷமும் காட்டிடும்.

இனி மற்ற பலன்களை ஆராய்வோம்.

ஆரோக்கியம்

மனோவியாகூலமே இவருக்கு திரேக அசதியை அளித்திடுமே யன்றி வியாதிகள் தோன்றி இவரை வாட்டிடுமென்று கூறுவதற்கில்லை. இவருக்கு ராசி நாதனும் ஆறுமிடத்ததிபதியும் செவ்வாயானதால் குருதேவர் மிருகசீரிட நட்சத்திர பாதசாரத்தில் அஷ்டமராசியில் சஞ்சரிக்கும் நாள்வரை ரத்தக் குறைவு, ரத்தச் சிதைவு, போன்ற ஆயாசமும் ரத்த அழுத்தத்தில் மாறுபாடுகளும், பாரிசவாயு இனிப்பு நீர் சம்பந்தமான அசதிகளும் கைகால் பிடிப்புகளும் இவரைத் தாக்கிடும். சரீர சக்தி குன்றிடும். உடல் மெலியும் ஒருசிலர் தம்மு டைய உதாசீன குணத்தால் சிறிய விபத்துகளுக்கும் உள்ளாவர். சில நாட்கள் படுக்கையில் இருக்கவும், உயர்தர சிகிச்சை பெறவும் மருத்துவச் செலவுகளை ஏற்கவும் நேரிடும். ஒரு சிலர் தம்முடைய சுய ரத்த பலத்தை இழந்து புதிய ரத்தத்தை ஏற்றிக் கொள்ளவும் நேரிடும். இத்தகைய விபரீதங்கள் குருதேவர் அஷ்டம ராசியை விட்டு நகரும் நாள் வரை ஒரு சிலருக்கு நீடிக்கும். மீண்டும் சனி பக வான் ரேவதியின் பாதசாரத்தில் சஞ்சரிக்கும் காலத்திலும் விசித்திர மான முடக்குகள் தோன்றி இவரை முடங்கிடச் செய்யும். உஷார்! சனி, புதன் சுக்கிர திசைகளாகவோ, இரு பாம்புகளின் கால திசை களாகவோ, இந்த ஜவரின் புக்தி, அல்லது அந்திர சூட்சும கால மாகவோ நடைமுறையில் இருப்பின் அபமிருத்தியுபயமும் அதிர்ச்சியை அளித்திடும். எச்சரிக்கை மிகவும் அவசியம். தக்க பரிகார நிய மங்களை செய்து சாந்தியடைவது நல்லது. மிருத்தியுஞ்ஜய ஜபமும், ஹோமமும், நவகிரக அர்ச்சனையும், ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திர நித்ய பாராயணமும் சிறந்த முறைகளாகும். இதைவிட ஏழை கட்கு அன்னதானம் செய்தல், செய்வித்தல் இதனால் வறியவர்களை மனங்குளிர வைத்து தாமும் அகங்குளிர எவ்வித சோக்கமும் சற்றும் நில்லாது முற்றிலும் மறையும்.

குரு கடகத்திற்கு மாறிடும் நாள் முதல் அதாவது பராபவ வருஷம் ஆவணி முதல் திரேகாரோக்கியம் மிளிரும். குன்றிய சக்தியை மீளவும்

பெற்றிடுவர். சோம்பல் மறையும். சுறுசுறுப்புத் தோன்றிடும். இரண்டரையாண்டுகளாக வேரூன்றிய சில கொடிய வியாதிகள் அறவே நீங்கும். இவர் வாழ்க்கையில் இதுவும் ஓர் அதிசயமாகவே விளங்கிடும் பித்து பிடித்தவர் போல் பத்தும் பறக்கவிட்டவர்கள் புத்துயிர் பெற்று தெளிவான சித்தத்துடன் விளங்குவர்.

குருதேவர் எட்டாமிடத்திலும், சனி பூரட்டாதியின் பாத சாரதிலும இருக்கும் வரை நிதி நிலைமை மிகவும் இக்கட்டாக தோன்றிடும். பராபவ ஆவணி முதல் நல்ல காலம் ஆரம்பமாகும்.

குருதேவர் இருநான்கில் இருக்கும் வரை இவருக்கு சுருக்குவழி தெரியாமல் செலவுகளை பெருக்கிக் கொள்வர். நனைந்து சுமப்பர்.

பணவசதி

கடந்த இரண்டரை ஆண்டுகளாக தோன்றிய முடை நீங்கி எடை ஏறும். நிரந்தரமாக ஏற்பட்ட தீராக் கடன்களும் தீரும். சொத்துக்கள்மீது ஏற்பட்ட மீளாத வில்லங்கங்கள் களங்கமில்லாமல் மறையும். வர்த்தகத்தில் இவர் வித்தகராவர். சிதறிய நாணயத்தை சிறப்புடன் அடைவர். கொடுத்த கடன்கள் வசூலாகும். மூலநிதி பெருகிடும். நிதிமுடையால் தோன்றிய வேதனைகள் நிர்மூலமடையும். கொடிய எதிரிகளும் கோடி தூரத்தில் நின்றிடுவர். நீதிமன்ற விவகாரங்களில் சாதனையுண்டு. தொழில் உயரும். வருவாய் பெருகிடும். "ஓடியவனுக்கு ஒன்பதில் குரு" என்ற பழமொழிக்கேற்ப ஒன்பதாமிடமாகிய கடகராசிக்கு கனகன் மாறியதும் கரையிருள் நீங்கி கனநிதிச் செல்வம் குறையின்றி வளரும். சொத்து சேரும். வியாபாரம் அபிவிருத்தியாகும். தானியம் பிரமாதமாக வளரும். களஞ்சியம் நிறையும். வீம்புக்காக ஏற்பட்ட வம்பு வழக்குகளில் துன்பங்கள் நீங்கி இன்பம் பொங்கிடும். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற அனுபவ மொழியை மறவாமல் பசையுள்ள போதே இந்த ராசி நேயர் நன்றாக பிசைந்து கொள்ள வேண்டும். நிரந்தர சொத்துக்களை சுயமாக்கிக் கொள்வதில் கருத்தைச் செலுத்திட பாடுபட்டுத் தேடிய நிதியும் நிலைக்கும். இல்லையேல் பத்தில் பொன்னனாகிய புனிதன் வந்திடில் மீளவும் வறட்சி ஏற்படும்.

சிம்மராசியில் குரு சஞ்சரிக்கும் போதும் பொருளாதார நிலைமை சற்று அதிருப்தியளித்திடும். இத்தருணத்தில் அதிக பொறுப்பான காரியங்களில் தலையிடாமலும், கையிலுள்ளதை பிறருக்கு கடன் கொடுக்காமலும், நிஷ்டூரத்திற்குள்ளாகாமலும் பக்குவமாயிருத்தல் நலம்.

தொழில்

குருதேவர் எட்டாமிடத்திற்கு மாறுதல் அடைவதால் உத்தியோகத் துறையில் உள்ளோர் மாறுதலடைவர். இதனால் சற்று அதிருப்தியும்

ஏற்படும். புதிய ஒப்பந்தங்களில் இவர் ஈடுபடலாகாது.

மற்ற துறைகளிலும் மனக்குறை ஏற்படும். இவருடைய விருப்பத்திற்கு மாறுபட்ட தோற்றமும், முக்கியமான விவகாரங்களில் ஏமாற்றமும், ஒப்பந்தங்களில் நஷ்டமும், நாணயப் பழுதும் ஏற்படும். குறிப்பிட்ட தவணைக்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் பெரும் அவஸ்தைக் குள்ளாவர்.

குருதேவர் கடக ராசியை அடைந்ததும் எத்துறையிலும் கடந்த இரண்டரை ஆண்டுகளாக இவருக்கு தோன்றிய தடையும், முடையும் நீங்கி தொழில் வளர்ச்சியடையும். வருவாய் பெருகிடும்.

அரசாங்க உத்தியோகத்தில் உள்ளோர் குரு கடகராசியை அடைந்தவுடன் சில புதிய மாற்றங்களுக்குள்ளாவர். பதவி உயர்வடையும். கம்பீரமான தோற்றத்துடன் விளங்குவர். சுயத்தொழிலதிபர்கள், யந்திரத் தொழிற்சாலையதிபர்கள், கணக்காயர், வழக்கறிஞர் அரசாங்கத்திற்கு மூலப் பண்டங்களையும், தயாரித்தப் பொருள்களையும் வினியோகம் செய்யும் காண்ட்ராக்ட் தாரர்கள், காட்டுக்குத்தகைதரர்கள் அவரவர் துறைகளில் நல்ல லாபத்தை அடைந்திடுவர். அயல் நாட்டு போக்குவரவும் நல்ல பலனையளித்திடும். வியாபாரிகளும் அவ்வாறே நல்ல பலனைக் காண்பர். விவசாயத் துறையிலும் நல்ல பலிதமுண்டு.

குருதேவர் சிம்மராசியில் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் மீண்டும் சிறிய சோதனைகள் அவஸ்தை காட்டிடும். மன அமைதி குறையும். முயன்ற காரியங்களில் நிதானமும், ஏமாற்றமும் உண்டாகும். புதிய வியாபாரமோ, தொழில் ஒப்பந்தங்களையோ ஏற்படுத்திக் கொள்ளலாகாது.

உத்தியோகத்தில் இடமாற்றமேற்படும். மலைபிரதேசங்களிலும் காடுகளுக்கருகாமையிலும் இவர் தொழில் புரிய நேரிடும்.

உத்தியோகத் துறையில் உள்ளோர்களும் மேலோர் உத்திரவுக்கு கீழ்ப்படிந்து நடந்துக்கொள்வது சிறந்தது. இல்லையேல் வீண் சோர்வுகளுக்குள்ளாக நேரிடும்.

இந்த ராசிநேயர் அரசியல் விவகாரங்களில் ஈடுபடாமலிருப்பது நல்லது. போட்டியில் தலையிடாமலிருப்பது சிறந்தது.

குடும்பம்

குடும்பஸ்தானத்திற்கு நாலாமிடத்தில் நின்று சனி குடும்பஸ்தானத்தை பார்வையிடுவதால் தீராத பிரச்சனைகள் இன்னும் முடிவுபெறுமலேயே விளங்கும். மக்களுடைய கவலையே இவருக்குபெரும் கவலை

யாக விளங்கும். குருதேவரும் குடும்பஸ்தானத்தை பார்வை யிடுவதால் இறுதியில் நன்நிகழ்ச்சிகளுக்கிடமுண்டு. ஆனால் குருதேவர் கடக ராசியை அடைந்து சனியை பார்வையிடும் நாள் முதல் குழப்பமான சூழ்நிலை யகன்று மன அமைதி ஏற்படும். மக்களுடைய முன்னேற்றத் திற்கான முயற்சிகள் சித்தியடையும். திருமண ஏற்பாடுகளும் வெற்றி கரமாக முடியும். சகோதர சகோதரிகளின் வாழ்க்கையிலும் புது மலர்ச்சி ஏற்படும்.

கல்வி

கல்வி பயிற்சியில் ஏற்பட்டிருந்த மந்தமான சூழ்நிலையகன்று சாதகங்கள் தாமாகவே ஏற்படும். உயர்தர கல்விச் சிறப்பும் உண்டு. நுட்ப ஆராய்ச்சியில் இவர் திறமை மேலோங்கிடும். தொழில் வளர்ச்சிக் குரிய கல்வி சாதனையும், தெளிவான அனுபவப் பயிற்சியும் சோபித் திடும். குருதேவர் கடகராசியை அடைந்தவுடன் இவர்கள் பட்டதாரி களாவதற்குரிய வாய்ப்பும் ஏற்படும். எழுத்தாளர்கட்கும், கல்வித்துறை யில் ஈடுபட்டவர்கட்கும் வெற்றியுடன் புகழ் ஓங்கிடும்.

கலை

கலை வாணர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் முடையும் பிறகு நல்ல ஆதரவும் ஏற்படும். சங்கீத நடன நாடகத் துறையிலும் திரைப் படத் துறையிலும் அமோக வெற்றியும் கீர்த்தியும் உண்டாகும். இடை யில் ஏற்பட்ட தயக்கமும் இடையூறுகளும் அகன்று தடையுற்றிருந்த பிரயத்தினங்கள் துரிதநடையில் சென்று இவருடைய உற்சாகத்தை பன்மடங்கு உயர்த்திடும். ஆகாத திசை புக்தி நடை முறையிலிருப்பின் இவருக்கு நிதிமுடையும், அவநம்பிக்கையும் அதிர்ச்சியளித்திடும். புதிய முயற்சிகளில் ஈடுபடாமலிருப்பது நலம். குருதேவர் சிம்ம ராசி யில் சஞ்சரிக்கும் காலத்திலும், சனி ரேவதியின் சாரத்தில் காட்சி யளிக்கும் தருணத்திலும் இவர் புதிய ஒப்பந்தங்களில் ஈடுபடாமலிருப் பது நலம். அரசாங்க பயமும் இவருக்கு மிரட்சிகரமான தோற்றத்தை அளித்திடும்.

ஞானம்

குருதேவர் கடகராசியில் உச்சம் பெற்று விளங்கும் போது ஆத் மீகத் துறையில் நல்ல தெளிவு ஏற்படும். பக்தியும் தர்மமும் சிறந்து விளங்கும். தத்துவ ஆராய்ச்சியில் இவருடைய தெளிவுகள் சிறப்புற் றோங்கிடும்.

மருத்துவ நிபுணர்கள் தம்முடைய ஆராய்ச்சியில் பரிபக்குவமான சிகிச்சா சக்தியைப் பெற்றிடுவர். எதிர்காலத்தில் தோன்றக்கூடிய

கொடிய வியாதிகளின் அறிகுறியை நெடுநாட்களுக்கு முன்னதாகவே அறியும் நுண்ணிய புலன்களை விளக்கும் விஞ்ஞானக் கருவிகளை உருவாக்கிடுவர். புற்று நோய் பற்ருமலிருக்கவும் பற்றியவுடன் அகற்றுவதற்கான மாற்று மருந்தினங்களையும் கற்றறிந்திடுவர்.

ஆகாத திசைகளும் ஆகாத மாதங்களும்.

சனி-புதன் சுக்கிர திசைகள் இந்த ராசி நேயருக்கு ஆகாத திசைகளாகும். இந்த திசைகள் நடைமுறையிலிருப்பினும் வேறு திசைகளில் இந்த புக்தி அந்தரங்கள் நடைமுறையில் இருப்பினும்வெகு ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம்.

வைகாசி, ஆனி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, மாசி மாதங்கள் ஆகாத மாதங்களாகும். சோதனை சோர்வுகள், மனோவியாகூலம், உடல சதி பிரயாணத்தால் அயர்வுகள், இடமாற்றம் தொழிற்றுறையில் பிற் போக்கு போன்ற மிரட்சிகள் வாட்டிடும். எச்சரிக்கை அவசியம்.

சித்திரை, ஆவணி, புரட்டாசி, தை மாதங்கள் நல்ல பலன் தரக் கூடியவை. பணவரவு, தொழில் மேன்மை, உத்தியோக உயர்வு, லிகிதானுகூலம், அரசாங்க ஆதரவு முதலியவை சிறந்து விளங்கும். மற்ற மாதங்கள் சாதாரணமானவை. இம்மாதங்களில் வழக்கத்திற்கு மாருன செயல்களில் ஈடுபடலாகாது.

மாதர்கள்

குன்றிய ஆரோக்கியம் மிளிரும். மெலிந்த திரேகம் பருமனுகும். கவலைகள் மறையும். சங்கடங்களை விளைவித்த நெருங்கிய உறவினர்கள் நேசம் பாராட்டுவர். குடும்பத்தில் தோன்றிய சிக்கலான பிரச்சனைகள் மறைந்து மன அமைதி ஏற்படும். மக்கள் பெருமையே இவருடைய பாக்கியம். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை நீடித்திடும். பணமுடையும் பற்ருக்குறையும் இன்னும் சில நாட்கள் நீடித்து பராபவ வருஷம் ஆவணி முதல் சுபிட்ச மேற்படும். சந்தான விருத்தியும் உண்டாகும். கல்வி பயிற்சியில் முன்னேற்றமுண்டு. கலைத் துறையில் இவருக்கு நல்ல ஆதரவு ஏற்படும். மனோபிலாஷை பூர்த்தியாகும். பிரார்த்தனை சித்தியுமுண்டு. ஆரம்பக்காலத்தில் குடும்பத்தில் ஏற்பட்ட பிளவுகள் சூன்யமாகும். ஒற்றுமை ஏற்படும். தொழிற்றுறையில் உயர்வு உண்டு. சமூக வட்டாரத்தில் செல்வாக்கும் மேன்மையும் கௌரவமும் உயர்ந்து விளங்கும். மேலோர் ஆதரவு நிலைத்திடும். கணவருக்கு தொழில் உயர்வும் வருமானப்பெருக்கமுண்டு. நல்ல ஆரோக்கியத்துடன் விளங்குவர். புதியப்பொருள் சேர்க்கையுமுண்டு. திருமணமாகாதவர்கட்கு திருமணம் வசதியுடன் நடைபெறும்.

குருதேவர் கடக ராசியை கடந்து சிம்மராசியில் நடைபுரியும் போதும், சனி ரேவதியின் பாதசாரத்தில் சஞ்சரிக்கும் போதும் இட மாற்றத்தால் சங்கடமும் இரட்டிப்பான செலவுகளும் உடலசதியால் மனச்சோர்வுமுண்டாகும். நவக்கிரக அர்ச்சனையும் பக்குவமான பத்திய ஆகார முறையும் பௌர்ணமி விரதமும் சோர்வுகளை நீக்கி நிலையான இன்பசுகத்தையும் இல்லற வாழ்க்கையில் நல்லருளையும் உடல் வன்மை யையும் தேளிவான மன உறுதியையும் அளித்திடும.

தனுசு

மூலம்-யே. யோ. ப. பி.
பூராடம்-பூ. த. ப. ட,
உத்திராடம் முதல் பாதம்-பெ.

கிரக மாறுதல் நிலையும், பொதுப்பலனும்

சனி

இரண்டரை ஆண்டுகாலமாக தைரிய ஸ்தானத்தில் ஆட்சி புரிந்த சனி பகவான் சுகஸ்தனமாகிய நாலாமிடத்திற்கு நடை புரிகின் ருர். இங்கு அடுத்து வரும் இரண்டரை ஆண்டு காலம் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் ருணஸ்தானமாகிய ஆருமிடத்தையும், தொழில் ஸ்தானமாகிய பத்தாமிடத்தையும், ஜன்மராசியையும் பார்வையிடுகின் ருர்.

குடும்பம், நேத்திரம், வாக்கு, தனம், நுண்ணிய அறிவு, மனைவியின் ஆயுள், மக்களின் தொழில், நிரந்தரப் பொருள்களால் ஏற் படக்கூடும் லாபம், வாகனம், கால்நடை முதலியவற்ருல் ஏற்படும் லாபம், சகோதரர்களின் விரயம், தகப்பனுரின் கடன் அல்லது நோய் இந்த ராசி நேயரின் மாரகம் போன்ற அம்சங்களை குறிப்பிடுவது இரண்டாமிடம். பராக்கிரமம், தைரியம், வெற்றி, கீர்த்தி, புகழ் மன உறுதி, மக்களால் லாபம், மனைவியின் பெற்ருேர், தாயாரின் மறைவு, வீடு, வாகனம், பூமி, இவைகளால் ஏற்படக்கூடிய கஷ்டநஷ்டங்கள் தாயாரால் ஏற்படக்கூடிய செலவு முதலிய அம்சங்களை குறிப்பிடுவது மூன்ருமிடம். இந்த இரண்டு மனைகளுக்கும் ஆதிபத்தியமுடைய சனி கிரகமானது மக்களால் நேரிடும் செலவுகள், எதிரிகள் அல்லது கடன்க ளால் ஏற்படும்·பொருள், கூட்டாளி அல்லது மனைவியின் தொழில், தகப்ப னுரின் ஆயுள், தொழிற்றுறையில் ஏற்படும் எதிர்ப்பு, தன்னுடைய சுகம், வாகனம், கல்வி, வீடு, போன்றவைகளைப்பற்றி தெளிவுபடுத்தும் நாலாமி

டத்திற்கு மாறுதலடைவது மிகவும் கருத்துடன் ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயமாகும்.

கோட்சார விதிப்படி நாலாமிடத்தை அர்த்தாஷ்டமம் என்று சொல்லுவதுண்டு. எட்டாமிடத்தில் சனி நின்ருல் என்னென்ன பலன்களை வழங்கக்கூடுமோ அதற்கு சரி பாதியான பலன்களை இந்த ராசி நேயருக்கு குறையாமல் வழங்கக்கூடும் என்பதுதான் இதன் பொருள். இதுநாள் வரை நிரந்தரச்சொத்துக்களைப் பொருத்தளவில் மிகவும் தைரியமாக இருந்த இந்த இராசி நேயருக்கு அதைரியமும், அவநம்பிக்கையும் உருவாகிடும். வீடு, நிலம், வாகனம், வியாபாரம், கால்நடைகள் முதலியவைகளை அபிவிருத்தி செய்துக் கொள்ள வேண்டுமென்பது இவருடைய நெடுநாள் அபிலாஷை. இது விஷயத்தில் இவர் தைரியமாக செயலில் துணிந்தவர் துணிந்த பின் மிரட்சிகரமான தோற்றத்திற்குள்ளாவர். குடும்பத்தில் செலவினங்கள் பெருகிடும். கடன் மேலும் மேலும் வளரும். மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதால் மருத்துவச் செலவுகளும் ஏற்படும். இவ்வகையில் இவருக்கு புதியதொரு கவலையும் உருவாகும். உடன் பிறந்தோர்களுடைய முன்னேற்றத்திற்காக இவர் புதியச் செலவுகளை ஏற்க நேரிடும். இவருடைய ஆரோக்கியமும் குன்றி தொழிலில் உற்சாகம் குறையும். துரிதமாக நடக்க வேண்டிய காரியங்கள் பல காரணங்களால் தயக்கமடையும். சோம்பல் அதிகமாகும். காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களை முறைப்படி செய்யத் தவறுவதாலும், செய்யத் தகாத செயல்களில் கருத்தையும் நேரத்தையும் வீணுக்குவதாலும் தகாப் பழியும், கஷ்டமும் நஷ்டமும் உண்டாகும். இந்த ரகஸ்யத்தை முன் கூட்டியே அறிந்து தம்முடைய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு கஷ்டத்தை வராமல் தடுத்துக் கொள்வது சிறந்ததாகும்.

தொழில் எத்தகையதாக இருப்பினும் மந்தமடையும். மக்களுடைய போக்கில் அதிருப்திகரமேற்படும். பணலேவாதேவி விவகாரங்களில் பெரும் ஏமாற்றமும், வஞ்சகமும் ஏற்படும். கால்நடைகளால் நஷ்டமேற்படும். தகப்பனுரின் உடலாரோக்கியம் பாதிக்கப்படும். ஆகாத திசை புக்தி நடைமுறையிலிருப்பின் தகப்பனுருக்கு ம்ருத்யு பயமும் உண்டு. தாயாருக்கு அரிட்டமாரகப் பிணிகளும் வந்தணுகும். கல்வி பயிற்சியில் பிற்போக்கு தோன்றிடும். வியாபாரத்துறையிலும் மூலநிதி முடையினுல் மூலப்பொருள் சேகரிக்க வகையின்றி பருவத்தை நழுவ விட்டு வாட்டமடைவர். நெருங்கிய உறவினர்களும், அன்யோன்யமாகப் பழகும் நண்பர்களும் தக்க தருணத்தில் கையை விரித்திடுவர். உஷார்!

மேலும் இந்த ராசி நேயருக்கு சுக்கிரன், சனி, சந்திரன் இவர்களுடைய திசை புக்திநடைமுறையில் இருப்பினும், பெற்றோர்களாலும்,

மனைவிமக்களாலும் இவருக்கு மனோவியாகூலம் உண்டாகும். மலையளவு சேமித்து வைத்திருந்த நிதியும், கரைந்து தரைமட்டத்திற்கு வருவதோடன்றி படுபாதாளத்திலும் இவரை தள்ளி விடும். புதியக் கடன் சுமையும் இவருடைய மனக்கவலையை பொங்கிடச் செய்யும். கூட்டு வியாபாரிகள் பிரிந்திட நேரிடும். உத்தியோகத்துறையில் வெளியூர் மாற்றமும், குடும்பத்திலிருந்து பிரிந்திருத்தலும், மேலதிகாரிகளின் அபிமானக் குறைவும் சர்வ சாதாரணமாக ஏற்படக்கூடும்.

இது தருணத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்கள் யாதெனில் தம்முடைய பெயரில் புதியத் தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தலாகாது. புதிய வியாபாரத்தை ஆரம்பிக்கலாகாது. மூலதனம் சிதறிடும். ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மனைவி அல்லது மக்களின் பெயரில் ஆரம்பிக்கலாம். உழைப்பு தமதாகவும், மற்ற விவகாரங்களில் பொறுப்பு பிறருடையதாகவும் இருக்க வேண்டும். தர்மம் செய்வதிலும் பிறருடைய முன்னேற்றத்தைக் கருதி ஈடுபடும் விவகாரங்களிலும் எச்சரிக்கை மிகவும் அவசியம். இல்லையேல் சங்கடத்தை இவர் விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலைக்குள்ளாவர். பிறர் சிந்தனைக்கும் உறவினர்களின் நிஷ்டூரத்திற்கும் ஆளாக நேரிடும். அரசாங்க ஊழியர்கள் தம்முடைய அலுவல்களை குறிப்பிட்ட காலத்திலேயே அலுவலகத்திலேயே செய்து முடிப்பது நலம். பிறரை நம்பி இவர் எதிலும் கையொப்பமிடலாகாது. சுயகண்காணிப்பு எத்துறையிலும் அத்தியாவசியம். தமக்கு சேர வேண்டிய பாக்கியை நயமாகவே வசூல் செய்ய வேண்டும். நீதிமன்றத்திற்கு ஏகுவதால் காரியத்தை சாதிக்க முடியாது. கிரய விக்கிரய ஒப்பந்தங்களில் காலமுறை தவறலாகாது. சொத்து வாங்குவதிலும், விக்கிரயம் செய்வதிலும் அவசர முடிவுகளுக்கு இடந்தரலாகாது.

சனி தன்னுடைய சுயசாரமாகிய உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்யும் போது எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இல்லையேல் வீண்பழிகள் இவர் மீது சாட்டப்படும். தொழிலில் அலைச்சல் மிகும். உதாசீனத்தால் பொருட்சேதமும், சோர பயமும் இவருக்கு எதிர்பாராவகையில் நஷ்டத்தையும், நாணயப் பழுதையும், உண்டாக்கிடும்.

குரு

குருதேவர் இவருக்கு ராசிநாதனும் சுகாதிபதியுமாவர். 22-3-1966 முதல் ஏழாமிடத்தில் நடைபுரிகின்றார். லாபஸ்தானமாகிய பதினோருமிடத்தையும், ஜன்மராசியையும் மூன்றுமிடத்தையும் பார்வையிடுகின்றார். வெற்றியும், லாபமும், நன்மையும் பயக்கும் காரியங்களில் இந்த ராசி நேயர் உற்சாகத்துடன் ஈடுபடுவர். குடும்பத்தில் சுப

நிகழ்ச்சிகள் இவர் தலைமையில் நடைபெறுவதற்கான வாய்ப்பும் வசதியும் நன்கு அமையும் என்பதில் வியப்பேதுமில்லை. வீடு, நிலம், வாகனுதிகளை சீர்திருத்தியமைத்துக் கொள்வதில் இவர் கருத்தைச் செலுத்திடுவர். துணிந்து செயலிலும் ஈடுபடுவர். இவருடைய நெடுநாள் மனேபிலாஷை பூர்த்தியாகும். திட்டங்கள் நிறைவேறும். ஆனல் செலவுகள் அளவுக்கு மீறிடும். மனைவி மக்களின் ஆரோக்கியம் நன்கு விளங்கும். விவாகம், சீமந்தம் பூ முடித்தல், கர்ணபூஷணதாரணம், போன்ற நன் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து இவருக்கும் இவர் குடும்பத்தினருக்கும் வெளியூர் பிரயாணங்களை வழங்கிடும். கூட்டாளிகள் இவருக்கு எல்லாத் துறையிலும் ஆதரவளித்திடுவர். சமூக வட்டாரத்தில் இவருடைய செல்வாக்கும், கௌரவமும் அந்தஸ்தும் உயர்ந்து விளங்கும். மனைவி மக்களால் பொருள் சேர்க்கையும் உண்டு. தகப்பனுருடைய தொழில் மேன்மையடையும். வருமானம் உயர்வடையும். புதிய வீடுகட்டி குடி புகுதல், புதிய வாகன வசதியை ஏற்படுத்திக் கொள்ளுதல் போன்றவை சித்தியடையும். இந்த ராசி நேயர் திருப்பணிகளிலும் கைமாறு கருதாமல் ஈடுபடுவர். வாழ்க்கையில் சுகமும் சௌக்கியமும் பெருகிடும். கல்வி பயிற்சியில் முன்னேற்றமுண்டு. உயர்தர கல்விச் சிறப்பும், தொழிற் பயிற்சியும் பெறுவதற்கான சூழ்நிலை உருவாகும்,

பராபவ வருஷம் ஆவணி முதல் குருதேவர் கடகராசியில் உச்சம் பெற்று விளங்குவதோடு குடும்ப ஸ்தானத்தையும், சுகஸ்தானத்தையும், விரயஸ்தானத்தையும் பார்வையிடுகின்றுர். கோட்சாரவிதிப்படி குருதேவர் எட்டாமிடத்தில் தோற்றமளிப்பது நல்லதன்று. சாதாரணமாக இடப்பெயர்ச்சி, கானகப்பிரவேசம், காராக்கிரகவாசம், அரசாங்க தண்டனை, காவல், குடும்பத்தில் கலகம், மனக்கிலேசம், பந்துஜனவிரோதம், தீராப்பகை, தீராக்கடன், பொருட்சேதம் பெற்ருேர்க்கு கண்டங்கள், வஞ்சகசூட்சிகளால் ஏமாற்றம், தொழில்பேதம், பணமுடை, காரியத்தடை இவை போன்ற சோதனைச் சோர்வுகள் அடுத்தடுத்து இவருக்கு கடலலை போல் ஓயாத தொல்லைகளை விளைவிக்க வேண்டும். இது தான் விதியின் விளையாடல். குருதிசையோ சனி திசையோ சுக்கிரன் அல்லது சந்திர திசையோ நடைமுறையில் இருப்பின் மேலே கூறியஅசம்பாவிதங்கள் இந்தராசி நேயரை இணை பிரியாதணைத்து உயிர் நீங்கலாக மற்ற எல்லா அவயங்களையும் அணுவுக்கணுவாய் பரிசோதித்திடும் பக்திவழிபாடு, யோகசாதனை, மூவாசையையும் துறந்தநிலை இந்த மூன்றுவழிகளாலன்றி வேறு உபாயத்தால் இவ்விதச் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. ஆகையால் இந்த சோதனைகளில் சிக்கி வேதனையடையாமலிருக்க இவர் வீண் வழிதுறைகளில் மனம் வாக்கு காயங்களை செலுத்தாமல் ஒழுக்கம், நேர்மை, தூய்மை என்ற சூத்திக்கயிற்ருல் தம்மைக் கட்டுப்படுத்தி கடமையே பெரிதெனக் கருதுவாராயின் பக்தி,

யோகம், துறவறஞ்ஞானம் இவை யாவும் இவர்கட்கு வேண்டாத கனி களே என்பது தெளிவு.

நல்ல திசை புத்திகள் நடைமுறையிலிருப்பின் இவர் விதியில் புதிய ஒளி ஏற்பட்டு வாழ்க்கைத்தரம் உயர்ந்து விளங்கும். பெரிய சோதனைகள் வந்துற்ற போதிலும் வேதனையென்ற வாடையில் இவர் வீழார். குருதேவர் உச்சநிலையில் ஒளிர்வதால் தாழ்வுகள் ஏற்படாது என்பது உறுதி.

குருதேவர் சிம்ம ராசியை அடைந்ததும் நல்லருள் பெற்று இல்லற வாழ்க்கையில் இனிமைகள் மலர்ந்திடும். பணவசதி ஏற்படும். பெரிய மனிதர்களின் அன்பும் ஆதரவும் நிலைத்திடும். பக்தி வழிபாட்டில் மனம் இசையும். ஞானோபதேசம் செய்யத்தக்க ஆசான் ஈசான்ய மூலையிலிருந்து இவருக்குத் தோன்றிடுவார். தொட்டது துலங்கும் நினைத்தது பலித்திடும். கருதிய விவகாரங்கள் உறுதியுடன் நிறை வேறிடும். சிதறியப் பொருள் வந்து சேரும். சகல சௌபாக்கிய ரங்களும் அணுகிட நிலையான சுகத்தைச் சுவையுடன் இவர் பருகி பேரானந்தமடைந்திடுவர்.

இராகுவும் கேதுவும்

ஆருமிடத்தில் உலவிய இராகு புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமி டத்திற்கும், பன்னிரண்டாமிடத்தில் துலங்கிய கேது பதினொருமிடத்திற் கும் மாறுதல் அடைவதால் கருதிய காரியங்களில் நிஷ்பலிதமும், விரும் பாத விவகாரங்களில் வீண்வாதங்களும் இவர் வாழ்க்கையில் தோன்றும் வினோதங்களாகும். மக்கள் இவர் விருப்பத்திற்கு மாறாக நடந்துக் கொள்வர். குழந்தைகளின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். புத்திர தோஷமும், தொழிற்றுறையில் அலைச்சலும், போட்டியும், பொறாமையும் இவருடைய மன அமைதியை தளர்ந்திடச் செய்யும்.

ஒன்றரையாண்கடுள் கழித்த பின்னர் இராகு சுகஸ்தானத்தி லும், கேது பத்தாமிடத்திலும் சஞ்சரிக்கத் தொடங்குவதால் அது காலத் தில் பந்துஜனவிரோதமும், பெற்றோர்களுக்கு பிணிவாட்டங்களும் ஏற்ப டும். கல்வி பயிற்சியில் தடையேற்படும். செய்து வரும் வியாபாரத் தில் நஷ்டமும் நாணயப்பழுதும் உண்டாகும். விரக்தியால் செய்து வரும் தொழிலை விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாமென்ற எண்ணமும் தோன்றிடும். அவசர முடிவுகளுக்கு இடந்தரலாகாது. நெருங்கிய உறவினர்கள் இவரை நிந்தனை செய்திடுவர். கால்நடைகளால் நஷ்ட மும் விளையும். வாகன இடையூறுகளும் ஏற்படக் கூடும். எச்சரிக்கை அவசியம்.

ஆகாத திசைகளும் மாதங்களும்

இந்த ராசி நேயருக்கு குரு, சனி, சுக்கிரன், சந்திரன் திசை

கள் ஆகாதவை. மற்ற திசைகளில் இந்த புக்திகளும் ஆகாதவை. தக்க பரிகார நியமங்களை செய்தும், தகாத காரியங்களில் ஈடுபடாமலும், புதிய தொழிலில் கருத்தைச் செலுத்தாமலும் இருக்க நலம்.

கார்த்திகை, மார்கழி, பங்குனி, ஆனி, ஆடி, மாதங்கள் ஆகாத மாதங்கள். தொழிலில் அலைச்சலும், உத்தியோகத்துறையில் மாற்றமும், இடப்பெயர்ச்சியும், உடலசதியும், வீண் விரயமும், பிரயாணத்தால் ஆயாசமும் மனோவியாகூலமும், மனைவி மக்களின் அனாரோக்கியமும், பெற்றோர்களுக்கு சோதனைச் சோர்வுகளும், இவருக்கு சங்கடத்தை உண்டாக்கிடும்.

மாசி, வைகாசி, புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் சிறந்த மாதங்களாகும். நினைத்தவை கை கூடும். தொழில் மேன்மையடையும். வருமானம் உயர்ந்து விளங்கும். முயன்ற காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவை செய்ய சிறந்த பலனுண்டு. மற்ற மாதங்கள் சமமானப் பலனையே வழங்கிடும்.

ஆரோக்கியம்

பூரட்டாதி, உத்திரட்டாதி பாதசஞ்சாரங்களில் சனி சஞ்சாரம் செய்யும் போது சர்வ ஜாக்கிரதையுடன் இருத்தல் அவசியம். வாயு, வாதசம்பந்தமான பிணி அயர்வுகள், வாதநீர், இனிப்பு வியாதிகளால் உடலசதி ஏற்படும். அஷ்டமாதிபதியாகிய சந்திரன் இவருடைய ஜன்ம ராசியில் விளங்குவதால் சிலேத்துமரோகமும், சுவாசகோசத்தில் கோளாறுகளும் தோன்றக்கூடும். தக்கபாதுகாப்பு முறைகளை முன்னெச்சரிக்கையுடன் கையாள்வது சிறந்தது. சனி ஜன்மராசியை தனது பத்தாம் பார்வையால் உற்று நாக்குவதால் திரேகத்தில் தடுப்பு சக்தி குறையும், சத்தான ஆகாரங்களை அதிகம் சேர்த்துக் கொள்ளவும். புளிப்பு காரங்களை கூடுமானவரையில் குறைத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் அதிகம் சேர்த்துக் கொள்வதுடன் பால், மோர், நெய், வெண்ணெய் முதலியவைகளையும் தவருமல் சேர்த்துக் கொள்ள நலம்.

பணவசதி

இரண்டரை ஆண்டுகளாக இவர் சேமித்த நிதி நிரந்தரப் பொருள்களில் தேங்கிடும். வியாபார அபிவிருத்தியில் ·முழு நோக்கத்தை செலுத்துவதற்கு வேண்டிய வசதி குறையும். கடன் கொடுத்தால் திரும்பப் பெறுவது துர்லபமாகும். ஆழந்தெரியாமல் பொருள் சேரக்கையில் இறங்கியவர் அந்தரத்தில் பற்ருக்குறையினால் வாட்டமடைய நேரிடும். போட்ட புள்ளித் தவறிடும். சகாயம் செய்வதாக வாக்குறுதியளித்தவர் பின் வாங்குவர். திட்டங்களை தம்

முடைய சக்திக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்வது நல்லது. அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவது சகலச்சிறந்ததன்றே! சிறுகக் கட்டிப் பெருக வாழ வேண்டும் என்ற பொன்மொழியை இவர் எத்துறையிலும் மறக்கலாகாது. வட்டி, வாடகை, பழையபாக்கி முதலியவை வசூலாவது நிதானமடையும். புதியவிவகாரங்களில் இவர் மூலநிதியை அதிகம்செலவிடலாகாது. முழு முயற்சியுடன் ஆரம்பித்தவை இடையில் மௌனம் சாதிக்கும். உஷார்! குருதேவர் சிம்மராசியை அடையும்வரையில் பொருளாதார நிலை மிகவும் இக்கட்டாகவே தோன்றிடும். ஒன்பதாமிடத்தை குருதேவர் அடைந்ததும் இவருடைய மனம் போல் பணவசதி பெருகிடும். மண், மனை, மாளிகை, தொழிற்கூடம் விருத்தியடையும். அதுவரை பொறுமையை இவர் கையாள்வது சாலச் சிறந்தது.

குடும்பம்

சனி அர்த்தாஷ்டம ராசியில் சஞ்சரிப்பதால் பெற்றோர் நிலைமை தளரும். உடன்பிறந்தோர்களால் வீண் சோர்வுகளும் உண்டாகும். குடும்பத்தில் அறுவருக்கத்தக்க சூழ்நிலை இவருடைய மன அமைதியை தளர்ந்திடச் செய்யும். மனைவி மக்களால் இவருக்கு சுக சௌகரியங்கள் பெருகிடும் என்பதற்கு பதில் மாறுதலான தோற்றங்கள் அவநம்பிக்கையை அளித்திடும். தன் கையே தனக்குதவி என்பது இவர் வாழ்நாள் உள்ளவரை மறக்க முடியாத உறுதி மொழியாகும். கலக்கம் வேண்டாம்.

கல்வி

வித்யாஸ்தானத்தில் மந்தனாகிய சனி சஞ்சாரம் செய்வது கல்விவளர்ச்சியை பாதிக்கும். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் முன்னேற்றத்திற்கு தடை விதித்திடும். ஜனன ஜாதகத்தில் சூரியன், புதன் இவர்கள் லக்கினத்திலிருந்து நாலாமிடத்தில் இருந்தால் உயர்தர கல்விச்சிறப்பு ஏற்பட்டு பட்டதாரியும் ஆவர். நடைமுறை திசை சனி, சுக்கிரன், சந்திரன் இவர்களுடையதாக இருப்பின் கல்வி முடிந்து தொழிலில் ஈடுபடுவர். படிப்பில் அக்கரை குறையும்.

குருதேவர் சிம்மராசியை அடைந்தவுடன் ஒரு சிலருக்கு மீளவும் கல்வி தொடரும். வளர்ச்சியடையும்.

கலை

சங்கீதம், நடனம், நாடகம், சினிமா போன்ற துறைகளில் ஈடுபட்ட கலைவாணர்கள் அவரவர் துறைகளில் நல்ல முன்னேற்றங் காண்பர். ஆனால் இவருக்கு எதிர்ப்பும், போட்டியும் பொறாமையும்

நிறைந்து காணப்படும். செலவினங்கள் இரட்டிப்பாகும். கையில் பணம் தங்காது. வீண் வழிதுறைகளில் பறந்து செல்லும். கட்டுக்கடங்காது. ஒரு சிலர் தாம் பெறவேண்டிய உரிமையையும் பணத்தையும் பெற முடியாமல் நீதிமன்றங்களுக்கு ஏகிடக் கருதிடுவர். நீதிமன்ற விவகாரங்களில் சாதகம் ஏற்படாது. வெற்றி கிட்டினுலும் தம்முடைய பணத்தையும் உரிமையையும் பெறுவது துர்லபமாகும். இதனுல் நயமாகவே தம்முடைய காரியத்தை சாதித்துக் கொள்வது நல்லது.

ஞானம்

நாலாமிடத்தில் நின்ற சனி சாதாரணமாக ஆத்மீகத் துறையில் ஞானத்தை தெளிவுபடுத்துவது கடினம். லௌகீக விவகாரங்களில் அதிகப்பற்றையும் இதனுல் இடர்களையும் கொடுத்திடுவர். வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சரிவுகள் பிரிவுகள் போன்ற பரிசோதனைகள் யாவும் பற்றை விடுவதற்காகத்தான் என்பதை இந்த ராசி நேயர் மறக்கலாகாது. குருதேவர் ஒன்பதாமிடத்தில் வரும்பொழுது யாவும் சித்தி பெற வழியேற்படும். ''ஓடியவனுக்கு ஒன்பதில் குரு'' என்ருல் என்ன பொருள் என்பது இல்லறப்பற்றை விட்டகன்றவருக்கு தெளிவாகும்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டோர்களும் குரு ஒன்பதாமிடத்தில் அதாவது சிம்மராசியில் தோன்றும் காலத்தில் தம்முடைய முயற்சி சாதனங்களில் முடிவு காண்பர்.

தொழில்

அயல் நாட்டுடன் ஒப்பந்தம் செய்துக் கொண்டவர்கள் தொழிலை நிறுத்திக் கொள்வது நலம். இல்லையேல் இவருடைய தொழில் உள்நாட்டில் அபிவிருத்தியடைவது துர்லபமாகும். தொழிலில் மாறுதல்கள் உண்டாகும். வியாபாரத்தில் மந்தமான நிலையேற்படும். நிதிமுடையே இதற்கு பெரும் காரணமாகும். எக்காரணத்தைக் கொண்டும் இவர் தொழில் வகையில் கடன் கொடுக்கலாகாது. தம்முடைய குடும்ப விவகாரங்கள் அதிருப்திகரமான சூழ்நிலையை அடைவதாலும் இவர் தொழிலை அக்கரையுடன் கவனிக்க முடியாமல் பிற்போக்கு தோன்றிடும். வாழ்க்கையின் குறிக்கோள் கடமையைத் தவருமையே ஆகும் என்பதை இவர் மறக்கலாகாது. தொழில் முதன்மையானது. குடும்பம் இரண்டாவது என்பதை மறவாதவர்கட்கு தொழிலில் இடர் நேரிடாது. உத்தியோகத்துறையில் உள்ளோர் வெளியூர் மாற்றலாகுவர். இவர் ஓர் புரம். குடும்பம் மற்ருேர்புரம் இருக்க நேரிடும். இதை மகிழ்ச்சியுடன் ஏற்க நலம்.

புதிய தொழில்களையோ, வியாபாரத்தையோ இவர் ஆரம்பிக்கலாகாது. விவசாயத்துறையில் பலிதம் குறையும்,

புத்தக வியாபாரம், அச்சுத்தொழில், பிரசுராலயம், தரகு வியாபாரம், மற்ற தொழிற்சாலைகளுக்கு பிரதிநிதியாக இருத்தல், உணவுபண்ட வியாபாரம், எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் வியாபாரம், இரும்பு சாமான்கள், பித்தளை சாமான்கள் தயாரிப்பாளர்கள் விற்பனையாளர்கள் இவர்களுக்கு நல்ல ஆதாயமேற்படும். ஏனைய தயாரிப்பாளர்களுக்கு சிரமம் அதிகமாகும். நிகர லாபம் குறையும். ஆனால் விற்பனையாளர்களுக்கு நல்ல ஆதாயம் கிட்டிடும். மற்றத்துறையில் ஈடுபட்டோர்கள் சமமானப் பலன்களை அடைந்திடுவர்.

இந்த ராசி நேயர்கள் கூடுமானவரையில் எந்த விவகாரத்திலும் சுயமாக ஈடுபடுவது நலம். கூட்டு வியாபாரமோ, கூட்டுறவு பந்தமோ ஏற்கலாகாது. இதனால் பணவிரயமும், மனக்கஷ்டமும், கடன் தொல்லையும் ஏற்படும். மேலும் இவர் தம்முடைய கீழ்படிந்த சிப்பந்திகளை பூர்ணமாக நம்பலாகாது. வேறிடம் மாறிடுவர். தம்முடைய உரிமையும் பாதிக்கப்படும்.

தொழிற்றுறையிலிருந்து விடுபட்டு ஓய்வு பெற்றவர்கள் நிரந்தரமாக ஓய்வு பெறுவது நல்லது. இல்லையேல் இவர் வாழ்நாள் முழுவதும் சேமித்து வைத்த நிதி சிதறிடும்.

இவருக்கு சேர வேண்டிய பணத்தையும் நயமாகவேப் பெறுவது நல்லது. வழக்குகளை தொடர்வதால் நஷ்டமேற்படும். சாதகமேற்படுவது கடினம்.

அரசியல் வாதிகள் பொதுநல சேவையிலிருந்து ஓய்வு பெறுவது நல்லது. இல்லையேல் ஒரு சிலர் சமூக துவேஷத்திற்கும் உள்ளாக நேரிடும். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

குருதேவர் சிம்மராசியை அடைந்ததும் தொழில் உயர்வடையும். வருமானம் பெருகிடும். எல்லாத் துறையிலும் இந்த ராசி நேயருக்கு நல்ல ஆதாயமும், சாதகமானப் பலன்களும் ஏற்படும்.

மாதர்கள்

உடலாரோக்கியம் தளரும். பருமனாக இருந்தவர்கள் மெலிந்திடுவர். கல்வி பயிற்சியில் ஊக்கமும், உறுதியும் தளரும். கல்வி முடிவதற்குள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட வேண்டிய பிராப்தமுண்டாகும். குடும்ப வாழ்க்கையில் மன அமைதி குறையும். பந்துஜன

விரோதமும், மக்களின் ஆரோக்கியக் குறைவும் இவருக்கு கவலையளித்திடும்.

தொழிற்றுறையில் ஈடுபட்டிருப்பின் தம்முடைய விருப்பத்திற்கு மாருன மாற்றங்களுக்குள்ளாவர். குடும்பத்தை ஏற்று நடத்துவதா அல்லது தொழிலை விடாமலிருப்பதா என்ற குழப்பமுண்டாகும். குருதேவர் ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் நாள்வரை தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை நீடித்திடும். நெடுநாட்களாக தடையுற்றிருந்த திருமண ஏற்பாடுகள் துரிதமாய் நடைபெறும். சந்தான விருத்தியும், குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பும் இவர் வாழ்க்கையில் மலர்ந்திடும். உல்லாசப் பிரயாணங்களும் உண்டு. கலைத்துறையில் அமோகமான வெற்றியும் புகழும் ஏற்படும். ஆனல் குருதேவர் எட்டாமிடத்தில் சஞ்சரிக்கத் தொடங்கியதும் உடலசுதியும் மனேவியாகூலமும் இவருக்கு ஆயாசமளித்திடும். குடும்பத்தில் செலவினங்கள் பெருகிடும். கலைத்துறையில் ஆர்வம் குறையும். நெருங்கிய உறவினர்கள் பிரிந்திடுவர். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். ஒரு சிலர் அகாரணமாக பிரிந்திருக்கவும் நேரிடும். மக்களாரோக்கியம் தளரும். பெற்ரேருக்கு ஆகாது. குருதேவர் சிம்ம ராசியை அடைந்ததும் வாட்டங்களகன்று பிரிந்தவர் ஒன்று கூடுவர். மக்கள் விருத்தியுண்டு. பொருளாதாரநிலை உயர்ந்து விளங்கும். பொருள் சேர்க்கையும் ஏற்படும். கணவரின் தொழில் உயர்வடையும். எல்லாத்துறையிலும் மேன்மையுண்டு.

மகரம்

உத்திராடம் கடைசி மூன்று பாதங்கள்—போ, ஜ, ஜி.
திருவோணம்—ஜீ, ஜே, ஜோ, கா.
அவிட்டம் முதல் இரண்டு பாதங்கள்—க, கீ.

கிரக மாறுதல் நிலையும், பொதுப்பலனும்

சனி

இந்த ராசிநேயருக்கு ராசிநாதனும் குடும்பாதிபதியுமாகிய சனி விரயம், ஜன்மம், குடும்பம் என்ற மூன்று ராசிகளிலும் கடந்த ஏழரையாண்டுகள் சஞ்சாரம் செய்து கீர்த்திஸ்தானமாகிய மூன்ருமிடத்தை 7- 4- 1966 அன்று அடைகின்ருர். கடந்த ஏழரையாண்டு காலத்திற்கு ஏழரையோன் காலம் என்றும் ஜோதிடர்கள் சொல்லுவதுண்டு.

நிகழ்ந்த ஏழரை வருடங்களில் இந்த ராசி நேயர்களுக்கு ஏற்பட்ட சோதனைச் சோர்வுகள் கணக்கிலடங்காது. நடைமுறை திசைபுக்தி களுக்கனுசரனையாக பல் வேறு விதங்களில் அவரவர் வாழ்க்கையில் நிறைகுறைகளை தோற்றுவித்து மறக்க முடியாத அனுபவங்களை உண் டாக்கிய சனி வீரம், பராக்கிரமம், விதரனை, விவேகம், தைரியம், புகழ், கீர்த்தி, திறமை இவைகளை சிறப்புடன் குறிப்பிடும் மூன்ருமிடத்திற்கு மாறுதலடைவது இவர் வாழ்க்கையில் புதுமலர்ச்சியைஉண்டாக்குவதற் காகவே என்பது தெளிவு.

இவருடைய விதியில் புதிய மாற்றங்கள் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. குன்றிய ஆரோக்கியம் மிளிரும். உட லில் தோன்றிய அதிசயப்பிணிகள் மருந்தின்றி மறையும். ரத்த பலங் குன்றி மெலிந்தவர் இழந்த சக்தியை மீளப் பெற்று திடகாத்திரமடை வர். மெழுகு போலுருகிய மனேதிடம் உருக்கு போல் உறுதியடையும். குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சனைகள் நல்ல முடிவு பெறுவது டன் இவருடைய ஓயாத கவலைகள் மாயமாக மறையும். இவருடைய நல்ல முயற்சிகளுக்கு ஏற்பட்டிருந்த தடையும், இடையூறுகளும் அகன்று சாதகமானப்பலன்கள் கிட்டிடும். நிதானமடைந்த விவகாரங் கள் துரித நடையில் முன்னேற்றமடையும்.

பணமுடையும் பற்ருக்குறையும் பறந்தோடிடும், நிதிநிலைமை வசதி நிலையாக ஏற்படும். இவருக்கு ஆதரவளிக்க பின் தங்கியவர் தாமாகவே தேடி வந்தணுகுவர். மறைமுகமான தொல்லைகளை விளை வித்தவர் மறைந்திடுவர். இவரைக் கடிந்து பேசியவர் நெருங்கி உற வாடுவர். இவருடைய முன்னேற்றத்தைத் தடுத்து மௌனம் சாதித்து காரியத்தைக் கெடுத்தவர், இவருடைய பணத்தையும், பொருளையும் கையாடல் செய்தவர், இவருடைய உபகாரத்தைப் பெற்று இவருக்கே அபகாரம் தேடியவர், இவருக்கு தொண்டு புரிய முன் வந்து நிற்பர்.

மனைவி மக்களின் ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். தொழிற் றுறையில் ஏற்பட்டிருந்த இருண்ட சூழ்நிலையகன்று இவருடைய தொழில் மேன்மையடையும். மூல நிதி வசதியும், மூலப் பொருள் வச தியும் சிரமமின்றி பெருகிடும். விவசாயத் துறையில் நல்ல பலித முண்டு. கீழ்படிந்தோர் அடங்கி, நடுங்கி பயபக்தியுடன் பணியாற்றி இவருடைய வருமானத்தை பெருக்கிடுவர். உத்தியோகத் துறையில் இவர் மீது ஏற்பட்ட குற்றங்குறைகள் ஆதாரமற்றவை என கருதப் படும். விதிக்கப்பட்ட தடையும், சாட்டப்பட்ட குற்றங்களும் நீக்கப் படும். இவருடைய திறமையும், தெளிவும், அனுபவ நுட்பமும், மேலதி

காரிகளின் கவனத்தைக் கவர்ந்து பொறுப்பான பதவிகளில் இவர் அமர்த்தப்படுவர். இவருடைய கடமையும், சேவையும், அதிகாரமும், சிறப்புற்று விளங்கும். சுகம் ஓங்கிடும். கவலைகள் மறையும். கையில் பணம் தாராளமாக நடமாடும். கல்வி பயிற்சியில் முன்னேற்றமுண்டு. மக்கள் முன்னேற்றமடைவர். அவர்களால் இவருக்கு நல்ல ஆதாய மும். நிரந்தர பொருள் சேர்க்கையும் ஏற்படும். இவருடைய தீராக் கடன்கள் தீர்ப்பதற்கான வழியும், வாய்ப்பும் ஏற்படும். தீரா வழக்கு கள் சாதகமான முடிவைப் பெற்றிடும்.

சனி ஐந்தாமிடத்தையும், ஒன்பதாமிடத்தையும், பன்னிரண் டாமிடத்தையும் பார்வையிடுவதால் இந்த ராசி நேயர் தம்முடைய செல்வ, செல்வியர்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைய பெரும் செல வினங்களை ஏற்க நேரிடும். இவருடைய மூதாதையர்களுக்கு ஆகாது. தகப்பனுருக்கு கெண்டமேற்படும். பிதுரார்ஜிதமான சொத்துக்களும் இவருடைய கை மாறிடும். புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். உடன் பிறந்தவர்களுக்கு சற்று ஆகாது. தாயாரின் உடலாரோக்கி யம் பாதிக்கப்படும். மனைவி வர்க்கத்தினருக்கும் வீண் சோர்வுகள் ஏற்படும். இந்த ராசி நேயருக்கு ஏற்படும் செலவினங்கள் பூராவும் எதிர்கால சேமிப்புக்காகவே தோன்றிடுமென்று கூறலாம். வீடு கட் டுவதிலும், விவசாய அபிவிருத்தியிலும், வியாபாரத்தை சீரிய முறை யில் அமைத்துக் கொள்ளவும், விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் இவர் சேமிப்பு நிதியிலிருந்து செலவு புரிந்திடுவர்.

சனி பூரட்டாதியின் சாரத்தில் உலவும் போது பணவசதி நன்கு அமையும் என்ற போதிலும் அளவுக்கு மீறிய செலவுகளும் இருக்கும். நல்லோருடைய ஆதரவு சிறந்த முறையில் ஏற்படும். தொழில் வளரும். உத்தியோகத்துறையில் பதவி உயர்வும் வருமான உயர்வும் ஏற்படும். நன்மைகள் பெருகிடும். குடும்பத்தில் நன்னி கழ்ச்சிகள் நடைபெறும். வாயு, இனிப்பு நீர் சம்மந்தமான பிணி வாட்டங்கள் சோர்வளித்திடும்.

தன்னுடைய சுயசாரமாகிய உத்திரட்டாதியின் பாதசாரத் தில் சனி சஞ்சாரம் செய்யும் தருணத்தில் ஸ்திரப் பொருள் சேர்க்கை யிலும், வீடு, வாகனம், தொழில்ஸ்தாபனம் முதலியவைகளை சுயமாக அமைத்துக் கொள்வதிலும், யந்திரக் கருவிகளை விருத்தி செய்து நவீன சாதனங்களை பெருக்கிக் கொள்வதிலும், மின்சார வசதியைப் பெறுவதி லும் இவர் கருத்தைச் செலுத்தி அரும்பணிகளில் ஈடுபடுவர். நல்ல வெற்றியும் கிட்டிடும். குடும்பம் விருத்தியாகும். பொருள் சேரும்.

ஆனல் கடைசி நட்சத்திர சாரமாகிய ரேவதியில் சனி சஞ் சாரம் செய்யும் காலத்தில் சிறிய பிணிவாட்டங்கள் தோன்றி

தோன்றி வாட்டிடும். புதியக் கடனும் சொத்தின் மீது வில் லங்கமும் ஏற்படும். சர்ம வியாதிகள், நரம்புதளர்ச்சி போன்ற அசதி கள் ஆயாசமளித்திடும். இத்தருணத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

குரு

மூன்று பன்னிரண்டாமிடங்களுக்கதிபதியாகிய குருதேவர் ஐந்தாமிடத்தைக் கடந்து ஆறுமிடத்தை அடைகின்றார். பத்தாமிடத் தையும் பன்னிரண்டாமிடத்தையும் இரண்டாமிடத்தையும் பார்வையி டுகின்றார். தொழிற்றுறையில் சில மாறுதல்கள் ஏற்படும். கூட்டா ளிகளிடத்தில் மனவேற்றுமையுண்டாகும். மனைவியின் ஆரோக்கியம், தளர்ந்து சிகிச்சையளிக்க நேரிடும். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்று மை குறையும். மக்களின் விவாக ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறும். மக்கள் கல்வி பயிற்சியில் தேறுவர். உயர்தரக் கல்விச் சிறப்பும் உண்டு.

தகப்பனுருக்கு இடமாற்றமும், தொழிற்றுறையில் அதிருப்தி கரமான மாறுதல்களும், பணமுடையும் ஏற்படும். உடன் பிறந்தோர்க ளுக்கு ஆகாது. அதிலும் மூத்தவர்கட்கு உடலசதியும், அபமிருத்யு போன்ற பயமும் காட்டிடும். எச்சரிக்கை மிகவும் அவசியம். மனைவி யின் ஆபரணங்கள் சில விரயமாகும்.

குருதேவர் பராபவ வருஷம் ஆவணி முதல் ஏழாமிடமாகிய கடக ராசியில் உச்சமடைவதால் இந்த ராசி நேயருக்கு சகல துறைக ளிலும் அமோகமான வெற்றியும், கைமேற் பலனும் கிட்டிடும். தொழில் சம்பந்தமாக அடிக்கடி வெளியூர் பிரயாணங்களை இவர் ஏற்க நேரிடும். நண்பர்களால் இவருக்கு நல்ல ஆதரவு ஏற்படும். மனைவி மக்களின் ஆரோக்கியம் நன்கு விளங்கும். குடும்பத்தில் சீமந்தம், பூமுடித்தல், திருமணம், கர்ணபூஷணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். சந்தானவிருத்தியும் ஒரு சிலருக்குண்டு. தகப்பனுருடைய பதவி அந் தஸ்து, வருமானம் முதலியவை உயர்ந்து விளங்கும். சேமிப்பு நிதியில் பணம் சேரும். உடன் பிறந்தோர்களுடைய நிலைமை நல்லபடி விளங் கும். அவர்களுடைய பொருளாதார நிலை மேலோங்கிடும் தாயாருக்கு சற்று ஆகாது.

குருதேவர் கடகராசியை விட்டு சிம்மராசியை அடைந்தால் இந்த ராசிநேயருக்கு பணலேவாதேவி விவகாரங்களில் அதிருப்தியும், உடலசதியும், குடும்பத்தில் அமைதியின்மையும், வியாபார விவசாயத் துறைகளில் சிறு நஷ்டங்களும் சாதாரணமாக ஏற்படக் கூடியவை. இவர் தாம் முறைப்படி செய்ய வேண்டிய காரியங்களை அவ்வப்

போது செய்யத் தவறுவதால் பிறருக்கு கீழ்ப்படிய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எச்சரிக்கை மிகவும் அவசியம். அனுவசியமான வழிதுறைகளில் கருத்தைச் செலுத்துவதால் இவர் மேலோருடைய கட்டு திட்டங்களுக்குள்ளாக நேரிடும். அரசாங்கத்தின் ஆணைக்கும் கீழ்ப்படிய நேரிடும். பிரயாணச் சோர்வுகளும் இவருக்கு ஆயாசமளித்திடும்.

இராகுவும் கேதுவும்

பூர்வபுண்ணியஸ்தானத்தில் உலவிய ராகு சுகஸ்தானத்திற்கும், லாபஸ்தானத்தில் தோன்றிய கேது ஜீவனஸ்தானத்திற்கும் மாறுதலடைகின்றனர். பந்து ஜனங்களால் தொல்லையும், வாகனங்களாலும், கால்நடைகளாலும் இவருக்கு சேதமும், சரீர சுகம் குறைந்தும் காணப்படும். செய்து வரும் தொழிலில் விரக்தி மனப்பான்மை ஏற்படும். உத்தியோகத்தை விட்டு வேறு தொழிலில் ஈடுபடலாமென்ற எண்ணம் உதயமாகும். கூடுமான வரையில் இதற்கு இடந்தராமலிருப்பது நலம். வேறொன்று கிடைத்த பிறகு கையிலிருப்பதை விட்டுக் கொடுக்கலாம். தாயாருடைய உடல்நிலை பாதிக்கப்படும். எச்சரிக்கை அவசியம்.

ஒன்றரை ஆண்டுகள் கழிந்ததும் இராகு மூன்றிலும் கேது ஒன்பதிலும் சஞ்சரிக்கத் தொடங்குகின்றூர். முயன்ற காரியங்களில் உறுதியும் உற்சாகமும் விடாமுயற்சியும் நல்ல பலன்களை அடையச் செய்திடும். போட்டி பந்தயங்களில் வெற்றியுண்டு பெயரும் புகழும் ஓங்கிடும். ஆத்மீக துறையில் நல்ல சாதனையை அடைந்திடுவர். தகப்பனுருக்கு ஆகாது. சொத்து விக்கிரயம் செய்யவும் நேரிடும்.

ஆகாத திசைகளும் மாதங்களும்

இவர்களுக்கு குரு, புதன், சந்திரன், சூரியன் இவர்களின் திசை ஆகாது. நடைமுறையில் இருப்பின் நன்மைகள் நிதானமடையும். ஆரோக்கியக் குறைவு இதனுல் ரணசிகிச்சை செய்து கொள்ளுதல், கடன், கவலை, மனைவி மக்களின் உடலாரோக்சியம் தளர்வதால் அயர்வுகள், வியாபாரத்தில் நஷ்டம், பொருட்சேதம், பணமுடை போன்றவை பாதிக்கும். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

தை மாதத்தில் பிறந்தவர்களுக்கும் மகரலக்கினமாகவோ, ராசியாகவோ கொண்டவர்கட்கும் சித்திரை, ஆடி, ஆவணி, மார்கழி தை, மாசி மாதங்கள் ஆகாத மாதங்களாகும்- உடற்பிணி, தொழிலில் தயக்கம், இடமாற்றம், பெற்ருேருக்கு அசதி வீண் செலவுகள் வாகனங்களால் செலவு, பொருள் சேதம், பொன்ற சோதனைகள் ஏற்படும்.

பங்குனி, ஆனி, ஐப்பசி கார்த்திகை மாதங்கள் சிறந்த பலனை வழங்கக் கூடிய நல்ல மாதங்களாகும். காரிய வெற்றி, பணவரவு

உத்தியோக உயர்வு, பெரியதனகனவான்களின் ஆதரவு, வியாபாரத்தில் நல்ல லாபம், விவசாயத் துறையில் நல்ல பலிதம் போன்ற நற்பலன்கள் ஏற்படும். வைகாசி புரட்டாசி மாதங்கள் சமமானவை. நடைமுறை திசை புக்திகளுக் கனுசரணையாக பலன் தரும்.

ஆரோக்கியம்

ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். இந்த ராசி நேயருக்கு சில நாட்களாக தோன்றிய கைகால் அசதி, வாயு பிடிப்பு போன்றவை அகன்று திட ஆரோக்கியம் ஏற்படும். சனி பூரட்டாதியின் பாதசாரத்தில் உலவிடும் முதல் மூன்று மாதங்களிலும், அதன் பிறகு ஒன்பது மாதங்கள் கழிந்தபின்னர் குருதேவர் ஆயில்ய நட்சத்திரத்தில் நடைபுரியும் நான்கு மாதங்களிலும் சிம்ம ராசியில் கடைசி பாதமாகிய சூரியனின் சாரமாகிய உத்திரத்தில் நடை புரியும் போதும் இந்த ராசி நேயர் மிகவும் எச்சரிக்கையுடன் தம்முடைய ஆரோக்கியத்தை கவனிக்க வேண்டும். இல்லையேல் இனிப்பு வியாதி, மார்வலி ஹிருதயக் கோளாறுகள், ரத்த ஓட்டத்தில் ஏற்றத் தாழ்வுகள், பாரிசவாயு போன்றவை தோன்றி வாட்டிடும். மலச்சிக்கல் மிகவும் கொடிய வியாதிகளுக்கு ஆதாரமான கோளாறாகும். இதைத் தவிர்க்க என்னென்ன முறைகளைக் கையாள வேண்டுமோ அதை தவறாமல் அன்றாடம் செய்து வரின் விபரீதக் கோளாறுகள் இவர் வாழ்க்கையில் ஏற்படுவதிற்கில்லை. கீரைவகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். கடலைப் பருப்பு, கிழங்கு வகைகள், தித்திப்பு வஸ்துக்கள் இவைகளை அறவே நீக்க வேண்டும்.

பணவசதி

இவருக்கு ஏழரை வருஷங்களாக ஏற்பட்டிருந்த நிதிமுடை நீங்கி பணவசதி பெருகிடும். இது நாள் வரை தவணை செலுத்திய பாக்கிதாரர்கள் தாமாகவே தேடி வந்து செலுத்திடுவர். இவருக்கு சேரவேண்டிய பழையபாக்கி, வட்டி, வாடகை, குத்தகை பணம் முதலியவை சிரமமின்றி வசூலாகும். தொழிற்றுறையில் முன்னேற்றமேற்படும். போதிய அளவிற்கு மேல் பணவசதியிருந்தும் இவர் சாதிக்க முடியாமல் தயங்கிய சில விவகாரங்களில் இவர் புதிய ஊக்கத்துடன் முயன்று வெற்றியுடன் திகழ்வர். இதனால் தம்முடைய நிதிநிலைமை மேலும் பெருகிடும். பணியாட்கள் நல்ல முறையில் பணியாற்றி லாபத்தை தேடி கொடுத்திடுவர். குருதேவர் ஆயில்ய நட்சத்திர பாதசாரத்தில் நடை புரியும் தருணத்திலும் சிம்மராசியில் சஞ்சாரம் செய்யும் போதும், அதிலும் உத்திரத்தின் சாரத்தில் நடைபுரியும் போதும் புதிய விவகாரங்களில் மூலதனத்தை ஈடுபடுத்தாமலிருப்பது நலம். மேலும் மற்றவர்களை

நம்பி இவர் மூல நிதியையோ மூலப் பொருளையோ கொடுக்கலாகாது. எழுத்தொப்பந்தமில்லாமல் எதையும் செய்யலாகாது. இவருக்கு மற்ற வகையில் நல்ல வருவாயும், தொழில் அபிவிருத்தியும், நிலையான ஆதாயத்தை அளித்திடும். இவருக்கு ஏற்பட்ட கடன்கள் யாவும் தீர்க்கப்படும். கட்டிட வேலையில் துரிதமான பலன்கள் கிட்டிடும். குரு எட்டாமிடத்தில் உலவும்போது சொத்தின் மீது வில்லங்கமேற்படும்.

தொழில்

தொழிற்றுறையில் ஏற்பட்டிருந்த மந்தமான சூழ்நிலையகன்று முன்னேற்றமேற்படும். வியாபாரம், சுயத்தொழில், யந்திரத்தொழிற் சாலை முதலியவை சீரிய முறையில் மேன்மை அடையும். உத்தியோக துறையில் உள்ளோர் பதவி உயர்வு பெற்றிடுவர் இவர்மீது ஏற்பட்டிருந்த சந்தேகங்கள் நிவர்த்தியாகும். பதவி நிரந்தர மாக்கப் படும். கூட்டுவியாபாரிகளாக இருப்பின் சனி பூரட்டாதியின் பாத சாரத்தில் நடை புரியும் முதல் மூன்று மாதங்கள் வரை கூட்டாளிகளால் நஷ்டமும், பொருட்சேதமும் ஏற்படும். எச்சரிக்கை மிகவும் அவசியம். பக்குவமாய் பணவிவகாரங்களில் கண்ணும் கருத்துமாயிருப்பது நலம். புதிதாக ஆரம்பிக்க இருப்பவர்கள் கூட்டு சேராமல் சுயமாக செய்துக் கொள்வது சாலச் சிறந்தது.

குரு சனி மாறுதல் அடைந்தவுடன் தொழிற் துறையில் சிறிய மாற்றங்கள் ஏற்படும். அரசாங்க பதவி சேவையில் உள்ளோர்கள் இடமாற்றத்திற்குள்ளாவர்.

குருதேவர் கடகத்தில் சஞ்சாரம் செய்யும் போது நல்லவருமானம் கிட்டிடும். இதைக்கடந்து சிம்ம ராசியில் குருதேவர் தோற்றமளிக்கும் போது மிகமிக எச்சரிக்கையுடன் இருத்தல்; அவசியம். எதிரிகளின் சில்லரை விஷமங்களுக்குள்ளாக நேரிடும். இத்தருணத்தில் அலுவலக வேலைகளை உடனுக்குடன் கவனித்து முடிப்பது நல்லது. வீண் புகாருக்கு இடந்தரலாகாது. ஓய்வு பெற்றவர்கள் புதிய தொழிலில் ஈடுபடலாம். கூட்டாக யாருடனும் சேரலாகாது. தம்முடைய திறமைக்கும், அனுபவ பயிற்சிக்கும் உழைப்பிற்கும் ஏற்ற சன்மானத்தை பெற்றுக் கொண்டு பிறருடைய சுயத் தொழில் அபிவிருத்தியில், எழுத்தொப்பந்களை ஏற்படுத்திக் கொண்டு காரியத்தில் ஈடுபடலாம். தயாருக்கு உடல் நிலை பாதிக்கபபடும். தகப்பனுருக்கும் ஆகாது.

அரசியல் துறை

அரசியல் விவகாரங்களில் சில காலமாக ஒதுங்கியவர் மீண்டும் ஈடுபடநேரிடும். போட்டியும் பொருமையும் நிறைந்து காணப்

படும். மக்களுடைய ஆதரவினுல் இவருக்கு வெற்றியுண்டு. சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவமும் செல்வாக்கும் ஓங்கிடும். ஆனுல் குரு தேவர் ஆயில்ய சாரத்திலோ கடகத்தைக்கடந்து சிம்மத்தில் சஞ்சரிக் கையிலோ இந்த ராசிநேயர் அரசியல் துறையில் ஈடுபடாமல் இருப் பது நலம்.

குடும்பம்

குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் கலக்கமின்றி மறையும் மக்களின் திருமண ஏற்பாடுகளில் நேரிட்ட மனக்குறைகள் நிவர்த்தி யடையும். திருமணமாகாதவர்கட்கு வாழ்க்கைச்சிறப்பு ஏற்படும். பிரிந்தவர் ஒன்று கூடுவர்.

உடன்பிறந்தோர்கட்கு வாட்டங்கள் ஏற்படும். மனைவியின் ஆரோக்கியமும் மக்களின் ஆரோக்கியமும் நன்கு விளங்கும். குடும் பத்தில் அக்கரையில்லாதவர்களும் பற்றற்று துறவிபோல் சுற்றித்திரிந் தவர்களும் குடும்ப விவகாரங்களில் அக்கரை கொண்டிடுவர். குடும் பத்தில் சுபிட்சமேற்படும். ஒற்றுமை உண்டாகும்.

கல்வி

கல்வி பயிற்சியில் முன்னேற்றமுண்டு. ஒரு சிலர் தம்முடைய முழுத்திறமையையும் காட்டி முதன்மையாகவும் தேர்ச்சி பெறுவர். உயர்தர கல்வி சிறப்பும் தெளிவுடன் ஏற்படும். கல்வி முடிந்தோர் தொழில் நுணுக்க பயிற்சியிலும் ஈடுபடுவர். அமோக வெற்றியுடன் திகழ்வர். ஏற்கனவே ஒரு முறை தோல்வியுற்றவர் தங்கு தடையின்றி இனி தேறிடுவர்.

குருதேவர் சிம்மராசியில் சஞ்சரிக்கும் தருணத்தில் கல்வி பயிற்சியில் பிற்போக்கு தோன்றிடும். கல்வி இடையில் நின்று தொழில் ஆரம்பமாகும்.

கலை

கலைத்துறையில் ஈடுபட்டோர்கள் நல்ல ஆதாயத்தை அடைந் திடுவர் சங்கீதம், நடனம், நாடகம், சினிமா போன்ற துறைகளில் தம்மையே அர்ப்பணம் செய்துக் கொண்டவர்கள் பெரும் புகழுடன் விளங்குவர். இது நாள் வரை சோபிக்காமலிருந்த இவருடைய திறமை எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திடும். இவருடைய அந்தஸ்து, கௌரவம், செல்வாக்கு, முதலியவை உயர்ந்து விளங்கும். இவருக்கு சேர வேண்டிய பணம் தம்மைத் தேடி வந்தணுகும். நிதி நிலைமைவசதி பெருகிடும். ஆளடியவர் சூழ, வாழ்க்கை வசதிகள் பெருகி டும். தொழில் விஸ்தாரமடையும்.

குருதேவர் கடக ராசியில் சஞ்சாரம் செய்யும் நாள் முதல் அதாவது பராபவ வருஷம் ஆவணி மாத முதல் சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவமும், பொது மக்களின் ஆதரவும், நிதி மிகுந்தோர் ஆதரவும் கூட்டாளிகளால் நல்ல ஆதாயமும் இவருக்கு கிட்டிடும்.

ஞானம்

இதுவரை குழப்பமடைந்த இவருடைய மனோநிலை மாறுதலடையும். இவருடைய ஆழ்ந்த கருத்துக்கள் புத்தக வடிவாய் நாடெங்கும் பரவிட அரியதோர் வாய்ப்பு கிட்டிடும். அரசாங்க ஆதரவு நிலைத்திடும். ஆத்மீகத் துறையில் அந்தரங்கமான பற்று இருக்குமேயன்றி வெளிப்புறத்திற்கு தோன்றாது. எத்துறையில் இவர் ஈடுபட்டிருப்பினும் அத்துறையில் இவருடைய தத்துவ ஞானம் சோபித்திடும். நல்ல சன்மானத்தையும், உலகப்புகழையும் இவர் அடைந்திடுவர்.

மாதர்கள்

திரேகாரோக்கியம் பரிசுத்தமாக விளங்கும். பித்து பிடித்தது போல் ஏற்பட்ட பாவனை மறைந்து சித்தம் தெளிவடையும். வாழ்க்கையில் ஏற்பட்ட சூனியமான நிலைமையகன்று புதிய ஒளியேற்படும். கொடும் சோதனைகள் அகன்று இனிமையான சம்பவங்கள் இனி ஏற்படும். இவருடைய நெடு நாள் மனோபிலாஷை பூர்த்தியாகும். தூற்றிய பந்து ஜனங்கள் நேச விசுவாசத்துடன் பாராட்டுவர். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமையுண்டாகும். பெற்றோருடைய ஆரோக்கியமும் நன்கு விளங்கும். மக்கள் முன்னேற்றமடைந்திடுவர். நெடு நாட்களாக சித்தி பெறாமலிருந்த திருமண முயற்சிகள், தீவிரமான முயற்சியில்லாமலேயே துரிதமாய் முடிவு பெறும். நிதிநிலைமை வசதி பெருகிடும். கையில் பணம் தாராளமாக நடமாடும். கல்வி பயிற்சியில் முன்னேற்றமுண்டு. கலைத்துறையிலும் நல்ல வளர்ச்சியுண்டு. பெயரும் புகழும் பரவிடும். நல்ல ஆதாயமேற்படும். தொழிற்றுறையில் இவருக்கு நீடித்த அதிருப்திகரமான சூழ்நிலையகன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருமானம் உயர்ந்து விளங்கும். மேலதிகாரிகளின் அபிமானம் நல்லபடி நிலைத்திடும். சமூக சேவையிலும் நல்ல புகழுண்டு. இவர் கை மாறிய பொருள்களும், ஆபரணங்களும் சனி மாறியதும் வந்து சேரும். குடும்பத்தில் கடன் தீரும். புதிய பூமி, வீடு வகை சேர்க்கையும் ஏற்படும். உடன் பிறந்தோர்களுக்கு ஆகாது. தகப்பனாருக்கு வெளியூர் மாற்றமுண்டு. கணவருடைய தொழில் உயர்வடைந்து வெளியூர் மாற்றமுண்டாகும்.

எல்லாவகையிலும் இந்த ராசி மாதர்களுக்கு குரு சனி மாறுதல் நற்பலனையே வழங்கிடும்.

பராபவ ஆவணிக்கு மேல் பூ முடித்தல், சீமந்தம், கர்ணபூஷணம், விவாகம் போன்ற சுப நிகழ்ச்சிகள் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்களாகும். சந்தான விருத்தியும் உண்டு.

சிம்மராசியில் குருதேவர் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் உடலாரோக்கியம் சற்று தளரும். தகப்பனருக்கு ஆகாது. இடப்பெயர்ச்சியும், பொருட்சேதமும், குடும்பத்தில் விபரீதச் செலவுகளும் தோன்றிடும். மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

கும்பம்

அவிட்டம் கடைசி இரண்டு பாதங்கள்—கு, கெ.
சதயம்—கோ, ஸ, ஸீ, ஸு.
பூரட்டாதி முதல் மூன்று பாதங்கள்—ஸ, ஸோ, த.

கிரக மாறுதல் நிலையும் பொதுப்பலனும்

சனி

ராசிநாதனும் விரயாதிபதியுமாகிய சனி இரண்டரை ஆண்டுகளாக ஜன்ம ராசியில் சஞ்சாரம் செய்து குடும்ப ஸ்தானமாகிய இரண்டாமிடத்திற்கு மாறுதலடைகின்றார். இதற்கு முன் இரண்டரை வருஷங்கள் விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் சனி தோன்றியதால் பல வழிகளில் பணமும், பொருளும், செலவாகி தொழிலில் அலைச்சல் மிகுந்து வியாபாரத்தில் நஷ்டம் தோன்றி, எதிர் பார்த்த விவகாரங்களில் ஏமாற்றமும், நம்பிய காரியங்களில் வஞ்சகம் ஏற்பட்டு எதைச் செய்வது எதை விடுவது என்று குழப்பமடைந்த இந்த ராசி நேயர் இனி தெளிவுடன் விளங்குவர். சோதனைகளன்று குற்றங் குறைகள் நீங்கி சாதகமானப் பலன்கள் ஏற்படும். சொல்ல முடியாத கஷ்ட நஷ்டங்களையும், வம்பு வழக்குகளையும், எத்துறையிலும் மந்தமான நிலையையும் ஏற்படுத்திய சனி தனஸ்தானமாகிய இரண்டாமிடத்தை அடைகின்றார். பொருளாதார நிலையில் உயர்வு ஏற்பட்டபோதிலும் அதை சரி கட்டுவதற்கு குடும்பத்தில் செலவினங்கள் பெருகிடும். தேவையில்லாத போது பணம் கையில் சேரும். தேவையான போது பண நெருக்கடி தோன்றிடும். இவர் பிறருக்கு பண விவகாரங்களில் வாக்கு அளித்திடுவர். நிறைவேற்ற முடியாமல் திணறுவர். ஆகையால் தம்முடைய நிலையை அனுசரித்து எச்சரிக்கையுடன் இருத்தல் நலம். பிறரை நம்பி காரியத்தில் ஈடுபடலாகாது.

இவருக்கு ஏழரையோன் காலத்தில் மூன்றில் இரண்டு பகுதி நடந்தேறி விட்டது. இனி நடக்கவிருப்பது மூன்றில் ஒரு பகுதியும் இரண்டரை ஆண்டு காலமும் ஆகும். ஆகையால் இன்னும் இரண்டரை ஆண்டு காலம் வரையில் பொறுப்பான புதிய காரியங்களில் இந்த ராசி நேயர் ஈடுபடாமலிருப்பது நல்லது. புதிய வீடு கட்டுவதில் இறங்கியவர் ஆழமாக அஸ்திவாரத்தை நாட்டிடுவர். வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய பணம் பூராவும் அஸ்திவாரத்தில் இறங்கி விடும். கட்டிடத்தை மேலெழுப்புவதற்கு பணம் தேவைப்படும். எவ்வளவு கடன் வாங்கினாலும் இருக்குமிடந் தெரியாமல் மறையும். ஆகையால் முன்னெச்சரிக்கையுடன் சிக்கனமான திட்டங்களை வகுத்து போட்ட புள்ளி மாறுது அதன்படியே நிறைவேற்ற வேண்டும். ஏற்கனவே வீடுடையவர்கள் அகலத்தில் அபிவிருத்தி செய்வதை விட மாடியில் கட்டிடத்தை எழுப்புவது சிறந்ததாகும். வாகனங்களை விற்று வேறு வாகனங்களை அமைத்துக் கொள்வதை விட ஏற்கனவே உள்ளவற்றை சீர்திருத்தி அமைத்துக் கொள்வது நலம். புதிய தொழிலொப்பந்தங்களில் ஈடுபடலாகாது. சுயமாகவோ பிறருடன் சேர்ந்து கூட்டாகவோ புதிய வியாபாரத்தில் ஈடுபடலாகாது. மூலநிதி பிறருடையதாக இருப்பினும் இவர் விலாசம் இருத்தல் கூடாது. பிறருக்காக இவர் உழைத்தால் நல்ல ஆதாயம் கிட்டிடும். இவருக்கென எதையும் இவர் செய்யலாகாது.

சனி பூரட்டாதியின் பாதசாரத்தில் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் நல்ல ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் நல்ல வருமானம் கிட்டிடும். உத்தியோக உயர்வு உண்டு. சுயத் தொழிலதிபர்களுக்கு அரசாங்க ஆதரவு ஏற்படும். யந்திர சாதனங்கள் நவீன முறையில் அமையும். விவசாயத் துறையிலும் நல்ல பலிதமுண்டு. அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேறும். பெரிய மனிதர்களின் ஆதரவும், நண்பர்களின் ஒத்தாசையும் சிறந்த முறையில் அமையும்.

இதே சமயத்தில் தனலாபாதிபதியாகிய குருதேவர் பூர்வ புண்ணியஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் நடைபுரிவதோடு ஒன்பதாமிடத்தையும், லாபஸ்தானத்தையும், ஜன்ம ராசியையும் பார்வையிடுகின்றார். சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவமும், செல்வாக்கும் ஓங்கிடும். எதிர்பாராவிதமாக இவருக்கு பணவசதி உண்டாகும். தெளிவான மனமும், ஈடுபடும் காரியங்களில் விவேகமும், விதரணையும் நன்கு விளங்கும். பொன், பொருள், ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். மக்கள் முன்னேற்றமடைந்திடுவர். பரீட்சையில் தேருவர். கன நிதிவான்களின் தொடர்பு உண்டாகும். மனைவியின் மூலமும், மக்களாலும் இவருக்கு பொருள் வந்து சேரும். கல்வி பயிற்சியில் வெற்றியுண்டு.

தகப்பனுருடைய நிலை உயர்வடையும். அவருக்கு தொழில் உயர்வும் வருமான பெருக்கமும் உண்டு. இல்லற வாழ்க்கையில் இனிமையான நிகழ்ச்சிகள் நடைபெறும். லக்ஷ்மி கடாக்ஷமும் நிலைத்திடும். வரவு செலவு கணக்கில் திருப்திகரமேற்படும்.

சனி தன் சுயசாரமாகிய உத்திரட்டாதியில் சஞ்சாரம் செய்யும் தருணத்தில் இந்த ராசி நேயருக்கு அளவு கடந்த செலவினங்கள் பெருகிடும். பயனற்ற பிரயாணங்கள், பலிதம் குறைந்த வியாபாரங்கள், பண லேவாதேவி விவகாரங்களில் இக்கட்டானசூழ்நிலை, பொருட்சேதம், கைசோர்வு உடலாரோக்கியம் தளருவதால் மருத்துவச் செலவுகள் இவை போன்ற பலன்கள் ஏற்படும். ஒரு சிலருக்கு வரவுக்கு மேல் செலவு ஏற்படுவதால் கடனும் உண்டாகும். வீண் வம்பு வழக்குகளில் இந்த ராசி நேயர் தலையிடாமலிருப்பது நல்லது. சொத்து விஷயத்திலும் ஏற்படும் தகருறுகளை நயமான முறையில் முடிவு காண்பது உகந்தது. நீதிமன்றம் ஏகுவதால் பணம் செலவாகும். காரியம் ஜயமடைவது கடினம்.

இதே சமயத்தில் குருதேவர் ஆருமிடத்தில் உச்சம் பெற்று விளங்குவதால் மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். எதிரியின் கையில் இவருடைய பணமும் பொருளும் சிக்கிடும். அதைப் பற்றுவதற்காக இவர் பெரும் பிரயத்தினங்களை எடுக்க நேரிடும். முயற்சியில் வெற்றி எளிதில் கிட்டாமல் வாட்டமுறுவர். கால் நடைகளாலும் வாகனங்களாலும் நஷ்டமேற்படும். தொழிற்றுறையில் மந்தமான சூழ்நிலை உண்டாகும். உத்தியோகத் துறையில் இருப்பின் இடமாற்றமும் பதவி மாற்றமும் ஏற்படும். தாயாதிகளால் தொல்லை ஏற்படும். தகப்பனுருக்கு தொழிலில் மாற்றமேற்படும். தாயாருக்கு உடலசதியேற்படும். கல்வி பயிற்சியில் பிற்போக்குத் தோன்றிடும். உடன்பிறந்தோர்களுக்கு ஆகாது. உத்தியோகத்துறையில் மேலதிகாரிகளின் அபிமானம் குறையும். கூட்டாளிகளிடத்தில் ஒற்றுமை குறையும். ஒருசிலர் கூட்டு வியாபாரத்திலிருந்து பிரிந்திட நேரிடும். ஏவலாட்கள் இவரிடத்தில் உயர்ந்த சலுகைகளைப்பெற்றிடுவர். ஆனல் பணிந்து செயலாற்றுவது கடினம். ஆரோக்கிய விஷயத்தில் அதிக கவனம் தேவை.

சனி ரேவதியின் சாரத்தில் சஞ்சாரம் செய்யும் போது மக்களுடைய முன்னேற்றத்திற்காக செலவுகளை இவர் ஏற்க நேரிடும். மக்களுடைய திருமணத்திற்காக புதியக் கடன்களும் ஒருசிலருக்கு ஏற்படும். சரீராரோக்கியம் தளர்ந்து உயர்தர சிகிச்சை பெற நேரிடும். சரீர சுகம் கெடும். தொழிலில் உழைப்பு அதிகமாகும். போட்

டியும் பொருமையும் சில்லரை விஷமங்களும் நிறைந்து காணப்படும். எச்சரிக்கை மிகமிக அவசியம். உத்தியோகத்துறையில் இருப்பவர்கள் மிகவும் பக்குவமாய் இருத்தல் நலம். இவருக்கு முறைப்படி சேரவேண்டியவை கிடைக்க வேண்டியவை தயக்கமடையும். பித்த சம்மந்தமான கோளாறுகள் தோன்றி வாட்டிடும். ரத்தசக்தி குறையும். உடல்மெலியும். சத்தான ஆகாரங்களை தவருமல் சேர்த்துக்கொள்ளவும்.

இந்த சமயத்தில் குருதேவர் சிம்ம ராசியில் சஞ்சரிக்கத் தொடங்குகின்ருர். லாபஸ்தானத்தையும் ஜன்ம ராசியையும் மூன்ருமிடத்தையும் பார்வையிடுகின்ருர். சனி சஞ்சாரத்தால் கோட்சார விதிப்படி ஏற்படக்கூடிய கொடிய சோதனைகளை ஓரளவிற்கு தடுத்து சமமானபலன்களை இது தருணத்தில் இந்த ராசிநேயருக்கு குரு தேவர் வழங்குவர். விவாகமாகாதவர்கட்கு விவாகம் நடைபெறும். மனைவி மக்களின் ஆரோக்கியம் நல்லபடி விளங்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர் பிரயாணங்கள் நற்காரிய பிரயத்தினங்களுக்காக ஏற்படும். சமூக வட்டாரத்தில் நல்ல கௌரவம் ஏற்படும். தகப்பனுருக்கு தொழில் உயர்வடையும். உடன்பிறந்தோர்களுடைய நிலைமை நல்லபடி விளங்கும்.

இராகுவும் கேதுவும்

சுகஸ்தானத்தில் சஞ்சாரம் செய்த ராகு கீர்த்திஸ்தானத்திலும் பத்தாம் இடத்தில் உலவிய கேது ஒன்பதாம் இடத்திலும் சமீபத்தில் நடைபுரிய தொடங்குகின்றனர். இந்த ராசிநேயருக்கு பந்து ஜனங்களால் தோன்றிய தொல்லைகள் அகன்று நன்மைகள் ஏற்படும். எதிலும் அதைரியமடைந்த இவர் மனம் உற்சாகத்துடனும் தைரியத்துடனும் விளங்கும். எதையும் செய்யத்தயங்கியவர் துணிந்து செயலில் ஈடுபடுவர். விடாமுயற்சியும் செயலில் பிரதிபலிக்கும்.

செய்துவரும் தொழிலில் ஏற்பட்ட விரத்தி மனோபாவம் தெளிவடையும். கடமை உணர்ச்சி மேலோங்கிடும்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு பின்னர் இராகு இரண்டாமிடத்திலும் கேது எட்டாம் இடத்திலும் சஞ்சரிக்கத்தொடங்குவதால் அத்தருணத்தில் குடும்பத்தில் சிறிய சச்சரவுகள் தோன்றி மறையும். மருத்துவ ஆராய்ச்சிக்கு புலனுகாத பிணிவாட்டங்கள் தோன்றி ஆயாசமளித்திடும். மருந்தில்லாமல் குணமடையும். ஊசியின் மூலம் மருந்து ஏற்றலாகாது. எச்சரிக்கை அவசியம்.

ஆகாத திசைகளும் ஆகாத மாதங்களும்.

குருதிசை, செவ்வாய் முதற்பகுதி, சந்திரன், புதன் பிற்பகுதி சூரியன், சனி திசைகள் ஆகாதவை. ஜனன காலத்தில் கேந்திர திரி

கோண நட்புஸ்தானங்களில் அமைந்திருப்பின் சமமான பலன்களை வழங்கிடும். இல்லையேல் கொடிய சோதனைச் சோர்வுகள் ஏற்படும்.

கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களாக இருப்பினும் மாசி மாதத்தில் பிறந்தவர்களாக இருப்பினும் கும்ப ராசியில் சந்திரன் இருக்கப் பிறந்தவர்கட்கும் வைகாசி, ஆவணி, புரட்டாசி, தை, மாசி, பங்குனி மாதங்கள் ஆகாதவை. திரேக அசதியும், இடப்பெயற்சி, உத்தியோக மாற்றலும் பெற்றோர்களுக்கு சோர்வுகளும் கஷ்டமும் நஷ்டமும் பொருள் விரயமும் வாகனங்களால் நஷ்டமும் இடையூறுகளும் ஏற்படும். எச்சரிக்கை மிகவும் அவசியம்.

சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் சிறந்த மாதங்கள். நற்பலன்கள் நிறைந்தவை. சுகமும் பண வசதியும் பெருகிடும். உத்தியோக உயர்வுண்டு. வியாபாரத்தில் நல்ல லாபமுண்டு. பெரிய மனிதர்களின் தொடர்பும் இதனால் அனுகூலங்களும் ஏற்படும். புதிய ஆடை, ஆபரண பிராப்தியும் பொருள் சேர்க்கையும் பழயபாக்கி முதலியன சிரமமின்றி வசூலாவதும் சாதாரணமாக நிகழக்கூடியவைகளாகும். மற்ற மாதங்கள் சமமானப்பலன்களையே வழங்கிடும்.

ஆரோக்கியம்

மனோவியாகூலமே இவருடைய வியாதியாகும். சரீரத்தில் தோன்றிய பிணிவாட்டங்கள் உடன் மறையும். சித்தபிரமை போன்ற பாவனையும் தோன்றி மறையும். ரத்த சக்தி குன்றுவதால் திரேகம் பலயீனமடையும். சுவாச சம்மந்தமான பிணி அயர்வுகளும் இருதய துடிப்புபோன்ற அசதியும் ஒருசிலரை தாக்கிடும். அதிகமாக இனிப்பு பண்டங்களையும் புளிப்பு வஸ்துக்களையும் உட்கொள்ளாமல் இருப்பது நல்லது. நல்ல ஓய்வும் சத்தான ஆகாரமும் இவருக்கு பிரதானமானவை. சிறிய விஷயங்களில் பெருங்கவலைக்குள்ளாகலாகாது. இதனால் விபரீதக்கோளாறுகள் ஏற்படும்.

சனி ரேவதியின் சாரத்தில் சஞ்சரிக்கும் போதும் குருதேவர் கடகத்தில் அதிலும் ஆயில்யத்தில் சஞ்சரிக்கும் போதும் மிகவும் ..க்குவமாய் இருத்தல் நலம். மற்ற வகையில் இவருக்கு வேறெதுவும் ஏற்படுவதற்கில்லை.

பணவசதி

கடந்த ஐந்து வருஷங்களாகவே இவருக்கு குடும்பத்திலும் மற்ற வகையிலும் செலவினங்கள் அளவுக்கு மீறி ஏற்பட்டதால் பொருளாதார நிலை அதிருப்திகரமான தோற்றத்தையே அளித்திடும். இத்

தகைய நிலை கோட்சார விதிப்படி இன்னும் இரண்டரை ஆண்டுகள் நீடிக்க வேண்டும். ஆனால் நல்ல திசைபுக்தி நடைமுறையில் இருப்பினும் திசை நாதர்கள் கேந்திர, திரிகோண, ஆட்சி, நட்பு ஸ்தானங்களைப்பற்றி நின்றிருப்பின் ஓரளவிற்கு இவருக்கு தேவைக்கேற்ப பண வசதி அவ்வப்போது எதிர் பாராவிதமாக ஏற்படும்.

குருதேவர் கடகராசியில் சஞ்சரிக்கும் நாள் வரை கடன் உபாதை நீடிக்கும். கோர்ட்டு விவகாரங்களினாலும், எதிரிகளின் தொல்லையினாலும், தாயாதிகள் சேஷ்டையினாலும் வீண் விரயங்கள் பொருட் சேதங்கள் ஏற்படும். பணலேவாதேவி விவகாரங்களில் ஏமாற்றமும், வஞ்சக சூட்சியும் ஏற்படக்கூடும். உஷார்! கொடுத்த இடத்திலிருந்து பெயருது. கொடுக்க வேண்டியவை கடுமையாகக் கேட்கப்படும்.

குரு சிம்ம ராசியை அடைந்ததும் நிதிநிலைமை மேலோங்கிடும். கை தாரளமாகும். கேட்ட இடத்தில் தட்டாமல் கிடைக்கும். சேர வேண்டியவை சிரமமின்றி வந்து சேரும். நற்காரியங்களுக்கும், ஆடை ஆபரணங்களுக்கும், வாகன வசதிக்கும் இவர் செலவு புரிய தங்குதடை ஏற்படாது. வீடு கட்டுவதிலும் நிலத்தை அபிவிருத்தி செய்வதிலும் சேமிப்பு நிதியிலிருந்து செலவு புரிந்திடுவர். பணவசதியில் தாழ்வு ஏற்படாது.

தொழில்

வியாபாரத்தில் மூலநிதி பற்றுக்குறை ஏற்பட்டு தயங்கிய நிலை மாறுதலடைந்து முன்னேற்றம் காணப்படும். விவசாயத்தில் மிதமான பலன்கள் உண்டு. சுயத் தொழிலதிபர்களுக்கு கனநிதிவான்களின் ஆதரவு நன்கு அமைந்து தொழில் ஓங்கிடும். ஆனால் எத்துறையிலும் செலவினங்கள் பெருகியும், நிகரலாபம் குறைந்தும் காணப்படும். ஏழரையோன் காலம் இன்னும் நீடிப்பதால் பொறுப்பான புதிய ஒப்பந்தங்களிலும், அயல்நாட்டு ஒப்பந்தங்களிலும் ஈடுபடாமலிருப்பது நலம் உத்தியோகத்துறையில் உள்ளோர்கட்கு குருதேவர் மிதுன ராசியில் சஞ்சாரம் செய்யும் போது பதவி உயர்வும், வருமான உயர்வும் ஏற்படும். கவலைகள் நீங்கும். நல்ல மாற்றங்கள் உண்டு.

வழக்கறிஞர்கள், கணக்கு பரிசீலனை செய்பவர்கள், உணவு பண்டங்களை உற்பத்தி செய்து வினியோகிப்பவர்கள், யந்திரத் தொழிற்சாலை நிருபர்கள், மருந்து தயாரிப்பவர்கள், விற்பனையாளர்கள் மருத்துவ நிபுணர்கள் அவரவர் துறைகளில் நல்ல வருமானத்தை தேடி

அடைந்திடுவர். பிறருபகாரமும் தக்க சமயத்தில் இவருக்கு கிட்டிடும் பூமியிலிருந்து எடுக்கப்படும் கனிப் பொருள் கிரய விக்கிரயதாரர்களுக்கும், கல், செங்கல், மண் எண்ணெய், பெட்ரோல், காகிதம், புத்தகம், பழ வியாபாரிகளும், கட்டிட காண்ட்ராக்ட்தாரர்களும் நல்ல ஆதாயத்தை அடைவதற்கான வாய்ப்பு நிறைய உண்டு. ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் கடன் கொடுக்கலாகாது. தொழிற்றுறையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மூலநிதி தேவைப்படும் தொழில்களை ஆரம்பிக்கலாகாது. சேவையில் ஈடுபடலாம். அரசியல் துறையில் உள்ளவர்களும் ஓய்வு பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது. குரு தேவர் கடகத்தில் சஞ்சரிக்கும் போது மிகவும் பக்குவமாயிருத்தல் நலம். எழுத்தொப்பந்தமில்லாமல் தொழில் ஒப்பந்தங்களில் ஈடுபடலாகாது. செலவுகளை குறைத்துக் கொள்ளவும். கீழ்படிந்த வேலையாட்களுக்கு அதிக சலுகைகளையோ, உரிமைகளையோ வழங்கலாகாது. மேலும் அவர்களை நம்பி பணத்தை அவர்களிடத்தில் ஒப்படைக்கலாகாது. முன்எச்சரிக்கை மிகவும் அவசியம்.

குடும்பம்

குடும்பஸ்தானாதிபதியாகிய குருதேவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு மாறுதலடைகின்றார். குடும்பஸ்தானத்திற்கு லாப விரயாதிபதியாகிய சனி குடும்பஸ்தானத்திற்கு மாறுதலடைகின்றார். குடும்பத்தை விட்டு தூரத்திலிருந்தால் மன அமைதி ஏற்படும். நெருங்கினால் குழப்பமடையும். மனைவியின் ஆரோக்கியம் இவருக்கு கவலையளித்திடும். மக்களின் நிலைமையும் அதிருப்தியளித்திடும். உடன் பிறந்தோர்களிடத்திலும் பெற்றோரிடத்திலும் மன வேற்றுமையும் வளரும். சொத்து விவகாரங்களில் சிக்கலான பிரச்சனைகள் இவரை சோதனைச் சோர்வுகளுக்குள்ளாக்கிடும். தகராறுகளுக்கு பணமே மூல காரணமாகும். இது விஷயமாக கூட்டாளிகளிடத்திலும், மனைவியிடத்திலும் மனவேற்றுமையும் உண்டாகும். திருமணமேற்பட்டும் ஒரு சில தம்பதிகள் பிரிந்து வாழவும் நேரிடும். இந்நிலை குருதேவர் சிம்ம ராசியை அடைந்ததும் மாறுதலடைந்து குடும்பத்தில் அமைதியும் தூய்மையும் ஒற்றுமையும் ஏற்படும். பெற்றோரிடத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் மறையும். கூட்டாளிகளிடத்தில் தோன்றிய மன வேற்றுமை நீங்கும். பிரிந்த தம்பதிகள் ஒன்று கூடுவர். மக்கள் சிறப்பும், குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும் நடைபெறும். தடையுற்றிருந்த திருமணம் துரிதமாய் நடைபெறும். சகல சௌபாக்கிய வரமும் நிலைத்திடும்.

கல்வி

வாக்குஸ்தானத்தில் சனி நின்று கல்வி ஸ்தானத்தை பார்வையிடுவதால் கல்வி வளர்ச்சியில் சந்தேக அறிகுறிகள் தோன்றிடும்.

ஆனால் குருதேவர் கல்வி ஸ்தானமாகிய நாலாமிடத்திற்கு இரண்டாமிடத்தில் நடை புரிவதால் இவருடைய நுண்ணறிவாலும் சமயோசித புத்தியினாலும் தக்க தருணத்தில் ஞாபக சக்தி மிகுந்தவராய் கல்வியில் தேர்ச்சி அடைந்திடுவர். குருதேவர் கடக ராசியை அடைந்தவுடன் இரண்டாமிடத்தையும் அங்குள்ள சனியையும் பார்வையிடுவதால் தொழில்நுட்ப கல்வியும் இந்த ராசி நேயருக்கு சிறப்புடன் ஏற்படுவதற்கான வாய்ப்பு கிட்டிடும். சாதகமான பலனையும் அடைந்திடுவர்.

சிம்ம ராசியில் குருதேவர் சஞ்சரிக்கும் போதும் இவருடைய முயற்சியில் பரிபூரண வெற்றியும் ஏற்படும். சட்ட நுணுக்கங்களை ஆராய்ச்சி செய்யும் கல்வியும், யந்திரசாதன பொறியியல் கல்வியும், கணக்காய்வு பயிற்சியும் தெளிவுடன் விளங்கும்.

கலை

கலைவாணர்கள் தத்தம் துறைகளில் புகழையும், பெருமையையும் அடைய இது தான் நல்ல தருணமென்றும் கூறலாம். பணமுடையும், ஆதரவற்ற நிலைமையும் நீங்கி பெரிய மனிதர்களின் ஆதரவு நிலைத்திடும். நீண்ட காலமாக பிறருக்குக் கீழ்படிந்த நிலையில் தோற்றமளித்தவர்கள் சுயமாகவே எதையும் சாதிக்கக் கூடிய விதரணையை தம்முடைய முயற்சியால் அடையப் பெறுவர். சங்கீத, நாடக, நடன, சினிமா போன்ற கலைகளில் ஈடுபட்டவர்கள் குறுகிய கால அளவில் பெரும் புகழை அடைந்திடுவர். பொது மக்களின் அபிமானமும் நல்லபடி ஓங்கி வளரும்.

குருதேவர் கடக ராசியில் சஞ்சரிக்கும் போது கூட்டாளிகளின் ஒற்றுமை குறைந்தும், தொழிலாளிகளின் ஒத்துழைப்பு தளர்ந்தும், எதிரிகளின் கை ஓங்கியும் காணப்படும். ஒப்பந்தங்களில் மிகவும் எச்சரிக்கை அவசியம். ஆனால் குருதேவர் சிம்ம ராசியை அடைந்தவுடன் சகல துறைகளிலும் பெருமையும், கீர்த்தியும், பொருளாதார வளர்ச்சியும் மேலோங்கிடும். தாழ்ந்தவர் உயர்ந்திடுவர். வீடு, வாகன அபிவிருத்தியும் உண்டாகும்.

ஞானம்

ஆத்மீக ஞானம் அடைவதற்கு பக்தியும், நல்ல ஆசான்களின் உபதேசமும் இவருக்கு எதிர்பாராவகையில் உண்டாகும். மௌனிகளாளாகத் தோன்றியவர் அருள் வாக்குடையவர்களாக விளங்குவர். பூர்வீக ஞானம் சோபித்திடும். தத்துவ ஆராய்ச்சியில் வல்லவர்களாகவே பிறர் புலனுக்கு தோற்றமளித்திடுவர்.

மருத்துவ ஆராய்ச்சி நிபுணர்கள், கனிப் பொருள் ஆய்வாளர் களும், தம்முடைய சிந்தனு சக்தியால் அரிய சாதனைகளையும் காணுத பிரதேசங்களில் விலையுயர்ந்தப் பொருள்களை எடுத்து காட்டிடுவர். அரசாங்க ஆதரவும் சன்மானமும் இவருக்கு உற்சாக மூட்டிடும்.

மாதர்கள்

வாழ்க்கையில் புது மலர்ச்சியேற்படும். கடந்த ஐந்தாண்டு களாக குழப்பமடைந்தவர்கள் தெளிவு பெற்று விளங்குவர். திரேகா ரோக்கியம் நன்கு அமையும். பருவமடைந்ததும் திருமணம் தடை யுற்றிருந்ததை எண்ணி ஏக்கமடைந்தவர் இல்லற வாழ்க்கையில் இன் புற்று புளகாங்கிதமடைவர். இல்லற வாழ்க்கையில் ஏமாற்றமடைந்த வர்கள் சகல சௌபாக்கியங்களையும் சிறப்புடன் அடைவதுடன் மக்கட் சிறப்பையும் மகிழ்ச்சியுடன் பெற்றிடுவர். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை ஏற்படும். தம்முடைய கை மேலோங்கிடும். சொல்லுக்கு மறு சொல் காண்பது அரிதாகும். வாழ்க்கையில் விட்டுக் கொடுத்தவர் தட்டி கேட்கக் கூடிய வாய்ப்பை எளிதில் அடைவது திண்ணம். சமூக வட்டாரத்தில் இவருக்கு சீரும் சிறப்பும் சீக்கிரம் வாய்க்கும். நெடு நாள் பிரார்த்தனை நொடிப் பொழுதில் நிறைவேறிடும். சிந்தித்தவை சித்தியாகும். மறுத்தவர், வெறுத்தவர் ஒதுங்குவர். தூற்றியவர், புறங்கூறியவர் நெஞ்சஞ்சி தூரத்தில் பதுங்குவர். சிதறிய சில்லறை கள் தருணமறிந்து வந்து சேரும். அடகு வைத்தவை பிடியிலகப்ப டும். அழகு மெருகேறிட ஆபரணங்கள் அணிவகுத்திடும். கல்வி தோல்வியுற்ருலென்ன? இல்லறம் நல்லறமாகும். கலை வளர கற்பனை யும் வளரும். பொருள் சேர கணவரின் தொழில் வளரும். பிரிந்த வர் ஒன்று கூடுவர். பெற்ருேர் பெரியதனம் தேடிடுவர். உற்ருர் உடன் சேருவர். கொஞ்சுவதற்கஞ்சியவர் மிஞ்சுவர். நெஞ்சில் நாணம் மறையும். அகங்குளிர முகமும் மலரும். சோம்பல் நீங்கும். சுறுசுறுப்பு உருவாகும். குருதேவர் ஆறில் வந்திட உறுதி தளரும். நல்ல ஊட்டமிருப்பின் வாட்டமேற்படாது. நெறி வழுவாதவர் மனம் குழம்பாது. நல்ல தொண்டால் கடமையைத் தழுவி தொழு பவருக்கு இருண்ட சூழ்நிலை வெருண்டோடும். குறிப்பறிந்து கூடா ததை ஒதுக்கியவர்கட்கு குற்றங்குறைகளணுகாது. சரிவு பிரிவுகளால் சலிப்படையாதவர்கட்கு இருளில்லை அருளுண்டு.

வியாழன் ஏழில் வழி புக வாழ்வில் தாழ்வில்லை. மகிழ்ச்சிக் குரிய நிகழ்ச்சிகள் கணக்கிலடங்கா. குழலினிது யாழினிது என்பது நீங்கி மக்கள் மழலைச் சொல்தான் இனிது என்பது இவர் மொழியா கும். மேலோர் நல்விழி அணுகிடும். கீழோர் பணிந்திடுவர்.

ஏழரையோன் காலம் இன்னும் இரண்டரையாண்டு காலம் தொடர்ந்து இருப்பதால் சனி பகவானுக்கு உகந்த பரிகாரங்களை செய்து மன அமைதியடைவது சிறந்தது.

மீனம்

பூரட்டாதி கடைசி பாதம்—தீ.
உத்திரட்டாதி—து. ஞீ. ச. ய.
ரேவதி—தே. தோ. ச. சி.

கிரக மாறுதல், பொதுப்பலன்

குரு

ராசிநாதனும், பத்தாமிடத்ததிபதியுமாகிய குருதேவர் கீர்த்திஸ்தானமாகிய மூன்றுமிடத்தை விட்டு சுகஸ்தானமாகிய நாலாமிமிடத்தை அடைந்து எட்டாமிடத்தையும், பத்தாமிடத்தையும் பன்னிரண்டாமிடத்தையும் பார்வையிடுகின்றார். தொழிற் றுறையில் மிரட்சிகரமான தோற்றங்கள் இவரை குழப்பத்தில் ஆழ்த்திடும். செலவினங்கள் அளவுக்கு மீறிடும். இவருடைய நெருக்கடியான சந்தர்ப்பத்தை பிறர் நன்கு பயன் படுத்திக்கொள்வர். வாகனங்களால் நஷ்டமும் செலவினங்களும் பெருகிடும். நிரந்தரச் சொத்துக்கள் மீது வில்லங்கமேற்படும். கடன்களை தீர்த்திட சொத்து விக்கிரயம் செய்யவும் நேரிடும். தம்முடைய உதாசீன குணத்தால் ஏமாற்றமடைந்ததால் இந்நிலைக்குள்ளாவர். வியாபாரத்துறையில் மூலநிதி முடையினால் சில மாற்றங்கள் ஏற்படும். விவசாயத்தில் பலிதம் குறையும் கால் நடைகளால் இவருக்கு செலவினங்கள் பெருகிடுமேயன்றி ஆதாயமேற்படாது. நெருங்கிய உறவினர்கள் பிரிந்திடுவர். தகப்பனுருக்கு ஆகாது. மக்கள் முன்னேற்றத்திற்கும் விவாகத்திற்கும் செலவுகள் ஏற்படும். உடன்பிறந்தோர்களுடைய நிலைமை உயர்ந்து விளங்கும்.

குருதேவர் மிதுன ராசியை விட்டு கடக ராசியில் சஞ்சரிக்கும் நாள் முதல் அதாவது பராபவ வருஷம் ஆவணி முதல் நன்மைகள் பெருகிடும். இருண்ட சூழ்நிலை மாறுதல் அடைந்து வாழ்க்கையில் புதிய ஒளி ஏற்படும். தொழில் விஸ்தாரமடையும். விவசாயத்துறையில் நல்ல பலிதம் கிட்டிடும். பொருளாதார நிலைமை உயர்ந்து விளங்கும். ஆதரவளிக்க மறுத்தவர் பொருளுதவி புரிய முன்வருவர். தயங்கிய நன் முயற்சிகளில் உற்சாகத்துடன் இந்த ராசிநேயர்

விளங்கி சாதகமான பலன்களை அடைந்திடுவர். அரசாங்க ஆதரவு நன்கு அமையும். புதிய பொன், பொருள் சேர்க்கையும் வாகனபிராப்தியும் உண்டாகும். சமூக வட்டாரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் விளங்குவர். அரசாங்க பதவி சேவையில் உள்ளோர் வெளியூர் மாற்றலாகுவர். இடமாறுதலும் ஒருசிலருக்குண்டு. மக்கள் நல்ல முன்னேற்றமடைந்திடுவர். இவர்களால் பெருமையும் ஏற்படும். மனைவி அல்லது கூட்டாளியின் மூலம் பணமும் பொருளும் வந்து சேரும். தகப்பனுருக்கு தொழில் உயர்வடையும். வருமானம் பெருகிடும். உடன் பிறநதோர்களுக்கு ஆகாது.

குருதேவர் சிம்ம ராசியில் சஞ்சாரம் செய்யும் போது உடலாரோக்கியம் சற்று தளரும். அதிலும் பூர நட்சத்திர சாரத்திலும் உத்திரத்தின் சாரத்திலும் குருதேவர் நடைபுரியும் போது மிகவும் பக்குவமாய் இருத்தல் நலம். மார்வலி, இரத்த அழுத்தம் போன்ற கோளாறுகள் இவரை வாட்டிடும். வியாபாரத்தில் போட்டி அதிகமாகும். வருமானம் குறையும். தாயாதிகளாலும் எதிரிகளாலும் தொல்லைகள் ஏற்படும். மனைவியின் ஆரோக்கியம் குன்றிடும். தாயாருக்கு கெண்டங்கள் தோன்றிடும். சகோதரர்களுக்கு கால்நடைகளால் நஷ்டமும் வாகனங்களால் சேதமும் விளையும். தகப்பனுருக்கு உடலசதியும், தொழிற்றுறையில் மாற்றமும் உண்டு. ஆப்த நண்பர்களுக்குச் சோதனைச்சோர்வுகள் காட்டிடும். மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்குள்ளாவர். இந்த ராசி நேயருக்கு கடன் உபாதையும் நீதிமன்ற விவகாரங்களில் மிரட்சியும், தொழிலில் முன்னேற்றத்தடையும் அதிர்ச்சியளித்திடும். ஒரு சிலருக்கு மனம் குழப்பமடைந்து பித்து பிடித்தவர் போல் பிறர் புலனுக்கு தோற்றமளித்திடுவர். கீழ்ப்படிந்த சிப்பந்திகளின் ஒற்றுமை குறையும். திருடு, வஞ்சகம், ஏமாற்றப்படுதல், சூட்சி, சதிகள் போன்ற கொடும் சோதனைகளும் இவர் விதியில் ஏற்படக்கூடும். எச்சரிக்கை மிகவும் அவசியம். பணலேவாதேவி விவகாரங்களில் அதிருப்தி நீடித்திடும். மேலோர் ஆதரவு குறையும்.

சனி இவருக்கு லாப விரயாதிபதி. ஜன்ம ராசிக்கு மாற்றலடைகின்றார். கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக சிரசிலிருந்து, ஜன்ம ராசியை அடைந்து அங்கு இரண்டரை ஆண்டுகள் நடைபுரிந்து பாதத்திற்கு மாற்றலாகுவர். சனி பன்னிரண்டு, ஒன்று, இரண்டாமிடங்களில் உலவிடும் இந்த ஏழரை ஆண்டு கால வரம்பைத்தான் சோதிட சாஸ்திர முறைப்படி ''ஏழரை நாட்டுச்சனி'' என்றும் ''ஏழரையோன்'' காலம் என்றும் கூறுவதுண்டு. காடு மலை வனந்திரங்களில் சுற்றித்திரிந்தவர்கள் பயனற்ற விவகாரங்களிலும் பிரயாணங்களிலும் பணத்தையும் பொருளையும் செலவு புரிந்தவர்கள் நிலையான இடத்தில்

வந்து சேருவர் ஆனால் மன அமைதி ஏற்படுவது கடினம். பந்து ஜனங்களால் தொல்லை அதிகமாகும். இக்கரைக்கு அக்கரை பச்சை யென்ற அனுபவம் ஏற்படும். செய்துவரும் தொழிலில் உழைப்பு அதிக மாகும். ஒரே இடத்தில் நிரந்தமானத்தொழிலை புரியவேண்டுமென்ற ஆவல் குடிகொண்ட போதிலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இவருக்கு நிலையான வழியை காட்டுவது அரிதாகும். மனைவி மக்களின் கவலையே இவருக்கு பெருங்கவலையாகும். அலைச்சலும் அகால போஜனமும் அன்றாட நிகழ்ச்சியாகும். கூட்டாளிகளிடத்தில் மனவேற்றுமை உண் டாகும். எதிரிகள் மறைந்த பாடில்லை. கடன்சுமை குறைந்த பாடில்லை சிரத்தில் பெரிய பாரத்தை சுமப்பது போன்ற பாவனை தோன்றிடும். சுலபமான காரியத்தை சாதிப்பதற்கும் மகத்தான பிரயத்தினத்தை இவர் மேற்கொள்ள நேரிடும். குடும்பத்தில் செலவினங்கள் பன்மடங்கு உயர்ந்திடும். ஆனால் ஆதாயம் அதிகமாவதற்கு வழி ஏற்படாது. இவருக்கு வரவேண்டியவை நிதானமடையும். செலுத்த வேண்டிய தவணை தவற முடியாது. ஒருசிலர் சொத்துக்களை விக்கிரயம் செய்து கடனை தீர்க்கவும் நேரிடும். உடன் பிறந்த சகோதரர்களின் நிலைமை உயர்வடையும். அவர்களால் ஆதரவு ஏற்படுவது துர்லபம்.

சனி பூரட்டாதியின் பாதசாரத்தில் சஞ்சாரம் செய்யும் போது வயோதிகரான பந்துக்களுக்கு இவர் கடமையைச் செலுத்த நேரிடும். தொழிலில் சிறிய மாறுதல்கள் ஏற்படும். முயன்ற நல்ல காரியங்கள் மந்தமடையும். பணமுடையும் பற்றுக்குறையும் நீடித் திடும். சமூக வட்டாரத்தில் தாழ்ந்த நிலை உண்டாகும்.

ஆனால் உத்திரட்டாதியின் சாரத்தில் சனி சஞ்சாரம் செய்யும் போது நிரந்தரப்பொருள்களை மாற்றியமைக்கவும் வாகனங்களை சீர் திருத்தி அமைக்கவும் யந்திரக் கருவி சாதனங்களை பெருக்கிக்கொள்வதி லும் இவருடைய கருத்தூன்றிச் செல்லும். ஏமாற்றமும் சோதனைச் சோர்வுகளும் இவருடைய ஆர்வத்தைக் குன்றிடச்செய்யும். பொறு மையைக்கையாள்வது மிகச்சிறந்ததாகும். அவசர முடிவுகளுக்கு இடந்தரலாகாது. பிறரை நம்பி புதிய காரியங்களில் ஈடுபடலாகாது. புதியத் தொழிற்சாலை அல்லது வியாபாரம் ஆரம்பிக்க வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படுமாயின் மனைவி அல்லது மக்கள் பெயரால் துவக்கி வைப் பது நலம். இவருக்கு நிகர வருமானம் குறைவான போதிலும் வரு மானவரி மட்டிலும் குறையாது.

ரேவதியின் பாத சாரத்தில் சனி நடைபுரியும் தருணத்தில் பந்து ஜன விரோதமும் மனைவியின் அனாரோக்கியமும் இவரை குழப்பத் தில் ஆழ்த்திடும். நண்பர்களுடைய ஒத்தாசை குறையும். சமூக வட்

டாரத்தில் இவருக்கு அந்தரங்கமான எதிர்ப்புகள் நிறைந்து காணப் படும் விவசாயிகளுக்கு பலிதம் குறையும். வாழ்க்கையில் சுகசௌகரி யங்கள் குறையும். வாகனங்களால் நஷ்டமேற்படும். கால்நடைக ளால் இவருக்கு தொல்லைகளும் வீண் விரயங்களும் ஏற்படும். கூடுமான வரையில் இவர் பொறுப்பான விவகாரங்களில் கருத்தை செலுத்தலா காது. வில்லங்கங்களை தளர்த்திக்கொள்வது நல்லது. செலவினங்களை சுருக்கிக்கொள்வது சிறந்தது. தம்முடைய அலுவல்களை தாமே பார்க்க வேண்டும். கணக்கு விவகாரங்களை அப்போதைக்கப்போது முடிவு கட்டவேண்டும். லிகித ஒப்பந்தங்களில் மர்ம சாசனம் கூடாது. வரையறுத்து ஒப்பந்தங்களை பதிவு செய்து கொள்வது நல்லது. இல்லை யேல் மீளாத்துயரத்திற்கு உள்ளாக நேரிடும். உஷார் !

இராகுவும் கேதுவும்

இதுநாள் வரை மூன்றும் இடத்தில் உலவிய ராகு குடும்ப ஸ்தானத்திற்கும் ஒன்பதாம் இடத்தில் தோன்றிய கேது எட்டாமிடத் திற்கும் மாறுதலடைகின்றனர். விடா முயற்சியுடனும் தைரியத்துட னும் துணிந்து பிற காரியங்களில் ஈடுபட்டால் அதைரியமடைவர். வியாபாரத்தில் சிறிய நஷ்டங்கள் தோன்றிடும். பண விவகாரங்களில் ஒரு சிலருக்கு ஏமாற்றமும் ஏற்படும். இதனால் நெருங்கிப்பழகுபவரிடத் தில் எதிர்பாராவிதமாக நிஷ்டூரங்கள் உண்டாகும். குடும்பத்தில் சிக் கலான பிரச்சனைகள் தோன்றி எவ்வித முடிவுக்கும் இடமளிக்காமல் இந்த ராசிநேயரின் மன அமைதியைக் குலைத்திடும். இந்த ராசிநேய ரின் உடலாரோக்கியமும் சற்று பாதிக்கப்படும். மருத்துவ நிபுணர் கள் கண்டறிய முடியாத விசித்திர வாட்டங்கள் தோன்றிடும். ஒரு சிலர் நோயறியாமல் மாற்று மருந்து உட்கொள்வதால் விபரீதக்கோளா றுகட்கும் உள்ளாவர். எச்சரிக்கை மிக அவசியம். ஊசியின் மூலம் மருந்தை உடம்பில் ஏற்றலாகாது.

ஒன்றரையாண்டுகள் கழிந்த பின்னர் இராகு ஜன்ம ராசியி லும், கேது ஏழாமிடத்திலும் சஞ்சரிக்கத் தொடங்குவர். அது நாள் முதல் சமூக வட்டாரத்தில் எதிர்ப்புகள் நிறைந்து காணப்படும். தொழிலில் கூட்டாளிகளால் இவருக்கு தொல்லைகள் நேரிடும். கூட்டு வியாபாரிகள் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பிரித்துக் கொள் ளுவர். தாம்பத்திய வாழ்க்கையில் ஒற்றுமை குறையும். இதனால் சலிப்பும், விரக்தியும் தோன்றிடும். திருமணமான தம்பதிகள் சில காலம் பிரிந்திருக்கவும் நேரிடும். இந்த ராசி நேயருடைய உடலா ரோக்கியம் பாதிக்கப்பட்டு உயர்ந்த சிகிச்சையும் பெற நேரிடும்.

ஆகாத திசைகளும், மாதங்களும்

சுக்கிர திசையும், சூரியன் திசையும், சனி திசையும், இராகு கேது இவர்களுடைய திசையும், புதன் திசையும் ஆகாத திசைகளாகும். தொழிலில் அவஸ்தைகள், வியாபாரத்தில் வீண் நஷ்டங்களும் குடும்பத்தில் அதிருப்திகரமான சூழ்நிலையும், சகல துறைகளிலும் சோதனைச் சோர்வுகளும், இடமாற்றமும், பொருட்சேதமும், நீதி மன்ற விவகாரங்களில் மிரட்சியும் தீராக்கடனும், தீராப்பிணியும் இந்த ராசி நேயரை வாட்டிடும். மிகவும் பக்குவமாயிருத்தல் நலம். ஜனன காலத்தில் கேந்திர, திரிகோண நட்பு ஸ்தானங்களில் திசை நாதர்கள் நின்றிருப்பின் சமமானப் பலன் ஏற்படும்.

ஆனி புரட்டாசி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு ஆகாத மாதங்கள் உடலசதி, காரியதாமதம், குடும்பத்தில் சோர்வுகள், இடமாற்றம், சிறிய விபத்துக்கள், வயிற்றுக்கோளாறு, அலைச்சல், வீண் செலவு, அவசியமற்ற பிரயாணங்கள், கோபம், பிரிவுகள் போன்ற கொடியப் பலன்கள் நிகழக்கூடிய மாதங்கள். சித்திரை' வைகாசி, ஆவணி, மார்கழி, தை மாதங்கள் நல்ல மாதங்களாகும். இம்மாதங்களில் தொழில் உயர்வு, வருமானப்பெருக்கம், முயன்ற காரியத்தில் வெற்றி, மேலோர் ஆதரவு, நிதி மிகுந்தோர் உதவி, நல்ல ஆரோக்கியம், கடன் நிவர்த்தி பொருள்சேர்க்கை, வீடுவாகன பிராப்தி லிகிதானுகூலம், புதிய நண்பர்களால் நன்மைகள் நீதிமன்ற வழக்குகளில் வெற்றி, வியாபார அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேறுதல் போன்றவை நிகழக்கூடிய நல்ல சம்பவங்களாகும்.

ஆடி, கார்த்திகை மாதங்கள் கலப்படமானவை.

ஆரோக்கியம்

சூரியன் இவருக்கு ஆறுமிடத்ததிபதியாவர். மூலம், உஷ்ணம், காங்கை, மார்வலி, இருதய துடிப்பு போன்ற அயர்வுகள் இவருக்கு சாதாரணமாக தோன்றக்கூடியவை. குருதேவர் இவருக்கு ராசி நாதன். சரீரத்தில் கொழுப்பு வஸ்து நிறைந்தும் இனிப்பு அதிகமாகவும் இதனல் ரத்த அழுத்தமும் மிதமீறியும் காணப்படலாம். சனி ஜன்ம ராசியில் சஞ்சரிக்கும் காலம் வரை சரீரத்தில் தடுப்பு சக்தி குறையும். சிறிய அசதிகள் தோன்றினாலும் இந்த ராசிநேயர் பெருமிரட்சிக்குள்ளாவர். மருந்தின் வேகம் குறையும். நோயின் வேகம் அதிகமாகும். ஆகையால் இவர் இயற்கை முறைகளை அனுசரித்தும், தக்க பத்திய முறைகளை கையாண்டும், சத்தான ஆகாரங்களை இனிப்பு, கொழுப்பு நீங்கலாக உட்கொண்டும் நோய்கள் அணுகாமல் பாதுகாக்கலாம். தரேகாரோக்கியத்திற்கு அதியாவசியமாகத் தேவைப்படுவது இரண்டேவஸ்துக்கள் தான். ஒன்று ஜீவாதார சக்தி. மற்றொன்று ஜீவாமிருத சக்தி. ஜீவாதார சக்தியானது நாம் உட்கொள்ளும் பரிசுத்தமானகாற்றில் உள்ள பிராணவாயுவிலிருந்து சரீரத்தில் உள்ள எல்லா பாகங்களுக்கும் ஓடும் ரத்தத்தின் மூலம் பரவுகிறது. சதாகாலமும் நிழலிலேயே இருப்பவர்களும் ஒரே இடத்தில் அடைப்பட்டு இருப்பவர்களும் சூரிய கிரணங்கள் திரேகத்தில் படும் படி வெட்டவெளியில் உலாவி

வருவது சிறந்தது. காலையில் சூரிய நமஸ்காரம் செய்து சூரியனின் ஒளிகிரகணங்களை கண்களால் கிரகித்து ஜீவாதார சக்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். இரண்டாவதான ஜீவாமிருத சக்தியானது தேன், பால், தயிர் வெண்ணெய், நெய், எண்ணெய், எலுமிச்சம் பழம், கனிகள், பச்சை கிழங்குகள், கீரைகள் பச்சைக் காய் கறிகள், பசையான பூமியில் போட்டால் முளைக்கக்கூடிய தானியங்கள் முட்டை இவைகளில் தேங்கியுள்ள அமிழ்த சக்தியே ஆகும். இவைகள் பிரதிநித்யமும் திரேகத்திற்கு தேவையான அமிழ்தத்தை கொடுக்கக் கூடிய வஸ்துக்கள். இந்த சக்தியானது நாம் உட்கொள்ளும் காற்றில் உள்ள நீராவியிலும், பரிசுத்தமான தண்ணீரிலும் அஷ்டமி, நவமி, அமாவாசை, பிரதமை நீங்கலாய் மற்ற திதிகளில் தோன்றும் சந்திர ஒளிக்கிரணங்களிலும் இயற்கையாக அடங்கியுள்ளது. இந்த போஷனை வஸ்துக்களை தேவையான அளவிற்கு மீருமல் பிரதிநித்தியமும் உட்கொண்டும் சரீராரோக்கியத்தை நல்ல முறையில் பாதுகாக்கலாம்.

சனி பூரட்டாதியில் சஞ்சரிக்கும் போதும் குருதேவர் மிதுனத்திலும் சிம்ம ராசியில் பூரம், உத்திரம், நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் போதும் மிகவும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம்.

பணவசதி

குருதேவர் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் போது நிதிநிலைமை தளர்ந்து காணப்படும். தமக்கு சேரவேண்டியவை நிதானமடையும். கொடுக்கல் வாங்கல் விவகாரங்களிலும் கிரய விக்கிரய ஒப்பந்தங்களிலும் மிகவும் பக்குவமாயிருத்தல் நலம். அதிக மூலதனத்தை மூலப்பொருள் சேகரிப்பதிலோ, வியாபாரத்தை விரிவு படுத்துவதிலோ செலவிடலாகாது. வாகனங்களாலும் கால் நடைகளாலும் நஷ்டம் விளையும். இதே நிலைதான் குருதேவர் சிம்ம ராசியில் சஞ்சரிக்கும்போதும் தோன்றிடும். புதியக்கடன்களும் ஏற்படக்கூடும். சொத்தின் மீது வில்லங்கமும் ஏற்படக்கூடும். முன் எச்சரிக்கையுடன் சிக்கன முறையை கைப்பிடித்து செலவுகளையும் விரிவான திட்டங்களையும் சுருக்கிக்கொள்வது நலம்.

குருதேவர் பூர்வ புண்ணியஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் அதாவது கடக ராசியில் உச்சம் பெற்று விளங்கும் காலத்தில் பராபவ வருஷம் ஆவணி மாத முதல் நன்மைகள் பெருகிடும். எதிர்பாரா வகையில் பணம் வந்து சேரும். பொருள்சேர்க்கையுண்டு. நிதி மிகுந்தோர் உதவி ஏற்படும். கடன் நிவர்த்தியாகும். சேமிப்பு நிதியிலும் பணம் சேரும். இது தருணத்தில் இந்த ராசிநேயர் வேண்டிய வசதிகளை பெருக்கிக்கொண்டு மூலநிதியை நிரந்தரமாக வருவாய் அளிக்கும் திட்டங்களில் திருப்பி எதிர்காலத்தை செப்பனிட்டுக் கொள்வது சாலச்சிறந்தது.

தொழில்

இவருக்கு ஜீவனதிபதி குரு. லாபாதிபதி சனி. இவ்விரு கிரகங்களும் முதல் மூன்று மாதங்கள் நல்லபடி விளங்காததால் தொழிலில் சற்று மந்தமான நிலையும் அதிருப்திகரமான மாற்றங்களும் ஏற்படும். உத்தியோகத்துறையில் உள்ளோர் வெகு தூரத்திற்கு மாற்ற

லாகுவர். குடும்பத்தை விட்டு பிரிந்திருக்கவும் நேரிடும். விவசாயத் துறையில் பலிதம் குறையும். ஓய்வு பெற்றவர்கள் பற்ருக்குறையினுல் வாட்டமுறுவர். கடமையை உணர்ந்து கைமாறு கருதாமல் கருத்தோடு தொழிலில் ஈடுபட்டோர் அவரவர் வழிகளில் நஷ்டம்மேற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் உள்ளோர் மேலதிகாரிகளின் உத்திரவுக்கு கீழ்ப்படிய வேண்டும். காலதாமதம் இல்லாமல் அலுவலக வேலேகளை அப்போதைக்கப்போதே முடிப்பது நலம். எக்காரணத்தை முன்னிட்டும் அலுவலக கட்டுகளை காரியாலயத்தை விட்டு கொண்டு வரலாகாது.

குருதேவர் கடகத்தில் தோன்றியதும் எல்லா நன்மைகளும் பெருகிடும். வேண்டிய வசதி பெருகிட தமக்கு வேண்டியவர் மேலதிகாரிகளாக வந்து சேருவர். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களினுல் நல்ல லாபம் கிட்டிடும். பூமியினுல் நல்ல பலிதமும் ஏற்படும்.

குருதேவர் சிம்ம ராசியில் நடைபுரியும் காலத்தில் சற்று எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இல்லேயேல் இவர் மீது அனுவசியமான பழிக்குற்றங்கள் சாட்டப்படும். எதிர்ப்புகள் நிறையும் ஆதரவு குறையும். போட்டியும் பொருமையும் அதிகமாகும் சிறு மனப்பான்மை யுடைவர்கள் சில்லரை விஷமங்களை செய்து தொல்லேயை உண்டாக்கிடுவர். வேலேயாட்கள் நஷ்டத்தை விளைவிப்பர். பண்ட மாற்றங்களில் விலே ஏற்றத்தாழ்வினுல் நஷ்டம் ஏற்படும். தொழில் ஸ்தாபன காரியாலயங்களை வேறிடம் மாற்ற வேண்டிய நிர்ப்பநதமும் உண்டாகும்.

ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பாங்கியில் பணியாற்றுவோர், பழ வியாபாரிகள், வழக்கறிஞர்கள், மருத்துவ நிபுணர்கள், புத்தகாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், பொறியியல் வல்லுனர்கள், யந்திரத் தொழிற்சாலே அதிபர்கள், தத்தம் துறைகளில் நல்ல ஆதாயத்தை அடைந்திடுவர். ஆனுல் ஷராப், நகை வியாபாரிகள், வட்டிக்கடையுடையவர்கள் சற்று சிரமத்திற்குள்ளாவர். வேலேயை குறைத்து வேறு வகையில் ஈடுபடுவது நலம். ஓய்வு பெற்றவர்கள் புதிய வியாபாரங்களையோ தொழிற்சாலேகளையோ தம்முடைய பெயரில் ஆரம்பிக்கலாகாது. கூட்டு வியாபாரிகள் அபிப்பிராய பேதத்தால் பிரிந்திடுவர்.

அரசியல் விவகாரங்களில் இந்த ராசிநேயர் தலேயிடாமலிருப்பது நலம்.

குடும்பம்

பொதுப்பலனில் கூறிய அம்சங்கள் கவனிக்கத்தக்கன. ராகு குடும்பஸ்தானத்தில் நடைபுரியும் ஒன்றரை ஆண்டுகாலம் வரை இவருக்கு அதிருப்திகரமான குடும்ப சூழ்நிலே இருந்தே தீரும். குருதேவர் நாலாமிடத்தில் சஞ்சரிக்கும் போது பெற்ருேர்களுக்கும் ஆகாது. சனி மூன்ருமிடத்தை பார்வையிடுவதால் சகோதரர்களிடத்தில் இந்த ராசிநேயருக்கு பற்றுதல் குறையும். மனவேற்றுமை நாளுக்கு நாள் வளரும். வார்த்தைகளை அளவுக்கு மீறிபயன் படுத்தாமல் பரிபக்குவமாய் இருத்தல் நல்லது. தகப்பனுரிடத்தில் மனஸ்தாபம் உண்டாகும்.

கல்வி

கல்வி வளருவதற்கான அறிகுறிகள் மந்தமாகக் காணப்படினும் குருதேவர் கடக ராசியை அடையும் நாள் முதல் நல்ல பயிற்சியும் வெற்றியும் ஏற்படும். அதிக கருத்தும் ஊக்கமும் உறுதியான கவனமும் தேவை. இல்லையேல் மீண்டும் மீண்டும் பயின்ற வித்தையையே பயில வேண்டிய பாக்கியமேற்படும். குருதேவர் சிம்ம ராசியை அடைந்தவுடன் கல்வி ஓங்கிடும்- தொழில் நுட்ப பயிற்சியிலும் வெற்றியுண்டு. நல்ல சாதகமானப் பலன்கள் ஏற்படும். கல்வி முடிந்து நல்ல தொழிலும் அமர்வர்.

கலை

பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாகிய கலைமதியே இவருடைய ஜன்மராசியில் விளங்குவதால் ஓவியம் தீட்டுவோர், கலைத் தொண்டு புரிவோர், நடன, நாடக திரைப்படத் துறையில் உள்ளோர், கலைக்கே தம்மை அர்ப்பணம் செய்துக் கொண்டு பிற விவகாரங்களில் பற்றற்றவர்களாக இருப்பின் நல்ல ஆதாயமும், எதிர்பாராத சிறப்பும், புகழும் நல்லோர் ஆதரவும் பெற்று விளங்குவர். தம்முடைய குறிக்கோளை மறந்து சேமித்த பணத்தை குவித்து பெரும் செல்வத்தின் மீது மோஹம் வைப்பவர்கள் மீளாத் துயரத்திற்குள்ளாவர். பணம் பல வழி துறைகளில் சிதறும். மன அமைதி தளரும். பித்து பிடித்தவர் போலாவர். இவருக்கு ஆசை காட்டியவர் கை விட்டிடுவர். இவர் கலங்காத நெஞ்சமுடையவர் எனினும் ஏமாற்றத்தால் மனம் சோர்ந்து கலங்கி நிற்பர். புதிய வழிகளில் பணத்தையும், மனத்தையும், கருத்தையும் செலுத்தலாகாது. உஷார்!

ஞானம்

ஆத்மீகத்துறையில் நல்ல ஞானத்தைப் பெறுவதற்கு இது நல்ல தருணமாகும். யோக சாதனையில் சித்தியும் பெற நல்லவர் உபதேசம் குருதேவர் கடக ராசியில் தோன்றி ஜன்மராசியை பார்வையிடும் தருணத்தில் உண்டாகும். தெய்வ பக்தியும், அருள் நெறியும் நிலைத்திடும்.

குருதேவர் பூச நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போது உத்திரட்டாதி நட்சத்திர சாரத்தில் பிறந்தவர்கள் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியில் அதிசயிக்கத்தக்க சாதனைகளை உலகுக்கு அளித்து பெரும்புகழெய்திடுவர்.

மாதர்கள்

கல்வி பயிற்சியில் ஊக்கமும் உறுதியும் தளரும். திரேகாரோக்கியமும் குன்றி சிகிச்சைக்குப் பின் செழிப்படையும். கலைத் துறையில் ஆரம்பத்தில் ஆர்வம் குறையும். குருதேவர் கடக ராசியில் சஞ்சாரம் செய்யும் போது மேன்மையடையும். தொழிலும் மாற்றமடையும். இல்லற வாழ்க்கையில் அதிருப்திகரமான மனோநிலை உண்டாகும். பந்து ஜனங்களால் தொல்லையும், கணவரின் ஆரோக்கியக் குறைவினால் கவலையும் உண்டாகும். திருமணமாகாதவர்கட்கு வாழ்க்

யைச் சிறப்பு ஏற்படும். ஆனால் சிறிய விவகாரங்களில் சோர்வுகள் ஏற்படும். சில நாட்கள் பிரிந்திருந்து ஒன்று கூடுவர். பெற்றோருக்கு ...ந்காது. பணலேவாதேவி விவகாரங்களில் ஏமாற்றமடையக் கூடும். ..மக்களால் கவலையும், ஒரு சிலருக்கு ஏற்படும். நீண்ட நாளாக இவர் எண்ணிய விவகாரங்களில் நிதானமேற்படும். பிரார்த்தனைகள் தடைபடும் சமூக வட்டாரத்தில ஒற்றுமை குறையும்.

ஏழரையோன் காலம் நடைமுறையில் இருப்பதால் சனிக்கிழமை விரதமும், சனி பகவானுக்கு அர்ச்சனையும், ஏழை எளியவர்கட்கு அன்னதானமும், பௌர்ணமி விரதமும் தவறாமல் அனுசரித்து வரின் எல்லாத் துறைகளிலும் மனப்பக்குவமும், தெளிவும், விதரணையும் ஏற்படும். பிணிவாட்டங்கள் அகன்று திரேகாரோக்கியம் நன்கு விளங்கும். வாழ்க்கையில் புதுமலர்ச்சி ஏற்படும். உடன் பிறந்தோர்கட்கு நல்ல பலன்கள் உண்டு தொழில் மேன்மையும் விவசாய அபிவிருத்தியும், பொருள் சேர்க்கையும் அவர்கட்கு உண்டு.

இந்த ராசி மாதர்கள் ஆரோக்கியத்தை அக்கரையுடன் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

சனி பகவானுக்கு உகந்த பரிகார நியமங்களை செய்து சாந்தியடைவது சிறந்தது. மேலும் காலையில் கதிரவனை வணங்கிய பின் பிற கடமைகளில் ஈடுபடுவது நல்லது.

சுபம் ! சுபம் !! சுபம் !!

பரிகார நியமம்

குருபகவான் ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகியஸ்தானங்களில் சஞ்சரித்தால் நற்பலனை வழங்குவார். மீதிஸ்தானங்களில் சஞ்சரிக்கும் பொழுது கொடியப்பலன்கள் நிகழக்கூடும். குருபகவான் அருளைப்பெற வியாழக்கிழமை விரதத்தை அனுசரிக்கவேண்டும். பெரியோரிடத்தில் மரியாதையாக நடந்துக் கொள்ளவேண்டும். பக்திபாடல்களை உருக்கமாய் பாடவேண்டும். பக்தியுள்ள ஏழைகளுக்குத் தானம் செய்யவேண்டும்.

சனிபகவான் 3, 6, 11 முதலியஸ்தானங்களில் சஞ்சரித்தால் நற்பலனை வழங்குவர். மீதிஸ்தானங்களில் உலவும் போது மந்தமான பலனை வழங்குவர். சனிபகவான் அருளைப்பெற (காலபுருஷன்) —விராட்புருஷனை வழிபடவேண்டும். அங்கயீனர்களுக்கு உதவிபுரியவேண்டும். காகத்துக்கு எள் கலந்த அன்னம் அளிக்கவேண்டும். சனிக்கிழமை தோறும் விரதம் அனுசரிக்கவேண்டும். சூரிய நமஸ்காரம், ஆஞ்சநேயர் வழிபாடு முதலியன செய்யவேண்டும்.

இராகு கேது 3, 6, 11–ம் ஸ்தானத்தில் உலவிடும் போது நற்பலனை வழங்குவர். இராகுவின் அருளைப்பெற சனிபகவானையும் கேதுவின் அருளைப்பெற செவ்வாயையும் வணங்கிடுதல்

வேண்டும். பொதுவாக நவக்கிரகங்களின் அருளைப்பெற கீழ்கண் ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

துளசி அஷ்டோத்திரம், அனுமத் அஷ்டோத்திரம். ஆஞ் நேயர் பஞ்சரத்னம், வெங்கடேச அஷ்டோத்திரம், கணேச பஞ்ச ரத்தினம், நவக்கிரக மங்களாஷ்டகம், ஆதித்ய இருதய ஸ்தோத்திரம், குரு ஸ்தோத்திரங்கள், நளச்சரித்திர பாராயணம், கோளறு பதிகம், கனகதாரா ஸ்தோத்திரம், ஆஞ்சநேயர் சதநாமாவளி.

இவற்றை எல்லோராலும் பக்தியுடன் படிக்க காலமும் சூழ்நிலை யும் ஒத்துவராமலிருப்பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள, சனிபகவானின் அஷ்டோத்திரத்தையும் நவக்கிரக பொது தோத்திரத்தையும் நேயர்கள் படித்து நவக்கிரகத்தின் அருளைப்பெறுக. மற்ற விவரங்கள் அந்தந்த ராசிகளில் தெளிவாகவும், விவரமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

எந்த மந்திர, ஸ்தோத்திரமும் குரு உபதேசம் இல்லாமல் பலிக்காது. ஆகையால் குரு உபதேசம் இல்லாதவர்கள் தங்களுக்குரிய இஷ்டதேவதையையே; ஆசான் ரூபமாக யாரை மனதில் பிரியமாகக் கருதுகிறீர்களோ அவர்களை மனதில் நினைத்து வணங்கிய பிறகு விநா யகரை வணங்கி குறிப்பிட்டுள்ள ஸ்தோத்திர மந்திர ஜபங்களை உச் சாடனம் செய்வது சிறந்த முறையாகும்.

பிரதிதினம் காலையில்: சூரிய நமஸ்காரம் செய்து ஓம் "சூரிய நாராயண பிரபுவே நமோ நம:" என்ற மந்திரத்தை 108 தடவை ஜெபம் செய்து சூரியபகவானை வணங்கி பிறகாரியங்களில் ஈடுபடுவது சாலச்சிறந்தது. எத்தகைய பிணியையும் உடலசதியையும் போக்கி திடாரோக்கியமும் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களில் வீழாமலும் இருக்க தக்க பாதுகாப்பும் ஏற்படும்.

எல்லா துயர்களுக்கும் இடமளிப்பது மனந்தான். மனதைக் கலங்கிடச் செய்யாமல் இருக்கவும் உறுதியை இழக்காமல் இருக்கவும் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி விரதத்தை அனுசரிப்பது நல்லது. பகல் பூராவும் விரதமிருந்து சந்திர தரிசனம் செய்து, ஆராதனைச் செய்து உணவுகள் உட்கொள்ள சகல சௌபாக்கியமும் பெருகிடும். தாம் உட்கொள்ள தவறும் பகல் உணவை ஏழைகட்கு வழங்கி பசி யாற்றவேண்டும்.

வியாழக்கிழமை: குருபகவான் ஸ்தோத்திரம், நவக்கிரக அர்ச்சனை.

சனிக்கிழமை: எள்முடிச்சு, நல்லெண்ணெய் விளக்கேற்றி சனிபகவானுக்கு அர்ச்சனை செய்யவும். ஏழைக்கு தானம் செய்யவும்.

ஞாயிற்றுக்கிழமை: ஆஞ்சநேயரை வணங்கி ஆஞ்சநேயர் அஷ்டோத்திர பாராயணம் சிறந்தது.

நவக்கிரக பொது தோத்திரம்

ஆதித்தன் சோம னங்காரகன் புந்தி யண்டர்குரு
பேதித்த வெள்ளி சனி ராகுகேது பேருரைத்தால்
வாதித்த சூனியம் வல்பிணிச் சண்டை வருமிடியும்
ஏதித் தலத்தி லிராதே மிகச்செல்வ மேவிடுமே.

(அட்டையின் நான்காவது பக்கத்தொடர்ச்சி)

S. சேஷாத்திரி, நியூஸ் ஏஜண்ட், திருவள்ளூர்
P. ஆறுமுகம், 89, G. S. T. ரோட், மதுராந்தகம்.
L. நாகராஜன், நியூஸ் ஏஜண்ட், வந்தவாசி
B. R. வெங்கண்ண செட்டியார், ஜெனரல் மர்ச்சண்ட், செய்யார்.
M. நடேசன், நியூஸ் ஏஜண்ட், குடியாத்தம்
R. ராஜகோபால், நியூஸ் ஏஜண்ட், 30, ராஜாதெரு, வாலாஜாபாத்.
A. J. கிருஷ்ண மூர்த்தி, நியூஸ் ஏஜண்ட், திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்
P. லோகநாதன், நியூஸ் ஏஜண்ட், 51, மார்கட் ரோட், ஆரணி
சோமசுந்தரம், திருமகள் ஸ்டோர்ஸ், போளூர்
S. M. தங்கவேல் ஐயர், விருத்தாசலம்
K. G. பத்மநாபன், நியூஸ் ஏஜண்ட், புவனகிரி
N. நடராஜ முதலியார், நியூஸ் ஏஜண்ட், ஸ்ரீ வில்லிபுத்தூர்
N. அய்யாமுத்து ஐயர், நாங்குநேரி, திருநெல்வேலி ஜில்லா
S. M. தஸ்தகிர், நியூஸ் ஏஜண்ட், தென்காசி
P. அழகர்சாமி, நியூஸ் ஏஜண்ட், திருப்பத்தூர், ராம்நாடு ஜில்லா
U. G. பிரகாஷ், புக்ஸ்டால், நாகர்கோவில்
S. P. சுப்பிரமணியம், புக்ஷாப், தேவக்கோட்டை
M. ஷண்முகம்பிள்ளை, தினமணி ஸ்டோர்ஸ், கோவில்பட்டி
M. P. ராஜன், நியூஸ் ஏஜண்ட், அம்பத்தூர்
K. சுப்ரமணிய ஐயர், தியாகராஜா லஞ்ச் ஹோம், வாலாஜாபேட்டை.
S. ரங்கநாதன், நாகப்பட்டிணம
P. சிவகுரு, பரப்பாடி போஸ்ட், நாங்குநேரி தாலுக்கா
M. ஷண்முகம், ஜெனரல் மர்ச்சண்ட், புதுக்கோட்டை
A. N. வெங்கட்டராமன், திருவையாறு
K. T. அரசு, நியூஸ் ஏஜண்ட், பெரியபாளையம்
P. L. ராஜு, திருப்பூர், கோயம்புத்தூர் ஜில்லா
A. அருணசலம், அருண புக்ஸ்டால், வள்ளியூர், திருநெல்வேலி ஜில்லா
S. கோவிந்தன் & பிரதர்ஸ், புது மார்கட்ரோட், ஆன்டர்ஸன் பேட்டை, K. G. F.
P. V சீதாராமன் 9 பத்மநாபய்யர் தெரு; வில்லிவாக்கம்; மதருஸ் 14
J. நடராஜன், நியூஸ் ஏஜண்ட், விக்கினபுரம், அவர்னி புதுச்சேரி
J. குப்புசாமி, ஜெமினி நியூஸ்டால், விஜயபுரம் போஸ்ட், திருவாரூர்
S. நாகராஜன், நியூஸ் ஏஜண்ட், மன்னார்குடி
R. பக்கிரிசாமி, மித்திரன் ஏஜண்ட், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் ஜில்லா.
T. S. சீதாராம சர்மா, நியூஸ் ஏஜண்ட், துறையூர் திருச்சி ஜில்லா.
K. R. மாதவன், கீதாலாட்ஜ், உடுமலைபேட்டை, கோயம்பத்தூர் ஜில்லா
R. B. மூர்த்தி, மித்திரன் கல்கி, ஏஜண்ட், பவானி போஸ்ட், கோயம்பத்தூர் ஜில்லா
D. தசரதன், நியூஸ் ஏஜண்ட், திண்டுக்கல்
P. N. பரமேஸ்வர ஐயர், நியூஸ் ஏஜண்ட், அடிதாரம், பழனி, மதுரை ஜில்லா
L. ரெங்கன், நியூஸ் ஏஜண்ட், விருதுநகர்

———